முக்கிய அரசியல்-திட்டங்கள்

ஆசிரியர்:

ந. ரா. சுப்பய்யர், எம். ஏ., எல். டி.,

T14552
R005D04

சென்னை
...ளப் புஸ்தகாலயப் பிரசார சங்கம்
1940

சென்னைப் புஸ்தகாலயப் பிரசார சங்கம்

ஒரு பொருள் பற்றிய பல பொருள் வரிசை—1

முக்கிய அரசியல்-திட்டங்கள்

A. M PARIMANAM

முக்கிய அரசியல்-திட்டங்கள்

ஆசிரியர்:

சென்னை சர்க்கார் கல்லூரிகளில்

மாஜி போதகாசிரியர்

ந. ரா. சுப்பய்யர், எம். ஏ., எல். டி.

கனம் கல்வி மந்திரி

டாக்டர் ப. சுப்பராயன்

எழுதிய முன்னுரையுடன்

சென்னை

சென்னைப் புஸ்தகாலயப் பிரசார சங்கம்

1940

முதல் பதிப்பு 1938
இரண்டாம் பதிப்பு 1940

V1 : 2 : N 3
31 G 8

பதிப்பு உரிமை
ஆசிரியரைச் சேர்ந்தது.

கும்பகோணம்
ஸெண்ட்ரல் பிரஸ் ஸிண்டிகேட் லிமிடெட் அச்சுக்கூடத்தில்
அச்சிடப்பட்டது.

சென்னைப் புஸ்தகாலயப் பிரசார சங்கத்தின் முகவுரை

இக்காலத்திற்கு உரிய விஷயங்களைப்பற்றிச் சாதாரண மக்களும் எளிதில் படித்து அனுபவிக்கக்கூடிய முறையில் புஸ்தகங்கள் எழுதுவித்துப் பதிப்பிக்க வேண்டுமென்ற கருத்து இச்சங்கத்தின் ஒன்பதாவது ஆண்டின் அறிக்கையில் வெளியிடப்பட்டது.

இக்கருத்திற்கு இணங்க, சாஸ்திர விஷயங்கள் பல வற்றைக் குறித்துத் தக்க அறிஞர்களைக்கொண்டு "ஒரு பொருள் பற்றிய பல பொருள் வரிசை" என்ற மகுடத்தோடு பிரசங்கங்கள் செய்விக்கப்பட்டன. ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் பல பிரசங்கங்கள் தொடர்ந்து நிகழ்ந்தன. இவ்வாறு பெற்ற அனுபவப்பயனை மனத்திற்கொண்டு பிரசங்க விஷயங்களை விரித்தும் விளக்கியும் அமைத்துப் புஸ்தக ரூபமாய் எழுதித் தரும்படி உபந்யாஸகர்கள் வேண்டிக் கொள்ளப்பட்டனர். அவர்கள் எழுதித் தருவனவற்றை முறையாக வெளியிடவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

மேற்குறித்த முறையில் தாவர சாஸ்திரம்—அனைவரும் அறிதற்குரியது, மின்சார சக்தி—அனைவருக்கும் பணியாள், ரஸாயன சாஸ்திரம்—தினசரி வாழ்க்கைக்கு வேண்டியது என்னும் பொருள்கள்பற்றிப் பிரசங்கங்கள் நிகழ்ந்தன. இவற்றைப் பற்றிய புஸ்தகங்கள் தயாராகிக்கொண்டிருக்கின்றன.

இதற்கிடையில் இச்சங்கம் கைக்கொண்டுள்ள நோக்கத்தை அனுஸரித்து ஸ்ரீ ந. ரா. சுப்பய்யரவர்கள் அரசியல்-

திட்டங்களைக் குறித்து ஒரு புஸ்தகம் எழுதினார்கள். இப் புஸ்தகம் இக்காலத்திற்கு மிகவும் ஏற்றதாகவும் அத்தியா வசியமானதாகவும் இருப்பதால், இச்சங்கம் கருதிய தொகுதியின் முதற் புஸ்தகமாக இதை அங்கீகரித்து வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்தப் புஸ்தகத்தை எழுதிய ஸ்ரீ ந. ரா. சுப்பய்யரவர்களுக்கும், இதற்கு ஒரு முன்னுரை எழுதி இச்சங்கத்தாருக்கு ஊக்கங்கொடுத்த கல்வி மந்திரி ஸ்ரீ டாக்டர் சுப்பராயன் அவர்களுக்கும் இச்சங்கத்தின் வந்தனம் உரித்தாகிறது.

இப்புஸ்தகத்தையும் இதனைத் தொடர்ந்து இனி வெளிவரும் ஏனைய புஸ்தகங்களையும் தமிழ் மக்கள் படித்துப் பயனடைந்து இச்சங்கத்தின் முயற்சியை ஆதரிக்கும்படி வேண்டிக்கொள்ளப்படுகிறது.

முன்னுரை

இப்பொழுது எல்லாப் பாடங்களும் நமது தாய்மொழியிலேயே கற்பிக்கப்படவேண்டுமென்கிற கருத்து நமது மாகாண ஸர்க்காருக்கும், கல்வி முன்னேற்றத்தைக் கருதும் ஒவ்வொருவருக்கும் தோன்றியிருக்கிறது. தாய்மொழியில் சாஸ்திர விஷயங்கள் பலவற்றையும் கற்பிக்கவேண்டும் அவசியத்தை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். இந்நிலையில், இந்தப் புஸ்தகத்தைப்போல் பல புஸ்தகங்கள் வெளிவருவது இன்றியமையாததாகும்.

இந்தப் புஸ்தகம் பற்பல தேசங்களிலுமுள்ள அரசியல் திட்டங்களைக் கூறுகிறது. இதன் ஆசிரியராகிய திரு. ந. ரா. சுப்பய்யரவர்கள் அரசியல்-திட்டங்களைத் தமது புஸ்தகத்தின் விஷயமாக்கியது இக்காலத்திற்கு மிகவும் பொருத்தமாக உள்ளது. ஜனநாயக ஆட்சி நமது நாட்டில் குடிகொள்ள வேண்டுமென்ற எண்ணம் இருக்குமாயின் நமது மாணுக்கர்கள் முக்கியமான அரசியல்-திட்டங்களை எல்லாம் அறியவேண்டுவது அத்யாவசியகமாகும். மேலும் ஸமஷ்டி அரசியலைக்குறித்து இப்பொழுது தெரிந்துகொள்வது மிக மிக அவசியம். புதிய இந்தியசட்டத்தில் அமைத்திருக்கும் ஸமஷ்டி அரசியலை நாம் ஒத்துக்கொள்ள முடியாது. எக்காரணங்களைக்கொண்டு நாம் ஒப்புக்கொள்ள முடியாதென்பது மற்ற நாடுகளில் நடைபெறும் ஸமஷ்டி அரசியல் முறையை அறிந்தால் மட்டுந்தான் நமது இளைஞர்களுக்கு நன்ருக விளங்கக்கூடும். இவ்விஷயத்தில் இப்புஸ்தகம் உபயோகப்படும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை. அமெரிக்கா ஐக்கிய நாடுகளைப்பற்றி இவ்வாசிரியர் எழுதியிருப்பது இங்கே குறிப்பிடத் தக்கது. ஆஸ்திரேலியாவிலும்

கனடாவிலும் உள்ள அரசியல்-திட்டங்களைப் பற்றியும் ஆசிரியர் எழுதியிருப்பாராஞல், அது மிகவும் பயன்படுவதாயிருக்கும். ஆனல் இப்புஸ்தகத்தில் கூறப்பட்டுள்ள ஏனை அரசியல்-திட்டங்களே மாணுக்கர்களுக்கு வேண்டும் அறிவை யூட்டுவதற்குப் போதியவாகும். கடைசியாக, நமது இந்திய அரசியல் திட்டத்தையும் ஆசிரியர் வகுத்திருக்கிறுர். இது எவ்வளவு உபயோகமாயிருக்குமென்பது சொல்லாமலே விளங்கும்.

இப்புஸ்தகம் எனது நண்பர் ஸ்ரீ கே. வி. கிருஷ்ணஸ்வாமி அய்யரின் ஊக்கத்தாலும், பெருமுயற்சியாலும் சென்னைப் புஸ்தகாலய சங்கத்தின் முத்திரையோடு வெளிவருகிறது. இதைப்போலவே, ரஸாயன சாஸ்திரம் முதலியவைகளையும் மற்றை ஆசிரியர்களைக்கொண்டு எழுதுவித்து இச்சங்கத்தார் வெளியிடப் போகிருர்கள் எனத் தெரிந்து மனமகிழ்கிறேன். இச்சங்கத்தாரது முயற்சிகள் அனைத்தும் நிறைவேறும்படி ஈசன் அருள்புரிவாராக.

கோட்டை, சென்னை,
27—7—38

ப. சுப்பராயன்

முகவுரை

உலகிலுள்ள முக்கிய அரசியல் திட்டங்களை விவரித்தும் விளக்கியும் காட்டியுள்ள புத்தகங்கள் ஆங்கிலத்தில் பல வுள. தமிழில் அத்தகைய புத்தகங்கள் இல்லாமையால் நான் இப்புத்தகத்தை எழுதலானேன்.

ஐக்கிய ஆட்சி திட்டங்களில், கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், தென் ஆப்ரிக்கா யூனியன், ஆகிய மூன்றும், சமஷ்டி திட்டங்களில் அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஸ்விட்ஜர் லந்து, ஸோவியத் அபேதவாதக் குடியரசுகளின் யூனியன் ஆகிய மூன்றும், 1935-ம் வருஷத்திய இந்திய கவர்ன்மெண்டு சட்ட விளக்கமும் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன.

பிரிட்டிஷ் அரசியல், உலகிலுள்ள எல்லா ஜனநாயக ஆட்சிகளுக்கும் உற்பத்தி ஸ்தானம். அதனைப் பார்லிமெண்டு களின் அன்னையென்றும் சொல்லுவார்கள். அனேக அரசியல் திட்டங்களுக்கு அது ஒரு தாயகமாகவும் எடுத்துக் காட்டாகவும் விளங்கி வருகின்றது. அதன் அமைப்பையும் பழக்க வழக்கங்களையும் நடவடிக்கைகளையும், மற்ற சட்ட சபைகள் பின்பற்றியுள்ளன. ஆகையாற்றான், இவற்றை விரிவாக எழுதியுள்ளேன். பிரான்ஸ் தேசத்து அரசியலோ குடியரசுத் திட்டங்களிற் பழமையும் விசேஷமும் பொருந்தியது. மேலும், பிரஞ்சு அரசியற் போக்கும் நடவடிக்கை களும் பிரிட்டிஷ் முறைக்கு வேறுபட்டுள்ளன. தென் ஆப்ரிக்கா யூனியன் அரசிய லமைப்பில் குறிப்பிடத்தக்க விஷயம் ஒன்றுண்டு. சுய ஆட்சி நடத்திவந்த நான்கு நாடுகள் தம் தம் சுதந்தரங்களைத் தவிர்த்து, ஓர் ஐக்கிய ஆட்சியின்கீழ் வெறும் மாகாணங்களாகிவிட்டன. நமது தேசத்திலோ, மத்திய சர்க்காரின் அதிகாரத்திற்கு முற்றிலும் கீழ்ப் பட்டிருந்த மாகாணங்கள் இப்பொழுது சுய ஆட்சி பெற்றிருக்கின்றன.

தற்கால சமஷ்டி அரசியல் திட்டங்களில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் திட்டம் முதன்மை பெற்றது. ஐக்கிய ஆட்சித் திட்டங்களுக்கு எங்ஙனம் கிரேட் பிரிட்டன் திருஷ்டாந்தமாக வுள்ளதோ, அங்ஙனமே அமெரிக்க ஐக்கிய நாடுகள் சமஷ்டி அரசியல் திட்டங்களுக்கு இருந்து வருகிறது. ஸ்விட்ஜர்லந்து ஒரு சிறிய தேசமாயினும், அதன் அரசியல் திட்டம் மற்ற குடியரசுத் திட்டங்கள் அனைத்திலும் மிக்கச் சிறப்புற்றுள்ளது. ஜனநாயக ஆட்சிக் கொள்கைகளுக்கு அரசியலமைப்பின் அங்கங்கள் மூலம் பூர்ண சுதந்திரம் அளித்திருப்பது ஸ்விஸ் திட்டந்தான். புது ஸோவியத் அரசியல் திட்டத்தில் விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் பேரதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அதில், பொதுவுடைமை பொருளாதார முறை, பிரஜைகளின் உரிமைகளையும் கடமைகளையும் குறிப்பிடும் அட்டவணை, இவைபோன்ற அனேக விசேஷச் சிறப்புக்கள் காணப்படுகின்றன.

1935-ம் வருஷத்திய இந்திய கவர்ன்மெண்டு சட்டம் இங்கு ஒருவாறு விளக்கப்பட்டுள்ளது. அதில் ஏற்படுத்தப்பட்ட சமஷ்டி இன்னும் ஸ்தாபிக்கப்படவில்லை. மாகாணச் சுய ஆட்சியைப்பற்றிய பாகமே நடைமுறையில் வந்திருக்கிறது. இது வந்து ஒரு வருஷந்தான் ஆகிறது. ஆதலின் அரசியற் கட்டுப்பாடுகளும் நடவடிக்கைகளும் நிலைபெற்று நடைபெறப் போதுமான கால அனுபவம் இல்லாதது பற்றியே, அரசியல் போக்கை விஸ்தரிக்காமல் சட்டத்தின் அம்சங்களை மாத்திரம் விளக்கிக் காட்டியுள்ளேன்.

இப்புத்தகத்தை எழுதுவதில் எனக்குப் பேருதவி செய்த ஸ்ரீ கே. பி. ராஜகோபாலனுக்கும், எனது நண்பரும் கும்பகோணம் காலேஜ் தமிழ்ப் பண்டிதருமாகிய ஸ்ரீ எல். சீனிவாஸய்யருக்கும் என் மனமார்ந்த வந்தனத்தை யளிக்கின்றேன்.

கும்பகோணம்,
ஏப்ரல், 1938.

ந. ரா. சு.

பொருளடக்கம்

முதற்பாகம்

அத்தியாயம்		பக்கம்
1.	அரசிய லமைப்புக்களின் பாகுபாடுகள்	1
2.	அரசியலின் அங்கங்கள்	8
	கிரேட் பிரிட்டன்	
3.	அரசிய லமைப்பின் முக்கிய அம்சங்கள்	15
4.	நிர்வாகம் I: மன்னர் ...	20
5.	நிர்வாகம் II: மந்திரிகளும் மந்திரிச் [சபையும்	23
6.	நிர்வாகம் III: நிரந்தர ஸிவில் ஸெர்விஸ்	33
7.	சட்ட சபைகள் I: லார்ட்ஸ் ஸபை	38
8.	சட்ட சபைகள் II: காமன்ஸ் ஸபை	47
9.	நீதி ஸ்தாபனம்	66
10.	அரசியற் கட்சிகளும் கட்சி ஆட்சியும்	75
11.	பிரான்ஸ்	85
12.	தென் ஆப்ரிக்கா யூனியன்	116
	இரண்டாம் பாகம்	
13.	சமஷ்டி: நிபந்தனைகளும், அம்சங்களும்	127
14.	அமெரிக்க ஐக்கிய நாடுகள்	132
15.	ஸ்விட்ஜர்லந்து I: நிகரற்ற அரசியல் [திட்டம்; கான்டன்களின் அரசாங்கம்	162
16.	ஸ்விட்ஜர்லந்து II: சமஷ்டிச் சர்க்கார்	178
17.	ஸோவியத் அபேதவாதக் குடியரசுகளின் [யூனியன்	201
	மூன்றாம் பாகம்	
18.	இந்தியா I: சமஷ்டி உற்பத்தியும் முக்கிய [அம்சங்களும்	221
19.	இந்தியா II: மாகாணங்கள்	238
20.	இந்தியா III: சமஷ்டி அரசாங்கம்	248

முக்கிய அரசியல் திட்டங்கள்

முதற்பாகம்

அத்தியாயம் 1

அரசிய லமைப்புக்களின் பாகுபாடுகள்

அரசியலுக்குரிய அதிகாரங்களை வகைப்படுத்தி அவை நடைபெறச் செய்வதற்கு மேற்கொள்ளும் முறைகளையும் சட்டங்களையுமே ஒரு நாட்டின் அரசியல் அமைப்பு என்ன லாம். அவ்வமைப்பு, அரசியலின் உருவை விளக்குவதுமட்டு மன்றி அதன் அதிகாரங்களையும், அதில் ஆளப்படுவோ ராகிய குடிகளுக்குள்ள உரிமைகளையும் தெளிவுபடுத்தி அவ்விரண்டிற்குமுள்ள பிணைப்பையும்புலப்படுத்துவதாகும்.

மேனுட்டில் அரிஸ்டாட்டில் என்னும் கிரீக்க அறிஞரே அரசிய லமைப்புக்களை முதன்முதலாக வகுத்து அவற்றை உலகுக்கு அறிவிக்க முயற்சி செய்தவராவர். அரிஸ்டாட்டிலின் அப்பெரியார் அரசிய லமைப்புக்களை இரு பாகுபாடு பிரிவினவாக வகுத்துள்ளார். அப்பகுப்புக் கள், ஆட்சி செய்பவர் தொகையைப் பொறுத் தது ஒன்றும், ஆட்சியின் தன்மையைப் பொறுத்தது மற் றொன்றுமாம்.

ஓர் அரசியலின் சர்வாதிகாரம், ஒருவனிடமோ அல்லது ஒரு குறிப்பிட்ட சிலரிடமோ, அன்றேல் பலரிடமோ பொருந்தியிருக்கலாம். மேலும், அவ்வாட்சி, ஆள்பவரின்

சுயநலத்திற்காகவோ, பிரைஜகளின் பொதுநலத்திற்காகவோ பயன்படுவதாகவும் இருக்கலாம். ஆதலின், தொகையைப் பொறுத்துள்ள ஒவ்வொரு ஆட்சியும் அதன் தன்மையை நோக்குமிடத்து இருவகையாக விரியும்.

குடிகளின் நன்மைகளை நாடி ஒருவனால் நடத்தப்பெறும் ஆட்சி செங்கோன்மை யென்றும், ஒருவனால் குடிகளுக்குத் தீமைவிளைவிக்கப் பெறும் ஆட்சி கொடுங்கோன்மை யென்றும், பொதுஜன நன்மையைக் கருதி ஒரு சிலரால் நடத்தப் பெறும் ஆட்சி அரிஸ்டாக்ரஸி என்னும் பிரபுக்களின் ஆட்சி யென்றும், அவ்வாறின்றி ஒருசிலர் தந்நலங்கருதிச் செய்யும் ஆட்சி குறுநிலமன்னராட்சி யென்றும் பெயர் பெறும். இவ் விதமே, பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பெற்றுத் தந் நலமற்ற பலரின் ஆட்சி ஒழுங்கான ஜனநாயகமென்றும், முறைகெட்டுப் பலரால் ஆளப்பெறுமேல் அது டேமாக்ரஸி என்னும் பாமர வாட்சியென்றும் பெயர்கள் பெறும். ஆகவே, மேற்கூறியவற்றுள் செங்கோலாட்சி, பிரபு ஆட்சி, ஜனநாயக ஆட்சி ஆகிய மூவகை அரசியல்கள் நியாய வரம்புகளுக்கு உட்பட்ட நேரான ஆட்சிகளென்றும், கொடுங்கோலாட்சி, குறுநிலமன்னராட்சி, பாமரவாட்சி, யென்னும் மூவகை யாட்சிகள் ஒழுங்கற்ற அநீதி ஆட்சிகளென்றும் வகுக்கலாம்.

அரிஸ்டாட்டிலின் பாகுபாடு வெகுகாலம்வரை நடை பெற்று வந்தது. மேலும், அதுவே பிற்காலத்தெழுந்த பல வகைத்தான அரசியல் திட்டங்களுக் கெல்லாம் சரித்திர பூர்வகமான அடிப்படையாகவும் உள்ளது என்னலாம். ஆனால் அப்பாகுபாட்டில் தற்கால நவீன பல அரசியல் திட்டங் களுக்கு இடம் காணப்பெறவில்லை. அம்மட்டோடு அமை யாது, அது தற்கால அரசியல் நிலைகளுக்குப் பொருத்தமில் லாமல் விளங்குவதோடு மாறுபாடான கோட்பாட்டினைப்

பயக்குவதாகவும் உள்ளது என்னலாம். உதாரணமாக, கிரேட் பிரிட்டனும், ஆப்கனிஸ்தானமும் பேர்மாத்திரத்தில் முடியாட்சி யென்னும் மன்னராட்சியாக விளங்குகின்றன வெனினும், அவ்விரு தேசங்களிலும் நடைபெறும் அரசியற் போக்கை யுற்றுநோக்கு மிடத்துப் பிரிட்டன் மறைமுக மான ஜனநாயக ஆட்சியாகவும், ஆப்கன் நாடு மிதமான யதேச் சாதிகார ஆட்சியாகவுங் கொள்ளலாம். மேலும், இவை யன்றி, பிரான்ஸ் தேச ஆட்சியையும், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆட்சியையும் ஒரேபடித்தான ஜனநாயக ஆட்சி என்று சொல்லவொண்ணாது. இவ்விரு தேசங்களின் அரசிய லமைப்புகளுக் கிடையே சில விசேஷ மாறுபாடுகள் உள்ளன வென்பது வெளிப்படை. ஆதலின், முடியாட்சி குடியரசு எனப்படும் ஜனநாயக ஆட்சி யென்னும் பெயர்களைத் தற்கால அரசியல்களுக்கு உபயோகிப்பதால் அவ்வவற்றின் உண்மைநிலை தெளிவாய் விளங்குவதன்று என்பது நன்கு புலப்படுவது காணலாம். ஆகையால், வேறு சில பாகுபாடு களின் மூலம் உலகிலுள்ள அரசிய லமைப்புக்களின் உண் மை நிலைமைகளைக் கண்டறிந்து விளக்கவேண்டியது அவசிய மாகும்.

1-சட்டபூர்வகம், அனுஷ்டான பூர்வகம்

சாதாரணமாக, தற்கால அரசியல் அமைப்புக்களைச் சட்டபூர்வக மென்றும் அனுஷ்டான பூர்வக இதர பாகுபாடுகள் மென்றும் இரண்டு விதங்களாகப் பிரிக்கின் றனர். ஒரு தனிச் சட்டத்தின் துணை கொண்டோ, அல்லது பல மூலாதாரமான சட்டங்களைக் கொண்டோ அதிகாரப் பிரிவு களும் அவற்றைச் செலுத்தும் முறைகளும் தீர்மானிக்கப் பெறுமேல், அந்த ஆட்சி, சட்டபூர்வகமான அரசிய லமைப்பெனக் கருதப்படுகிறது. கிரேட் பிரிட்டனைத்

தவிர மற்றெல்லா நாடுகளிலும் அரசியல்கள் இந்த வகுப்பை சார்ந்தனவே யாம். ஆங்கில நாட்டின் அரசியல் முக்கியமான பழக்கவழக்கங்களேயும் அனுஷ்டானங்களேயும் தழுவினதாக அமைந்திருப்பதால் அது சம்பிரதாயத் திட்டமெனக் கருதப்படுகிறது. ஆனல், இப்பாகுபாட்டைக் கூட உற்றுநோக்குமிடத்து அவ்வளவு சரியானதென்று சொல்வதற்கில்லே. ஏனெனில், எந்த அரசியல் அமைப்பையும் முழுவதும் அனுஷ்டான பூர்வகமென்று சொல்லிவிட முடியாது. உதாரணமாக, கிரேட் பிரிட்டனில் மாக்ன கார்ட்டா என்னும் மகா சாஸனம், உரிமைகள் மசோதா, செட்டில்மெண்டுச் சட்டம். 1911-ஆம் வருஷத்திய பார்லிமெண்டுச் சட்டம் முதலியன அந்நாட்டின் அரசியல் அமைப்புக்களின் அடிப்படைகளாக வுள்ளன. இவ்வாறே பூர்ணமான சட்டபூர்வகத் திட்ட மெனப்படும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலிற்கூடச் சட்டத்தைப் போலவே அனுஷ்டானத்திற்குஞ் சிறப்பு அளிக்கப்பெறுகின்றது. அதுவும் சட்டத்தைவிடச் சிறிதுங் குறைவுருவண்ணம் நடவடிக்கையைக் கட்டுப்படுத்துவதாகும். உதாரணமாக, சட்டப்படி ஜனதிபதி ஸ்தானத்திற்கு ஒருவரை இவ்வளவு முறை திரும்பத் தேர்ந்தெடுக்கலாமென்ற வரையறை யில்லாவிடினும் அனுஷ்டானத்தில் இருமுறைகளுக்கு அதிகம் தேர்ந்தெடுப்பதில்லே. மேலும், அந்நாட்டுத் தலேவரின் தேர்தல் சம்பந்தமான விதியும் நடைமுறையில் முற்றிலும் மாறிவிட்டது. அந்நாட்டு அரசியல் அமைப்புக்களே எற்படுத்திய ஆதிகர்த்தர்களின் நோக்கத்திற்கே அது முரணுக மாறிவிட்டதென்னலாம். இதனல், ஒரு திட்டமாவது முற்றிலும் சட்டபூர்வகமாகவேனும், அனுஷ்டான பூர்வகமாகவேனும் நடைபெறுவதில்லேயென அறியலாம்.

சட்டப்படி ஏற்பட்டிருக்கும் அரசியல் அமைப்பை ஆதாரமாகக்கொண்டு செய்யப்படும் பாகுபாடு இன்னும் சிறிது திருப்திகரமானதென்றே சொல்ல லாம். அது, சாதாரணமாக ஒற்றுமையுட் பட்ட ஐக்கிய ஆட்சித் திட்டமா, அன்றேல் சிக்கலான சமஷ்டி யென்னும் ஒப்பந்த ஆட்சித் திட்டமா என்பதே. பொதுவாக ஐக் கிய ஆட்சி நாட்டில்சட்டமேற்படுத்துவதுநிர் வாகம் நடத்துவது என்ற முழு அதிகாரத்தையும் ஒரு பார்லி மெண்டோ, அல்லது அரசாங்கத்தாரோ வகிப்பதாகும். சமஷ்டி யென்னும் ஒப்பந்த ஆட்சியோ, சில நிரந்தர நிபந் தனைகளுக்கும் விதிகளுக்கும் உட்பட்டு அரசியற்பொறுப்பை மத்திய அரசாங்கத்தாரும், தனி அங்கமாய் அமைந்த நாடு களும் பகிர்ந்துகொண்டு வகிப்பதேயாம். அதாவது, சமஷ்டி அரசாங்கத்தாருக்கும், அதன் தனித்தனி நாடுகளுக்கும் இடையே யேற்பட்டிருக்கும் ஒரு விசேஷ உரிமைகொண்ட உடன்படிக்கையே சமஷ்டித்திட்டம் எனக்கூறலாம். கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், தென்ஆப்ரிக்கா, அயர்லந்து இவை யெல்லாம் ஐக்கிய ஆட்சி நாடுகளாம். அமெரிக்க ஐக்கியநாடு கள்,ஸ்விட்ஜர்லந்து, ஆஸ்ட்ரேலியா, கனடா, ஜெர்மனி, ரஷ்யா இவையெல்லாம் சமஷ்டியென்னும் ஒப்பந்த ஆட்சியுடைய நாடுகளாம்.

2-ஐக்கிய ஆட்சி, சமஷ்டி யென்னும் ஒப்பந்த ஆட்சி

அரசியல் திட்டத்தின் தன்மையைப் பொறுத்து மூன் றுவது வகையாக ஒரு பிரிவினையுமுண்டு. அது, ஒரு திட்டம் சமயத்திற்கேற்ப வளைந்து கொடுக்கக்கூடியதா, அப்படி இடங் கொடுக்காததா என்பதுதான். சாதாரணச் சட்டங்களால் திருத்தவோ மாற்றவோ முடியாமல் ஒரு விசேஷ முறை யாலோ அல்லது கருவியாலோ மட்டும் மாற்றக்கூடிய

திட்டம் வளைக்கக்கூடாத திட்டமாகும். இதர சட்டங்கள்
என்ற பேதம் இல்லாமல் சாதாரண சட்ட
3-வளையாததும் சபையால் திருத்தி அமைக்கக் கூடியது
வளைந்து கொடுக் வளைந்து கொடுக்கும் அரசியல் திட்ட
கக்கூடியதும் மென்னலாம். உதாரணமாக, கிரேட் பிரிட்ட
னில் பார்லிமெண்டு பேரதிகாரம் பெற்றது.

உணவைப் பற்றிய ஒரு மசோதா முதல், பிரபுக்கள் சபையை எடுத்து விடுவதற்கான ஒரு மசோதா வரை எல்லாவற்றிற்கும் ஒரே விதமான நடவடிக்கைதான். ஆகையால் அந்த அரசியல் மிகவும் வளைந்து கொடுக்கக் கூடியதாகும். ஆனால், அமெரிக்க ஐக்கிய நாட்டுத் திட்டத்தில் சமஷ்டிச் சட்ட சபைக்கு அரசியல் அமைப்பை மாற்றக் கூடிய அதிகாரங்கள் கிடையா. தனியான ஓர் அரசியல் அமைப்பு ஸ்தாபனம் ஏற்படுத்தித்தான் அரசியல் திட்டத்தைத் திருத்தக்கூடும். ஆகையால், அது கிரேட் பிரிட்டனின் அரசிய லமைப்புக்கு நேரெதிரான திட்டமாகும்.

ஆனால், இதில் அளவில் வேறுபாடே யொழிய வகையின் வேறுபாடு இல்லை. சட்ட திட்டங்களுக்குட்பட்ட அரசியல்கள் எல்லாம் வளைந்து கொடுக்கக் கூடாதவையென்ற ஒரு தவறான எண்ணம் இருக்கிறது. ஸ்விட்ஜர்லந்தில். அரசியல் திருத்தங்களையும், சாதாரணச் சட்டங்களையும் இயற்றுவதற்காக உள்ள ஸ்தாபனம், நடவடிக்கை இவைகளில், ஒன்றிற்கொன்று அதிக மாறுபாடில்லை. பிரான்ஸ் தேச அரசியலமைப்பை மாற்றவேண்டுமேல், இரண்டு சபைகளும் ஒன்று கூடித் திருத்தப் பிரேரணையைப் பெருவாரியான ஓட்டுக்களால் நிறைவேற்றி வைக்கவேண்டும். இதைத்தவிர வேறு விதமான சிக்கலோ, துன்பமோ கிடையா. எனவே, ஸ்விட்ஜர்லந்திலும், பிரான்ஸிலும் அரசியல் சட்டபூர்வக

மாகவும், பேருக்குமட்டும் வளையக் கூடாததாகவும் இருந்தாலும், உண்மையில் கிரேட் பிரிட்டன் திட்டத்தையே அவை ஒத்திருக்கின்றன. அமெரிக்க அரசியலைப்போலல்ல. இந்தப் பேதம் மிகவும் அவசியமேயென்றாலும், அனேக மத்திய இணைப்புக்கள் பிற்காலத்தில் நாளடைவி லேற்பட்டு, வித்தியாசங்களைக் குறைத்து ஒரு பாகுபாட்டிற்கு இடமில்லாததாகச் செய்துவிட்டது. பின்னர்த்தோன்றிய அரசியல் திட்டங்களும், ஸமீபகாலத்து அனுஷ்டானங்களும் இந்தப் பேதமே புலப்படாவண்ணஞ் செய்துவிட்டன.

4-பார்லிமெண்டரி நிர்வாகமும், ஸ்திரநிர்வாகமும்

தற்கால அரசியல் திட்டங்களில் மிகவும் முக்கியமான பாகுபாட்டிற்கு மூலம் அல்லது ஆதாரம், சட்ட நிர்மாணம், அதிகார நிர்வாகம் என்னும் இரண்டிற்குள்ள சம்பந்தம்தான். கிரேட் பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளிற்சட்டசபை அங்கத்தினர்களில் இருந்து தான் அரசியல் நிர்வாகிகள் சாதாரணமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அந்த அரசியலில், மேற்கண்ட சட்டசபை அங்கத்தினர்களுக்கே நிர்வாகிகளை ஏற்படுத்தவும், நீக்கவும் அதிகாரங்கள் அமைந்துள்ளமையால், அவ்வரசியல் நிர்வாகிகள், அச்சட்டசபைக்குப் பதிற்சொல்லும் பொறுப்பை யுடையவர்களாய் அதனை யண்டியே யிருப்பவராவர். இவ்வாட்சி, பார்லிமெண்டரி நிர்வாகம் என்றும், மந்திரிச்சபைச் சர்க்கார் என்றும் வழங்கப்பெறும். ஆனால், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலோ நிர்வாக அங்கத்தினர்கள் சட்டசபைத் தொகுதியினரால் நியமிக்கப் பெறுபவ ரல்லர். அந்த நிர்வாக அங்கத்தினர்களின் உத்தியோக கால அளவு அதிகாரப் பொறுப்பு, இவற்றில் சட்டசபைக்கு ஒருவித

சம்பந்தமுங் கிடையாது. இதற்குத்தான் நான்பார்லிமெண்டரி அல்லது ஸ்திரநிர்வாகம் என்று பெயர்.

ஆகவே, உலகில் அரசியல்களில் முக்கியமானவை யெல்லாம் அடியிற் காணும் மூவகையினவாகக் கொள்ளலாம். அவை, ஒற்றையாட்சி அல்லது சமஷ்டி, வளையக்கூடியது அல்லது வளையாதது, பார்லிமெண்டரி நிர்வாக ஆட்சி அல்லது ஸ்திரநிர்வாக ஆட்சி யென்பன. இவையன்றி, மற்றுமொரு குறுக்குப் பாகுபாடும் வேண்டுவதாகும். ஏனெனில், அமெரிக்காவிலும் ஆஸ்ட்ரேலியாவிலும் உள்ள அரசியல்கள், சமஷ்டியும் வளையாத் தன்மையும் பொருந்தியுள்ளன வேனும் நிர்வாகத்தன்மையில் வேறுபடுவனவாம். அவ்வாறிருந்தும், இவ்வுலகிற் சிறப்புற்று விளங்கும் அரசியல்கள் மேற்கூறிய பாகுபாடுகளினின்றும் விலகுவன வல்ல.

அத்தியாயம் 2

அரசியலின் அங்கங்கள்

தற்கால அரசியற் செயல்கள், சட்ட நிர்மாணம், அதிகார நிர்வாகம், நீதிபரிபாலனம் என மூவகைப்படும். அவை நடைபெற மூன்று உறுப்புக்கள் உள்ளன. சட்டங்கள் இயற்றுவது, விதிகள் அமைப்பது, இவ்வேலைகளை ஒரு பார்லிமெண்டு அல்லது தனிப்பட்ட சட்டசபை செய்கிறது. இது அரசாங்க வேலைகளில் ஒரு தலைமைச் செயலாகக் கருதப்படுகிறது. சட்டங்களையும், விதிகளையும் நடைபெறுமாறு செய்து, நீதியிலாகா உத்தரவுகளையும், ராஜ்ய பரிபாலன உத்தரவுகளையும், நிறைவேற்றுவது நிர்வாக அங்கத்தின் கடமையாகும். இந்த நிர்வாக அங்கம் சட்டமியற்றும் வேலைக்கு அடுத்துள்ளதாகத் தோன்றினும், உண்மையில்

அதிகாரத்தில் அதற்கு மேற்பட்டதே. ஏனெனில், ஜனங்களுக்கு நிர்வாக அங்கத்துடன்தான் தினப்படி நெருங்கிய சம்பந்தமிருக்கிறது. மேலும், நிர்வாக அங்கமே நாட்டின் சேனுபலத்திற்குத் தலைமை வகிக்கிறது. அன்றியும், சட்டங்களை நிறைவேற்றுமிடத்தும் அதற்குச் சில சுய அதிகாரங்கள் இருக்கின்றன. முடிவில், தன் எண்ணிக்கைப்பெருக்காலும் அது மற்ற இரு அங்கங்களினும் மிக விரிந்து, செல்வாக்கிலுஞ் சிறந்துள்ளது.

மூன்றாவதான நீதிபரிபாலன இலாகா, சட்டங்களை விளக்கியும் அச்சட்டங்களைக் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களுக்குப் பொருத்திக்காட்டியும், நீதிபதிகளின் மூலம் தீர்மானங்கள் செய்கின்றது. அரசியலுள் நீதி இலாகா பொதுமக்களுக்கு மிகவும் முக்கியமானது. அரசியல் ஸ்தாபனத்தில் வெளிப்படையாக நீதியிலாகா பிரதானமாகக் காணப்பெருவிடினும், உண்மையில் அது மிக ஆழ்ந்த பொறுப்பை வகிப்பதாகும். அரசியல் நாகரிகத்தில் ஒரு நாட்டை முன்னணியில் நிறுத்துவது அதன் நீதிபரிபாலன முறையின் சிறப்பேயாகும்.

இவ்வாறு ஓர் அரசியலின் வேலைகள், சட்டநிரூபணம் அதிகாரநிர்வாகம், நீதிபரிபாலனம் என அதிகாரப்பிரிவினும் மூவகைகளாக இருப்பதால் அவ்வினைக்கொள்கையற்றை மூன்று தனி ஸ்தாபனங்களோ, மனிதர்களோ நடத்தவேண்டும். ஒவ்வொரு ஸ்தாபனமும் தத்தம் வேலைகளை முழு அதிகாரத்துடனுஞ் செய்யத்தக்கதாய் இருக்கவேண்டும். பதினெட்டாம் நூற்றாண்டிற்றோன்றிய அரசியல் ஞானிகள், இத்தகைய தீர்மானமான அதிகாரப் பிரிவினையால்தான் பொதுஜன சுதந்

திரமானது பாதுகாக்கப்பெறுமென்று கருதினார்கள். இதற்கு அதிகாரப் பிரிவினைக்கொள்கை யென்று பெயர்.

மான்டேஸ்க்யூ என்ற பிரஞ்சு அரசியல் அறிஞர் இதைப் பின்வருமாறு தெளிவாக விளக்கிக்காட்டுகிறார். சட்ட நிரூபணம், நிர்வாகம் இந்த இரண்டு அதிகாரங்களும். ஒரே மனிதனிடமோ அல்லது ஸ்தாபனத்தினிடமோ சேர்ந்திருந்தால், அது குடிகளின் உரிமைக்குப் பாதகம் விளைப்பதேயாகும். ஏனெனில், ஒரே அரசன் அல்லது நிர்வாகசபை கொடுமையான சட்டங்களை இயற்றி அவற்றைக் கடுமையான முறையில் உபயோகிக்கவும் இடமேற்படும். சட்டநிரூபணம், நிர்வாகம், இவற்றினின்று நீதிபரிபாலன அதிகாரம் பிரிக்கப்படாவிட்டாலும், நாட்டில் சுதந்திரமிருக்காது. அது சட்ட நிரூபணத்துடன் சேர்ந்து இயங்குமேல், பிரஜைகளின் உடல், பொருள், ஆவி, இவற்றின்மேலும் யதேச்சாதிகாரம் செலுத்த இடமேற்படும். ஏனெனில், சட்டமியற்றுபவனே நீதிபதியுமாவான். நிர்வாகத்துடன் சேர்ந்தால் நீதிபதி அநீதிபதியே யாவான்.

இவ்வரசிய லறிஞர்க்கு இருபது ஆண்டுகளுக்குப் பின்னர், பிரசித்திபெற்ற சட்ட நிபுணரான ஓர் ஆங்கிலேயரும் இதே அபிப்பிராயத்தை வெளியிட்டுள்ளார். "ஆங்கிலச் சட்ட வியாக்கியானம்" என்ற நூலில் பிளாக்ஸ்டன் என்னும் ஆசிரியர், "எல்லாக் கொடுங்கோலாட்சிகளிலும், சர்வாதிகாரமெனப்படும், சட்டமியற்றி நிர்வாகமும் நடத்தும் அதிகாரம் ஒரே மனிதனிடமோ, ஸ்தாபனத்தினிடமோ இருக்கிறது. இந்த இரண்டு அதிகாரங்களும் ஓர் இடத்தில் சேர்ந்திருந்தால் அங்குப் பிரஜாவுரிமை யென்பதைக் காண முடியாது", என்று எழுதியுள்ளார்.

பதினெட்டாம் நூற்றுண்டில் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் அரசியல் அமைப்புக்கள் நிறுவப்பட்ட பொழுது, இக்கொள்கைக்குப் பேராதரவு அமைவதாயிற்று. அமெரிக்க ஐக்யநாட்டு அரசிய லமைப்பை உருவாக்கிய ஆன்ருேர்கள் இக்கொள்கையை முற்றிலும் தழுவினர். பெடரலிஸ்ட் என்னும் பத்திரிகையில் ஒரு சிறந்த கட்டுரை மூலம் அதன் ஆசிரியர்களில் ஒருவராகிய மாடிஸன் என்பவர், "சட்ட நிரூபணம், நீதிபரிபாலனம், நிர்வாகம் ஆகிய அதிகாரங்கள் ஒருவர் அல்லது பலரிடமோ சேர்ந்திருப்பது, பரம்பரை பாத்தியத்தின் வழியாகவோ அல்லது சுய நியமன மூலமாகவோ, தேர்ந்தெடுத்தலினலோ ஏற்படின், அதனைக் கொடுங்கோன்மை எனவே கூறலாம்," என விளக்கியுள்ளார். தற்கால அரசியல் அமைப்புக்களில் இக்கொள்கைக்கு அமெரிக்க ஐக்யநாடுதான் இடமளித்திருக்கிறது. அங்கு ஜனதிபதிக்குச் சட்டசபையில் ஸ்தானம் கிடையாது. நிர்வாகத்திற்கும், காங்கிரஸுக்கும் சம்பந்தமில்லாமல் ஒன்றுக்கொன்று எதிரிடை போன்றிருக்கிறது. நீதி ஸ்தாபனமோ அரசியல் ஸ்தாபனத்திற்குப் பாதுகாப்பு அளிக்கிறது.

ஆனல், பத்தொன்பதாம் நூற்றுண்டில் இக்கொள்கைக்குச் செல்வாக்குக் குறைந்துவிட்டது. மூவகை அதிகாரங்களின் பிரிவினையின்றி, அவற்றின் சேர்க்கையால் தனித்து விளங்கும் ஆங்கில அரசியலின் மேம்பாடு அத்தகைய அதிகாரச் சேர்க்கையானது பொதுஜன உரிமையைப் பாதிக்கும் என்ற கொள்கையைப் பொய்யாக்கிவிட்டது.

கொள்கையின் ஆராய்ச்சி

மேற்கூறிய இக்கொள்கையில் உண்மையிருக்கிறது என்பதிற் சிறிதும் ஐயமில்லை. ஒவ்வொரு நாட்டிலும் இம் மூன்று அதிகாரங்களினிடையே ஒரு பிரிவினை இருக்கவேண்டியதும் அவசியமே. ஏனெனில், ஓர் அதிகாரத்தின் வரம்பு கடந்த வளர்ச்சியை மற்ருென்று தடுக்க இடமேற்படலாம். நீதிபரிபாலனம் நிர்வாகத்திலிருந்து தனிப்பட்டால் தான், நாட்டில் சுதந்திரம் நிலைபெறுவதாகும். அன்றேல், நிர்வாகம் நாட்டில் சர்வாதிகாரமாய் முடிந்துவிடும். ஆனுல், இந்த அதிகாரங்களின் நிலை சமமாய் அமைதல் கூடாது. ஏனெனில், எப்பொழுதும் நிர்வாகமும், நீதியும் சட்டசபை வெளியிடும் அபிப்பிராயங்களுக்கு உட்பட்டே இருக்கவேண்டும்.

சட்டசபை, நிர்வாகப்பொறுப்பையோ, நீதிபரிபாலன வேலைகளையோ ஏன் தானே மேற்கொண்டு நடத்தக்கூடாது என்பதற்குத் தக்கக் காரணம் யாதெனில், அதற்குத் திறமைக்குறைவு ஏற்பட இடமுண்டாகும் என்பதேயொழிய, பொதுஜன சுதந்திரத்திற்குப் பங்கம் அல்லது குறைவு ஏற்படுமென்பதன்று. தற்கால ஜனப்பிரதிநிதி சபை அனுபவமும், தேர்ச்சியும் தேவையான நிர்வாக வேலைகளைச் செய்யத் தகுதியற்றதேயாகும். நடு நிலைமையான நோக்கம், முதிர்ந்த அனுபவம், அரசியல் கட்சியினிடம் பற்றில்லாமை, இவை மிகவும் இன்றியமையாதனவாய்க் கொள்ளவேண்டிய நீதிபரிபாலனத்திற்குச் சட்டசபை எவ்விதத்திலும் பொருத்தமுடையதன்று.

மேலும், அனுபவத்தில் அத்தகைய பிரிவினைகள் நடைபெறக் கூடியனவல்ல. மேற்கூறிய ஒவ்வொரு இலா

காவின் அதிகார எல்லைகளையுந் தெளிவாகத் தீர்மானிக்க முடியாது. பல சமயங்களில் சட்டசபைகளே நிர்வாக அதிகாரங்களைச் செலுத்துகின்றன. உதாரணமாக, ஜனாதிபதியாகிய தலைவர் செய்யும் உடன்படிக்கைகளையும், நியமனங்களையும் அமெரிக்க ஐக்யநாட்டுச் சட்டசபை அங்கீகரிக்கின்றது. சட்டசபைகள் நியாயத் தீர்மானங்களையும் செய்கின்றன. உதாரணமாக, ஆங்கில லார்ட்ஸ் ஸபை நாட்டின் முறைகளை விசாரிக்கும் அப்பீல் கோர்ட்டாகவே இருக்கிறது. பலநாடுகளில் நிர்வாக ஸ்தாபனங்களுக்கு விரிவான விதிகளை அமைக்கும் அதிகாரமும் இருக்கிறது. சட்டங்களை வியாக்யானம் செய்யும் முறையிலேயே, நீதிபரிபாலன இலாகா ஒருவாறு சட்டமியற்றுகின்றது என்றும் சொல்லலாம். அமெரிக்க ஐக்யநாடு போன்ற இடங்களில் நீதி இலாகா, மற்ற இரு இலாகாக்களின் நடைமுறைகளைப் பற்றிக்கூடத் தீர்மானஞ் செய்கிறது.

இப்பிரிவினைக் கொள்கையினால் சட்டசபையிலுள்ள பெரும்பாலரான அங்கத்தினர்களுக்கும், நிர்வாக இலாகாத் தலைவருக்கும் மாறுபாடு நேரிட்டு முட்டுக்கட்டை போன்ற நெருக்கடி யேற்படவும் இடமுண்டு. அமெரிக்க ஐக்ய நாட்டில் இத்தொல்லை உண்டாகாமல் இருப்பதற்குக் காரணம் கட்சியேற்பாடே. சட்டப்படி ஏற்பட்ட அரசியலமைப்பின் உறுப்பா யில்லாவிடினும், இந்தக் கட்சியேற்பாடு என்னும் முறை, சட்டசபைக்கும் நிர்வாகத்தலைவருக்கும் இடையே ஓர் இணைப்புப் போன்றிருந்து, ஒற்றுமையை வளர்த்து, அரசியலைச் செவ்வனே நடத்துவதற்குக் காரணமுமாகின்றது. லாஸ்கி என்ற அரசியல் மேதாவியார் தெரிவிப்பது போல, இந்த மூன்று வேலைகளினிடையே பிரிவினை யென்பதை, வேலைசெய்பவர்களினிடையே யுள்ள பிரிவினை யெனக்

கருதுவதும், இந்த அதிகாரங்களை ஒன்றாக இணைக்க ஓர் ஏற்பாடு செய்வது தப்புக்கொள்கை என்பதும் சரியல்ல. ஓர் உத்தரவை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர அரசியலின் எல்லா இலாகாக்களின் உதவிகளும் தேவையாயிருக்கின்றன. கண்டிப்பான முறையில் அவற்றைப் பிரிப்பதென்பது அமெரிக்காவில் இருப்பதுபோல அரசியலைவிட மேம்பட்ட ஒரு பிணைப்பு அவைகளினிடையே யேற்படுவதாகும். இது அவ்வளவு விரும்பத்தக்க முறையன்று. இங்கிலந்திலும், பிரான்ஸிலும் இருப்பதுபோல நிர்வாக சபையைச் சட்ட சபையின் ஓர் உட்பிரிவான கமிட்டியாக அமைப்பதே சிறந்த வழி யென்னலாம்.

மேலும், அரசியல் வேலைகள் மூவகையாகப் பிரிக்கப் படினும் அவற்றின் நோக்கம் ஒன்றுதான். ஆதலால், அங்கங்களிடையே ஒற்றுமையும், ஒத்துழைப்பும் இன்றியமையாதனவாம். உயிருடன் இனிது வாழவேண்டுமேல் எந்த உயிருள்ள ஜந்துவின் அங்கங்களும் ஒன்றையொன்று அடக்கி விரோதித்துக்கொண்டிருக்க வொண்ணாது. அரசாங்கம் ஒரு மனிதக்கூட்டமாகையால் உயிருள்ளதென்றே கருதப்படவேண்டும். அது வெறும் இயந்திரமன்று. ஆகையால், அரசியல் திட்டங்கள் அமைப்பிலும் அனுஷ்டானத்திலும், சமயோசிதமாகத்திருந்தி வளரும் தன்மை கொண்டிருக்க வேண்டுவனவாம்.

கிரேட் பிரிட்டன்

அத்தியாயம் 3

அரசிய லமைப்பின் முக்கிய அம்சங்கள்

தற்காலத்துப் பலவகைத்தான அரசியல் அமைப்புக் களுள் பிரிட்டிஷ் அரசியல்முறையே மிக்க பழமையுடையதாகும். உலகிலுள்ள எல்லா ஜனநாயக மூல அம்சங்கள் ஆட்சிகளுக்கும் அது உற்பத்தி ஸ்தானம் என்னலாம். அக்காரணம் பற்றியே அதனைப் பார்லிமெண்டுகளின் அன்னை என்று சொல்வது வழக்கம். ஆனால், ஒரு முக்கியமான விஷயத்தில் மட்டும் அதற்கும் மற்ற அரசியல்களுக்கும் மாறுபாடு உள்ளது. பிரஞ்சு அரசியலறிஞர் ஒருவர், “இங்கிலந்தில் அரசியல் நியமம் என்பது ஒன்றுமே யில்லை,” யெனச்சிறிது பொறுமையை யிழந்து ஒரு சமயம் கூறியுள்ளார்! நோக்குமிடத்து அவர் கூறியதும் ஒருவாறு உண்மையேயென்னலாம். ஏனெனில், பிரிட்டிஷ் அரசியலமைப்பு, எளிதில் அறிந்து கொள்ளக் கூடியதாயும், ஒரேசாஸனத்தில் அடங்கியதாயும் உள்ளது அன்று. அரசியலின் அங்கங்களை நிருமாணித்து, அதிகார வரம்புகளை வெவ்வேருகப் பிரித்தமைத்து, ஒவ்வொன்றுக்கு முள்ள இணைப்புக்களை வரையறைசெய்து, பிரஜைகளின் உரிமைகளையும், பாதுகாப்புக்களையும் தெளிவாக விளக்கும்படியான “மூலாதாரச் சட்டங்கள்” என்று அவ்வாங்கில அரசியலமைப்பில் ஒன்றுமே கிடையாது. வாக்கு மூலமாகவோ எழுத்து மூலமாகவோ பல தலைமுறைகளாக வழங்கிவந்த பிரமாணங்கள், சட்ட நிபுணர்களும் அரசியல்

வாதிகளும் வெளியிட்ட அபிப்பிராயங்கள், அரசாங்கத்தின் போக்கைப்பற்றிய பழக்கவழக்கங்கள், கட்டுப்பாடுகள், சில்லறை நியாயங்கள், அல்லது விதிகள் அடங்கிய சில சட்டங்கள், இவற்றை அனுசரித்து நடப்பதே கிரேட் பிரிட்டனின் அரசியலமைப்பு என்பதாம்.

அதாவது, பிரிட்டிஷ் அரசியல், சிறுபான்மைச் சட்ட திட்டங்களின்படியும், பெரும்பாலும் பொதுவான நியதி வழக்கங்களின்படியும் நடைபெறுவதாம்.

1. சம்பிரதாயக் கட்டுப்பாடுகள் ஹேபியஸ் கார்ப்பஸ் சட்டம் என்னும் மன்று கொணரும் சட்டம், அரசு வார்சுச் சட்டம், பல வாக்குரிமைச் சட்டங்கள், 1911-ம் வருஷத்திய பார்லிமெண்டு சட்டம், வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம், இவைகள் அரசியலமைப்புக்கு ஆதாரச் சட்டங்கள். ஆனால், பிரிட்டிஷ் அரசியல் திட்டத்திற்குப் பொது நியதி என்பதுதான் முக்கியமான ஆதாரம். பாகுபாடற்ற பல பழக்க வழக்கங்களுக்கு வியாக்கியானங்களும், தீர்ப்புக்களும் அளித்து அவற்றிலிருந்து ஒரு கட்டுப்பாடுள்ள சட்டதிட்டத்தை நீதிபதிகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இதுதான் பொது நியதி. அரசனுடைய சுதந்திரம், உரிமைகள் பார்லிமெண்டின் சட்டநிரூபண நீதிபரிபாலன அதிகாரங்கள், இவைகளுக்கெல்லாம் இது தான் ஆதாரம்.

ஆனால், இந்தச் சட்டங்களையும் பொது நியதியையும் தெரிந்துகொண்டால் மட்டும் பிரிட்டிஷ் அரசியலின் அமைப்பை அறிந்துவிட்டதாகச் சொல்லமுடியாது. கட்சி ஆட்சி முறை, மந்திரிச்சபை, நிர்வாக இலாகா சட்டசபைக்குப் பொறுப்புடையதாய் இருப்பது, பிரதம மந்திரியின் நிகரற்ற ஸ்தானம்; இத்தகைய தனிப்பட்ட அம்சக்கள்

வெறும் ஒப்பந்தங்களால் ஏற்பட்டவையே யன்றிச் சட்டங்களில் காணப்பெறு.

அரசியல் முறையில் மிகவும் வளைந்துகொடுக்கும் தன்மையுடையது பிரிட்டிஷ் அரசியல் திட்டம் ஒன்றுதான். இத்திட்டம் பார்லிமெண்டின் எல்லையற்ற பேரதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். சாதாரணச் சட்டங்கள், அரசியலமைப்புச் சட்டங்கள் என்றபேதமே கிடையாது. அரசியல் அமைப்பைத் திருத்தவேண்டுமேல், அதற்கென்று தனிச்சட்டமியற்றும் கருவியோ, முறையோ ஒன்றுமில்லை. அவ்வப்போதுள்ள தேவைகளுக்கேற்ற அரசியல்மாறுதல்களை எளிதிற் பார்லிமெண்டே செய்யக் கூடும். ஒடிந்துபோகாவண்ணம் அரசியல் திட்டத்தை நீட்டவோ வளைக்கவோ கூடும். உதாரணமாக, பிரபுக்கள் சபைக்குப் பணசம்பந்தமான மசோதாக்களைத் திருத்தியமைக்கும் முன்னிருந்த உரிமை பின் ஏற்பட்ட அரசியல் மாறுபாட்டில் யாதொரு குழப்பமுமின்றி எடுபட்டுப் போய் விட்டது.

2. வளைந்துகொடுக்குந் தன்மை

பிரிட்டிஷ் அரசியலமைப்பில் மற்ெருரு குறிப்பிடத்தக்க விஷயம் இடைவிடாமலும், அறுபடாமலும் வந்துகொண்டிருக்கும் அதன் தொடர்பேயாகும். அது வேலைத்திறமையால் முடிவுபெற்ற ஒரு கட்டிடமன்று. கட்டுக்கோப்பற்றதும் நீண்டகாலத்தில் மெல்லமெல்லத் திருத்தமடைந்து வளர்ந்ததுமாகும். அதைத் திருத்தியமைக்க எடுத்துக் கொள்ளப்பெற்ற முயற்சிகள் மிகக் குறைவே யென்னலாம். எந்த நிலைமையிலும் முன்னுக்கும் பின்னுக்கும் உள்ள சம்பந்தம் முழுதும் அறுபட்டதில்லை.

3. இடைவிடாத தொடர்பு

எக்காலத்திலும் ஆங்கிலேயர்கள் ஓர் அபூர்வக் கொள்கையைக் கண்டு பிடித்துவிட்டதாகக் கருதி, இருக்கிற அமைப்பை அடியோடுமாற்றிப் புது அரசியலைச் சிருஷ்டிக்க முயற்சி செய்ததில்லை. வளர்ச்சியின் ஒவ்வோரடியும் முன்னுள்ள வழியை இயற்கைமுறையில் தொடர்ந்து வரும் பயனாகவே அமைந்திருக்கும். சட்டமும் அரசியலும் சீர்திருத்தப்பட்ட பொழுது, ஒன்றும் புதிதாகச் செய்யப்படவில்லை. முன்னரே இருந்தவை, விருத்தி செய்யப்பெற்றும், மாற்றியமைக்கப் பெற்றும் வந்தவையேயாம். பிரிட்டிஷ் அரசியல் திட்டம் யாவரும் வியக்கத்தக்க ஓர் அபூர்வ சக்தியுடையதாய் இருப்பதற்குக் காரணங்கள் இத்தொடர்ச்சியும், சமயத்திற்கேற்ப மாறுதல் கொள்ளும் தன்மையும் தான்.

பிரிட்டிஷ் அரசியலில் மற்றொரு முக்கியமான அம்சம் சட்டஆட்சி யென்பதாகும். பெரும்பாலும் மற்ற எல்லா அரசியல்களிலும் பிரஜைகளின் சட்ட உரிமைகளை விளக்கும் ஓர் அட்டவணைச் சாசனம் உண்டு. ஒவ்வொரு மனிதனும் தன்

4. சட்ட ஆட்சி

சுதந்திரத்தை அதிகமான அளவில் அனுபவிப்பதற்கு அது உதவியளிப்பதென்று கருதப்படுகிறது. பிரிட்டிஷ் அரசியல் திட்டத்தில் அத்தகைய உறுதிமொழியொன்றும் தனியே கிடையாது. ஆனால் மற்ற எல்லா நாடுகளைக் காட்டிலும் கிரேட்பிரிட்டனில் அதிகமான அளவிலேயே இன்றும் அதிக உறுதியுடன் தனி மனித சுதந்திரம் அளிக்கப்படுகின்றது என்று சொல்லும்படிச் சாதாரணச் சட்டமே விளங்குகின்றது. ஒவ்வொருவனும் அவன் எந்நிலையில் உள்ளவனாயினும், அவன் நாட்டின் சாதாரணச்சட்டத்தாற் காக்கப்படுகின்றான். பிரதம மந்திரிமுதல் பில்கலெக்டர் வரையில், எந்த அரசாங்க உத்தியோகஸ்தனும், வேறு ஒரு தனிமனிதனைப் போலவே,

சட்ட விரோதமாகச் செய்யும் ஒவ்வொரு செய்கைக்கும் பொறுப்பாளி யாவான். ஆனால் பிரான்ஸிலோ, அரசாங்க உத்தியோகஸ்தர்களின் குற்றங்களை விசாரிப்பதற்கென்று "ஆட்சி முறைச்சட்டம்" என்ற தனி விதிகளும். ஸ்தாபனங்களும் இருக்கின்றன.

5. நிர்வாகப் பொறுப்பு

அரசாங்கம் என்னும் நிர்வாக இலாகாவிடம், சட்டமியற்றல், நிர்வாகம் நடத்துதல், என்ற இரண்டு பொறுப்புக்களும் சேர்ந்திருப்பது பிரிட்டிஷ் அரசியல் திட்டத்தில் காணப்பெறும் மற்றுமொரு முக்கியமான விஷயமாகும். இம்முறையை அநேக நாடுகள் பின்பற்றி யுள்ளன. சட்டசபைக்கும் நிர்வாகத்திற்கு முள்ள இந்த நெருங்கிய சேர்க்கையும், ஒன்றையொன்று அனுசரித்து நடக்க வேண்டியிருக்குந் தன்மையுந்தான், பிரிட்டிஷ் அரசியலின் மூலாதாரமாகும். வேலைகளுக்குத் தனித்தனியே நிபுணர்கள் இருக்கின்றனர். ஆனால், அமெரிக்க ஐக்ய நாட்டின் அரசியலைப்போல அதிகாரப் பிரிவினை கிடையாது; அரசாங்க ஒற்றுமை சட்ட நிரூபணம், நிர்வாகம், நியாய விநியோகம் என்ற மூவகை அதிகாரங்களில் பிரிந்து சீர்குன்ற வில்லை. "பார்லிமெண்டுடன் கூடிய அரசன்" என்ற ஸ்தாபனத்தில் அது நிலை பெற்றிருக்கிறது.

6. கொள்கைக்கும் அனுஷ்டானத் திற்குமுள்ளபேதம்

பிரிட்டிஷ் அரசியல் திட்டத்தில், கொள்கைக்கும் அனுஷ்டானத்திற்கும் மாறுபாடிருக்கிறது. முன்னுக்குப் பின் விரோதங்களும் பொருளற்ற சில விஷயங்களும் இருக்கின்றன. உதாரணமாகக் கொள்கையின்படி முடியாட்சி யதேச்சாதிகாரம் கொண்டது; ஆனால், உண்மையில் அரசன் ஒரு பொம்மை மந்திரிச் சபைக்குக் கேவலம் நிர்வாக இயந்திரம் என்று பெயர்;

ஆனால் நடை முறையிலோ அது சட்டமியற்றும் வேலையையும் தன்னிடத்தே கொண்டுள்ளது. இவ்விதமே நடைபெறும் அரசியல் அமைப்பு ஏட்டிலிருப்பதற்கு மாறுபாடாகவுள்ளது. ஆகையால்தான் ஐம்பது வருஷங்களுக்கு முன் சில அரசியல் ஆசிரியர்களாற் செய்யப்பட்ட ஆராய்ச்சி இப்பொழுது சில முக்கிய அம்சங்களில் அனுபவப் பொருத்தமில்லாததாகிவிட்டது.

அத்தியாயம் 4

நிர்வாகம் I: மன்னர்

சட்டக்கோட்பாடு

பிரிட்டிஷ் அரசியல் திட்டத்தில் நிர்வாக அதிகாரத்தின் தலைமை மன்னரிடமுள்ளது. அது பரம்பரையாக வரும் ஏற்பாடாகும். சட்டப்படி அவரே, எவ்வித அதிகாரத்திற்கும் உற்பத்தி ஸ்தானம். அவர்தான் மேன்மைக்கும் நீதிக்கும் மூலம். மேலும், அவ்வேந்தரே, மதஸ்தாபனங்களுக்கும் தலைவர். அவரே தரைப்படை, கடற்படை, முதலிய பல போர்ப்படைகளுக்கும் தலைமை அதிபதியாவார். நிலத்திற்கும் உரியவர் அவரே, எல்லாப் பொது உத்தியோகஸ்தர்களும் அவருடைய ஊழியர்கள். பிறநாடுகளுடன் செய்யப்படும் உடன்படிக்கைகளெல்லாம் அவர் பேராலேயே நடைபெறுவன. அவ்வாங்கில ஆட்சியைச் சார்ந்த நாடுகளின் கவர்னர்கள், குடியேற்றநாட்டுத் தலைவர்கள், பல நாடுகளுக்கு அனுப்பப்படும் அரசாங்கத் தூதர்கள், எல்லோரும் அவ்வேந்தரது அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளே யாவார்.

இறைவரது ஆணையின்படியே தான் பார்லிமெண்டு கூடுகிறது. பார்லிமெண்டை தள்ளிவைக்கவோ, அல்லது கலைக்கவோ அவருக்கு அதிகாரம் உண்டு. பார்லிமெண்டு நிறைவேற்றும் எல்லாச் சட்டங்களுக்கும் மன்னரின் அனுமதி இன்றியமையாததாகும். விதிப்படி நோக்குமிடத்துப் பார்லிமெண்டுடன் கூடிய மன்னரேதான் எல்லாச் சட்டங்களையும் இயற்றுபவராவர். பொதுவாக, மன்னரின் அதிகாரத்திற்கு வரம்பு கிடையாது. ஆனால், மன்னர் பார்லிமெண்டின் ஆலோசனை யின்றிச் சட்டங்களை ஏற்படுத்தவோ, வரிகள் விதிக்கவோ முடியாது. சட்டத்திற்கு உட்பட்டேதான் அரசர் தம் அதிகாரத்தைச் செலுத்தவேண்டும்.

நடை முறை

சட்டப்படி மன்னர்க்கு ஏற்பட்டுள்ள இந்த விரிவான அதிகாரங்களுக்கும், வழக்கத்தில் நடைபெறும் விஷயங்களுக்கும் வேறுபாடு அதிகம் உண்டு. அமைச்சர்களின் விருப்பம், அல்லது வேண்டுகோளின் மேல் மன்னர் இந்தப் பெருமை தங்கிய அதிகாரங்களைச் செலுத்துகிறார். சட்டப்படி அவ்வமைச்சர்கள் தங்கள் பொதுநடத்தையைப் பற்றிப் பார்லிமெண்டிற்கு உத்தரவாதம் அளிக்கக் கடமைப் பட்டவர்கள். மன்னர் சிங்காதனம் ஏறிய நிமிஷம் முதல் இறக்கிற நிமிஷம் வரை அவர் செய்கிற ஒவ்வொரு பொதுக்காரியத்திற்கும் ஓர் அதிகாரி பார்லிமெண்டிற்குப் பதிற் சொல்லுகிறவர் ஆவர். அப்படி அம்மன்னர் செய்கிற ஒவ்வொரு செய்கைக்கும் பதில் அளிக்கும் பொறுப்புவாய்ந்த ஒரு மந்திரி இல்லாமல் மன்னர் தம் அதிகாரத்தைச் செலுத்த முடியாது. ஆதலின், சட்டப்படியும், அரசியற்படியும், மன்னர் தவறே செய்ய முடியாது. பேருக்கு அவர் ஆட்சிபுரிகிறாரே யொழிய, உண்மையிற் பரிபாலிக்கவில்லை. அரசரின் அதிகாரங்கள் முழுவதும் மந்திரிகளிடம் பொருந்தியுள்ளன.

சட்டப்படி மன்னர் நிர்ப்பந்தமின்றித் தம் மந்திரிகளை நியமிக்கலாமென்றாலும், வழக்கத்தில் காமன்ஸ் ஸபையில் பெரும்பாலரான கட்சியின் தலைவரைத்தான் மந்திரிச்சபையை அமைக்குமாறு உத்தரவிடவேண்டும். அத்தலைவர் பொறுக்கும் மற்ற அமைச்சர்களை மன்னர் ஏற்றுக்கொள்ள வேண்டும். பார்லிமெண்டு கூடுமுன் வேந்தர் செய்யவேண்டிய பிரசங்கம் கூடப் பிரதம மந்திரியாலே தயாரிக்கப்படுகிறது. அதை அவர் படிக்கவேண்டியவரே. மேலும், மந்திரிச்சபையின் பிரேரணையின்படித்தான் பட்டங்கள் அளிக்கப் பெறுகின்றன. லார்டு சான்ஸலர் என்னும் பெயருடைய மந்திரி நியமிக்கும் நீதிபதிகள் மன்னர்க்குரிய நீதி பரிபாலனம் செய்கிறார்கள். இரு பார்லிமெண்டு சபைகளும் சேர்ந்து செய்யும் தீர்மானத்தின் மீதுதான் அந்நீதிபதிகளை வேலையிலிருந்து நீக்க முடியும். மேலும், தனித்தனி இலாகாக்களின் தலைவர்களாக இருக்கும் மந்திரிகளின் பொறுப்பிற்கும், கட்டளைக்கும் கீழ்ப்பட்டுத்தான் ஸிவில் உத்தியோகஸ்தர்கள் அரசாங்கத்தை நடத்துகிறார்கள்.

இவ்வாறிருந்தும், இவ்வாட்சியில் உள்ள அதிசயமென்ன வெனில், மன்னரின் செல்வாக்கு நாளும் அதிகரித்துக்கொண்டே வருவதேயாம். மந்திரிச்சபைக் கூட்டங்களின் விவரங்கள் முழுவதும், சர்க்காரின் யோசனைகளும், காரியத் திட்டங்களுங்கூட முன்னதாக மன்னர்க்கு அறிவிக்கப்பட வேண்டும். ஆலோசனை கூறுவது, அனுமதி கொடுப்பது, எச்சரிக்கை செய்வது முதலிய உரிமைகள் சென்ற நூறு வருஷங்களாக மன்னரால் மிகவும் திறமையாக பாதுகாக்கப் பெற்றுவருகின்றன. அன்னிய நாட்டு விஷயங்களில் மட்டுமன்றி, உள்நாட்டு விவகாரங்களிலும் மன்னரின்

மன்னரின் செல்வாக்கு

செல்வாக்கு எவ்வளவு தூரம் வேலை செய்திருக்கிற தென்பது சமீபகாலத்து அரசியல் வாதிகளின் வாழ்க்கைச் சரிதங்களி லிருந்தும், சர்க்கார்க் கடிதங்களிலிருந்தும் விளங்கும். நாட்டின் ஒற்றுமைக்கு மன்னரே ஒரு கண்கூடான அத்தாட்சி. மேலும், வேந்தரே பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தின் ஒற்றுமைக்கு ஓர் அடையாளமாக இருக்கிறார். பொதுவாக நோக்குங்கால், மன்னரின் உதவியின்றியே ஆங்கில அரசியற் சக்கரம் சுழலுகின்றது. ஆனால், ஜனநாயகமென்னும் ஓர் எழில் உருவுக்கு அழகிய சிரோ பூஷணமாக மன்னர் விளங்குகிறார் என்பது மிகையாகாது. மேலும், கிரேட்பிரிட்டனிலும், இந்துதேசத்திலும், குடியேற்ற நாடுகளிலும், உள்ள பிரஜைகள் தத்தம் ராஜ விசுவாசத்தையும், பக்தியையும், காட்டுவதற்குரித்தான ஓர் அரசியற் சிறப்புக்கு ஒப்பற்ற அடையாளமாகவும், ஒன்றோடொன்று கொண்டுள்ள மேலான இணைப்புக்கும் ஒரு மூலகாரணமாகவும், அம்மன்னர் இருந்து வருகிறார்.

அத்தியாயம் 5

நிர்வாகம் II: மந்திரிகளும் மந்திரிச்சபையும்

சர்க்காரின் விரிவான அதிகாரங்கள்

நடைமுறையில் பிரிட்டிஷ் அரசியற் செயல்களைப் புரிபவர் இரு பிரிவினராவர். அடிக்கடி மாறுதலுறும் மந்திரிச்சபை யொன்றும், நிரந்தரமாயுள்ள ஸிவில் ஸெர்விஸ் மற்றொன்றுமாம். இவையிரண்டும் சேர்ந்ததே அரசாங்கம் அல்லது சர்க்கார் எனப்படும். காமன்ஸ் ஸபையில் மிகுதியான ஆதரவு யிருக்கும்வரை சர்க்கார்

செலுத்தும் அதிகாரம் பெரும்பாலும் எல்லையற்றதும் தடையற்றதுமாகும். அது, மன்னரின் அதிகாரங்கள், காமன்ஸ் ஸபையினுடைய அதிகாரங்கள், முழுவதையும் கைக்கொண்டுள்ளது. நீதிபதிகளுக்குக்கூட சுயேச்சை கிடையாது. அந்நீதிபதிகளுடைய தீர்ப்புக்கள் சர்க்காருக்கு ஒவ்வாவிட்டால் சட்டசபை மூலம் அத்தீர்ப்புக்களை விலக்கிவிடலாம். இந்த அபாரமான அதிகாரங்கள் நான்கு வகைப்படும்.

1. நியமன அதிகாரம்

வைஸ்ராய்கள், கவர்னர்கள், அயல்நாட்டுத் தூதர்கள், கான்ஸல்கள், பாதிரிகள், போர்ப்படை, கடற்படை, ஆகாயப் படை இவைகளின் தலைமையதிகாரிகள், நீதிபதிகள், மாஜிஸ்டிரேட்டுகள், இவர்கள் அனைவரும், சர்க்காரின் தலைவர் என்ற தன்மையிற் பிரதம மந்திரியாலோ அல்லது மந்திரிச்சபை அங்கத்தினராலோ நியமனஞ் செய்யப்பெறுகிறார்கள். பார்லிமெண்டுக்கு இவ்விஷயத்தில் தலையிட அதிகாரம் கிடையாது.

2 ராஜ்ய பரிபாலனம்

ராஜ்ய பரிபாலனம் அல்லது அரசியலை நடத்தும் முறையே சர்க்காரின் முக்கியமான கடமையாகும். அதுவே மிக்க விரிவுடையதுமாம். சட்ட நிரூபணம்; அமைதியை ஸ்தாபிப்பது; வியாதி வராமற் பாதுகாப்பது; நோயாளிகளுக்குச் சிகிச்சையும் உதவியுமளிப்பது; நிலக்கரிச் சுரங்கம், போக்கு வரவு முதலிய தேசீயத் தொழில்களை நடத்துவது; கல்வி, இன்ஷியூரன்ஸ் வளர்ச்சி; மக்களின் குடியிருப்பு வசதிகளை யளிப்பது; சம்பளங்களை தீர்மானிப்பது; மொத்தத்தில் தற்கால தேச நிலைக்கு ஜீவாதாரமான யாவற்றினையுஞ் செய்வது இதன் வேலைகளாம். போர்ப்படையைச் சீர்திருத்தித்

தயார் செய்யவேண்டியதும், அந்நியநாடு சம்பந்த விஷயங்களைக் கவனிப்பதும், அதன் கடமைகளே. பிறநாடுகளுடன் உடன்படிக்கைகள் செய்வதிலும்கூடப் பார்லிமெண்டின் சம்மதத்தைப் பெருவதென்பதும் சட்டப்படி அவ்வளவாக அவசியமில்லை. மன்னரின் உரிமை இவ்விஷயத்தில் சர்க்காரிடம் முற்றிலும் பொருந்தியிருக்கும்.

3. சட்ட நிரூபணம்

பொதுவாக நோக்குமிடத்துப் பார்லிமெண்டு சட்ட நிரூபண வேலையைச் செய்வதாகக் கருதலாம். ஆனால், உண்மையிலோ பார்லிமெண்டு அங்கத்தினர் எவரும் தனியே ஒரு சட்டத்தைப் பிரேரணை செய்யச் சாதாரணமாக முடியாது. முக்கியமான மசோதாக்களெல்லாம் சர்க்காராலேயே தயார் செய்யப்பெற்றுப் பார்லிமெண்டுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன. இதைத் தவிர சர்க்கார் இலாகாக்களுக்கு உபவிதி இயற்றும் பேரதிகாரம் அளிக்கப்பெற்றிருக்கிறது. இதைப்பற்றிப் பின்னொரு அத்தியாயத்தில் கவனிப்போம்.

4. நிதி நிர்வாகம்

நிதி நிர்வாகம் காமன்ஸ் ஸபையின் கையில் இருப்பது என்பது பொது அபிப்பிராயம். ஆனால், சர்க்கார்தான் வருஷந்தோறும் வருமானச் செலவுத் திட்டத்தைத் தயாரிக்கிறது. நிதி நிர்வாக விஷயத்தில் சர்க்கார் தயாரித்த திட்டத்திற்குமேல் செலவு வேண்டுமென்றோ, புதுவரி போடவோ பார்லிமெண்டு பிரேரணை செய்யமுடியாது. ஆகையால் இவ்விஷயத்தில் அதன் அதிகாரம் மிகக் குறைவென்றே சொல்லவேண்டும். சர்க்காரின் வரவு செலவுத் திட்டத்தில் ஏதேனும் விசேஷ மாறுதல் ஏற்படில் அது சர்க்காரிடத்தி

லுள்ள நம்பிக்கைக் குறைவைக் காட்டுமாகையால், சாதாரண மாகச் சர்க்கார் பிரேரணையைப் பற்றி ஆராய்ச்சியோ, விவாதமோ நடப்பதில்லை.

இனி, நாம் அரசாங்கத்தாரின் அதிகார விரிவுகளை நடத்தும் அரசியல் ஸ்தாபனங்களைப்பற்றி ஆராய்வோம்.

பிரிவி கவுன்ஸில்

சட்டப்படியும், அரசியற் கொள்கைப்படியும் பிரிவி கவுன்ஸில்தான் மன்னர்க்கு மந்திராலோசனைக் கூறும் சபையாகும். எந்த மந்திரியும், தம் அதிகாரத்தைப் பிரிவி கவுன்ஸிலர் என்று சட்டப்படி ஏற்பட்டுள்ள பெயருடன் தான் செலுத்துகிறார். உண்மையை நோக்குமிடத்து இப்பொழுது பிரிவி கவுன்ஸில் என்பது வெறும் பெயரளவில் ஓர் அங்கமாகத்தான் இருக்கிறது. புதிதாக அரசர் சிங்காதனம் ஏறும்போது அவரைப் பிரகடனஞ் செய்யத்தான் அது கூடுகிறது. சட்டப்படிப் பொது நடவடிக்கைகளுக்கு அதன் அங்கீகாரம் தேவை. என்றாலும், கவுன்ஸில் உத்தரவுகளை அளிக்க மூன்று கவுன்ஸிலர்கள் கூடினால் போதுமென்ற காரணத்தினாலும், அவ்வுத்தரவுகள் ஆராய்ச்சி யில்லாமலே ஒப்புக்கு நிறைவேறப் பெற்று வருகின்றமையாலும், கவுன்ஸிலுக்கு பிரதான்னியமில்லை.

எல்லாப் பிரிவி கவுன்ஸிலர்களும் "கவுன்ஸிலுடன் கூடிய மன்னரால்" நியமனஞ் செய்யப்படுகிறார்கள். அன்னோர், ராஜவிசுவாஸப் பிரமாணத்தைத் தவிர, அரசியல் ரகசியங்களை வெளியிடுவதில்லை யெனவும், அரசாங்கத் தாருடன் உண்மையுடன் நடந்துகொள்வதாகவும் இரண்டு உறுதிமொழிகள் அளிக்கவேண்டும். பிரிவி கவுன்ஸிலர்கள் இவ்வளவு தொகையினர் என்ற நியதி கிடையாது. தற்காலம்

அதில் ஏறக்குறைய முன்னூறு கவுன்ஸிலர்கள் இருக்கின்றனர். "ரைட் ஆனரபிள்" என்று அழைக்கக்கூடிய பெருமை தங்கிய பட்டம் ஒவ்வொரு கவுன்ஸிலருக்கும் உண்டு.

மந்திரிகளெல்லோரும் பார்லிமெண்டின் இரு சபைகளிலிருந்தும் பொறுக்கப் பெறுவர். பிரதம மந்திரிதான் அவர்களை உத்தியோகங்களுக்கு நியமிக்கின்றார்.

மந்திரிகள்

அவர்களுட் சிலர் அரசாங்கத்தார் கொள்கைகளை நிலைபெறச் செய்து தங்கள் மேற்பார்வையின் கீழிருக்கும் இலாகாக்களை நடத்துகின்றனர். மற்றுஞ்சிலர் அத்தகைய முக்கியமில்லாத இதர நிர்வாகங்களை நடத்துகிறார்கள். பின்கூறியவர்களுக்கு மந்திராலோசனை கூறும் உரிமை கிடையாது. முன் தரத்தவர்களைத்தான் காபினெட் (மந்திரிச்சபை) என்று குறிப்பிடுவது வழக்கம்.

பிரிட்டிஷ் அரசியலமைப்பில் மந்திரிச்சபை ஒரு பிரதானமான அங்கமே யெனினும், அது சட்டப்படி ஏற்பட்டதன்று. மந்திரியாக நியமிக்கப் பெற்றதிலிருந்து மந்திரிச் சபையின் அங்கத்தினருக்கு அ தி கா ர ம் ஏற்படுகிறது. பிரிவி கவுன்ஸில் அங்கத்தினர் என்ற நிலைமையில் தான் அவர்கள் மன்னருக்கு மந்திராலோசனை கூறுகின்றனர்.

காபினெட் மந்திரிச்சபை

மந்திரிச்சபையின் அமைப்பு, சமயத்திற்கேற்ப ஏற்படுகிறது. பெரும்பாலுங் கீழே கண்டவர்களுக்கு அதில் இடம் உண்டு. லார்ட்ஸ் ஸபைத்தலைவர், அரசாங்கத் தலைவர் (பிரதமமந்திரி), நிதி மந்திரி, ஸ்டேட் காரியதரிசிகள், கடற்படைத் தலைவர், பிரிவி கவுன்ஸில் தலைவர். ராஜ முத்திரை காப்பாளர் (லார்டு பிரிவி ஸீல்). மற்ற மந்திரிகளைச் சேர்ப்பது பிரதம

அமைப்பு

மந்திரியின் விருப்பத்தைப்பொறுத்தது. பொதுவாக வர்த்தகப்போர்டுத் தலைவர், கல்விப்போர்டுத் தலைவர் ஆகிய இருவரும் அதில் இருப்பார்கள்.

சமீபகாலம் வரை மந்திரிச்சபை அங்கத்தினரின் தொகை அதிகமாகிக்கொண்டே வந்திருக்கிறது. ஐம்பது வருஷங்களுக்கு முன் மந்திரிச்சபையில் 14 பேர்கள் இருந்தனர். இப்பொழுது 21 பேர்கள் இருக்கிறார்கள். நாடு அபிவிருத்தியடைந்து அரசாங்க இலாகாக்கள் அதிகரித்தமைதான் இதற்குக் காரணமென்னலாம். மந்திரிச்சபை மிக்க விரிவாகி விட்டபடியால், யுத்தம்போன்ற அவசர காலங்களில் விரைவில் காரியம் நடைபெறுவது கஷ்டமாகையால், அம் மந்திரிச் சபைக்குள் உட்பிரிவுச் சபை ஒன்று ஏற்படுத்தப் படுகிறது.

மன்னர்தாம் பிரதம மந்திரியை நியமனஞ் செய்கிறார். ஆனால், அவ்வாறு நியமிக்கப்பெறுவோர் காமன்ஸ் ஸபையின் பெரும்பான்மைக் கட்சியின் தலைவராகவே இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு இருக்கிறது. பெரும்பான்மையோராகிய தம் கட்சியில் மற்றுமுள்ள செல்வாக்குடைய அங்கத்தினர்களின் கருத்துக்கிணங்கப் பிரதம மந்திரி தம் துணைவர்களான மந்திரிச் சபையின் இதர அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கிறார். ஸ்டேட் காரியதரிசிகளில் ஒருவர் பிரபுக்கள் சபையின் அங்கத்தினராக இருக்கவேண்டும். ராஜ முத்திரைக் காப்பாளர்(லார்டு பிரிவி ஸீல்),பிரபுக்களின் சபைத்தலைவர் (லார்டு சான்ஸலர்), பிரிவி கவுன்ஸில் தலைவர் (லார்டு பிரஸிடெண்ட் ஆவ் தி கவுன்ஸில்), இவர்கள் பெரும்பாலும் பிரபுக்களாகவே இருப்பார்கள். இதற்குமேல், காமன்ஸ் ஸபை அங்கத்தினர்களை நியமிப்பதில் யாதொரு

சட்ட சம்பந்தமான தடையுங் கிடையாது. ஓர் இலாகாவின் தலைவர் பிரபுக்கள் சபையின் அங்கத்தினராக இருந்தால் அவருடைய உதவிக் காரியதரிசி அவருக்குப் பிரதிநிதியாகக் கீழ்ச்சபையின் அங்கத்தினராக இருப்பார். அவ்வாறே ஓர் இலாகாத்தலைவர் காமன்ஸ் ஸபையின் அங்கத்தினராய் இருந்து விட்டால் அவருக்குப் பிரபுக்கள் சபையில் ஒரு பிரதிநிதி இருப்பார்.

மந்திரிச்சபை பார்லிமெண்டின் தலைமையின்கீழ் அடங்கியதாக இருப்பதுதான் அதன் விசேஷ அம்சமாகும்.

விசேஷ அம்சங்கள்

அதன் அங்கத்தினர்கள் எல்லோரும் பார்லிமெண்டில் ஸ்தானம் உள்ளவர்களாயிருக்க வேண்டும். ஒரு வகையில் அதைப் பார்லிமெண்டின் கமிட்டி என்றும், அல்லது பார்லிமெண்டின் ஒரு கட்சியினுடைய கமிட்டியென்றுஞ் சொல்லலாம். மந்திரிச்சபை நிர்வாக, சட்ட நிருபண இலாகாக்களை ஒன்று சேர்க்கும் முகப்பின் திருகாணி என்று கூறலாம்.

அரசியலிற் கட்டுப்பாடும் ஒற்றுமையும் இருப்பதுதான் அதன் மற்றோர் அம்சமாகும். மந்திரிகள் எல்லோரும் ஒரு கட்சியிற் சேர்ந்தவர்கள். உத்தியோகம் வகித்தால் எல்லோரும் வகிப்பார்கள்; உத்தியோகத்தை விட்டு விலகினால் எல்லோருஞ் சேர்ந்தே வெளியேறுவார்கள். கட்சிக்கூட்டு மந்திரிச்சபை என்றும் வெற்றி பெறவில்லை. எல்லாக் கட்சிகளிலிருந்தும் அங்கத்தினரைப் பொறுக்கி யமைக்கும் தேசிய மந்திரிச்சபை ஓர் அவசர சமயத்தில் பயன்தரத் தக்கதாக இருக்கலாம். நாட்டின் நெருக்கடியான நிலைமை குறைந்ததும் அது வலிமை குன்றியதாய்விடும். ஒரே

கட்சியிலிருந்து அமைக்கப்பட்ட மந்திரிச்சபை தான் முட்டுக்கட்டையின்றி வேலை செய்யும்.

மூன்ருவதாகவுள்ள முக்கியமான அம்சம் யாதெனில் எல்லா மந்திரிகளுக்குமிடையே பொறுப்பில் ஒரு சேர்க்கை அமைந்துள்ளதுதான். ஒவ்வொரு மந்திரியும் தாம் தலைமை கொண்டுள்ள இலாகாக்களுக்குத் தனிப்பொறுப்புக் கொண்டுள்ளார் எனினும், அரசாங்கத்தின் பொதுக்கொள்கைக்கு அன்னோர் அனைவருஞ் சேர்ந்தே பொறுப்பாளிகள் என்று கருதப்படுகின்றது. மந்திரிச்சபை ஒரு பூர்ணமான அங்கம். மன்னர் சம்பந்தமாகவேனும், சட்டசபை விஷயத்திலும், அதன் அபிப்பிராயங்கள் மன்னர் முன்பும், பார்லிமெண்டின் முன்பும் ஒரு தனி மனிதனின் அபிப்பிராயம் போல ஒருபடித்தாகவே சமர்ப்பிக்கப்படுகின்றன. அரசரின் அந்தரங்க விஷயத்திலும், ஜனப்பிரதிநிதிச் சபை முன்னரும் அது தன் ஆலோசனையை அபிப்பிராய பேதங்களுக்குச் சிறிதும் இடமின்றி ஒரே விதமாய்த் தெரிவிக்கின்றது. பிரிவினைகொள்ளாத இணைப்புக்கொண்ட இந்தப் பொறுப்புத் தான் மந்திரிச் சபையின் முதல் அடையாளம். ஏதாவது ஒரு மந்திரியின் நிர்வாகத்தில் அதிருப்தி ஏற்பட்டால் அவரைத் தனியே கண்டிப்பது எளிதன்று. ஏனெனில், மந்திரிச்சபை அக்குற்றத்தைத் தானே ஏற்றுக்கொண்டுவிடும்.

நான்காவது விசேஷம் யாதெனில், மன்னர் மந்திரிச் சபைக் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பதில்லை. பிரதம மந்திரியே தலைமை வகித்து அதன் நடவடிக்கைகளை மன்னருக்குத் தெரிவித்து அச்சபையின் அபிப்பிராயங்களை அவர்முன் சமர்ப்பிப்பார். மந்திரிச்சபை என்ற மணிவடத்திற்குப் பிரதம மந்திரியே முகப்புக் கல்லாக விளங்குகிருர்.

சட்டசபைத் தலைவராகவும் மந்திரிச்சபைத் தலைவராகவும் அவர் செலுத்தும் அதிகாரம் நிகரற்றது. "ஸமானஸ்தர்களிடையே முதன்மை பெற்றவர்" என்று அவருக்கு முன்பு அளிக்கப்பட்ட பட்டம் இப்பொழுது அவர் அதிகார நிலைமைச் சிறப்பைத் தெளிவாக்காது. அவர்தான் நாட்டின் உண்மையான தலைவர். அமெரிக்க ஐக்ய நாடுகளின் தலைவருக்குக்கூட இத்தகைய அதிகாரம் இருப்பதாகச் சொல்ல முடியாது. அவருடைய கட்சிக்குக் காமன்ஸ் ஸபையில் பேராதரவு இருக்கிற வரையில் அவருடைய அதிகாரத்தை யாருந் தடை செய்ய முடியாது.

ஐந்தாவது அம்சம் யாதெனில், ஒரு குறிப்பிட்ட காரணத்தினாலோ, அல்லது பொதுவாகவோ மந்திரிச்சபையின் மீது நம்பிக்கையில்லை யென்ற தீர்மானம் நிறைவேறினால் காபினெட் ராஜீநாமா செய்துவிடும். ஒரு முக்கியமான விஷயத்தின் மீது ஏற்படும் ஆராய்ச்சியில் அதற்குப் பார்லிமெண்டில் ஆதரவு குறைந்து போய்த் தோல்வியடைந்த விடத்தும், மந்திரிகள் ஏற்றுக்கொள்ளாத ஒரு தீர்மானம் பார்லிமெண்டில் நிறைவேறிய விடத்தும் மந்திரிச்சபை ராஜீநாமா செய்தாகவேண்டும். ஆனால், ஜனங்களிடையே ஆதரவு கிடைக்குமென்று நம்பிக்கையிருந்தால் பொதுத்தேர்தல் நடத்தலாம். அத்தேர்தலில் தோல்வி யுறுமேல் அது உடனே ராஜீநாமா செய்துவிடவேண்டும். மந்திரிச்சபைக் கூட்டத்தில் நடைபெறும் விஷயங்களைப் பொது ஜனங்கள் அறிந்து கொள்ளமுடியாது. அவைகளைப் பற்றி ஒரு மந்திரி தகவல் வெளியிடுவது, ஒழுங்கு முறைக்கு விரோதமாகும். மந்திரிச்சபையின் தீர்மானங்களை இலாகாக்களுக்கு அறிவிக்கச் சமீபத்தில் ஒரு காரியாலயம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

கடமைகள்

நாட்டின் பொதுக்கொள்கையைத் தீர்மானிப்பதும், அரசாங்கத்தின் விசேஷக் கொள்கைகளை தீர்மானித்து நடத்துவதும், மந்திரிச்சபையின் விசேஷ வேலைகளாம். ஒவ்வோர் இலாகாவின் நிர்வாகத்திற்கும், மந்திரிகளின் வேலைகளை ஒன்றுபடுத்தி யமைப்பதற்கும் பொறுப்பேற்றுக் கொள்கிறது; சட்ட நிரூபணத்திற்கு மூலகாரணமாய் இருந்து பார்லிமெண்டின் வேலை முழுவதையும் நடத்துகிறது; வருஷாந்த வரவுசெலவுக் கணக்கைத் தயார் செய்கிறது; உத்தியோக நியமன உரிமையை வகிக்கின்றது; காமன்ஸ் ஸபையின் கால அட்டவணையையும், வேலைத்திட்டத்தையும் நிர்ணயஞ் செய்கிறது; ஆகிய எல்லா விஷயங்களும் அதன் வேலைகளாம். எனவே, மந்திரிச்சபை சர்வாதிகாரம் பெற்றுக் காமன்ஸ்ஸபையையே தன்னுள்ளடக்கி அதனை மங்கலடைய செய்துவிட்டது என்றுஞ் சொல்லலாம்.

இலாகாக்கள்

இலாகாத் தலைவர்களுக்குள் லார்டு சான்ஸலர் என்ற பிரபுக்கள் சபையின் தலைவரே சரித்திரத் தொடர்பும் மேன்மையும் வாய்ந்தவர் என்னலாம். நீதிபதிகளையும், மாஜிஸ்டிரேட்டுகளையும் நியமனஞ் செய்யும் பொறுப்பு அவருடையதே. நீதி இலாகாக்களுக்கும், நீதி மன்றங்களுக்கும் அவரே தலைவர். பிரபுக்கள் சபைக்கு அவர் அக்கிராசனர். அட்டர்ணி ஜெனரல் (நியாயவாதித் தலைவர்), ஸொலிஸிடர் ஜெனரல், இவர்களின் உதவியுடன் அரசாங்கத்திற்கு யோசனை கூறுபவரும் அவரே. அடுத்தபடியாக, ராஜ முத்திரை காப்பாளர் (லார்டு பிரிவி ஸீல்) பிரிவி கவுன்ஸில் தலைவர், இந்த இருவர் ஸ்தானங்களையும் இப்பொழுது ஒரு மந்திரியே வகித்து வருகிறார். அந்நிய நாட்டு இலாகா, உள்நாட்டு

இலாகா, ஸ்காட்லந்து, குடியேற்ற நாடுகள், இந்துதேசம், யுத்தம், ஆகாயப்படை, இவைகளுக்கு ஸ்டேட் காரியதரிசிகள் தலைவர்கள். பொக்கிஷம் கமிஷன் நிர்வாகத்தில் இருக்கிறது. அதற்குப் பிரதம மந்திரி தலைவர்; ஆனால், உண்மையில் நிதி மந்திரியே முழு அதிகாரத்தையும் வகிப்பவர். கடற்படைப் போர்டுக்கு மந்திரிச்சபையில் ஒருவர் தலைவர். அவருக்கு வேறு நால்வர் உதவி செய்வர். வர்த்தகம், விவசாயம், கல்வி, சுகாதாரம், தொழில், பொது மராமத்து, மற்றும் சில முக்கிய இலாகாக்களும் உள்ளன.

அத்தியாயம் 6

நிர்வாகம் III: நிரந்தர ஸிவில் ஸேர்விஸ்

அமைப்பும் உத்தியோக காலமும்

மந்திரிச் சபையின் அங்கத்தினர்கள் அரசியலில் தலைமை வகிப்பதுடன் கட்சித் தலைவர்களாயும் இருப்பதால், அன்னோர் நிர்வகிக்கும் இலாகாக்களிற் சற்றுத் தங்கி வெளியேறும் பிரயாணிகள் போலத் தான் இருக்கிறார்கள். இங்ஙனம் பிரிட்டிஷ் அரசாங்கம் அடிக்கடி மாறுவதால், மேற்பார்க்குமிடத்து அது அனுபவமற்றவர்களால் நடைபெறுவதுபோலத் தோன்றலாம். ஆனால், உண்மையில் மந்திரிகளின் வேலை, தம் மேற்பார்வையிலுள்ள இலாகாக்கள் சரியான முறையில் வேலைபார்த்து வருகின்றனவா என்று கவனித்து வரவேண்டியது மட்டுமே தான். மந்திரிகள் சாட்டைபிடித்து நடத்துபவர்கள் போன்றவர்கள். மற்றெல்லா விஷயங்களிலும் நிரந்தர ஸிவில் ஸெர்விஸ் உத்தியோகஸ்தர்கள் முன் நடந்த விவகாரங்களைப்பற்றிய தக

வல்களைத் தெரிவித்து அவர்களுக்கு உதவி செய்கிறார்கள். அடிக்கடி மாறுதலடையும் மந்திரிச் சபைக்கும், நிரந்தரமாக வேலைபார்க்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் இடையே, இந்த முழு ஒத்துழைப்பு ஏற்பட்டால்தான், அரசாங்கத்தின் அபிவிருத்தியும் வன்மையும் அசைக்க முடியாவண்ணம் உறுதி பெறும்.

வருஷத்திற்கு 2000 பவுன் சம்பளம் பெறும் நிரந்தர உதவிக் காரியதரிசி முதலாக, வருஷம் 100 பவுன் பெறும் உதவிக் குமாஸ்தா வரையில் பல சிறிய பெரிய உத்தியோகஸ்தர்களால் அமைந்தது இந்த நிரந்தர ஸிவில் ஸெர்விஸ் வர்க்கம். "ஸிவில் ஸெர்விஸ் கமிஷன்" என்னும் அரசியற் சம்பந்தமற்ற ஒரு ஸ்தாபனத்தாரால் நடத்தப்பெறும் ஒரு பகிரங்க பரீக்ஷைமூலம் இந்த உத்தியோகஸ்தர்கள் பொறுக்கப்படுகிறார்கள். சட்டப்படி அவர்களுடைய உத்தியோக காலம் மன்னரின் இஷ்டத்தைப் பொறுத்ததென்றாலும், அனுஷ்டானத்தில் பெருத்த குற்றங்கள் செய்தாலன்றி அவர்களை வேலையிலிருந்து நீக்குவதில்லை. ஆகையால், அவ்வர்க்கத்தினர்க்கு உத்தியோக காலம் அனேகமாக நிரந்தரமென்றே சொல்லலாம். எந்தக்கட்சி தேர்தலில் வெற்றி பெற்றாலும், உத்தியோகஸ்தர்கள் மாறுவதில்லை. அவர்கள் அரசியற் கட்சிகளில் ஈடுபடுவதில்லை. எந்தக் கட்சி அதிகாரத்திற்கு வந்தபோதிலும், அதனுடன் நேசமுடனும், ஒழுங்காகவும் ஒத்துழைத்துக் கீழ்ப்படிவது என்பதுதான், பிரிட்டிஷ் ஆட்சியிலுள்ள இந்த உத்தியோக வர்க்கத்தின் சிறப்பான அம்சமென, பல அந்நியநாட்டு அறிஞர்களே ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

“புது யதேச்சாதிகாரம்”

ஸிவில் ஸெர்விஸ் உத்தியோக வர்க்கத்திற்கென்று தனிப்பட்ட ஓர் அதிகாரம் இல்லை. எப்பொழுதும் அது பின்னிருந்தே பணி இயற்றுகிறது. ஆனால் அதன் நிரந்தர உத்தியோக காலத்தாலும், வேலைத் திறமையினாலும், அது அரசாங்கத்தின் ஒரு வலிமை தங்கிய சிறந்த அங்கமாகி விட்டது. ஆனதுபற்றியே பிரிட்டிஷ் ஸிவில் ஸெர்விஸ் உத்தியோகஸ்தர்கள், பொது ஊழியர்கள் என்ற வெளிப்படையான புகழைத் தவிர்த்து, கைகண்ட அதிகாரத்தைத் தம்மிடங் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகின்றனர். சமீப காலத்தில் அந்த ஸிவில் ஸெர்விஸின் செல்வாக்கு வளர்ந்திருக்கும் நிலையை நோக்குமிடத்து, அதனைப் “புது யதேச்சாதிகாரம்” என்று சொல்வது பொறுத்தமாகும் என்று ஓர் ஆங்கில பிரதம நீதிபதியே கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் அதிகாரத்தை யேற்றுக்கொண்டுள்ள மந்திரியின் தீர்மானத்தை நடைபெறுமாறு செய்வதுதான் ஸிவில் ஸெர்விஸ் அதிகாரவர்க்கத்தினரது வேலை யென்பது கொள்கை. ஆனால், மந்திரிக்குத் தன்னுடைய இலாகா வேலையைப்பற்றிய நுணுக்கமான அறிவோ, உள் ரந்திரங்களைப்பற்றிய ஞானமோ, இருக்க இடமில்லை. மேலும், காபினெட், பார்லிமெண்டு, இவ்விரண்டின் கூட்டங்களில் கலந்துகொள்வதிலும், வேண்டும்போது ஸமூக விஷயமாய் பேட்டியளிப்பதிலும், அநேக இடங்களில் பிரசங்கஞ்செய்வதிலும், மந்திரியின் நேரம் அதிகமாக கழிந்துவிடுகிறது. ஆதலால், தெய்வத்தன்மை பொருந்தினவராய் இருந்தாலன்றி, அவரால் இலாகாவின் சிக்கல் நிறைந்த பல தகவல்களை உத்தியோகஸ்தர்கள் உதவியின்றி ஒருநாளும் தீர்க்க முடியாது. நூற்றில் தொன்னூற்றொன்பது விஷயங்களில்

அவர் அவர்களுடைய சிபார்சை ஏற்றுக்கொண்டு விடுகிறார். இதுதான் நடைமுறையில் உள்ள விஷயம். பார்லிமெண்டில் கேட்கப்படும் கேள்விகளுக்கு மந்திரி கூறும் பதில்கள் எல்லாவற்றையும் அவருடைய ஆபீஸ்தான் தயார் செய்கிறது. அவரது இலாகா உத்தியோகஸ்தர்கள் தயாரித்த புள்ளி முதலிய விவரங்களை வைத்துக்கொண்டுதான் அவர் பார்லிமெண்டிலும், இதர இடங்களிலும் பேசுகிறார். ஏதாவதொரு பொது விஷயமாக மந்திரி பேட்டியளித்தால், புள்ளி விவரங்கள் கொடுத்துத் தக்க பதில் அளிக்க, அவர் பக்கத்தில் அவ்விஷயத்தில் தேர்ச்சிபெற்ற உத்தியோகஸ்தர் காத்திருப்பர். வெளிப்பார்வைக்கு மந்திரி எல்லாம் அறிந்தவர் போலத்தான் தோன்றும். ஆனால், இலாகாவில் இருக்கும் நிரந்தர உத்தியோகஸ்தர்களின் உதவியின்றி அவரால் ஒன்றுஞ் செய்ய முடியாது. பேருக்கு மட்டும் நிர்வாகக் கொள்கை மந்திரியின் பொறுப்பிலிருக்கிறது. ஆனால், அனேகமாக அரசாங்கக் கொள்கையாக அங்கீகரிக்கப்படும் பிரேரணைகளையெல்லாம் ஸிவில் ஸெர்விஸ் உத்தியோகஸ்தர்கள் தாம் செய்கிறார்கள்.

சட்ட நிரூபண விஷயத்திலும் உத்தியோகஸ்தர்களின் செல்வாக்கு விரிவுடையதே. தற்காலச் சட்டசபையில் நிறைவேறுஞ் சட்டங்கள் அனேகமாக விவரங்களற்ற பொது நியதிகளைத்தாம் குறிக்கின்றன. இந்தச் சட்டக் கூட்டிற்கு உயிரளித்து இயங்கச்செய்வது முழுதும், இலாகாக்கள் வெளியிடும் சர்க்கார் விதிகளும், அறிக்கைகளுமே தாம். இந்த "உபசட்ட நிரூபணம்" இப்பொழுது மிகவும் ஆபத்தான வகையில் விரிந்துவிட்டதென்பது மட்டுமன்று. அனேக சட்டங்களை அமுலுக்கு கொண்டு வருவதற்கேற்ற விதிகளையும், உத்தரவுகளையும் மந்திரியே (அதா

வது நிரந்தர உத்தியோகஸ்தர்களே) வெளிப்படுத்தும் அதிகாரம் அச்சட்டங்களின் தனி ஷரத்துக்கள் மூலம் அளிக்கப்படுகின்றது. சட்டத்திற்கு விரோதமாக எந்த நீதிபதியும் தீர்ப்புச்செய்ய முடியாதாகையால், இந்த விதிகளின் மேல் அப்பீல் உரிமையுங் கிடையாது. பெரும்பாலும் பார்லிமெண்டின் சட்டங்களிற் பின் வருமாறு காணப்படும்:- "ஒரு விஷயத்தில் அபிப்பிராய பேதமோ, அல்லது விவாதமோ ஏற்பட்டால் மந்திரி மத்தியஸ்தராகவிருந்து தீர்ப்புக் கூறுவர். அவருடைய தீர்ப்பே முடிவானது." அதாவது, அவ்விஷயத்தில் நீதிபதி முன் அப்பீலுக்கு இடமில்லை.

பிரிட்டிஷ் உத்தியோக ஆட்சியின் இந்த விசேஷ அம்சத்தை மிகப் பலமாகச் சிலர் தாக்கி எழுதியுள்ளார். சட்ட நிரூபண அதிகாரம் சில சந்தர்ப்பங்களில் நிர்வாக உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டியது இன்றியமையாததே. ஆனால், அத்தகைய அதிகாரம் அப்பீலுக்கு உட்பட்ட நியாய பரிசீலனைக்கு அடங்கியிருக்க வேண்டும்.

நிரந்தர ஸிவில் ஸெர்விஸ் ஓர் உத்தியோக ஆட்சி வர்க்கமா?

நிரந்தர உத்தியோகஸ்தர்களின் அதிகாரத்தைச் சிலர் "உத்தியோக கோஷ்டியின் ஆட்சி" என்கின்றனர். அதன்படி, நிர்வாகம் நடத்தும் உத்தியோகஸ்தர்களே அரசாங்கம் என்னும் பொருள்படுவதாம். அதாவது ஆட்சி முறையில் உத்தியோக வர்க்கமே அதிகமான அதிகார சுதந்திரத்தைத் தன்பாற் கொண்டுள்ளது என்பதாம். ஆனால், இது கிரேட் பிரிட்டனிலிருக்கும் ஸிவில் ஸெர்விஸுக்குப் பொருந்தாது. ஏனெனில் அங்குப் பகிரங்கமான பரீக்ஷைகளிற் பொறுக்கி எடுக்கப்பெற்ற நிபுணர்கள் தாம் அரசியலில் மந்திரிகளின் நிர்வாகத்திற்குட்பட்டுத் தம் வேலைகளைச் செய்து வருகின்றனர்.

ஆயினும், மேலே குறிப்பிட்டவண்ணம் தற்காலம் உத்தியோக பரம்பரை ஓரளவில் கட்டற்று அதிகாரம் செலுத்தி வருகிறது என்பதில் ஐயமில்லை. மந்திரியின் பொறுப்பு என்ற மேற்போர்வையிலிருந்துகொண்டு அது மிக்க வலிமையுடன் விருத்தியடைந்து வருகிறது. உண்மையை ஆராயுங்கால், மந்திரியின் கொள்கைகள் என்பன அவருடைய நிரந்தர உத்தியோகஸ்தர்களின் கொள்கைகளே தாம். அம்மந்திரியின் பெயரால் அந்த உத்தியோகஸ்தர்கள் ஓரளவு பொறுப்பற்ற அதிகாரஞ் செலுத்துகிறார்கள் என்னலாம். ஆகையால், கிரேட் பிரிட்டனில் உத்தியோகஸ்தர் ஆட்சிக்குரிய சில குற்றங்கள் காணப்படுகின்றன. அவை, தம் வழக்கங்களையும் போக்குகளையுமே மேன்மைப்படுத்துவது; காரியம் நடைபெறக்கூடிய இயல்பை அனுவசியமாய் வளர்த்துவது; அதிகாரத் தோரணை, ஹோதா இவைகளை மிகைப்படுத்துவது முதலியனவாம்.

அத்தியாயம் 7

சட்ட சபைகள் I: லார்ட்ஸ ஸபை

கிரேட்பிரிட்டனில் சட்ட நிரூபண ஸ்தாபனத்திற்குப் பார்லிமெண்டு என்றுபெயர். அதனைத் தெளிவாய்க் கூர்ந்து கூறுமிடத்துப் "பார்லிமெண்டுடன் கூடிய பார்லிமெண்டு மன்னர்" என்று பகரலாம். உலகத்திலுள்ள சட்ட சபைகளிலெல்லாம் அதுதான் மிக்க மதிப்பிற்குறியதும், அதிக அதிகாரம் வாய்ந்ததும் ஆகும். அதன் இரண்டு முக்கியமான அம்சங்கள் குறிப்பிடத் தக்கவை.

இரண்டு முக்கிய அம்சங்கள்

சட்டப்படி, பார்லிமெண்டு சர்வாதிகாரம் பெற்றது. அந்நிய நாட்டு ஒருவர் வேடிக்கையாகக் கூறியவாறு, ஆணைப் பெண்ணாக்குவதும், பெண்ணை ஆணாக்குவதும் தவிர, மற்றெல்லாவற்றையும் அது செய்யக்கூடும். எந்தச் சட்டத்தையும் நிர்ணயிக்கவும், மாற்றவும், நிராகரிக்கவும் அதற்கு அதிகாரமுண்டு. அரசாங்க அமைப்பையுங்கூட அது மாற்றிவிடலாம். மன்னர் வார்சு உரிமையையும் மாற்றலாம். நியாய விநியோகத்தில் தலையிடலாம். ஒரு தனி மனிதனின் எத்தகைய சிறப்பான உரிமையையும் இல்லாமற் செய்துவிடலாம். அதற்கும் பொதுஜன சமூகத்திற்கும் சிறிதும் வித்தியாசமில்லை. ஏனெனில், ஜனங்களின் முழுச் சுதந்திரங்களும், அதிகாரங்களும் அதனிடம் இருக்கின்றன. அதுகூடி வேலை நடத்தும் கட்டிடத்தில் பொதுஜனத் தொகுதியே முழுவதும் வந்து கூடியது போலத்தான். சட்டத்தின் கொள்கைப்படி அதுதான் தேசம். அதுவே பண்டை முன்னோர்களுடையப் பொதுக் கூட்டத்தின் சரித்திர சந்ததி. சட்டத்திலும், நடை முறையிலும் அது ஒன்றுதான் தேசத்தின் அதிகாரத்தைத் தனியாகவும், பூர்ணமாகவும் ஏற்றுக்கொண்டு விளங்கும் நிலயம். ஆகையால், சட்டப்படி அது யாருக்கும் அடங்கியதன்று; ஸர்வ வல்லமையும் வாய்ந்தது என்னலாம்.

பார்லிமெண்டு இரண்டு சபைகளைக் கொண்டது. சரித்திரப் போக்கில் இவ்வமைப்பு, பல எதிர்பாராத சம்பவங்களின் காரணமாக ஏற்பட்டது. இச் சபைகளுக்கு லார்ட்ஸ் ஸபை, காமன்ஸ் ஸபை யென்பன பெயர்கள். இவற்றுள் முற்கூறியதைச் சாதாரணமாக மேற்சபை யென்றுங் குறிப்பிடுவதுண்டு. ஆனால் ஐரோப்பிய உள்நாடுகளின் வழக்கப்

படி, அதை இரண்டாவது சபையென்றும், காமன்ஸ் ஸபையை முதற்சபை யென்றுஞ் சொல்வது, அவை யிரண்டிற்குமுள்ள சிறப்பின் ஏற்றத் தாழ்வுகளை விளக்கிக் காட்டுவதாகும்.

சபைகள் கூடுவதற்குக் குறைந்தது இருபது நாட்களுக்கு முன்னரே, பிரிவி கவுன்ஸிலின் சிபார்சின்மீது ஏற்படும் மன்னரின் உத்தரவுப்படித்தான் பார்லிமெண்டு கூடும். 1914-ம் வருஷத்திற்கு முன் ஆண்டுதோறும் பிப்ரவரி மாதம் முதல் ஆகஸ்டு மாதம் வரையில் பார்லிமெண்டு கூடிக்கொண்டிருந்தது. ஆனால், இப்பொழுதோ இடையிடையே சில ஓய்வுகாலந் தவிர அனேகமாய் வருஷம் முழுவதும் அதன் நிகழ்ச்சி நடைபெறுகின்றது. ஒரு கூட்டத்தின் முடிவில் அது அரசரால் தள்ளிவைக்கப் படுகிறது. அந்த கூட்டத்தின் காலத்திற்குள் நிறைவேறாத மசோதாக்களெல்லாம் காலாவதியாகும். அதாவது பயனற்றுப் போகின்றன. எந்தச் சபையும் தன் கூட்டத்தை எந்த குறித்த காலத்திற்கு வேண்டுமானாலும் தள்ளிவைத்துக் கொள்ளலாம். சாதாரணமாக, காலாவதி யாகும்பொழுதோ, அல்லது இடையில் மன்னர் பிரகடனத்தின் மூலமோ, பார்லிமெண்டு கலைபடும். சட்டப்படி ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட காமன்ஸ் ஸபைக்கு ஏற்பட்டுள்ள காலம் ஐந்து வருஷ மாகும். கலைக்கப்படுமேல் மறு தேர்தல் நடந்தாக வேண்டும்.

சபைகளின் கூட்டம்

லார்ட்ஸ் ஸபையென்பது, லௌகிகப் பிரபுக்கள், மதப் பிரபுக்கள், ஸ்காட்லந்து, அயர்லந்து இவற்றின் பிரதிநிதிகளாகிய பிரபுக்கள், நீதிப் பிரபுக்கள், அடங்கியதாகும்.

அதில் உள்ள அங்கத்தினர்களின் தொகை ஏறத்தாழ 720. அவர்களுள் பெரும்பாலர் பரம்பரைப் பிரபுக்கள்; இரண்டு ஆர்ச்சு பிஷப்புக்களும் (பிரதம பாதிரிகள்,) இருபத்துநான்கு பிஷப்புக்களும் (பாதிரிகள்), வைதிகப் பிரபுக்கள் பார்லிமெண்டு கூடுங் காலத்தில் ஸ்காட்லந்திலிருந்து பதினறு பிரபுக்கள் பிரதிநிதிகளாக வருகிறார்கள். ஆயுள் பரியந்தம் தேர்ந்தெடுக்கப்பட்ட இருபத்தெட்டு ஐரிஷ் பிரபுக்கள் இருக்கின்றனர். ஐரிஷ் சுயேச்சை நாடு ஏற்பட்ட பிறகு இந்த இருபத்தெட்டு பிரபுக்களின் நிலை பொருத்தம் இல்லாத தாகிவிட்டது. இவர்களைத் தவிர, ஆயுள்வரை நியமிக்கப் பெற்றுள்ள, சாதாரண அப்பீல்களை விசாரிக்கும் பிரபுக்கள் எழுவர் இருக்கின்றனர்.

லார்ட்ஸ் ஸபை அமைப்பு

பிரபுக்கள் சபையில் அங்கத்தினராக இடம் பெறுவதற்கு வயது இருபத்தொன்று ஆகி யிருக்கவேண்டும். அந்நிய நாட்டானக இருக்கக்கூடாது. குற்றஞ்செய்து சொத்தை இழந்தவனும், கடன் தீர்க்க வகையில்லாதவனும், மேற்படி லார்ட்ஸ் ஸபை அங்கத்தினனுக உரிமையில்லை. பரம்பரைப் பிரபுக்களின் வார்சுகளான ஸ்திரீகளுக்கும் லார்ட்ஸ் ஸபையில் இடம்பெற அனுமதியில்லை. ஆனல், பரம்பரைப் பிரபு ஸ்தானத்திற்கு உரிமையுடைய எவரும், சபை அங்கத்தினர் பதவியை நிராகரிக்க முடியாது. மேலும், இஷ்டப்படிப் புதிய பிரபுக்களை அச்சபைக்கு நியமிக்க மன்னருக்கு அதிகாரம் உண்டு.

உலகிலுள்ள இரண்டாம் சபைகளிலே, ஆங்கில லார்ட்ஸ் ஸபைக்கு ஒரு நிகரற்ற ஸ்தானம் இருக்கிறது. உயர்குலப் பிறப்பிற்கு அரசியல் உரிமையும், செல்வாக்கும்

அளித்திருப்பது அச்சபை ஒன்றே. அதுதான் உலகத்திலேயே பெரியது. ஆனால், அதன் அமைப்பைப் பலர் அடிக்கடிக் கண்டிக்கிறார்கள். ஜனநாயக அரசியல் திட்டத்தில் அது ஓர் அர்த்தமற்ற அங்கமென்று பலர் அதனைத் தாக்கியு மிருக்கிறார்கள். ஜனநாயக லக்ஷியத்திற் கேற்றவாறு அதைத் திருத்தி யமைக்க வேண்டுமென்று அனேக பிரேரணைகள் கொண்டுவரப்பட்டு மிருக்கின்றன. சமீபத்தில் 1933-ம் ஆண்டிற்கூட லார்டு ஸாலிஸ்பரி அவ்வித ஒரு பிரேரணை கொண்டு வந்தார்.

அதிகாரங்கள்

1911-ம் வருஷம் வரை பிரபுக்கள்சபை காமன்ஸ் ஸபைக்கு நேரொத்ததான அந்தஸ்தும் அதிகாரமும் உள்ளதென்று கருதப்பட்டு வந்தது. ஆனால், அவ் வருஷத்திய பார்லிமெண்டு சட்டத்தின்படி அதன் அதிகாரங்கள் மிகவும் குறைக்கப் பட்டு விட்டன. நிதி விஷயத்திலும், சாதாரணச் சட்ட நிரூபணத்திலும், அது தன் பழைய நிலையில் மாறி, ஒரு கீழ் ஸ்தானத்தை அடைந்துவிட்டது.

1 நிதி

நிதி மசோதாக்கள் காமன்ஸ் ஸபையால்தான் பிரேரிக்கப்பட வேண்டும். கீழ்ச்சபையில் நிறைவேறின பிறகு அவை, அச்சபைத் தலைவர் (ஸ்பீக்கர்) சர்ட்டிபிகேட்டுடன், மேற்சபைக்குக் கூட்டம் முடிவதற்குக் குறைந்தது ஒரு மாதத்திற்குமுன் அனுப்பப்பட வேண்டும். அந்த ஒரு மாதத்திற்குள், அவை அங்கே அங்கீகரிக்கப்படாவிட்டால் காமன்ஸ் ஸபை வேறு விதமாக அபிப்பிராயப்பட்டாலொழிய, அவை கிரமமாக மன்னரின் அங்கீகாரம் பெற்று விடுகின்றன. அதாவது அவை சட்டங்களாகி விடுகின்றன.

சாதாரணச் சட்ட நிரூபணத்தில் லார்ட்ஸ் ஸபை எந்த மசோதா வேண்டுமானாலும் கொண்டுவரலாம். ஆனால் நடைமுறையில் அது சில சிறு இலாகா சம்பந்தமான மசோதாக்களைத்தான் பிரேரணை செய்கிறது. அதனால் காமன்ஸ் ஸபையின் வேலைகூடச் சிறிது குறைகின்றது என்னலாம். முக்கியமான மசோதாக்கள் விஷயத்தில் இரண்டு சபைகளுக்குமுள்ள சம்பந்தத்தை 1911-ம் வருஷச்சட்டம் நிலை நாட்டியுள்ளது. சேர்ந்தாற்போலக் கூடுங் கூட்டங்களில் ஒரு மசோதா காமன்ஸ் ஸபையில் மும்முறை நிறைவேறப் பெற்றுக் கூட்டம் முடிவதற்குக் குறைந்தது ஒரு மாதத்திற்குமுன் மேற் சபைக்கு அனுப்பப்பட்டால், முதற் கூட்டத்தில் இரண்டாந்தடவை நிறைவேறிய பிறகும், மூன்றுங் கூட்டத்திற் கடைசி முறை நிறைவேறியதற்குள்ளும், இரண்டு வருஷங்கள் சென்று விட்டால், லார்ட்ஸ் ஸபையின் அங்கீகாரம் இல்லா விடினுங்கூட, காமன்ஸ் ஸபை வேறுவகையாக உத்தர விடாவிடில், அது மன்னரின் அங்கீகாரம் பெற்றுச் சட்டமாகிவிடும். இதனால் விளங்குவது யாதெனில், ஒரு மசோதாவை லார்ட்ஸ் ஸபை வேண்டுமானால், இரண்டு வருஷம் தடையாக நிறுத்திவைக்கலாமென்பதே. அந்த இரண்டு வருஷ எல்லை கடந்தவுடன் லார்ட்ஸ் ஸபையின் சம்மத மின்றியே, அந்த மசோதா சட்டமாகிவிடும் என்பதாம். அபிப்பிராய பேதங்கள் ஏற்படுங் காலங்களில் இரண்டு சபைகளும் சேர்ந்து கூடுவதற்கான ஸ்தாபன ஏற்பாடு ஒன்றும் ஆங்கில அரசியலில் இல்லை.

2 சட்ட நிரூபணம்

இந்த இரண்டு வருஷத்து நிராகரிப்பான தடையும் விரும்பத் தக்கதன்றெனக், காமன்ஸ் ஸபையின் முன்

னேற்றக் கட்சியினர் கருதுகிறார்கள். பிரபுக்கள் சபையின் பண்டைச் சரிதத்தை ஆராயுங்கால், அது பிற்போக்கான கட்சியின் கோட்டை யெனவே சொல்லலாம். லிபரல் கட்சியின் ஆட்சிக் காலங்களில் சர்க்கார் மசோதாக்கள் லார்ட்ஸ் ஸபையின் தலையீட்டால் சட்டமாகாமற் போனவை மிகப் பலவாம். ஆகையால், லார்ட்ஸ் ஸபை மூலம் பொதுவுடைமைச் சீர்திருத்தங்கள் தாமதமுந் தடையும் பெறும் என்று அச்சமுறுவதற்கு தக்க ஆதாரமுண்டு.

3 ஆலோசனை வேலை

ஆனால், லார்ட்ஸ் ஸபை அரசாங்க ஆலோசனைகளைப் பற்றி விவாதம் நடத்துவதற்கு மிகவும் உரித்தான இடமென்னலாம். கட்சிக் கட்டுப்பாடுகளும், அபிமானங்களும், அதாவது ஒருதலைப் பற்றும் அங்குக் கிடையாது. கட்சிப் பிரதிக் கட்சிகளின் போராட்டத்தின் புழுதிகளும், எரிச்சல்களும் இன்றி, அங்கு அமைதியும், சுதந்திரமும் நிலவுகின்றன. தேசத்திலுள்ள சில முதற்றரமான அறிவாளிகளும், அனுபவசாலிகளும், விக்ஞானிகளும், அங்கு விளங்குகின்றனர். அதை மந்திரிகளின் சேமநிலயம் என்று கூறியிருப்பது மிகவும் பொருத்தமுடையதே யாகும். லார்டு மார்லி போன்ற வயதடைந்த அரசியல் ஞானிகள் தம் தள்ளாமையினாற் காமன்ஸ் ஸபையில் எப்போதும் உட்காரவும், இலாகாத் தலைவராக இருக்கவும் இயலாத போது, லார்ட்ஸ் ஸபையில் அவர்களுக்கு இடம் ஏற்படா விட்டால், முதிர்ந்த அனுபவம் முன்னிட்ட அவர்களின் அரிய சேவையை நாடு இழந்துவிடு மன்றோ? அதுவன்றி, மந்திரிச் சபையில் தம்முடன் ஒத்துழைக்கும் அங்கத்தினர்களைப் பிரதம மந்திரி தேர்ந்தெடுப்பதற்கு லார்ட்ஸ் ஸபை சௌகரியமாயிருக்கிறது. சமூக மேனிலை, கல்வி யறிவு,

செல்வம் முதலியவற்ருல் சில அரசியல் ஸ்தானங்களுக்குக் காமன்ஸ் ஸபையின் பெருவாரியான கட்சிப் பலத்தைமட்டும் நம்பிய சாதாரண அங்கத்தினரைவிட, மிக்க தகுதியுள்ளவர் களைப் பிரபுக்களிடையே யிருந்து, நியமிப்பது நலந்தரத் தக்கதாகும். தன்னுடைய விவாதத்தாலும், விளக்கிக் காட்டும் ஆற்றலாலும், அது காமன்ஸ் ஸபை செய்த சில விசேஷத் தீர்மானங்களையும் புனராலோசனை செய்யும்படிச் செய்கின்றது. கர்ஸன், மில்னர், ரேடிங், ஹாலிபாக்ஸ், போன்ற முதற்றரத் திறமையும், அனுபவமும் வாய்ந்த பிரபுக்கள், அந்தச் சபையில் விளங்குகிற காரணம் பற்றி, நடைபெறும் விஷயங்களுக்கு மேன்மை ஏற்படுகிறது. ஆனுல், அவசியமானதும், நெருக்கடியுள்ளதுமான கூட்டங் களிலும், அங்கத்தினர்கள் எல்லோரும் வந்திருப்பதில்லை; ஊக்கமும் காட்டுவதில்லை. ஆகையால், வர வர உயர்தரமான பிரசங்கத்திற்கும் அங்கு முன்போல அவ்வளவு சிறப்பு ஏற்படுவதில்லை. ஆதலின், அதனை உயிருள்ள பலமேன் மக்களிருக்கும் வெஸ்டு மின்ஸ்டார் ஆபி என்று பரிகசிப்பாரும் உளர்.*

காமன்ஸ் ஸபைக்கு இல்லாத ஒரு முக்கியமான வேலை பிரபுக்கள் சபைக்கு உண்டு. அது நீதி பரிபாலன வேலை.

4 நீதி பரிபாலன வேலை

ஸிவில், கிரிமினல் விவகாரங்களில், அந்தச் சபைதான் முடிவான அப்பீல் கோர்ட்டு. அந்த அதிகாரத்தைக் கொண்டு லார்ட்ஸ் ஸபை நாட்டின் பொது அமைதியில் நிகழுந் தவறுகளை அவ்வப்போது திருத்திவிடுகின்றது. லார்டு

*"வெஸ்ட் மின்ஸ்டார் ஆபி" என்னும் கோயிலையடுத்த இடத்தில் தான் இங்கிலந்தின் மேன்மக்களெல்லோரும் இறந்தபிறகு சமாதி செய்யப்பெறுவது வழக்கம்.

சான்ஸலரும், ஆயுள் வரைப் பிரபுக்களாயுள்ள ஆறு வேறு சாதாரண அப்பீல் கோர்ட்டு பிரபுக்களுமான, ஒரு சிலரே அந்த வேலையைச் செய்கின்றனர். ராஜ தந்திரிகளின் மீது எற்படும் குற்றச்சாட்டு, பிரபுக்களின் உரிமையைப் பற்றிய வழக்குகள், பிரபுக்களாற் செய்யப்பட்ட துரோகம், முதலியவற்றை விசாரிக்கும் பிரதம நியாயச் சபையும் அதுதான்.

தற்காலம் பிரபுக்கள் சபையின் இருப்பிற்குக் காரணம் அதன் சக்தியற்ற நிலைமையே. சிறகுகள் அறுபட்டு வலிமையிழந்த பறவைபோல, அது இனி ஜன நாயக அதிகார ஸ்தாபனத்தில் அதன் முன்னேற்றத்தைத் தடுக்கும் சக்தியற்றதாக உள்ளது என்னலாம். அதனுடைய தொன்று தொட்டு வரும் பெருமையால், அது அநேக ஆங்கிலேயர்களுக்கு மகிமையுள்ளதாகத் தோன்றுகின்றது. இந்த மயக்கமே அந்தச் சபையை எடுத்துவிட வேண்டும் என்ற பிரேரணையின் அங்கீகாரத்திற்கு இன்னும் அந்நாட்டில் இடமளிக்கத் தடையாக இருக்கிறது.

சான்ஸலர் பிரபுதான் லார்ட்ஸ் ஸபைக்குத் தலைமை வகிப்பவர். அவருடைய நிலைமை காமன்ஸ் ஸபைத் தலைவருடையதைப் போன்றதன்று. அவர் ஓர் ஏற்பாடும், நடத் அதிகாரி என்ற முறையில் அங்கத்தினர் தம் முறைகளும் ஸ்தானத்தை அடைகிறதில்லை. சபையின் விவாதத்தை அவர் நடத்துவது மில்லை. அங்கத்தினர்கள் பேசும்போது தலைவரை நோக்கிப் பேசுவதில்லை. "பிரபுக்களே" என்று, அங்கத்தினரை நோக்கியே பேசுவது வழக்கம். ஒரு விஷயத்தை ஓட்டுக்கு விடுவது மட்டுந் தான் அத்தலைவரின் வேலை. பெரும்பான்மையோரின் தீர்மானத்தைக் கண்டிக்க அங்கத்தினர்க்குத் தனி யுரிமை

யுண்டு. தனியாக மன்னரிடம் முறையிட்டுக்கொள்ளவும் உரிமை யுண்டு.

பொதுவாக, சபை திங்கள், வியாழன், வெள்ளிக் கிழமைகளிற் பிற்பகல் 4-30 மணிக்குக் கூடும். செவ்வாய் அன்று 5-30-க்குக் கூடும். கூட்டம் பெரும்பாலும் ஒரு மணிநேரங்கூட நீடிக்காது. வேலை யின்மையும், வீண்காலம் போக்க விரும்பாமையுமே தான் அச்சபைக்கூட்டம் நீடிக்காம லிருப்பதற்குக் காரணங்கள். எப்பொழுதேனும் ஒரு சமயமே ஒரு தீவிரமான விவாதம் நடைபெறும். சபை கூடுவதற்குச் சட்டப்படி மூன்று பேரிருந்தாற் போது மென்றாலும், முப்பது அங்கத்தினர்கள் இல்லாவிடில், ஓட்டு எண்ணிக்கை கிடையாது. இது உலகத்திலேயே மிகப் பெரியதான ஒருசபை; ஆனால் கூடி வேலைசெய்யும்போது மிகவுஞ் சிறியதாகவே விளங்கும். விசேஷ சமயங்களிலும், அவசியமான விவாதங்கள் நிகழும் போதுந் தவிர, மற்ற காலங்களில் அச்சபையில் நாற்பது பேருக்கு அதிகங் கூடுவதில்லை.

அத்தியாயம் 8

சட்டசபைகள் II: காமன்ஸ் ஸபை

பார்லிமெண்டு என்றால் அது காமன்ஸ் ஸபை யென் பதே பெரும்பாலாருடைய எண்ணம். வேறெந்த அரசியல் நிலயங்களுக்கும் அத்தகைய சிறப்புக் கிடையாது. உலகிற் பற்பல இடங்களில் ஏற்பட்ட பல அரசியல் ஸ்தாபனங்களுக்குக் கெல்லாம் அதுவே தாயகமாகவும், ஓர் எடுத்துக்காட்டா

சிறப்பியல்

கவும் விளங்கி வருகின்றது. அதன் சிறப்பைப் பின்வருமாறு ஓர் அரசியல் ஆசிரியர் எழுதியுள்ளார். "உலகத்திலேயே இந்தக் காமன்ஸ் ஸபைதான் சிறப்புள்ள ஒரு பொதுக் கூட்டமாகும். அதன் மதிப்புக்குரிய பழமை, அதன் ஊக்கமளிக்கவல்ல சரித்திரம், அதன் ஒப்புயர்வற்ற பழக்க வழக்கங்கள், அதன் ஊக்க மிகுந்த வாலிபத் தன்மை, இதர தேசச் சபைகளுக்குத் தாயாக நின்று விளங்கும் அதன் செல்வாக்கு, ஆங்கில மக்களின் ஆண்மையுடன் அதற்குள்ள நெருங்கிய தொடர்பு, அவ்வரசியலின் பிரதான இயந்திரமாக அது நிர்வகித்துவரும் ஸ்தானம், இவையனைத்தும் அதனுடைய இணையற்ற பெருமைக்குரிய காரணங்களாம். மன்னரைக் காட்டிலும், மந்திரிச் சபையினும் மேலாகவும், ஆங்கிலேயர் மட்டுமல்லாது, ஏனையோரும் அதனை நன்கு மதிக்கின்றனர். எங்கும் அதனுடைய நடவடிக்கைகள் கூர்ந்து படிக்கப்படுகின்றன. பிரிட்டனில் கால் எடுத்து வைக்காதவர்களும், ஆங்கில மொழியே உச்சரிக்க அறியாதவர்களுக்குங்கூட அதன் நிகழ்ச்சிகள் தெரியும். இந்தப் பெருமை தங்கிய சபையில் ஒரு சிறந்த ஸ்தானம் பெறுவது, அதன் தலைவர்களுள் ஒருவராக இருப்பது, யோசனை கூறுபவர்களில் ஒருவராக ஆவது, அதன் பிரபல பிரசங்கிகளுள் ஒருவர் என்னும் பெயர் வகிப்பது ஆகிய இவை காலவரை யென்னும் யுகத்தில் அடைதற்கரிய ஒரு முதன்மையை எய்துவது போன்றனவாம்."

அதன் செல்வாக்கு இப்பொழுது சிறிது குறைந்திருக்கிறது என்பது உண்மையே. அரசியல் அதிகாரத்தின் சாரத்தைச் சில வேறு அங்கங்கள் கவர்ந்து கொண்டன. போட்டிகளுங் கிளம்பிவிட்டன. ஆயினும், அதன் செல்வாக்கு அதிகமே. அது இன்றைக்கும் சுதந்திரத்தின்

கோட்டையென்றும், ஆங்கிலேயரின் பெருமைக்கோர் உறைவிடமென்றும் சொல்லும் மகிமை யுடையதே.

அமைப்பு

காமன்ஸ் ஸபையின் மொத்த அங்கத்தினர்களின் தொகை 615. அவற்றுள் 74பேர் ஸ்காட்லந்தின் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகள். மற்றையோர், இங்கிலந்திலும் வேல்ஸ் மாகாணத்திலும் உள்ள பற்பல தொகுதிகளிலிருந்தும் பெருவாரியான ஓட்டு எடுக்கும் முறைப்படித் தேர்ந்தெடுக்கப் பெற்றவர்கள். ஜனத்தொகையின் வீதப்படி தொகுதிகள் பிரிக்கப்பெற்றுள்ளன. எழுபதாயிரம் ஜனங்களுக்கு ஒரு பிரதிநிதி வீதம் தேர்ந்தெடுக்கப் படுகின்றது. சர்வகலாசாலைகள் மட்டும் தாம் இரண்டு அல்லது மேற்பட்ட அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்தனுப்புகின்றன. பெண்பாலரும் அங்கத்தினர்களாகி உத்தியோகம் வகிக்கலாம். ஓர் அபேக்ஷகர் எந்தத் தொகுதியிலேனுந் தேர்தலுக்கு நிற்கலாம். அங்கத்தினர்களுக்கு இலவசமான பிரயாண வசதிகளுடன் வருஷம் 400 பவுன் சம்பளமும் உண்டு.

வாக்குரிமை

இருபத்தொன்று வயதுக்கு மேற்பட்ட எந்த ஆடவருக்கும் பெண்பாலருக்கும் ஓட்டு உரிமையுண்டு. சர்வகலாசாலையிலிருந்து தேறி வெளிவந்தவர்களுக்குக் கலாசாலைத் தொகுதிகளில் ஏதாவது ஒன்றில் அதிக ஓட்டு ஒன்று உண்டு. ஆனால், ஒரு பொதுத் தேர்தலில் எவருக்கும் இரண்டுக்கு அதிகம் ஓட்டுகள் கொடுக்க உரிமை கிடையாது. அவைகளில் ஒன்றுக்கு உள்ளூர் வாஸி என்ற நிபந்தனை பூர்த்தியாகி இருக்கவேண்டும். அவை தனித்தனித் தொகுதி

களிற் பதிவாக வேண்டும். பிரபுக்கள், குழந்தைகள், கடன் தீர்க்க வகையற்றவர்கள், பைத்தியக்காரர்கள், பிறவி உன் மத்தர்கள் இவர்களுக்கு ஓட்டர்களாகப் பதிவு செய்யப்படும் உரிமை கிடையாது.

ஒற்றை மெம்பரைத் தேர்ந்தெடுக்குந் தொகுதிகளும், ஓட்டர்கள் சமமாயிருக்கும்படியான தொகுதிப் பிரிவுகளும் சேர்ந்த இந்த முறை அநேக காரணங்களைக்கொண்டு கண்டிக்கப்படுகிறது. ஒரு கட்சிக்குக் கொடுக்கப்பட்ட ஓட்டுக்களின் தொகுதிக்கும், சட்டசபையில் உள்ள அதன் வலிமைக்கும் பெரிய வித்தியாசம் ஏற்படும்படியான நிலைமை வந்துவிட்டது. உதாரணமாக 1929-ம் வருஷத் தேர்தலில் கன்ஸர்வெட்டிவ் (பிற்போக்கு) கட்சியினர், நூற்றுக்கு முப்பத்தெட்டு வீதம் ஓட்டுகளைப்பெற்று 253 ஸ்தானங்களை கைப்பற்றினார்கள். ஆனால் தொழிற் கட்சியினரோ, நூற்றுக்கு முப்பத்தாறு வீதம் ஓட்டுக்களுடன், 288 ஸ்தானங்களைக் கைக்கொள்வாராயினர். லிபரல் என்னும் நிதானக் கட்சியார், நூற்றுக்கு 23 வீதம் ஓட்டுக்களுடன், 58 ஸ்தானங்களைத்தாம் பெற்றார்கள். மேலும், ஒரு தொகுதியில் மூன்று அபேட்சகர்கள் போட்டியிட்டால் பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப் பெறுகிறவர், சிறுபான்மையான ஓட்டுக்களுடன்தான் வெற்றி பெறுகிறார். ஆகையால் இந்தமுறைப்படி, காமன்ஸ் ஸபையின் பிரதிநிதித் தன்மையே போய் விடுகிறது. பொதுத் தேர்தல் ஒரு பெரிய அதிர்ஷ்டச் சீட்டுப்போலாகிவிடுகிறது. இந்தக் குறைகளை நீக்கிக் காமன்ஸ் ஸபையை உண்மையான பிரதிநிதி மன்றமாகச் செய்யப் பல பிரேரணைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

காமன்ஸ் ஸபையின் அலுவல்கள் முக்கியமான நான்கு அம்சங்களை உடையன. வெவ்வேறு இலாகாக்களின் தவறு

அலுவல்கள்
1. கேள்வி கேட்பது

களைப்பற்றியோ அல்லது குறைகளைப் பற்றியோ தகவல் தெரிவிக்குமாறு, ஒவ்வொரு நாளும் கூட்டங் கூடினவுடன் மந்திரிகளைக் கேட்குங் கேள்விகளைப் பற்றியது ஒன்று. இதனால் அரசாங்கத்தின் வேலைகள் கண்டிப்பாக நடைபெறச்செய்ய இடமுண்டாவதுடன், உத்தியோக வர்க்கத்தினருடைய ஊழல்களும் வெளியாகி விடும். நிர்வாக இலாகாக்கள் தம் இஷ்டப்படி நடக்காமல் பார்த்துக் கொள்ள இது ஒரு தக்க சாதனமாகும். முக்கியமான பொது விஷயத்தில் அரசாங்கக் கொள்கை, உத்தேசம் முதலியவற்றைப் பகிரங்கப் படுத்துவதற்கு ஏற்றவாறு, விடைகளைப் பெறும் முறையில் இந்தக் கேள்விகள் கேட்கப்படலாம். கேள்விகளுக்கு முன்னதாகவே அறிக்கை வேண்டும். அதாவது, குறித்த நாட்களுக்கு முன்பே, சட்ட சபையில் வரக்கூடிய கேள்விகள் அந்தந்த இலாக்காக்களுக்கு அனுப்பப்படவேண்டும். பொதுஜன விஷயங்களைப்பற்றித் தான் கேள்விகள் இருக்கவேண்டும். தகவல் அறிவதற்கான முறையில்தான் அக்கேள்விகளின் வாசகம் அமைந்திருக்கவேண்டும். சபைத்தலைவர் சில கேள்விகளை ஏற்றுக்கொள்ள மறுக்கலாம். மந்திரிகூட மறுமொழி கூற மறுக்கலாம். ஆனால் சாதாரணமாக எல்லாக் கேள்விகளுக்கும் பதில்கள் கொடுத்துவிடுவார்கள். பிரதமக் கேள்வியிலிருந்து எழும் தொடர்க் கேள்விகளுக்கு அவ்வப்போதே பதில் அளிக்கப்பெறும். ஆனால் அத்தகைய விடை, எவ்வளவு அதிருப்திகரமாக இருந்தாலும், அதைத் தொடர்ந்து வாதஞ் செய்யவோ ஓட்டெடுக்கும்படி கேட்கவோ முடியாது. கேள்விக்குக் கொடுக்கப்பட்ட விடை குறைபாடுள்ளதாகக் கருதும் அங்கத்தினர், கேள்வி நேரத்திற்குப் பிறகு, தலைவ

ரின் அனுமதியின் மேலும் குறைந்தது நாற்பது அங்கத்தினர் ஆதரவின் மேலும், ஒரு முக்கியமான பொது விஷயத்தைப்பற்றி விவாதம் அல்லது ஆராய்ச்சி செய்யச் சபையைத் தள்ளிவைக்க வேண்டுமென்று, ஒரு பிரேரணை கொண்டு வரலாம். ஆனால் நடைமுறையில் இதற்கு அனுமதி பெரும்பாலும் அளிக்கப்படுவதில்லை.

காமன்ஸ் ஸபையில் கேள்வி நேரம், மிக மும்முரமாயும் உற்சாகமாயும் இருக்கும். ஆனால் இந்த உரிமையைத் துர்விநியோகஞ் செய்ய இடமிருக்கிறது. தன்னை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காகவே ஓர் அங்கத்தினர் உபயோகமற்ற கேள்விகளைக் கேட்கலாம். அல்லது, அவை பயனற்ற சில்லறை விஷயங்களைப் பற்றியும் இருக்கலாம். பொதுவாக இவ்வாறு கேட்கப்பெறுங் கேள்விகள் நிர்வாகத்தின்மீது விசாரணை செய்வதற்கு ஒரு வழியாகும் என்ற முறையில், அவ்வளவு பயன் தரத்தக்கன அல்லவென்று தற்காலம் கருதப்படுகின்றது.

2.
சட்டநிரூபணம்

காமன்ஸ் ஸபையின் இரண்டாவது வேலை சட்ட நிரூபணமாகும். அது மூன்று வகைப்படும்:- (i) பொது மசோதாக்கள் (பொது மக்கள் அனைவரையும் பாதிப்பது). இவை அரசாங்கத்தாராலோ அல்லது அங்கத்தினர்களாலோ பிரேரிக்கப் பெறுவன. (ii) தனிப்பட்ட மசோதாக்கள் (பொது மக்களில் ஒரு வகுப்பைப் பாதிப்பது). அதாவது ரெயில்வே கம்பெனிகள், முனிஸிபாலிட்டிகள், இவை போன்றவையைப் பற்றிய மசோதாக்கள். (iii) பார்லிமெண்டின் அங்கீகாரத்தை நாடும் இலாகா உத்தரவுகள், விதிகள் முதலியன. இம்மூவகைகளுள் மிகவுஞ் சிறப்

புடையவை அரசாங்கத்தாரால் பிரேரிக்கப்பெறும் பொது மசோதாக்கள் தாம். அவையே சபையின் முக்காற்பாக நேரத்தைக் கவர்ந்துவிடும். எல்லா மசோதாக்களும் அநேக சடங்குகள் மூலம் வெளிவரவேண்டும்.

ஒரு மசோதா, சாதாரணமாகப் பொதுஜனக் கண்டனம் அதிகம் இல்லாதவரை, சபையிற் கொண்டு வருவதற்கு அனுமதிக்கப் பெற்றுவிடும். ஒரு மசோதாவை 'முதன் முறை படிப்பது' என்பது, ஒரு வெறும் வழக்காறே. அது முடிந்தவுடன் மசோதா அச்சடிக்கப்பெற்று, அங்கத்தினர்களிடையே வழங்கப்பெறும். அதற்கு அடுத்த நிலை 'இரண்டாவது முறை படிப்பது'. மிகவும் முக்கியமானது இதுதான். இப்பொழுதுதான் மசோதாவின் கருத்துக்கள் நுணுக்கமாக ஆராயப்படும். இவ்விஷயத்தில் தேர்ச்சி பெற்ற அங்கத்தினர்களெல்லோரும் இதைப்பற்றி வாதம் நிகழ்த்துவதற்கு இது ஏற்றதும் நல்லதுமான சந்தர்ப்பமாகும். இரண்டாம் முறை படித்து முடிந்ததும் அது ஒரு தனி நிரந்தரக் கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்பப்படும். அவ்விதம் ஐந்து கமிட்டிகள் இப்பொழுது இருக்கின்றன. சாதாரணமாக முப்பது முதல் ஐம்பது அங்கத்தினர்கள் வரை எல்லாக் கட்சிகளின் சார்பாகவும் அவற்றில் இருப்பார்கள். விசேஷ மசோதாக்கள் விஷயத்தில், அவற்றைத் தனிக் கமிட்டிகளுக்கோ, முழுச்சபையின் கமிட்டிக்கோ, லார்ட்ஸ், காமன்ஸ் என்னும் இருசபைகளின் கூட்டுக்கமிட்டிக்கோ, சமர்ப்பித்துப் பரிசீலனை நடத்துமாறு சபை தீர்மானஞ் செய்யலாம். இந்தக் கமிட்டிக் கூட்டத்தில் மசோதாவின் ஒவ்வொரு பிரிவையும் தனித்தனியே விவாதித்தும், திருத்தங்கள் கொண்டுவந்தும், முடிப்பார்கள். கமிட்டி மசோதாவைச் சபைக்கு மீண்டும் சமர்ப்பித்ததும் சபையில்

'மூன்றும் முறை படிப்பது' நடைபெறும். அப்பொழுது மசோதாவின் பொது அம்சங்களைப் பற்றித்தான் விவாதிக்க அனுமதி யளிக்கப்படும். சில சிறிய வாசகத் திருத்தங்கள் மட்டுமே செய்ய உரிமை கொடுக்கப்படும். இவ்வண்ணம் காமன்ஸ் ஸபையில் ஒவ்வொரு மசோதாவும் கொண்டுவரப் படுகிறதும், படிக்கப்படுகிறதும், கமிட்டிக்கு அனுப்பப்படு கிறதும், கமிட்டியின் அறிவிப்புடன் திரும்பி வருகிறதும், பின்னர் நிறைவேறப் பெறுகிறதும் ஆம்.

3. நிதி

1911-ம் வருஷப் பார்லிமெண்டு சட்டத்தின்படி காமன்ஸ் ஸபைக்கு, நிதி விஷயத்தில் சர்வாதிகாரம் ஏற்பட்டிருக்கிறது. அந்நிதி விஷயமாகப் பார்லிமெண்டுக்கு உள்ள வேலைகளில் முதலாவது, அரசாங்கத்தார் சமர்ப்பிக்கும் திட்டங்களையெல்லாம், பரிசீலனைக்கு கொண்டுவந்து, ஒவ்வொரு தனி மானியத்தையும் ஓட்டுமூலம் அங்கீகரிக்கச் செய்வது. இரண்டாவது, தேவையான பணத்தைத் தயார்செய்து கொடுப்பது. புதுவரிகள் போடுவதைப் பற்றியோ, பழைய வற்றைத் திருத்தி யமைப்பதைப் பற்றியோ தீர்மானிக்க வேண்டும். நிதி இலாகாவுடன் கலந்துகொண்டுதான், மந்திரிச் சபையால் வரவு செலவுத் திட்டங்கள் தயாரிக்கப்படு கின்றன. வரவு செலவுத் திட்டம் மார்ச்சு மாதம் 31-ம் தேதிக்கு முன்பு நிதி மந்திரியால் பார்லிமெண்டிற்குச் சமர்ப் பிக்கப்படும். உடனே ஒரு (சப்ளை) மானியம் அளிக்கும் கமிட்டியாகக்கூடி, திட்டத்தில் ஒவ்வொரு அம்சத்தையும் வரிசை முறையின்படி விவாதிக்கும். எந்தத் தனி அங்கத் தினரும் அதற்குமேலான ஒரு செலவினத்தைப் பிரரேபிக்க முடியாது. ஆனல், ஏதாவதொரு தலைப்பின்கீழ் (செலவம் சத்தின் கீழ்) தேவையான பணம் அளிக்கப்படவில்லை

யென்று ஓர் அங்கத்தினருக்கு தோன்றுமேல், அவர் தம் கண்டனத்தைக் குறிப்பிட மந்திரியின் சம்பளத்தின் சார்பாக ஒரு வெட்டுப் பிரேரணை கொண்டு வரலாம். இதனால் அந்த மந்திரி, அந்த அம்சத்தின் செலவுத்தொகையை அதிகப்படுத்தலாம்.

சப்ளை அல்லது சம்மானக் கமிட்டியின் தீர்மானங்கள் சபைக்கு அளிக்கப்பெற்ற பின்னர் அவை ஒரு மசோதா மூலம் மேற்சபைக்கு அனுப்பப்படுகின்றன. அனுமதிக்கப் பட்டிருக்குந் தொகைகளை, அரசாங்க நிர்வாக சபை சரியான முறையிற் செலவு செய்கிறதா என்பதைக் கவனிக்க ஒரு மேல் விசாரணை அதிகாரியும், தணிக்கைத் தலைவரும் இருக்கிறார்கள். அவர்களுடைய அறிக்கைகள் பார்லிமெண்டின் பொதுக் கணக்குகளின் கமிட்டியின் முன் சமர்ப்பிக்கப்படுகின்றன. இந்தக் கமிட்டியைப் பார்லிமெண்டு ஆண்டுதோறும் நியமனஞ் செய்கிறது. இக்கமிட்டி, கணக்குகளின் நிலைமை, ஊழல்கள், முதலியவனைத்தையுஞ் சபைக்குத் தெரிவிக்கின்றது.

வருமானத்தின் பெருவாரியான பாகம் சில நிரந்தரமான சட்ட உத்தரவுகளின் அதிகாரங்களின் சார்பில் வசூல் செய்யப் படுகின்றது. பொதுவாக அக்கட்டளைகளை, வருஷந்தோறும் பார்லிமெண்டில் திரும்பத் திரும்ப நிறைவேற்றுவதில்லை. ஆனல் அது அனுமதி கொடுத்திருக்குஞ் செலவினங்களுக்குத் தேவையான பணத்தைச் சேகரிக்கும் வழிகளையும், இடங்களையுங் கண்டுபிடிக்க, சபையே ஒரு கமிட்டியாகக் கூடுகிறது. அதனுடைய சிபார்சுகளெல்லாம் ஒரு மசோதா உருவிற் சபையின்முன் ஆலோசனைக்குக் கொண்டு வரப் படுகின்றன. வசூலிக்கப்படுந் தொகைகள் யாவும்

எக்ஸ்சேகர் என்னுங் கஜானுவின் பேரில் இங்கிலந்து பாங்கியில் செலுத்தப்பட வேண்டும். ஆடிட்டர் ஜெனரல் என்னும் தணிக்கைத் தலைவரின் உத்தரவின்றி அப்பணத்தின் யாதொரு பாகத்தையும் யாரும் எடுக்கமுடியாது.

நிதி விஷயத்தில் தற்காலம் காமன்ஸ் ஸபை கொண்டிருக்கும் மேல் விசாரணை யதிகாரம் ஒருவாறு குறைவுடைத்தே யென்னலாம். பொதுவாக வரவு செலவுத் திட்டங்களை விவாதிக்கச் சட்டப்படி 20 நாட்கள் கால எல்லை யுண்டு. பெரும்பாலும், அந்த நாட்கள் யாவும் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் அரசாங்கத்தாரின் பொதுக் கொள்கையைப்பற்றி செய்யும் விவாதங்களிலேயே கழிந்து போகின்றன. நிதி நிர்வாக வேலையைப்பற்றித் தக்க விசாரணை செய்ய முடியவில்லை. இந்த வேலையைப் பிரான்ஸிலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் நடப்பனபோலத் தனிக்கமிட்டிகள் செய்து சபைக்கு அறிவிக்கலாமென்பது ஒரு சாரார் அபிப்பிராயம். அவ்வாறு செய்தால் பல அங்கத்தினர்களது இப்பொழுது பயனற்றதாகப் போகும் அனுபவமும், திறமையும், மந்திரிகளின் பொறுப்பில் தலையிடாமல், நிதி நிர்வாகத்தை மிக்க சிக்கனத்துடனும், திறமையுடனும் நடத்த உபயோகப்படும் என்று கருதப்படுகின்றது.

காமன்ஸ் ஸபையின் கடைசியும் முக்கியமுமான பொறுப்பு, அரசாங்கத்தின் பொதுக் கொள்கைகளைத் தன் மேற்பார்வைக் குட்படுத்திக் கண்காணித்து வருவதேயாம். இதுவே, தேசத்தின் மகத்தான விசாரணையாகும். இந்த அம்சத்தில்தான் ஆங்கில சட்டசபையின் அமைப்புத் திட்டம் முழுத்திருப்தி தரத்தக்கது என்னலாம். "மன்னரின் எதிர்க்கட்சி" யென்று கூறப்பெறும் கட்சி அங்கத்தினர்

களின் வலிய எதிர்ப்புக்களையும், நுண்மையுந் திறமையும் வாய்ந்த கண்டனங்களையும் ஒவ்வொரு நாளும் பெறும் அரசாங்கத்தார், தம் கொள்கைகளைச் சபை கூட்டத்தில் விரிவாக எடுத்துக் கூறுமாறும் சரியென விளக்கிக் காட்டுமாறும் நெருக்கப் பட்டு வருகிறார்கள். அவற்றைப் படித் தறியுந் தேச மக்களுக்கு அரசாங்கத்தா ரிடம் நம்பிக்கையும் ஏற்படுகிறது. தேசத் துரோகம் என்ற குற்றத்திற் குட்படாமல் "மன்னரின் எதிர்க் கட்சியினர்" எப்பொழுதும் சர்க்காரை எதிர்க்கும் ஸ்தானத் தில் இருக்கின்றனர். இதுதான் பிரிட்டிஷ் அரசியல் திட் டத்தின் பிரதான அம்சம். இவ்வளவில் இத்தகைய நலம் அமையப்பெற்ற அரசியல் உலகில் வேறெங்கும் கிடையாது.

4. அரசாங்கத்தின் பொதுக் கொள்கைகளிற் கண்காணிப்பு

பொதுவாக நோக்குமிடத்து, இப்பொழுது இருக்கும் அமைப்பின்படி, காமன்ஸ் ஸபை ஜனநாயக அரசியலின் ஒரு ஜனப் பிரதிநிதிச் சபையின் லக்ஷியத்தை எட்டி விட்ட தாகக் கூறமுடியாது. அது வகித்துவரும் பொறுப்பின்பா லுள்ள வேலை மிகுதியால் அஃது ஒன்றையும் முழுத் திருப்திகரமாகச் செய்யமுடியாத நிலைமையில் இருக்கிறது. அதற்கு வேண்டிய அவகாசமுங் கிடையாது. சரியான ஆராய்ச்சியின்றி ஆண்டுதோறும், அது ஏறக்குறைய நூறு சட்டங்களுக் கதிகம் இயற்றுகின்றது. சென்ற ஐம்பது வருஷங்களாகப் பார்லிமெண்டு நடவடிக்கையின் சரித்திரப் போக்கை யுற்றுநோக்குமிடத்து, அரசாங்க காரியங்களை விவாதித்து ஆராய்ச்சி செய்வதற்கென்று ஏற்பட்ட சௌக ரியங்கள் வரவரக் குறைபட்டு வந்திருக்கின்றன வென்பது தெளிவாகிறது. 1887-ம் வருஷத்தில், கில்லட்டீன் ஏற் பாடு வந்தது. அதன்படி, குறித்த காலத்திற்குப் பிறகு

ஒரு மசோதாவின் மேல் விவாதம் நின்றுவிடும். அதன் மற்ற விஷயங்கள் அப்படியே தலைவரால் ஓட்டுக்கு விடப் படும். 1893-ல் கம்பார்ட்மேண்டு குளோஷர் ஏற்பாடு வந்தது. அதன்படி, குறித்த தேதிக்குள் மசோதாவின் பல பாகங்கள் விவாதிக்கப்பட வேண்டுமென்று பார்லிமெண்டில் தமக்கிருக்கும் பெருவாரியான பலத்தைக்கொண்டு அரசாங்கத்தார் தீர்மானிக்கக்கூடும். இன்னும் ஓர் ஏற்பாடுக்குக் காங்கரு ஷரத்து என்ற வேடிக்கையான ஒரு பெயர் வழங்கப் பெறுவதுண்டு. அதன்மூலம் சபைத் தலைவர், அல்லது கமிட்டித் தலைவர் ஒரு மசோதாவின் பல திருத்தப் பிரேரணைகளிற் சிலவற்றை நிராகரித்துவிட அதிகாரம் பெற்றுள்ளார்.

காமன்ஸ் ஸபை வேலை மிகுதியால், தன் சட்டநிரூபண வேலையை ஒருவாறு நிர்வாக இலாகாக்களுக்குச் சமர்ப்பித்திருக்கிறது. இப்பொழுது சட்ட மியற்றுவதின் சாராம்சமான வேலை, காமன்ஸ் ஸபையினிடமிருந்து ஸிவில் ஸெர்விஸினிடம் போய்விட்டது. சராசரியாக ஒவ்வொரு வருஷமும் இயற்றப்படும் நூறு சட்டங்களுக்குத் தேசமக்களின் தினசரி வாழ்க்கையைப் பாதிக்கும்படியாயுள்ள 3000 நிர்வாக உத்தரவுகள் ஏற்படுகின்றன. மந்திரிக்கு நடைமுறை ஆபீஸ் வேலையைப் பார்ப்பதற்கே பொழுது போதாததாக இருக்கிறது. தனி அங்கத்தினரோ, தம் அனுபவத்தையும் யோசனையையுங்கொண்டு உதவ முடியாதவராகி விடுகிறார். அவர் ஆராய்ச்சி செய்துபார்க்க இடமில்லை. ஓட்டுத்தான் கொடுக்கமுடியும். எல்லாம் பார்லிமெண்டின் பொறுப்பில் தான் தங்கியிருக்கிறது. இதனால் ஒவ்வொரு சமயம் நிர்வாக வேலையும், சட்ட நிரூபணமும் தடைபடுகின்றன.

காமன்ஸ் ஸபை கூடுமிடங் குறுகியது. அங்கு எல்லா அங்கத்தினர்களுக்கும் ஒருங்கே இனிது அமர்ந்திருக்கத் தக்க இடவசதியில்லை. அந்தக் கூடத்தின் நடுவே நெடுக வழியிருக்கிறது. அதுதான் 'சபையின் தரை'. அதன் கோடியிலுள்ள நடவடிக்கையும் மேடையின்மீது தலைவரின் ஆஸனம் இருக்கிறது. அம்மேடையின் மேலே ஒரு விமானமும் அமைக்கப்பெற்றுள்ளது. தலைவரின் இருப்பிடத்தின் கீழே கிளார்க்குகளின் நாற்காலிகளும், மேஜைகளும், ஸார்ஜண்டின் செங்கோலை வைப்பதற்காகவும், பெட்டிகள், காகிதங்கள் முதலியன வைப்பதற்காகவும் ஒரு பெரிய மேஜையும் இருக்கின்றன. ஸபையின் இடையேயுள்ள வழியின் இரு பக்கங்களிலும் எதிர் எதிராய் நீண்ட பெஞ்சுகளின் வரிசைகள் உள்ளன. குறுக்கே குறுகியபாதை ஒன்றுண்டு. அதற்குக் காங்வே என்று பெயர். அங்கத்தினர்களுக்கு மேஜை கிடையாது. பேசுவதற்கென்று தனி மேடையும் இல்லை.

அமைப்பும்

பெரிய மேஜைக்கருகே, முதல் பெஞ்சில் தலைவரின் வலது கைப்புறத்தில் மந்திரிகள் உட்காருகிறார்கள். அதனால்தான் அந்த இடத்திற்குப் 'பொக்கிஷப் பெஞ்சி' என்று பெயர் வழங்குகிறது. மந்திரிகளுக்கெதிரே தலைவரின் இடது பக்கத்தில் எதிர்க்கட்சித் தலைவர்கள் உட்காருகிறார்கள். பொக்கிஷப் பெஞ்சிக்கும் எதிர்க் கட்சிக்கும் பின்னால் உள்ள பெஞ்சுகளில் வரிசையாகக் கட்சி யேற்பாட்டின்படி மற்றைய அங்கத்தினர்கள் உட்காருகின்றனர். கட்சிக் கட்டுப்பாட்டிற்குப் பெரும்பாலும் உட்படாதவர்கள் அனைவரும் இருபுறத்திலும் காங்வேயின்கீழ் உட்காருகின்றனர்.

உட்காரும் வசதிகள்

பார்லிமெண்டின் விவாத காலங்களில் இந்த ஏற்பாடு பழைய காலத்துப் போர்முனைபோல் இருக்கும். அதாவது, தலைவர்கள் ஒருவருக்கொருவர் எதிர்த்து நிற்க, படைகள் இரு பக்கங்களிலும் அவர்களுக்குப் பின்னே யுத்த சன்னத்தமாக நிற்பனபோல் இருக்கும்.

புதுப் பார்லிமெண்டு கூடும்போது காமன்ஸ் ஸபை லார்ட்ஸ் ஸபைக்கு அழைக்கப்படுகிறது. சபை கூடும்படியாக ஏற்பட்ட உத்தரவுகள் படிக்கப்பட்ட தலைவர் (ஸ்பீக்கர்)பிறகு, தலைவரைத் தேர்ந்தெடுக்கும் உத்தரவு அளிக்கப்படும். மறுநாள் காமன்ஸ் ஸபையும், அதன் தலைவரும் லார்ட்ஸ் ஸபையின் முன் ஆஜராகிறார்கள். மன்னரின் சார்பாக லார்ட்ஸ் ஸபைத் தலைவர், தேர்தலை அங்கீகரித்து, காமன்ஸ் ஸபையின் பழைய உரிமைகளை எல்லாம் எப்பொழுதும் பாதுகாப்பதாக உறுதிமொழி கூறுவர். உடனே காமன்ஸ் ஸபை அங்கத்தினர்கள் தங்கள் ஸபைக்குச் சென்று கூடுவர். அங்கே அரச விசுவாசப் பிரமாணம் நடைபெறும். மறுநாள் மன்னர் நேரிலேயே பார்லிமெண்டை ஆரம்பித்து வைப்பதானால், ராஜாங்க தோரணையுடன் பிரபுக்கள் ஸபைக்குச்சென்று சிங்காதனத்தி லமர்ந்து லார்டு சேம்பர்லேன், 'கனவான்களை ஆஜர் செய்பவர்,' இவர்கள் மூலம் மறுபடியும் காமன்ஸ் ஸபையை அங்குவந்து கூடும்படி உத்தரவு செய்வார். அவர்கள் வந்தவுடன் மன்னராவது லார்ட்ஸ் ஸபைத் தலைவராவது பிரசங்கத்தைப் படிப்பார். அது முடிந்தவுடன் மன்னர் உள்ளே போய்விடுவார். உடனே காமன்ஸ் ஸபையினர் தங்கள் ஹாலில் வந்து கூடி, மறுபடியும் மன்னரின் பிரசங்கத்தைப் படிக்கிறார்கள். அதற்குப் பதில் ஒன்று நிறைவேற்றப்படும். இதற்குப் பிறகுதான் சபையின் சரியான

வேலை தொடங்கும். பார்லிமெண்டுக் கூட்டத்தின் ஆரம் பத்தில் காமன்ஸ் ஸபை அங்கத்தினர்கள் தங்களுள் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுப்பார்கள். அந்தப் பார்லிமெண்டு கலைக்கப்படும்வரை அவர் அப்பதவி வகிப்பார். அப்போதைக் கப்போது அதிகாரத்தி லிருக்குங் கட்சியால் அதன் அங்கத்தினரிடையே யிருந்து ஒருவர் பொறுக்கப் பட்டு, தேர்தல் நடைபெறும். ஆனால் கட்சிபேதமின்றி அதே மனிதரை மறுபடியும் மறுபடியுந் தேர்ந்தெடுப்பது வழக்கத்தில் வந்து விட்டது. தலைவர் சிறிதும் பட்சபாதமின்றி யிருப்பதுதான் அந்த ஸ்தானத்திற்குள்ள விசேஷ அம்சமாகும். தேர்தலான நிமிஷமுதற்கொண்டு அவர் ஒரு கட்சியிலும் சேர்ந்தவரல்லர். பார்லிமெண்டுச் சட்டப்படி அவர் அரசாங்கத்தில் ஊதியந் தரத்தக்க வேறு ஒரு பதவி யும் ஏற்கக் கூடாது. மேலும், அவர் சபைத் தலைமைப் பதவி யினின்றும் விலகிய பிறகு வேறு எந்தப் பொறுப்பை மேற் கொண்டும், சபையில் பிரசன்னமாகக் கூடாதென்பது சட்ட மில்லாத வழக்கத்திலுள்ள ஒரு கட்டுப்பாடாகும். இவற்றால் அவருடைய பட்சபாதமின்மை பாதுகாக்கப் படுவதாகும். அவருடைய கடமைகளை யெல்லாம் பழக்க வழக்கங்களும், சபையின் நிரந்தர விதிகளுமாகச் சேர்ந்து, தீர்மானஞ் செய்துவிட்டன. தலைவர், சபையின் உத்தரவுகளைச் சபை யின் பிரதிநிதிகள், பொதுமக்கள், மன்னர், பிரபுக்கள் சபை, சர்க்கார் இலாகாக்கள் முதலிய எல்லா இடங்களுக்குந் தெரி விப்பார். ஆனால், இது அவருடைய வேலையில் ஒரு சிறு பகுதியே யாகும். சபையின் நடவடிக்கைகளை நடத்துவது தான் அவருடைய முக்கியமான வேலை. அதன் கூட்டங்களி லெல்லாம் அவர் தலைமை வகிப்பார். அவருக்குத் தேக அசௌக்கிய முதலிய புறக்கணிக்க முடியாத நிலைமை ஏற்

படுமேல் சபையின் உபத்தலைவர் அவர் ஸ்தானத்தை வகித்து நடத்துவர். கட்டுப்பாட்டை ஒருவரும் மீருவண்ணம் பார்த்துக் கொள்வதும், ஒழுங்கான முறையில் விஷயங்களைத் தீர்த்துவைப்பதும், சில விஷயங்களிற் சபையில் மாறு பாடான அபிப்பிராயம் ஏற்படும்போது ஓட்டு எடுத்து முடிவைத் தெரிவிப்பதும் அச்சபைத் தலைவரின் கடமைகளாம். அவர் கமிட்டியில் இருந்தாலன்றிச் சபையில் நடைபெறும் எந்த விஷயத்தைப் பற்றியும் பேசமாட்டார். பொதுவாக எப்பொழுதும் அவர் விவாதங்களிற் கலந்துகொள்வதில்லை. எப்பொழுதேனும் ஓட்டுகள் இருபக்கங்களிலுஞ் சரிசமமாக ஏற்பட்டு விட்டால் அப்பொழுது மட்டும்அவர் தம் ஓட்டை உபயோகிப்பார். அப்பொழுதும் அவர் தம் ஓட்டை இஷ்டப்படி உபயோகிக்க மாட்டார். சபையின் நோக்கத்தை யொத்தும், அல்லது அரசியலின் ஒரு புராதன முறையைப் பின்பற்றியுமேதான் அவர் தம் ஓட்டை உபயோகிப்பது வழக்கம். இவற்ருல் விளங்கும் முறை அல்லது நியமம் யாதெனில், தலைவர் சபையின் யஜமானர் அல்லர்; அதன் பிரதிநிதியும், எவ்வித நடவடிக்கைகளின் முறைகளிலும், விதிகளிலும் அச்சபைக்கு யோசனை கூறுபவருமே ஆவர் என்பதே.

ஒழுங்குமுறையில் தம் சொற்படி நடக்காதவரைத் தாற்காலிகமாகப் பதவியிலிருந்து நீக்கத் தலைவருக்கு அதிகாரமுண்டு. ஒழுங்கு முறையை நிலைநிறுத்துவதில் அவருடைய தீர்ப்பே முடிவானது. விவாதத்தை நிறுத்த வேண்டுமென்று கொண்டுவரும் பிரேரணையை ஓட்டுக்கு விடுவது என்பது அவருடைய இஷ்டத்தைப் பொறுத்ததேயாகும். ஓர் அங்கத்தினர் சம்பந்தமில்லாமற் பேசினுலும் அல்லது சொன்ன விஷயத்தையே திருப்பித்திருப்பிச் சொன்னுலும் அவரைச் சபைத் தலைவர் மேல் பேசவிடாமல்

தடுத்துவிடலாம். சர்க்காருக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே தராசைச் சமமாகப் பிடிக்கவேண்டியது அவருடைய முக்கியமான கடமை. பெரும்பான்மையான கட்சிக்கு அடிக்கடி முட்டுக்கட்டை ஏற்பட்டால் அதனின்றும் பாதுகாக்க வேண்டுவதும், சிறுபான்மைக் கட்சி, சபையில் தொந்தரைக் குள்ளாகாவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டுவதும் அவருடைய பொறுப்புக்களாம். நிதி மசோதாக்கள் விஷயத்தில் அவருக்கிருக்கும் "அனுமதிக்கும் உரிமைகள்" அவர்பால் அபார அதிகாரங்களை அளித்திருக்கின்றன.

அவர் தலைமை வகிக்கும்போது அவருக்கு முன்னே மேஜையின்மீது வைக்கப்பெற்றிருக்குங் செங்கோலே அவருடைய அதிகாரத்தை அறிவிக்கும் அடையாளமாகும். அவருடைய உத்தியோக வாசஸ்தலம் வெஸ்ட்மின்ஸ்டர்தான். அவருக்கு வருஷச் சம்பளம் 5000 பவுன்' 'சேர்மான நிதி' யிலிருந்து அச்சம்பளம் அளிக்கப்பெறுவதால், அது சபையின் அங்கீகாரத்திற் குட்பட்டதன்று. பதவியிலிருந்து விலகியதும் அவர் பிரபுப் பட்டமும், வருஷம் 4000 பவுன் பென்ஷனும் பெறுகிறார்.

சபையில் கமிட்டி கூடினால் அதற்கு உபதலைவர் தலைமை வகிப்பார். அந்த உபதலைவருக்கும், தலைவரைப் போலவே அதிகாரங்கள் இருந்தபோதிலும் அவருடைய நிலைமை கீழ்ப்பட்டதுதான். தலைவரின் உதவிக்காக ஒரு பெரிய ஆபீஸ் இருக்கிறது. அதில் இருவர் முக்கியமானவர். அன்னோர், 'காமன்ஸ் ஸபைக் கிளர்க்கு' என்பவரும், 'ஸார்ஜெண்டு' என்பவரும் ஆவர். இவ்விருவருள் காமன்ஸ் ஸபைக் கிளர்க்கே மிகவும் முக்கியமானவர். அவர் மன்னரால் ஆயுள்வரை நியமனஞ் செய்யப்பெற்றவர். சபையின்

உத்தரவுகளிலெல்லாம் அவர் தாம் கையொப்பமிட வேண்டியவர். லார்ட்ஸ் ஸபைக்குப் போய் வரும் மசோதாக்களை அவர் தாம் கையெழுத்திட்டு அனுப்புவது. சபையிற் படிக்கவேண்டியவற்றை அவரே படிப்பார். எல்லா ரிகார்டுகளும் அவர் கைவசந்தான் இருக்கின்றன. ஸார்ஜெண்டும் மன்னரால் நியமிக்கப்படுபவரே. ஆனால், அவர் சபையின் ஊழியர். ஆதலின் எந்த நிமிஷமும் அவர் தாம் செய்த தவற்றுக்காக நீக்கப்பெறலாம். தலைவர் சபைக்கு வரும்போதும், வெளியே செல்லும்போதுஞ் செங்கோலுடன் அவர் கூடச் செல்வர். சபையின் கட்டளைகளை அவரே நிறைவேற்றுகிறவர். சபையின்முகத்தும், வழிகளிலும் அமைதி ஏற்படுத்துவதும் அவர் பொறுப்பு.

காரிய நடைமுறைகள்

திங்கட்கிழமை முதல் வியாழக்கிழமை வரையிலும் சபை தினம் பகல் 2-45-க்கு கூடும். சில்லறை விஷயங்களுக்கும், கேள்வி விடைகளுக்கும் ஒரு மணி நேரஞ் செல்லும். பிறகு, பொது வேலை ஆரம்பிக்கப்படும். விசேஷ பிரேரணை யில்லாவிடிற் சாதாரணமாகச் சபை இரவு 11-30 மணிக்குக் கலையும். பட்ஜட் விவாதம் நடைபெறும்போதுமட்டும் மணிக்கணக்கு நிபந்தனையொன்றும் கிடையாது. வெள்ளிக்கிழமையன்று சபை பகல் 11 மணிக்குக் கூடும். அப்போது பல தனி அங்கத்தினர்களது மசோதாக்களைப் பற்றிய விவாதங்கள் நடைபெறும். தலைவர் உள்பட நாற்பதுபேர் பிரசன்னமானாற்றான் காரிய நிர்வாகத்திற்கு வேண்டிய ‘கோரம்’ என்னும் நிறை எண்ணிக்கையாகும். சபையில் ‘கோரம்’ இல்லையென்பது தலைவருக்கு அறிவிக்கப்பட்டவுடன், நிமிஷம் காண்பிக்கும் இயந்திரக் கருவி ஓடவைக்கப்படும். மின்சார மணிகள் அடித்து

அங்கத்தினர்கள் அழைக்கப்படுவர். இரண்டு நிமிஷ நேரத்திற்குப் பிறகும் 'கோரம்' சேரவில்லையென்றால், முன்பாகவே குறிப்பிட்ட அடுத்த கூட்டம் வரையிற் சபை தள்ளிவைக்கப்படும்.

ஒரு புது அங்கத்தினர் சபையின் நடவடிக்கை விதிகளைச் சீக்கிரம் எளிதில் அறிந்துகொள்ள முடியாது. பிரசங்கங்களை யாரும் எழுதிப் படிக்கக்கூடாது. ஆனால், குறிப்புக்கள் வைத்துக்கொள்ளலாம். மன்னரின் பெயரை குறிப்பிடக்கூடாது. பிரபுக்கள் சபையின் நடவடிக்கைகளைப்பற்றி நேரிடையாகப் பேசக்கூடாது. பேச்செல்லாம் தலைவரை நோக்கியேதான் இருக்கவேண்டும். ஒவ்வொரு அங்கத்தினரும் தம் இடத்திலிருந்தேதான் பேசவேண்டும். ஒரு விஷயத்தைப்பற்றி ஒருவர் ஒருமுறைதான் பேசலாம். ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் தம் கருத்தை விளக்கிக்கொள்ளவோ அல்லது கமிட்டியிலிருக்கும்போதோ வேண்டுமானால் ஒருவர் பலமுறைகள் பேசலாம். மற்ற அங்கத்தினர்களைப் பெயர்களாற் குறிப்பிடக் கூடாது. அவர்களுடைய தொகுதிகளின் பெயர்களாலேயே அவர்களைக் குறித்துப் பேசவேண்டும். "விஷயம் இப்பொழுது ஓட்டுக்கு விடப்படலாம்" என்ற ஓர் அங்கத்தினரின் பிரேரணை நிறைவேறியவுடனே, அல்லது முன்னங் குறித்தகாலம் முடிந்தவுடனே விவாதம் முடிவுபெறும்.

தலைவர் ஓட்டுக்கு விடப்பெறும் விஷயத்தைக் குறித்துவிட்டு, "ஆமாம்," "இல்லை" என்று பொதுவாய் அங்கத்தினரைச் சொல்லச் செய்வர். எழும் ஒலியிலிருந்து தெரியும் முடிவை அறிவிப்பார். யாரும் அதை ஆட்சேபிக்காவிட்டால், அது நிறைவேறியதாகப் பதிவு செய்யப்படும்.

ஆனால் அந்த முடிவை யாராவது ஆட்சேபிப்பரேல், உடனே அங்குள்ள அந்நியர்களனைவரும் வெளியேறுமாறு அனுப்பப்படுவர். மின்சார மணிகள் இரண்டு நிமிஷ நேரம்வரை அடிக்கும். பிறகு கதவுகள் சாற்றப்படும். அந்த விஷயம் மறுபடியும் ஓட்டுக்கு விடப்படும். முன் போலவே மறுபடியும் ஓட்டின் ஒரு வாய்க்கணக்கே எடுக்கப்படும். அந்த முடிவையும் யாராவது ஆட்சேபித்தால் 'டிவிஷன்' (பிரிவு) உத்தரவிடப்படும். அங்கத்தினர்களிற் பிரேரணையை ஒப்புக்கொண்டவர் 'ஆமாம்' லாபி மூலம் தலைவருக்கு வலதுபுறமாகவும், ஒப்புக்கொள்ளாதவர் 'இல்லை' லாபி மூலம் இடதுபுறமாகவும் இரண்டு பிரிவாகப் பிரிந்து விடுவார்கள். அன்னோர் மறுபடியும் தத்தம் ஸ்தானங்களுக்குத் திரும்பும் போது டிவிஷன் குமாஸ்தாக்கள் அவர்களுள் ஒவ்வொருவருடைய பெயரையுங் குறித்துக் கொள்வார்கள். தலைவரால் நியமிக்கப்பெறும் நான்கு கணக்கர்கள் ஓட்டுக்களை எண்ணுவார்கள். அங்கத்தினர் ஓட்டுச் செய்யவேண்டும் என்ற கட்டாயங் கிடையாது. ஓட்டுச் செய்வதற்குமுன் அவ் விஷயத்தைப்பற்றித் தலைவர் சொல்லியதைக் கேட்டிருக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தமும் இல்லை.

அத்தியாயம் 9

நீதி ஸ்தாபனம்

அரசியலின் மற்ற எல்லா அம்சங்களைவிட நீதி பரிபாலனமே ஒவ்வொரு மனிதனுக்கும் மிகவும் பெரிதும் பயனளிப்பதாகும். ஓர் அரசியற் சிறப்பை அதன் நீதி முறையைப்போலத் தெளிவாக தெரிவிப்பதுமற்றொன்றும் இராது.

ஓர் ஆட்சி முறையிற் சட்ட நிரூபணக் கருவிகள் விரிவாக இருக்கலாம். சட்டங்களுங் குறையின்றி இயற்றப் பெற்றிருக்கலாம். நிர்வாக முறைகளும் கால தாமதமின்றியும் திருப்திகரமாகவும் நடைபெறலாம். ஆனால் சட்டங்கள் முறை தவறியும் நடுநிலைமையின் மாறுபட்டும் உபயோகிக்கப்படுமேல், அவையனைத்தும் உப்பில்லாக் கூழுக்கே நிகராகும். ஒவ்வொரு மனிதனுடைய உரிமைக்கும், சுதந்திரங்களுக்கும் இங்கிலந்தின் அரசியலில் உள்ள பாதுகாப்புக்களைப் போல உலகில் வேறு எந்த ஆட்சியிலும் இல்லையென்னலாம். தனிப் பிரஜா சுதந்திரக் குறையுள்ளவனுக்கு மூன்று விதப் பாதுகாப்புக்கள் கிரேட் பிரிட்டனில் உள்ளன. முதலாவது, மாஜிஸ்டிரேட்டு முன்னிலையிற் கொண்டு வராமலும், அதாவது அவருடைய அனுமதி யின்றியும், காரணந் தெரிவிக்காமலும், யாரையேனும் பாதுகாவலின் கீழோ அல்லது சிறையிலோ வைக்கப் போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கு அதிகாரம் இல்லை. இரண்டாவது, சட்டத்தை மீறி நடக்கும் உத்தியோகஸ்தர்மீது குற்றவழக்குத் தொடுக்கலாம். மூன்றுவது, அதனால் ஏற்படும் பொருள், மானம் முதலிய நஷ்டங்களுக்கு ஸிவில் கோர்ட்டில் வழக்குத் தொடுத்து நியாயம் பெறலாம். ஆனால், இம்மூன்று முக்கியமான உரிமைகளையும் நீதிஸ்தலங்கள் மூலமாகவே பெற வேண்டியிருத்தலால் தனிப் பிரஜாவுரிமை முற்றும், நியாயம் வழங்கும் முறையையும், நீதிபதிகளின் நெறியின் மாருத உயர் குணத்தையும் பொறுத்திருக்கிறது.

சிறப்பியல்

சட்டத்தின் ஆட்சி அல்லது அதிகாரம் என்பதே பிரிட்டிஷ் நீதி வழங்கும் முறையில் விசேஷமாகும். சட்டத்தின் முன்னிலையில் எல்லோரும் சமம் என்பதுதான்

இதன் பொருள். செல்வவான்களுக்கென்று ஒரு சட்டமும் ஏழைகளுக்கென்று மற்றொரு சட்டமும் கிடையாது.

சட்ட ஆட்சி

உத்தியோகஸ்தர்கள், சாதாரணப் பிரஜைகள் என்ற வித்தியாஸமும் இல்லை. எப்படிப் பட்டவனும் தேசத்தின் சாதாரண சட்டங்களுக்கும் நீதி ஸ்தலங்களுக்கும் உட்பட்டவனே. சட்டபூர்வகமான அரசியல் ஸ்தாபனங்கள் உள்ள நாடுகளில் தனி மனிதனுடைய உரிமைகளுக்குப் பொதுவாக அளிக்கப்பெறும் தனிப்பிரஜா சுதந்திர உறுதியிலிருந்துதான் பலம் ஏற்படுகிறது. ஆனால், கிரேட் பிரிட்டனின் வழக்கம் அதற்கு நேர் எதிரானது. சாதாரண நீதிச் சபையில் ஜூரியோடு கூடிய நியாயாதிபதி அல்லது மாஜிஸ்டிரேட்டின் முன்னிலையில் நடந்த விசாரணையில் அவர்களுடைய தீர்ப்புப்படி ஒருவன் சட்டத்தை மீறியிருந்தாலொழிய அன்னோனைச் சட்டப்படிச் சிறையில் வைக்கவோ, தண்டிக்கவோ, மானநஷ்டக் குற்றஞ் சாட்டவோ முடியாது. தனி மனித சுதந்திரம், வாக்குச் சுதந்திரம் பத்திரிகைச் சுதந்திரம், பொதுக்கூட்டச் சுதந்திரம் இவையெல்லாம் மேற்கூறிய முறையின் அனுஷ்டானத்தால் ஏற்படுவன. ஆனால், நிர்வாகத்தின் கையிலிருக்கும் உபச்சட்ட மியற்றுமதிகாரம் நீதிபதிகளின் கண்காணிப்புக்கு உட்படாவிட்டால் இந்தச் சட்டத்தின் அதிகாரம் உபயோகமில்லாததாகும். "நீதி ஸ்தாபனத்தின் கட்டுக் குட்படாமற் சட்டமியற்றும் அதிகாரம் மேன்மேலும் நிர்வாக இலாகாவிற்கு அளிக்கப்பெறு மேல், உத்தியோக ஆட்சியின் யதேச்சாதிகாரந்தான் மேலோங்கி நிற்கும். இதனால் பிரிட்டிஷ் குடிகள் இதுவரையிற் சட்டத்தின் அமுலின்கீழ் அடைந்து வந்த நற்பயன்களெல்லாம் முடிவடைந்த தாகும்" என்று ஒரு பெரிய நீதிபதி எழுதியிருக்கிறார்.

நீதிபரிபாலனம், நிர்வாகம் இந்த இரண்டு வேலைகளைத் தனித்தனி ஸ்தாபன அதிகாரிகள் செய்வது பிரிட்டிஷ் நீதியமைப்பின் மற்றொரு சிறப்பாகும். "அதிகாரப் பிரிவினைக்கொள்கை" என்பது, ஆங்கில அரசாங்க முறையில் நீதிஸ்தாபனத்திற் பூர்ணமாக அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லலாம். சட்டத்தை வியாக்கியானஞ் செய்து பொருத்துவது, அதன்படி அமுல் நடத்துவது என்ற இரண்டும் இரண்டு தனி அங்கங்களி னிடத்தில் இருக்கின்றன. நிர்வாக விஷயமாய் ஏற்படும் வழக்குக்களில் நிர்வாக அதிகாரிகளே தீர்ப்புச் செய்யும் உரிமை கிடையாது. அவர்கள் நியாயவினியோகத்தின் மார்க்கத்தில் தலையிடுவதும் முடியாது. சட்ட நிரூபண ஸ்தாபனமும், நீதிஸ்தாபனமும் தனியானவை. பிரபுக்கள் சபையின் அப்பீல் விசாரணை வேலையைத் தவிர, மற்ற விஷயங்களில் இரண்டிற்கும் சம்பந்தமே இல்லை. நீதிபதிகளுடைய தீர்ப்புக்களில் எதையும் சட்டசபையில் மாற்றமுடியாது. அவ்விதத் தீர்ப்பு மறுபடியும் ஏற்படாமல் இருப்பதற்காகச் சட்டத்தை வேண்டுமானால் திருத்தலாம்.

நீதி, நிர்வாக வேலைகளின் பிரிவினை

இதனோடு சம்பந்தமுள்ள மூன்றாவது விஷயம் ஆங்கில நீதிஸ்தாபனத்தின் பூர்ண சுதந்திரம் என்னலாம். உயர்தர நீதிபதிகள் நன்னடத்தையால் உத்தியோகம் வகிக்கிறார்கள். ஆதலின், இரண்டு சபைகளுஞ் சேர்ந்து, தீர்மானித்தா லொழிய அவர்களை வேலையிலிருந்து நீக்க முடியாது. கீழ்தர நீதிபதிகளுக்கு இத்தகைய பாதுகாப்பு இல்லாவிடினும் அவர்களையுஞ் சாதாரணமாக வேலையிலிருந்து நீக்க முடியாது. அன்னோர் நிர்வாகத்திற்குக் கீழ்

நீதி ஸ்தாபனத்தின் பூர்ண சுதந்திரம்

பட்டவர்களுமல்லர். நிர்வாகத்தினரால் நியமிக்கப் பெற்ற வர்களேனும், ஆங்கில நீதிபதிகளின் உத்தியோகத்திற்குப் பயமே கிடையாது. நீதிபதிகள் வேலையிலிருக்கும்பொழுது அவர்களுடைய சம்பளங்களைக் குறைக்கவோ அல்லது அதி கப்படுத்தவோ முடியாது. அவர்களுடைய அதிகார எல் லைக்குள் அவர்கள் புரியுஞ் செயல்களுக்காக, அன்னோர்மீது எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள முடியாது.

பிரிட்டிஷ் நீதி ஸ்தாபனத்தின் சுயேச்சைத் தன்மை பிரசித்தி பெற்றதாகும். அரசர், அரசருடைய அதிகாரி கள் இவர்களுடைய யதேச்சாதிகாரச் செயல்களிலிருந்து சாதாரணப் பிரஜைகளைப் பாதுகாப்பது தங்களுக்குற்ற கடமையென்று, ஆங்கில நீதிபதிகள் தலைமுறை தத்துவ மாக எண்ணி வந்திருக்கின்றனர். எப்பொழுதுந் தனி மனி தனை நிர்வாகத்தின் முன்னிலையில் தங்கள் நீதியாகிய கவசத் தால் மூடிக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள். ஆங்கிலேயர்கள் தற்காலம் அனுபவிக்கும் உரிமைகளின் பெரும்பாகம், நீதி பதிகளின் தீர்ப்புக்களின் பலனே யென்னலாம்.

சட்டங்களை விளக்கி, குறிப்பிட்ட சந்தர்ப்பங்களுக்குப் பொருத்திக் காட்டுவதே நீதிபதிகளின் முக்கியமான அலுவ லாகும். நடந்தேறிய சம்பவங்களைப்பற்றித் தான் அவர்கள் நடவடிக்கை யெடுக்கலாம். முன்கூட்டியே இனிநடைபெறக்கூடிய விஷ யங்களில் தீர்ப்புக்கள் கூற அவர்களுக்கு அதிகாரங் கிடை யாது. அவ்வித தீர்ப்புக்களைப் பெற அரசியல் நிர்வாக சபையோர் சில சமயங்களில் முயற்சி செய்ததைப் பலமாக அந்நீதிபதிகள் ஆட்சேபித்திருக்கிறார்கள். நிர்வாக சம்பந் தமுள்ள சில கடமைகளும் ஆங்கில நியாயாதிபதிகளுக் குண்டு. அவை மானியம் போன்ற தர்ம சொத்துக்கள்

வேலைகள்

முதலியவைகளை நிர்வகிப்பது, கம்பெனிகளைக் கலைப்பது, பொருட் பெறுமானம் அற்றுப்போன கடன்காரர்களின் சொத்துக்களைப் பிரித்து விடுவது முதலியனவாம்.

ஒரு வகையில் அவர்கள் சட்ட நிரூபண வேலையையுஞ் செய்கிறார்கள். பிரபுக்கள் சபையின் தலைவர், பிரதம நீதிபதி மற்றுஞ் சில நியாதிபதிகள், இன்னோர் அடங்கிய "விதிகள் கமிட்டி" தான் நடைமுறை விதிகளை இயற்றுகின்றது. ஆனால், இவ்விதிகள் பார்லிமெண்டிற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். காமன்ஸ் அல்லது பிரபுக்கள் சபையின் தீர்மானத்தின்மீது பிரிவி கவுன்ஸிலின் உத்தரவினால் அவை நிராகரிக்கப்படலாம்.

ஆங்கில நீதிஸ்தலங்களை, இரு பொதுவான பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை மத்திய அல்லது மேல் கோர்ட்டுகள், ஸ்தல அல்லது கீழ்க் கோர்ட்டுகள் என்பன. அவையெல்லாம் அரசாங்கத்திற்கு விரோதமான குற்றங்களை விசாரிக்கும் கிரிமினல் கோர்ட்டுகள், பிரஜைகளின் பரஸ்பர உரிமை வழக்குகளை விசாரிக்கும் ஸிவில் கோர்ட்டுகள் என இருவகைப்படும்.

அமைப்பு

பிரபுக்கள் சபைத் தலைவரால் நியமிக்கப் பெறும் சம்பளமில்லாத மாஜிஸ்டிரேட்டுகளின் கோர்ட்டுகள் நியாய ஸ்தல அடுக்கின் கீழ்ப்படிகள் போன்றன. இந்தக் கோர்ட்டுகள் இருவகைப்படும். அவற்றுள் ஒருவகை, பெட்டி சேஷன்ஸ் எனப்படும் சிறு சேஷன்ஸ் வழக்குகளை விசாரிக்கும் கோர்ட்டுகள். இவை பட்டினங்களில் தினந்தோறும் நடைபெறும். மற்றது, குவார்ட்டர் சேஷன்ஸ் எனப்படும் கால்வருஷ சேஷன்ஸ் கோர்ட்டுகள். இவை

கிரிமினல் கோர்ட்டுகள்

வருஷத்திற்கு நான்குமுறை நடைபெறும். பெரிய நகரங்களில் வக்கீல் தொழிலில் ஏழு வருஷ அனுபவமுள்ளவர்களினிடையே யிருந்து தேர்ந்தெடுக்கப்படும் சம்பளமுள்ள மாஜிஸ்டிரேட்டுகள் இந்த கோர்ட்டுகளுக்கு உள்நாட்டுக் காரியதரிசியால் நியமிக்கப்படுகிறார்கள். சிலவற்றில் வக்கீல் தொழிலில் ஐந்து வருஷ அனுபவமுள்ளவர்கள் கால்வருஷ செஷன்ஸ் மாஜிஸ்டிரேட்டுகளாக இருக்கிறார்கள். பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் மாஜிஸ்டிரேட்டுகள் அநேகமாக ஜூரிகளின் உதவியால் நியாயஞ் செலுத்துகிறார்கள். அவர்கள் தீர்ப்புக்கு மேலாக மூன்று ஜட்ஜ்கள் அடங்கிய ஒரு டிவிஷன் கோர்ட்டில் அப்பீல் உண்டு.

கடுமையான குற்றங்கள் யாவும் ஹைக்கோர்ட்டால் லண்டன் நகரிலோ, அல்லது அக்கோர்ட்டு கூடும் இதர இடங்களிலோ விசாரிக்கப்படுகின்றன. இவைகளுக்கு அஸைஸ் கோர்ட்டுகள் என்று பெயர். இங்கிலந்தும், வேல்ஸூம் இது சம்பந்தமாக ஏழு சுற்றுப்பிரயாண பிரதேசங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பிரதேசத்திலும் சாதாரணமாக வருஷத்தில் மூன்று அஸைஸ் கோர்ட்டுக் கூட்டங்கள் நடைபெறும். அவற்றிலெல்லாம் அநேகமாக ஒரு ஹைக்கோர்ட்டு ஜட்ஜ் பிரசன்னமாயிருப்பார். வழக்குகளின் சம்பவங்களைப் பற்றிய பிரச்னைகள் ஜூரியால் துணிவு செய்யப்படுகின்றன. ஆனால் அவர்கள் அபிப்பிராயம் ஏகோபித்ததாக இருக்கவேண்டும்.

கிரிமினல் அப்பீல் கோர்ட்டு குறைந்தது மூன்று ஜட்ஜ்கள் அடங்கியது. கால் வருஷ செஷன்ஸ், அஸைஸ் கோர்ட்டுகள், லண்டன் மத்திய கிரிமினல் கோர்ட்டு, குற்ற சம்பந்தமான மன்னரின் நீதி டிவிஷன், இவைகளிலிருந்து வரும் அப்பீல்களை அது விசாரிக்கும்.

ஸிவில் விஷயத்திற்கு இங்கிலந்தை ஐந்நூறு ஜில்லாக் களாகப் பிரித்திருக்கிறார்கள். இவை யெல்லாம் சுற்றுப் பிரதேசங்களாகப் அமைக்கப்பட்டிருக்கின் றன. ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஒரு ஜட்ஜ் சான்ஸலரால் நியமிக்கப்பெறுவர். அவ் விதம் ஐம்பது பேர் இருக்கின்றனர். இவர் கள் ஜூரியுடனேயோ ஜூரியின்றியோ, நூறு பவுன்களுக்கு மேற்படாத தொகைகள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசா ரணை செய்கிறார்கள்.

ஸிவில் கோர்ட்டுகள்

ஹைக்கோர்ட்டில் மூன்று பிரிவுகள் இருக்கின்றன. i தலைமை நீதிபதி அக்கிராசனம் வகிக்கும் மன்னரின் நீதி டிவிஷன். தனிக்கட்சிக் காரர்களது வழக்கு களையும், மன்னர் சம்பந்தப்பட்ட வழக்கு களையும் இது விசாரிக்கும். ii பிரபுக்கள் சபைத் தலைவர் தலைமை வகிக்கும் சான்ஸேரி டிவிஷன். இது தர்ம ஸ்தாபனங்கள் கம்பெனி விஷயங்கள் உயில்கள் முதலியவைகளைப்பற்றிய வழக்குகளை விசாரிக்கும். iii மரண சாஸன நிரூபணம், விவாக ரத்து, முதலியவற்றை விசாரி க்கும் பிரிவு.

ஹைக்கோர்ட்டு

ஹைக்கோர்ட்டிலிருந்து "அப்பீல் கோர்ட்டு" என்ற ஸ்தாபனத்திற்கு அப்பீல் செய்யலாம். ஆறு நிரந்தர அங் கத்தினர்கள், 'ரோல்ஸ்மாஸ்டர்', ஐந்து நீதி பதி பிரபுக்கள், ஹைக்கோர்ட்டின் மூன்று டிவிஷன்களின் தலைவர்கள், சாதாரண அப் பீல் கோர்ட்டுப் பிரபுக்கள், இவர்கள் எல் லோரும் அதின் நியாயாதிபதிகள். மேற்கூறியவற்றிற்கு மேலாகப் பிரபுக்கள் சபை ஒரு அப்பீல் ஸ்தாபனமாக இருக்கிறது.

அப்பீல் கோர்ட்டு

பிரிவி கவுன்ஸிலுக்கு இங்கிலந்தில் நீதி விஷயத்தில் இருந்த அதிகாரம் முழுவதையும் 1641-ம் வருஷத்திய நீண்ட பார்லிமெண்டு என்ற காமன்ஸ் பிரிவி கவுன்ஸில் சபைக்கூட்டம் நீக்கிவிட்டது. ஆனால் இப்பொழுதும் அது இந்தியாவிற்குஞ் சில குடியேற்ற நாடுகளுக்கும் மேலான அப்பீல்கோர்ட்டாக இருந்துகொண்டு, வரும் அப்பீல் வழக்குகளை விசாரிக்கின்றது.

பிரபுக்கள் சபைத்தலைவர், பிரிவி கவுன்ஸில் தலைவர், சாதாரண அப்பீல் கோர்ட்டுப் பிரபுக்களில் ஆறுபேர், உயர்ந்த நீதிபதிப் பதவி ஏற்றிருந்த அல்லது ஏற்றிருக்கும் பிரிவி கவுன்ஸிலர்கள் ஆகிய இவர்கள் அதன் அங்கத்தினர் ஆவர். குடியேற்ற சுயேச்சைநாடுகளின் உயர்தரக்கோர்ட்டுகளுடைய நீதிபதிகள் (பிரிவி கவுன்ஸிலர்கள்) அந்தந்த நாடுகளின் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். இந்து தேசத்திற்குச் சம்பளம் பெற்ற இரு பிரதிநிதிகள் இருக்கிறார்கள். சாதாரணமாக அது கிரிமனல் வழக்குகளில் அப்பீல் கோர்ட்டாக இருப்பதில்லை. உண்மையில் அது ஒரு கோர்ட்டு அன்று. ஆகையால் அதன் தீர்ப்புக்கள் கோர்ட்டுகளின் தீர்ப்புக்கள் போன்ற உருவத்தில் அமைக்கப்படுவதில்லை. அப்பீல்களை நிராகரிக்கவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ அது மன்னருக்குச் செய்யுஞ் சிபார்சுகளாகவே அத்தீர்ப்புக்கள் இருக்கும்.

பிரிவி கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்யும் இந்த உரிமையைக் குடியேற்றநாடுகள் தேசிய உணர்ச்சியினாலும், தம் பணச்செலவு என்பதாலும் அவ்வளவாக உபயோகப்படுத்துவதில்லை. ஆனால், கானடாவும் இந்தியாவும் மட்டும் உபயோகிக்கின்றன. கானடா, ஜாதிமத சச்சரவுகளாலும்,

இந்தியா உள்நாட்டுக் கோர்ட்டுகளிடத்தில் உள்ள அவநம்பிக்கையாலும் இந்த உரிமையைக் கொண்டாடுகின்றன.

அத்தியாயம் 10

அரசியற் கட்சிகளும் கட்சி ஆட்சியும்

வாக்குரிமையின் விரிவான முறையிற் பொது ஜனங்களுக்குப் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்புடன்
கூட, நாட்டின் பிரச்னைகளிலும் கொள்கை
நாட்டிலும், களிலும் தீர்ப்பளிக்கும் பொறுப்பும் ஏற்
சட்ட சபையிலும் பட்டிருக்கிறது. ஆனாலும் வாக்காளர்களிற்
கட்சிகளின் பெரும்பாலர், அரசியல் விஷயங்களிற்
அவசியம் போதிய அறிவில்லாமலும் தங்கள் குறை
களை வெளிப்படுத்தத் தெரியாமலும் ஊக்கமின்றியும் இருப்பதால், பின் உதவியுந் தூண்டுதலும் இன்றி அவர்கள் தங்கள் பொறுப்பை ஒருக்காலும் உணரமுடிவதில்லை. ஆதலின் வாக்காளர்களுக்கு, விஷயங்களைத் தெளிவாக, அறிவுறுத்த வேண்டியதும், அவர்களுடைய ஊக்கத்தைத்தூண்டி அவர்களைத் தயார்செய்து தேர்தலிற் கலந்து கொள்ளுமாறு செய்ய வேண்டியதும் அவசியமாகின்றன.

மேலும், தற்கால நாகரிகச் சர்க்காரின் விரிந்த ஏற்பாடுகளாலே, பிரஜைகள், தங்கள் குறைகளையோ அபிப்பிராயங்களையோ தெரிவித்துக் கொள்ளவேண்டுமானால், ஒன்று சேர்ந்தும், பலங்கொண்டும் நடக்க வேண்டுமென்பது அவசியமாகிறது. அவர்கள், தங்கள் அபிப்பிராயங்களுக்கொத்த

அரசியற் கூட்டத்திற் சேர வேண்டும். தேசத்தின் பொதுப் பிரச்னைகளைப்பற்றி ஒரே மனப்பான்மை கொண்டிருப்பவர்கள் எல்லோருங் கூட்டுறவுகொண்டு இவ்விதம் ஐக்கியப்படுவதாற்றான், அரசியற்கட்சிகள் உற்பத்தியாகின்றன.

குடிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஜனநாயக ஆட்சி, கட்சிகளின்றி நடைபெற இயலாது. அரசாங்கத்தாரின் ஆலோசனைக்கு வரும் விஷயங்கள் பலவாகும். அவை பொது மக்களான குடிகளுக்கு மிகவுஞ் சிக்கலானவையும் எளிதில் விளங்காதவையுமாயிருக்கும். கட்சி வேறுபாடு கொண்டுள்ளோர், அவற்றுள் முக்கியமானவைகளைப் பொறுக்கியெடுத்து, அவைகட்குத் தாம் சொல்லும் தோஷ பரிகாரங்களையும் வேறு முன்னேற்றத் திட்டங்களையும் குறிப்பிட்டுக் காட்டிப் பொதுமக்களின் ஓட்டுகளைப் பெற முயற்சி செய்கிறார்கள். ஆகையால், அன்னோர் செய்யும் வேலை, தற்கால வியாபார முறையில் உள்ள தரகர்கள் அல்லது பொதுக் கண்ட்ராக்டர்கள் என்னும் ஒப்பந்தக்காரர்கள் வேலைகள் போன்றது என்னலாம். அவர்கள் தேர்தல்களில் அபேக்ஷகர்களை நிறுத்தி அவர்கள் திறமையைப்பற்றி வாக்காளர்களுக்கு சிபார்சு செய்கிறார்கள். மேடைப் பிரசங்கங்கள் மூலமாயும் பத்திரிகைகளின் வாயிலாகவும், பொதுஜன ஊக்கத்தைத் தூண்டித் தேர்தல்களில் வெற்றிபெறப் பலஞ் சேகரிக்கிறார்கள். அவ்வலியோர்கள் இவ்விதம் பலவித வழிகளால் பொது ஜனங்களின் அரசியல் ஊக்கத்திற்கு ஒரு வாய்க்கால்வகுத்து, கோர்வையும் உருவும் அமைந்த ஒரு பொதுக்கொள்கையைப் பின்பற்றும்படிச் செய்து, அதை நிறைவேற்றுவதற்காக அன்னோர் ஒத்துழைப்பையும் எளிதிற் பெற்றுவிடுகிறார்கள்.

தேசத்தில் இத்தகைய கட்சியேற்பாடு இருப்பது போலச் சட்ட சபைக்குள்ளும் இருக்கவேண்டுமென்பது தற்

கால நாகரிக அரசியலின் ஒரு முக்கிய நோக்கமாகி விட்டது. உண்மை கூறுவதானல், கிரேட்பிரிட்டனில் முதன்முதலில் கட்சிகள் பார்லிமெண்டிற்குள்ளே தான் இருந்தன. சர்க்காரும் எதிர்கட்சியும் தத்தம் கட்சிக்கு ஆதரவு பெற ஆவல் கொண்டு பார்லிமெண்டின் அங்கத்தினர்களைச் சேர்த்தன. அங்கத்தினர்களும் தொகுதியின் செல்வாக்காலோ செல்வவான்களின் ஆதரவாலோ அல்லது லஞ்சத்தாலோ தேர்ந்தெடுக்கப்பெற்று வந்தவராதலின், தத்தந் தொகுதியிலுள்ள வாக்காளர்களுக்கு அவர்கள் கட்டுப்படவில்லை. கட்சித் தலைவர்கள் போதிய அளவு பலஞ்சேர்க்க முடியாதபோதுதான் நகரத்தொகுதிகளை விலைக்கு வாங்கியோ தம் நண்பர்களுக்குத் தேர்தல்களில் உதவி புரிந்தோ பலம் பெற்றுவந்தனர். முதலிற் பார்லிமெண்டிற்குள் மட்டும் இருந்துவந்த இக்கட்சித் திட்டம் இப்பொழுது நாடு முழுவதும் பரவி நிற்கிறது.

கிரேட் பிரிட்டனின் தற்கால அரசியல் முறையில் கட்சி ஆட்சி அமைப்பு ஒரு பகுதியாகும். ஆங்கில சட்டசபை விதிகள் அக்கட்சிப் போராட்டத்தின் பலனுக ஏற்பட்டவை தாம். எங்ஙனமெனில், கட்சியின் பெரும்பான்மை பலமும் ஆதரவும் இருந்தால்தான் மந்திரிச்சபை தன் வேலைகளை வெற்றிகரமாகச் செய்ய முடியும். மந்திரிச்சபையின் அங்கத்தினர்கள் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பதனுற்றுன் அதில் ஒற்றுமையும் வலிமையும் ஏற்படுகின்றன. காமன்ஸ்ஸபையில் பெருங்கட்சியின் தலைவர் என்பதாற்றுன் பிரதம மந்திரிக்கு அம்மேலான பதவி ஏற்படுகின்றது.

கட்சி ஆட்சி

பார்லிமெண்டின் அங்கத்தினர்கள், விக்ஸ், டோரீஸ் என்னும் இரு கட்சியினர்களாக முதலில் பிரிவுபட்டனர். ஒரு

கட்சி அரசாங்கத்தை நடத்தும் பொறுப்பை ஏற்றுத் தன் கொள்கையைக் காமன்ஸ் ஸபையில் விளக்கிக்காட்டினால், மற்றொரு கட்சி அதை எதிர்க்குங்கடமையை ஏற்றுக்கொள்ளும். ஒரு முக்கிய அரசாங்கக் காரியத்தில் சர்க்கார் கட்சி ஆதரவு குறைந்து தோல்வியடைந்தால் அது பெரும்பான்மை அங்கத்தினரின் நம்பிக்கையை இழந்து விட்டதாகக் கருதுவது ஓர் அரசியல் தத்துவமாக வளர்ந்து வந்திருக்கிறது. அப்பொழுது எதிர்க்கட்சியார்க்குத் தங்கள் கொள்கைப் படி, அரசாங்கத்தை நடத்தச் சந்தர்ப்பம் அளிக்கவேண்டும் மென்பது ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. இவ்வாறு இரு கட்சிகளும் ஒன்றை மற்றொன்று எதிர்க்கும் வழியில் இறங்குவனவாயின. அங்கத்தினர் இவ்விரு கட்சிகளில் ஏதேனு மொன்றிற் சேர்ந்து அதன் கொள்கைகளை ஆதரிக்கவேண்டிய அவசியமும் ஏற்படுகிறது. தலைவருக்குப் பணிந்து போவது, கட்சியின் ஒழுங்குமுறைக்கு உட்படுவது என்பவற்றில் தமது சொந்த அபிப்பிராயங்களையும் கொள்கைகளையுங் கைவிடும் அவசியம் அங்கத்தினர்க்கு உண்டாகிவிடுகிறது. தங்கள் கட்சி அதிகாரம் வகிக்கும் பொருட்டு எல்லோரும் ஒரே மனமாய் ஓட்டுச் செய்வார்கள். எதிர்க்கட்சியார் அதிகார நிலைமையை அடையக் கூடாதென்ற இந்த ஏற்பாடு, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குச் செய்யப்பெறும் ஒரு சூழ்ச்சி போலிருப்பதே யொழிய, தேசத்தின் நன்மையைப் பற்றி ஆலோசித்துத் திருப்திகரமான ஒரு முடிவுக்கு வரும் வழியாகத் தெரியவில்லை.

கிரேட் பிரிட்டனில் வெகுகாலம் இந்த இருகட்சித் திட்டம் இருந்துவந்தது. பொறுப்பு வாய்ந்த ஒரு மந்திரிச் சபை பதவியில் இருக்கவேண்டியதற்கு நாட்டில் இரண்டு கட்சிகளுக்குமேல் இருக்கக்கூடாதென்பது அனேகருடைய

அபிப்பிராயம். பிரதிநிதிகளைக் கொண்ட தற்கால ஜனநாயக முறையில் அரசாங்கம் நடைபெறுவதற்கு இரு கட்சித் திட்டம் மிகவும் சௌகரியமாகவும், சிக்கலற்றதாகவும் இருக்கிறதென்பது உண்மைதான். இவ்வித இரு கட்சித் திட்டத்தின்கீழ் சர்க்கார் அமைப்பு மிகச்சுளுவானதும் தானுகவே நடப்பதுமாகும். ஒரு கட்சி தோல்வியடைந்ததும், எதிர்க்கட்சி அதிகாரத்தை ஏற்றுக்கொள்வதால், அந்தக் கட்சி தன் கொள்கையைத் தாமதமின்றிச் சட்ட மூலம் நிறைவேற்றுவதற்கு முடியும். கடைசியாக, அதிகாரம் ஓரிடம் வந்து குவிந்திருப்பதால், அரசியலில் தவறுகள் ஏற்பட்டால் பொறுப்பை ஏற்கும் கட்சியை எளிதிற் கண்டிப்பதற்கும் இடமேற்படும்.

ஆனுல், இந்த இருகட்சித் திட்டம் மறைந்துபோவது நிச்சயம். புனர் நிர்மாணமும், சீர்திருத்தங்களும் ஓங்கி வளர்ந்துவரும் இந்தப் புது சகாப்தத்தில், லக்ஷியங்களிலும், கொள்கைகளிலும், நலங்களிலும், வித்தியாஸங்கள் அதிகம் ஆக ஆகப், புது அரசியற் கட்சிகள் ஏற்படுவது நிச்சயம். அவை பழைய இரண்டு கட்சிகளுக்குள் அடங்கா. கிரேட் பிரிட்டனிலேயே ஒரு சமயம் பார்லிமெண்டில் ஐரிஷ் தேசீய வாதிகள் ஒரு வலிமை பெற்ற பகுதியினராக இருந்து, பார்லிமெண்டு இயந்திரத்தைப் பயனற்றதாகச் செய்யும் நிலைமையை உண்டாக்கினர். தற்காலம் அங்கு மூன்று கட்சிகள் இருக்கின்றன. அவை கன்ஸேர்வேட்டிவ் (பிற்போக்கு), லிபரல் (மிதவாதி), லேபர் (தொழில்) என்பன. லிபரல் கட்சி தன் பழைய கௌரவத்தில் நிற்கிறதென்பதும், கூடிய சீக்கிரத்தில் மறைந்துவிடுமென்பதும் உண்மை. தொழிற் கட்சியிலும் கன்ஸெர்வெட்டிவ் கட்சியிலும் அங்கத்தினர்களுக்குள் பொது நோக்கங்களிலும், கொள்கை

களிலும் அபிப்பிராய பேதம் உண்டாகி சச்சரவுகளும் விரோத யுக்திகளும் ஏற்பட்டிருக்கின்றன. இக்காரணங் களினாலே இக்கட்சிகள் கலந்து, புதுக் கோரிக்கைகளும், கட்சிகளும் ஏற்படலாமெனத் தோன்றுகின்றது. அரசியலைத் தற்காலம் நடத்தும் தேசீயச் சர்க்காரே பழய கட்சித் திட்டத்தின் வலி குன்றிப்போய்விட்டதென்பதற்கு ஓர் அத்தாட்சியாகும்.

முற்கூறியவாறு, கிரேட்பிரிட்டனின் அரசாங்கத் திட் டம்,இரண்டு கட்சிகள் மாறிமாறிப் பதவியேற்கும் முறையை யொட்டியதாகும். இதன்படி, சர்க்கார்க் காமன்ஸ் ஸபை கட்சியிடையே மட்டுமன்று, எதிர்க் கட்சி கட்சி யமைப்பு யிலும் தீவிரமான ஒழுங்கு முறையுங் கட்டுப்பாடும் அனுஷ்டானத்திலிருக்க வேண்டியது அவசியமாகிறது. தொகுதிகளுக்கு உண்மை யான பிரதிநிதிகளாக இருக்கவேண்டுமென்ற பொறுப் புணர்ச்சியால் கட்சி அங்கத்தினர்கள் சட்டசபைக் கூட்டங் களுக்குத் தவறாமல் வருவார்கள். ஆயினும், இந்த உணர்ச் சியை நம்பி, எந்தக் கட்சியும் மந்திரிச்சபை அதிகாரத்தை வகிக்கமுடியாது. ஏதாவது ஒரு சமயம் ஒரு நெருக்கடியான நிலைமை யேற்பட்டால், தன்பலம் நிச்சயமாக இருக்கிற தென்பதைத் தீர்மானிப்பதற்குத் தக்கவாறு கட்சியைக் கட்டுப்பாட்டிற் குள்ளாக்க வேண்டும்.

கட்சியின் அங்கத்தினர்களை தக்க சமயத்திற்கு வந்து உதவுமாறு தம் கைவசம் வைத்துக்கொண்டிருக்க வேண்டிய பொறுப்புடையவரைக் கட்சியின் கொறடா என்று அழைப் பது வழக்கம். கொறடாக்களைக் கட்சி யங்கத்தினர்கள், தங் கள் இடையே யிருந்து தேர்ந்தெடுக்கிறார்கள். கட்சி ஆலோ

சனைகளில் அவர்களுக்குச் செல்வாக்கு அதிகம் உண்டு. கட்சித்தலைவர்கள் ஆலோசித்திருக்குங் காரிய முறையின் இரகசியங்கள் அனைத்தும் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் எப்பொழுதும் அங்கத்தினர்களுடனும், மற்றையோர்களுடனும் கலந்துகொண்டே யிருப்பார்கள். அங்கத்தினர்களின் மனப்போக்கையும், ஏதாவது துரோகம் இருக்குமாயின் அதையும், உடனுக்குடனே தலைவருக்கு அறிவிப்பது அன்னோர்கடமையாகும். அவர்கள் தலைவர்களுக்குத் தகவல் அறிவிக்கும்உதவிகளாக்இருக்கிறார்கள். சபையைக்கூட்டுவது, கலையாமல் வைத்துக்கொள்வது, மந்திரி பேசும்போது கைகொட்டி ஆதரவு அளிப்பது, கூட்டங்களுக்குத் தவறாமல் வரும்படி அங்கத்தினர்களைத் தூண்டுவது, நெருக்கடியான நிலைமை யேற்படுமெனத்தோன்றும் சமயங்களில் அவர்கள் காலாகாலத்தில் கூட்டத்திற்கு வந்து குறித்தநேரம் வரையிற் சபையில் இருக்கிறார்களாவென்று பார்த்துக்கொள்வது முதலியன கொறடாக்களின் தினசரி வேலைகளாம். அவர்கள், 'கொறடாக்கள்' எனப்படும் துண்டு அறிக்கைகள் மூலம் அங்கத்தினர்களுக்கு, இன்ன சந்தர்ப்பத்திற் சபையில் பிரசன்னமாயிருக்கவேண்டுமென்று அறிவிப்பார்கள். அவ்வறிக்கைகள் ஒன்று முதல் நான்கு வரை அடிக்கோடுகள் இடப்பட்டிருக்கும். நான்கு அடிக்கோடுகள் கொண்ட அறிக்கையைத் தகுந்த காரணமில்லாமல் அசட்டை செய்வது கரைகடந்த கட்சித்துரோகம் எனக்கருதப்படும். அவ்வாறு அசட்டை செய்த அங்கத்தினர்மீது தீவிரமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படும். சர்க்கார்க் கொறடாக்கள் மிகவுங் கடுமையான ஒழுங்கு முறையைப் பரிபாலித்து வருகின்றனர். மேலும், அங்கத்தினர்கள் ஒழுங்கு முறைப்படி நடப்பதற்குப் பல தூண்டுதல்கள் இருக்கின்றன. டிவிஷனில் ஓட்டுச் செய்தவர்களின் பெயர்களை உத்தியோக முறையிற் பிரசுரஞ்

செய்கிறார்கள். டிவிஷன் காலத்திற் சபையில் இல்லாதவர்களைப்பற்றி லண்டனிலும் மற்ற இடங்களிலுமுள்ள பத்திரிகைகளும் கட்சிகளின் தொகுதி ஸ்தாபனங்களும் கவனித்துக் கண்டனஞ் செய்கின்றன.

இணை அல்லது சமன் உண்டாக அங்கத்தினரைச் சேர்ப்பது கொறடாக்களின் வேலைகளில் ஒன்று. சபையில் ஒரு கட்சியில் ஓர் அங்கத்தினர் வராவிடில் எதிர்க் கட்சியிலும் ஒருவர் வராமலிருக்க வேண்டும் என்ற ஓர் ஏற்பாட்டின்படிக் கட்சிகளின் பலம் சீர்தூக்கப்படுகிறது. சபையில் இந்த வழக்கம் மிகவும் கண்டிப்பான முறையில் நடந்து வருகிறது. சபைக் கூட்டத்திற்கு வராமலிருக்கும்படி எதிர்க் கட்சியில் ஒருவரைக் கண்டுபிடிக்காமல் ஓர் அங்கத்தினர் அவசரமான தமது சொந்த வேலையின் பொருட்டுப் போவது அரசியற் கடமையில் ஒரு பெருங் குற்றமாகக் கருதப் படுகிறது.

1832-ம் வருஷத்திற்கு முன் தேசத்திற் சரியான கட்சியேற்பாடு கிடையாது. அவ்வருஷத்திய சீர்திருத்தச் சட்டத்திற்குப் பிறகு, ஊக்கமும் பழக்கமும் இல்லாத புதிய ஓட்டர்களைப் பார்லிமெண்டின் ரிஜிஸ்தர்களிற் பதிவு செய்ய வேண்டியதாயிற்று. அனேக இடங்களிற் பதிவு செய்யும் நிலயங்கள் ஏற்படுத்தப் பட்டன.

தேசத்தில் கட்சியமைப்பு

லண்டனிலும் கட்சிகளின் மத்திய நிலயங்கள் ஏற்பட்டன. கன்ஸெர்வெட்டிவ்களால் முதல் ‘கார்ல்டன் கிளப்’’ ஆரம்பிக்கப்பட்டது. லிபரல் கட்சியின் தலைமை நிலயமாக இருக்கும் “சீர்திருத்தக் கிளப்’’ லிபரல் கட்சியின் அங்கத்தினர்களால் ஏற்படுத்தப் பெற்றது. 1900-ம் ஆண்டில் தொழிற்கட்சி உண்டாயது. தற்காலம்

மேற்கூறிய மூவகைக் கட்சிகளுக்கும் நாடு முழுவதுங் கிளை நிலயங்கள் இருக்கின்றன.

பழைய டோரி கட்சி பின்பு கன்ஸெர்வெட்டிவ் கட்சியென்றும் ஐக்கியக் கட்சியென்றும் அழைக்கப் பெற்றது. 1886-ம் வருஷத்தில், ஐரிஷ் சுயராஜ்யப் பிரச்னையைப் பற்றிய முரண்பாடு காரணமாக, லிபரல் கட்சியிலிருந்து சிலர் பிரிந்து இவற்றிற் சேர்ந்துகொண்டனர். கன்ஸெர்வெட்டிவ் கட்சி சாம்ராஜ்ய நோக்கமுடையது. வர்த்தகத்திற் சலுகைகளையும் பாதுகாப்புக்களையும் ஆதரிக்குங் கொள்கையை மேற்கொண்டது. சரித்திரப் பிரசித்தி பெற்ற "விக்" கட்சியின் வழித்தோன்றியதுதான் லிபரல் கட்சி. இது சலுகையற்ற பாதுகாப்பில்லாத வியாபாரத்தை ஆதரிக்கின்றது. நிலச்சீர்திருத்தம், தனிமனித நோக்கத்திற்கு இடையூறின்றி தொழிற்களிற் சுய ஆட்சி இவைகளையும் ஆதரிக்கின்றது; வெளிநாட்டுக் கொள்கையில், சர்வதேசக் கூட்டுறவிற்குத் தன் முழு ஆதரவைத் தருகிறது. தொழிற்சங்கங்கள், அபேதவாதக்கட்சியின் சபைகள், இவற்றின் சேர்க்கையாகத் தொழிற்கட்சி ஏற்பட்டது. சங்கங்களில் அங்கத்தினர்கள் அல்லாத தனிமனிதர்களும் பிறகு இதிற் சேரலாயினர். நிலத்தையும் பொருள் உற்பத்தி மூலங்களையும் நாட்டின் பொதுவுடமையாக்குவது அதன் முதல் நோக்கம். கைத்தொழில் பொது ஜனங்களின் நிர்வாகத்திலிருப்பது, சர்வதேச சமாதானம், ஆயுத பரிஹரணம், இந்தியாபோன்ற நாடுகளுக்குப் படிப்படியான சுயஆட்சி, தொழிலாளர்களின் வாழ்க்கைத்திட்டத்தை உயர்த்த சர்வதேசத்தொழிலாளர் சட்ட ஏற்பாடு, இவை இதன் கொள்கைகளாம்.

தேசீய கன்ஸெர்வெட்டிவ் யூனியனும், தேசீய லிபரல் பெடரேஷனும் முறையே கன்ஸெர்வெட்டிவ், லிபரல்

கட்சிகளுக்குத் தலைமை இடங்களாம். இவ்விரண்டிற்கும் தலைமை ஸ்தானங்கள் லண்டன் நகரிலே இருக்கின்றன. ஓட்டுக்கொடுக்க நிர்ணயித்திருக்கும் இடங்களில் தொகுதிகளின் கிளை நிலயங்கள் இருக்கின்றன. கட்சிச்சேர்க்கைக்கு இவை தாம் மூலாதாரம். அத்தகைய நிலயங்கள் உள்ள எல்லைகளுள், மிகவும் செல்வாக்கும் ஊக்கமும் வாய்ந்த கட்சியாளர்கள் அவற்றில் அங்கத்தினராக இருப்பர். முழுத்தொகுதியின் கட்சிக்கவுன்ஸிலுக்கு அன்னோர் தம் பிரதிநிதிகளை அனுப்புகிறார்கள். இவற்றினின்றும் ஜில்லாக் கவுன்ஸில்களுக்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பெறுகின்றனர். இவற்றினின்றுமே லண்டன் நகரில் உள்ள மத்திய ஸ்தாபனத்திற்கும் பிரதிநிதிகள் செல்கின்றனர். கட்சித் தலைவர்களுக்கு இவைமூலம் மிகவும் பரந்த செல்வாக்கு இருக்கின்றது. அவர்களுடைய வெளிப்படையான கடிதங்களும், பிரசங்கங்களும் கிளைஸ்தாபனங்களுக்கு வழிக்காட்டிகளாக வுள்ளன.

தொழிற் கட்சியின் அமைப்பு இன்னும் சிக்கலானது. தேசத்தில் இருக்கும் தொழிற்கட்சியின் நிர்வாகம் பார்லிமெண்டு தொழிற்கட்சியின் நிர்வாகத்திலிருந்து வேறுபட்டிருக்கிறது. அதன் அங்கத்தினர்களிற் பாதிப்பேர் வருஷாந்தக் கூட்டத்தாலும், பாதிப்பேர் அதற்குப் பொருளுதவி செய்யுந் தொழிற்சங்கங்களாலும் நியமிக்கப்பெறுகின்றனர். இந்த நிதியைக் கண்காணிப்பு அல்லது நிர்வாகஞ் செய்து வருங்காரணமாக அக்கட்சியின் அதிகாரக்கமிட்டியே எல்லா ஸ்தல அமைப்புக்களையும் அடக்கியாளுகின்றது. தொழிற்கட்சித் தலைவருக்குச் சார்பான வேறு இரு ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அவை, தொழிற்சங்கக் காங்கிரஸ், சுயேச்சை உழைப்பாளர் கட்சி யென்பனவாம். தொழிற்

சங்கக் காங்கிரஸ் கட்சி, பொருளைச் சேகரித்துக் கொடுப்பதால் சம உரிமை கொண்டாடுகின்றது. சுயேச்சைக் கட்சியோ தீவிரமான அபேத வாதத்திற்காக உழைக்கும் தனிப் பிரசார ஸ்தாபனமாகும். அதற்கு நாட்டில் மிகுந்த செல்வாக்கிருக்கின்றது.

அத்தியாயம் 11

பிரான்ஸ்

மூலாதாரச் சட்டங்கள்

பிரான்ஸ் தேச அரசியல் சட்டபூர்வகமானது. ஆனால் அது ஒரு தனிச்சட்டத்தால் ஏற்பட்டதன்று. பல சட்டங்களின் சேர்க்கையால் அமைக்கப் பெற்றது. அவ்விதச்சட்டங்களில் மூன்று சிறப்பாக உள்ளன. அவற்றுள், 1875-ம் வருஷப் பிப்ரவரிச்சட்டம் ஒன்று. அதனுள், அரசியலின் அதிகாரங்கள் சீராக வரையறை செய்யப் பெற்றுள்ளன. இரண்டாவது, அதே வருஷத்து மற்றொரு சட்டம். அதனுள் ஸெனெட் சபையின் அமைப்பு விரிவாக விளங்கக்காணலாம். 1875-ம் வருஷ ஜூலை மாதச்சட்டம் மூன்றாவதாகும். அதில் அரசாங்கத்தின் அதிகாரங்களில் ஒன்றுக்கொன்றுள்ள தொடர்புகள் நிலை நாட்டப் பட்டுள்ளன.

அங்கச்சட்டங்கள்

மேற்கூறிய மூன்று மூலாதாரச் சட்டங்களைத்தவிர அதே ஆண்டில் வேறு இரண்டு சட்டங்களும் நிறைவேறியுள்ளன. ஸெனெட் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் விதிகளைப் பற்றிய அவ்வருஷ ஆகஸ்டுச்சட்டம் ஒன்றும், டெபுட்டி

களைத் தேர்ந்தெடுக்கும் விதத்தை யுணர்த்தும் நவம்பர் மாதச் சட்டம் மற்றொன்றுமாம். இவைகளுக்குப் பின்னரும் பல வேறு சட்டங்களும் இயற்றப் பெற்றுள்ளன. அவை சட்ட சபைகளின் இருப்பிடத்தைப்பற்றியும் நிர்வாக அதிகார ஸ்தானத்தைப்பற்றியும் ஏற்பட்ட சட்டங்களாகவும் ஸெனெட் அங்கத்தினர்கள், டெபுட்டிகள் முதலியவர்களின் தேர்தல்களைப்பற்றிய முந்திய சட்டங்களின் திருத்தங்களாகவும் இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் உறுப்புச் சட்டங்கள் அல்லது அங்கச் சட்டங்கள் என்று பெயர். இவைகளைச் சாதாரணச் சட்ட நிரூபணத்தின் மூலம் திருத்தவோ நிராகரிக்கவோ கூடும்.

சட்டமூலமாக நிர்ணயிக்கப்பட்ட விஷயத்திற் பிரிட்டிஷ் அரசியலும் பிரான்ஸ் தேச அரசியலும் மாறுபாடுள்ளவை. ஆனால் பிரான்ஸ் அரசியல் திட்டம் ஏற்பாடற்றதும் பூர்த்தி யாகாததும், அரைகுறையானதும் ஆகும். அனேக விஷயங்கள் பழக்க வழக்கங்களின் படியும் நடை பெறுகின்றன. பொதுஸ்தாபனங்களின் அதிகாரங்கள், வேலைகள் இவற்றைத் தீர்மானமாய் நிர்ணயிக்கும் விதிகள் கிடையா. முன்னிருந்த பிரெஞ்சு அரசியற் றிட்டங்களைப் போலத்தனி மனித உரிமைகளும், சுதந்திரங்களும் நிர்த்தாரணஞ் செய்யப்படவில்லை. எந்தச் சர்க்காராலும் நிலை பெயர்க்க முடியாத 'உரிமைகள்மசோதா' போன்ற ஒரு சாஸனமுங் காணப்பெறவில்லை. சபைகள் பொதுமக்கள் முன்னிலையிற் கூடுவது, தலைவர்களைத் தேர்ந்தெடுப்பது முதலிய சிறு விஷயங்களைப் பற்றி அரசியல் திட்டத்தில் விதிகள் காணப்படுகின்றனவே யொழிய, அரசாங்கத்தின் முக்கிய அம்சங்களான நியாய

அரசியல் திட்டம் அரைகுறையாயும், சுருக்கமாயுமுள்ளது

சபை யமைப்பு, நிதிநிர்வாகம் இவற்றைப் பற்றி அதில் ஒன்றும் வெளிப்படையாக இல்லை. சாதாரணச் சட்டங்கள் அரசியற் சட்டங்களுக்கு விரோதமாக நிரூபணஞ் செய்யப்பெற்றிருக்கின்றனவா என்று ஆராய்ந்து முடிவு செய்ய ஓர் அதிகார ஸ்தாபனமுங் கிடையாது. அரசாங்க முறையின் பொது உருவத்தை மட்டும் ஏற்படுத்திக் குடியரசின் முக்கிய ஸ்தாபனங்கள் எவை யென்பதைத் தீர்மானித்ததற்கு மேல், அவ்வரசியற் றிட்டம் வேறொன்றையுஞ் செய்யவில்லை. இதனால், அதிகாரிகள் தத்தம் இஷ்டப்படி எதையுஞ் செய்ய இடமுண்டாகின்றது. பாரிஸ் நகரம் முற்றுகை செய்யப்பட்டுத் தேசமே அபாய நிலைமையி லிருந்தபோது மக்களால் அபரிமித அதிகாரங்கள் கொடுக்கப்பெற்ற தேசிய சபை, நிலைமைக் கேற்றவாறு எவ்வளவு சுருக்கமாகவும், காரியத்திற்காக வேண்டிய வகையிலும் ஆட்சி முறையை ஏற்படுத்த முடியுமோ, அவ்வாறு செய்ததுதான் இதற்குக் காரணமென்னலாம்.

பிரெஞ்சு அரசியற்றிட்டம் இப்படிப் பூர்த்தியாகாமலும், சுருக்கமாயு மிருப்பதினாற்றான் வெற்றிகரமாக இருக்கிறதென்று சொல்லலாம். 1791-ம் வருஷம் முதல் 1870-ம் வருஷம் வரை, பிரான்ஸில் பதினொன்று அரசியற்றிட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால், 1875-ம் வருஷத்திய, பூர்த்தியற்றதுங் கோர்வையற்றதுமான திட்டமே இதுவரை எல்லா உள்நாட்டு எதிர்ப்பையுந் தாங்கி வருகிறது. அஃது, ஆங்கில அரசியற் றிட்டத்தைப் போலச் சந்தர்ப்பங்களுக்கேற்றபடி, வளைந்துகொடுக்குஞ் சக்தி யுடையதாகக் காட்டிக்கொண்டு விட்டது.

தாமாகவோ, அல்லது குடியரசுத்தலைவரின் வேண்டுகோட்கிணங்கியோ, இரு சட்ட சபைகளுந்தனித்தனியாய்க்

கூடிப் பாதிக்கு அதிகம் ஓட்டுக்களால் திருத்தம் வேண்டு மென்று தீர்மானஞ் செய்யவேண்டும். பிறகு இரு சபைகளும் ஒருங்கு சேர்ந்து கூடிய நாஷனல் அஸெம்பிளி யில் திருத்தப் பிரேரணைகள் பரிசீலனை செய்யப்படும். மொத்த அங்கத்தினர்களிற் பாதிக்கு மேற்பட்ட ஓட்டுக்களினால், மூலாதாரச்சட்டங்களை முற்றிலும் மாற்றவோ அல்லது ஒரு பாகத்தைத் திருத்தவோ தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றுச் சட்டமாக அமையும்.

அரசியல் அமைப்புத் திருத்தம்

திருத்தப் பிரேரணைகளைத் தனிப்பட்ட அங்கத்தினர்களோ, தலைவர் பெயரால் மந்திரிச்சபையினரோ கொண்டு வரலாம். ஓர் அரசியற் றிருத்த விஷயமாகக் கூட்டப்பெற்ற தேசியசபை தனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட விஷயத்தை மட்டுந்தான் முடிவு செய்யவேண்டு மென்ற நியதி கிடையாது. அது அரசியற் சம்பந்தமான மற்ற முறைகளிலுந் திருத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். உதாரணமாகக் கூறுமிடத்து, 1884-ம் ஆண்டு, குடியரசு முறையைப்பற்றித் திருத்தங்கள் கூடா என்று இரு சபைகளுந் தீர்மானித்ததை ஆராயவேண்டிக் கூட்டப்பெற்ற தேசிய சபை, தனக்குக் குறிப்பிட்ட வேலையைக் கடந்து சென்று, பிரான்ஸில் அரசாட்சி செய்த வம்சத்தவர்களின் வழித் தோன்றியவர்கள் தலைவர் பதவிக்கு வரக்கூடாதென்று தீர்மானித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

சுருக்கமாய்க் கூறுமிடத்து, பிரான்ஸில் சட்ட நிர்மாணமும், அரசியல் திட்டத்திருத்தங்களும் சாதாரணச் சட்ட சபைகளினாலேயே நிறைவேற்றப்படுகின்றன. ஆனால் நடவடிக்கை முறைமாத்திரம் இரண்டிற்கும் வேருக நிகழ்

கின்றது. ஆகவே, சுயேச்சையிலும் அதிகாரத்திலும் பிரெஞ்சு சட்டசபை பிரிட்டிஷ் பார்லிமெண்டிற்குச் சற்றே தாழ்ந்தது. இருசபைகளும் ஒற்றுமைப்பட்டால் அரசியலை உடனே மாற்றியமைக்கலாம். ஆனால், நடைமுறையில் மாறுதல் ஏற்படுவது மிக்க அரிதேயாகும்.

நிர்வாகம்

பிரெஞ்சுக் குடியரசுத் தலைவருக்குப் பிரஸிடெண்டு என்று பெயர். அவர் சட்ட சபைகள் இரண்டும் கூடிய நாஷனல் அஸெம்பிளி யினால், ஏழு வருஷ காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். தேர்தலுக்கு முன்னாக நாட்டில் எத்தகைய தேர்தல் பிரசாரமும் நடக்காது. அஸெம்பிளி கூட்டத்திலும், பிரேரணைப் பிரசங்கங்களோ, வாதங்களோ அனுமதிக்கப்பெறா. பெயரைச் சொல்லிக் கூப்பிடும்போது ஒவ்வோர் அங்கத்தினரும் ஓட்டுக்கொடுக்க வேண்டும். மொத்த ஓட்டுக்களில் பாதிக்கு மேல், அபேக்ஷகர் பெறும் வரையிலும் ஓட்டு எடுப்பது நடைபெறும்.

தலைவர் தேர்தல் முறை

ஒரே மனிதன் எவ்வளவு முறை வேண்டுமானாலும் தலைவர் ஸ்தானத்திற்கு நிற்கலாம். ஆனால், வழக்கம் அதை அனுமதிப்ப தில்லை. முழு ஸ்தல ஸ்தாபனச் சுதந்திரங் களும் அரசியல் உரிமைகளும் பெற்ற எந்தப் பிரெஞ்சு தேசவாஸியும், ராஜ வம்சத்தைச் சேர்ந்தவ னல்லனேல் தலைவர் ஸ்தானத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பெறலாம். விரிந்த சட்டசபை அனுபவம் வாய்ந்த அரசியல் வாதி களும் அந்தப் பதவியின் கௌரவத்திற்கு ஆசைப்பட்டு அதனைப்பெற விரும்புகிறார்கள்.

தலைவரின் உரிமைகளும் கடமைகளும்

அரசியல் இயந்திரத்தில் தலைவர் என்பது ஓர் இன்றியமையாத அங்கமென்னலாம். தலைவர் தேசத்தின் ஒற்றுமைக்கும் அதிகாரத்தின் உறுதிப்பாட்டிற்கும் ஓர் அடையாளமாவர். அவருக்கு வருஷச் சம்பளம் $10\frac{1}{4}$ லக்ஷம் பிராங்குகள். எலிசி மாளிகையும், ஒரு நாட்டுப்புற விடுதியும் அவருக்கு அளிக்கப்படும். அரசருக்கு ஏற்பட்ட எல்லா மரியாதைகளும் அவருக்கு உள்ளன.

தலைவருக்கு நிர்வாக அதிகாரமும், சட்ட நிரூபண அதிகாரமும் உண்டு. நிர்வாகி என்ற பொறுப்பிற் சட்டங்கள் அமுலுக்கு வருவதை மேற்பார்வையிட்டு நடத்துகிறதும், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எல்லோரையும் நியமனஞ் செய்கிறதும், விசேஷ உத்தரவுகள் போடுகிறதும், மன்னிப்புக்கள் அளிக்கிறதும் போர்ப்படைகளைப்பங்கீடு செய்கிறதும், பொதுவான விசேஷ காலங்களில் தலைமை வகிக்கிறதும், அந்நிய தேசங்களின் தூதர்களை வரவேற்பதும், சபைகளின் சம்மதத்திற் குட்பட்டு உடன்படிக்கைகளைப் பேசி முடிப்பதும் அவர் வேலைகளாம். அவர் சட்ட சபைகளின் சம்மதத்துடன் போரைக்கூடத் தொடங்கலாம்; சட்ட நிரூபணஞ் செய்யவும் ஆரம்பிக்கலாம். ஆனால், ஒரு மசோதாவை நிராகரிக்கும் அதிகாரம் அவருக்குக் கிடையாது. ஒரு மசோதாவைப் புனராலோசனை செய்யும்படியாகச் சபைகளுக்குச் சொல்ல அவருக்கு அதிகாரம் உள்ளதெனினும் அது ஒரு போதும் அனுஷ்டானத்தில் இல்லை. அவர் சபையை ஒரு மாதந்தள்ளிப் போடலாம். ஆனால், ஒரு கூட்டத்திற்கு ஏற்பட்ட காலத்தில் இரு முறைகளுக்கு மேல் அவர் அவ்வாறு தள்ளி வைக்கக்கூடாது. ஸெனெட் சபையின் சம்மதியின் மேல் அவர் கீழ்ச்சபையைக் கலைத்துவிடலாம். ஆனால், இந்த

உரிமையும் அதிகமாகத் தலைவரால் உபயோகிக்கப் பட்டதில்லை. மேலும், சட்டசபைக்குச் செய்தி யனுப்பும் அதிகார உரிமையும் அத்தலைவருக் குண்டு.

இத்தகைய விரிவான பல அதிகாரங்கள் தலைவருக்கு இருக்கின்றன வென்பது வெறும் பெயரளவிலே தான். தலைவர் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் மந்திரியின் கையொப்பம் பெறவேண்டுவது அவசியமாகும். ஆதலால், பிரிட்டிஷ் மன்னரைப் போலவே அவரும் ஒரு பதுமையே ஆவர். அவரும் எக்காலத்திலுந் தவறி நடக்க முடியாது. ஆனால், அத்தலைவருக்கு இரண்டு முக்கியமான வேலைகள் உள்ளன. அவ்விரண்டினுள் மந்திரிச்சபையை யேற்படுத்தச் சக்தி வாய்ந்த ஒருவரைப் பொறுக்கி யெடுப்பது ஒன்றாகும். ஆனால், இதிலுங்கூட அவர், சட்டசபையிற் பேராதரவு உடையவரையே பிரதம மந்திரியாக நியமிக்குமாறு, சபைத் தலைவரைக்கலந்தாலோசித்துச் செய்யவேண்டுமென்பது ஒரு கட்டுப்பாடாகிவிட்டது. அவருடைய மற்றொரு முக்கிய வேலை, அந்நிய நாடு சம்பந்தப்பட்ட பொதுக்காரியங்களில் மந்திரிகளுக்கு மந்திராலோசனை கூறுவதாகும். அவரது உத்தியோக காலம் நீடித்திருப்பதாலும், அவர் மந்திரிச்சபையின் தலைவராக இருப்பதாலும் அவருடய சொற்களுக்குப் பெருத்த செல்வாக்கு இருக்கிறது.

சுருக்கமாய்ச் சொல்லுங்கால், பிரெஞ்சுக்குடியரசுத்தலைவர், ஐக்கிய நாடுகளின் தலைவரைப்போல் உண்மையான அதிகாரம் பெற்றவரல்லர். ஏழு வருஷ காலத்திற்குத்தேர்ந்தெடுக்கப்பட்ட மன்னரைப் போன்றவரே அவர். அவருக்குப் பெருமை மட்டும் உண்டே யொழிய அதிகாரமோ பொறுப்போ கிடையாது. தேசத் துரோகத்திற்காக அவரை விசாரணைக்குக் கொண்டுவரலாம்.

மந்திரிச்சபை

பிரிட்டிஷ் அரசியலில் இருப்பது போலப் பிரெஞ்சு அரசியலிலும் உண்மையான அதிகாரம் மந்திரிச்சபையின் கையிற்றான் இருக்கிறது. இரண்டு சபைகளிலும் இருக்கும் பெருவாரியான அரசியற் கட்சிகளின் தலைவர்களும் முக்கியஸ்தர்களும் அந்த மந்திரிச்சபையில் அங்கத்தினராக இருக்கின்றனர். சட்டப்படி மந்திரிகள் சட்டசபைகளின் அங்கத்தினர்களாக இருக்கவேண்டுமென்ற அவசியம் இல்லை. ஆனால், வழக்கத்திற் சட்டசபை அங்கத்தினர்களே மந்திரிகளாகத் நியமிக்கப்படுகின்றனர். யுத்த மந்திரியும், கடற்படை மந்திரியும் மட்டுமே அந்த இலாகா நிபுணர்களாக இருக்கிறார்கள். அவர்கள் அரசியல் உலகில் சம்பந்தப்பட்டவர்களாக இருக்க மாட்டார்கள்.

இங்கிலந்தில் இருப்பதுபோ லல்லாமற் பிரான்ஸில் மந்திரிகள் இரண்டு சபைகளுக்குஞ் சென்று விவாதங்களிற் கலந்து கொள்கிறார்கள். அதனால், அம்மந்திரிகளுக்குப் பதிலாக ஒருசபையில் வீற்றிருக்க உதவிக்காரியதரிசிகள் தேவையில்லை. ஆனால், சில மந்திரிகளுக்குச் சட்டசபை அங்கத்தினர்களான உதவிக்காரியதரிசிகள் அவர்களின்கீழ் வேலை செய்கிறார்கள். அரசியல் முறைப்படி அவர்கள் மந்திரிகளல்லர். ஆனாலும், அன்னோர் மந்திரிச்சபைக் கூட்டங்களுக்கு அழைக்கப்படுகின்றனர். இரண்டு சபைகளிலும் பேசும் உரிமையும் அவர்களுக் குண்டு. அவர்கள் மந்திரிச் சபையுடன் பதவியேற்று அதனோடு விலகி விடுகின்றனர்.

மற்றெல்லாப் பார்லிமெண்டரி அரசியற் றிட்டங்களைப் போலப் பிரான்ஸிலும் மந்திரிச்சபைக்கு இருவகைப்பட்ட வேலைகள் உண்டு. அவை சட்டசபைகளிற் சர்க்காரின்

பிரதிநிதியாக இருந்து அதன் நடைமுறைகளை விளக்குவதும், ஒவ்வொரு மந்திரியின் பொறுப்பிலிருக்கும் நிர்வாக இலாகாவைக் கண்காணிப்பதுமாம். மந்திரிகளின் எண்ணிக்கை சட்டத்தில் வரையறுக்கப் படவில்லை. அது சந்தர்ப்பத்திற் கேற்ப மாறுபாடு எய்தும். தற்காலம் பிரான்ஸின் மந்திரிச்சபையிற் பன்னிரண்டு அங்கத்தினர்க ளிருக்கின்றர். பொதுவாக அம் மந்திரிகள் எல்லோரும் சர்க்காரின் பொதுக்கொள்கையைப் பற்றியும் தனித்தனியாக இலாகா நடவடிக்கைகளைப் பற்றியும் இரு சட்டசபைகளுக்கும் பதிற் சொல்லவேண்டிய கடமை யுள்ளவர்கள். ஏதாவது ஒரு முக்கியமான பிரேரணையில் ஏற்படுந் தோல்வியாலோ, நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தாலோ அவர்கள் ராஜீநாமாச் செய்து விடுவாகள்.

அதிகாரங்கள்

பிரெஞ்சு பிரதம மந்திரின் உத்தியோகமுறைப் பெயர் "மந்திரிகள் கவுன்ஸிலின் தலைவர்" என்பதாம். பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்குள்ளது போல சர்வாதிகாரம் இவருக்குக் கிடையாது. மற்ற மந்திரிகளை இவரே நியமனஞ் செய்யவும் வேலையிலிருந்து நீக்கவுங் கூடுமாறுலும், சட்டசபைக் கட்சிகளின் ஆதரவை எதிர்பார்த்திருப்பதால் அவரது அதிகாரஞ் சம்பூர்ணமான தன்று.

சாதாரணமாக வாரத்திற்கு இருமுறை கூடும் மந்திரிகளின் கவுன்ஸிலுக்குத் தலைவர்தாம் அக்கிராசனுதிபதி. ஆனல், மந்திரிகள் தாமாகவே பிரதம மந்திரியின் ஆபீஸில் கூடிப் பேசலாம். இவ்விருவிதக் கூட்டங்களின் நடவடிக்கைகளும் அந்தரங்கமானவை. அவற்றிற்கு ஒருவிதத் தீர்மானக் குறிப்புங் கிடையாது. பெரும்பாலும் பிரதம மந்திரி, கூட்ட நிகழ்ச்சிகளின் சாராம்சத்தைப் பத்திரிகைகளிற் பிரசுரிக்கு

மாறு அனுப்புகிருர். அப்பத்திரிகைகளிற் கடுமையான விவாதங்களோ, அபிப்பிராய பேதங்களோ வெளியிடப் பெரு.

பிரெஞ்சு மந்திரிச்சபையின் செல்வாக்கும், அதிகாரமும் மிகவும் விரிவாக உள்ளன. அதற்கு நான்கு காரணங்களுண்டு. முதலாவதாக, பிரெஞ்சு அரசாங்கம் எல்லா வியாபாரங்கள் மீதும் தொழிற்கள்மீதும், போலீஸ் பரிசோதனை, லைசென்ஸ் கொடுப்பது முதலிய முறைகளாற் கண்காணிப்புக் கொண்டிருக்கிறது. இரண்டாவதாக, பிரெஞ்சு அரசாங்கம், அதிகாரம் முழுவதையுந் தன்னிடத்தே கொண்ட ஓர் ஒன்றுபட்ட அமைப்பாகும். எல்லாவற்றிற்கும் மத்திய அதிகார ஸ்தாபனத்தை எதிர்பார்ப்பது என்ற வழக்கம்; 1789-ம் வருஷப் புரட்சியில் எல்லா ஸ்தலப் பாகுபாடுகளும் ஒழிந்தமை; அமைதிக்குறைவு ஏற்பட்டு விடுமோவென்று பிரெஞ்சுக்குடிகள் மனத்தில் எப்பொழுதுங் குடிகொண்டிருக்கும் அச்சம் இவையனைத்துஞ் சேர்ந்துதொல்லைகளைத் தீர்க்கும் அதிகாரி, சரியான பலத்துடன் கூடியவனுக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தை, வலுப்படுத்துவனவாகும். மூன்ருவதாகப், பொது நீதிகள், தனிப்பட்ட நீதிகள் என்ற மாறுபாடிருப்பதாற் பிரெஞ்சு நிர்வாகத்திற்கு விரிவான அதிகாரங்கள் இருக்கின்றன. அத்தகைய அதிகாரங்களைப்பிரிட்டனிற்சட்டசபையும் நியாயஸ்தலமுமே மேற்கொண்டுள்ளன. நான்காவதாக, பிரெஞ்சுச் சட்டசபை நிறைவேற்றுஞ் சட்டங்களெல்லாம் பொதுப்படையாகவேஇருக்கும். மந்திரிகள் நிர்வாக உத்தரவுகள் மூலமோ, விசேஷ அவசர விதிகளாலோ அவற்றைப் பூர்த்தி செய்து கொள்வது வழக்கம். அப்படிச் செய்வதற்கு, இங்கிலந்தில் இருப்பதுபோல, விசேஷ அதிகாரமளித்தலோ அனுமதியோ தேவை யில்லை.

மந்திரிச்சபையின் இந்த விசேஷ அதிகாரங்களெல்லாம் பிரெஞ்சுப் பார்லிமெண்டரி அரசாங்கத்தின் நிலையில்லாத் தன்மையால் வீணாய்ப் போகின்றன. அரசியற் கட்சிகள் பலவாக இருப்பதால், அவைகளில் ஏதாவதொன்று மற்றக்கட்சிகளின் ஆதரவின்றிச் சபையில் தலைமை பெறுவதற்குச் சாத்தியமில்லாமற் போகிறது. ஒரு பெருவாரித் தொகையைப் பெறும் பொருட்டு அடிக்கடி கூட்டுக்கட்சி மந்திரிச்சபை யமைக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகின்றது. 1875-ஆம் ஆண்டு முதல், 1935-ஆம் ஆண்டுக்குள் மந்திரிச்சபைகள் ஒன்றன்பின் ஒன்றாக சராசரி 10 மாதங்களுக்குங் குறைந்தே நிலைத்திருந்தன. கலைந்து போன மந்திரிச்சபையிலிருந்து பெரும்பாலர்கள் புதுச்சபையிலும் இருக்கலாம். மேலும், தங்களுடைய தவறுகளினால், அதன் வீழ்ச்சிக்குக் காரணமானவர்களும் புதிதாய் ஏற்படுகிற மந்திரிச்சபையில் அதிகாரம் வகிக்கலாம்.

மந்திரிச் சபையின் சலனத்தன்மை

பிரெஞ்சு மந்திரிச்சபையின் இந்த 'மயில்வாகன நிலை' அதன் கேள்வி கேட்கும் முறையால் இன்னும் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றது. பிரிட்டிஷ் ஆட்சியில் எந்த அங்கத்தினருக்கும் ஒரு மந்திரியை அவரது இலாகாவைப் பொறுத்த எவ்விஷயத்தைப் பற்றியும் கேள்விகள் கேட்டு மறுமொழி பெற உரிமையுண்டு. ஆனால், மந்திரியின் சம்மதியின்றி ஒரு கேள்வியுங் கேட்க முடியாது. அதனால் ஒருவித ஆராய்ச்சியும் விவாதமுங் தொடங்க முடியாது. ஆனால், பிரான்ஸ் அரசியலிலோ, சட்ட சபை அங்கத்தினருள் ஒருவர் தம் வலிமைகொண்டு ஒரு மந்திரியைக் கேள்வி கேட்டு அதற்கு விடை கூறும்படி செய்து, விவாதத்தையும் கிளப்பி ஓட்டு எடுக்கும்படியும் செய்து விடலாம்.

பிரெஞ்சு மந்திரிச்சபை அடிக்கடி மாறும் இயல்பின தென்பதால் அது கொள்கையில் ஒருவிதத் தொடர்பற்றது என்று கூறுவதற்கில்லை. மந்திரிச்சபை மாற்றம் என்பது கொள்கையில் மாற்றம் என்பதன்று. அதே கொள்கையை இன்னும் மேலான திறமையில் நடத்துவது என்பதே அதன் பொருள். பழைய மந்திரிச்சபை விட்ட இடத்திலிருந்தே புதிய மந்திரிச் சபை தன் வேலையைத் தொடங்கும். மாறும் மந்திரிச்சபைகளுக்கெல்லாம் சர்வாதிகாரியாக விளங்கும் பார்லிமெண்டு, மந்திரிகளிடத்தில் திறமைக் குறைவோ, பிழைபாடோ காணப்பெறின், உடனே அவர்களை வேலைகளிலிருந்து நீக்கும். பிரெஞ்சு மந்திரிகளின் மாறுதல் என்பது நிரந்தரக் கொள்கையின் அடையாளமே யொழிய, இங்கிலந்தைப் போலக் கொள்கை மாற்றத்தின் அறிகுறி யன்று; தீவிரமான கொள்கையிலிருந்து நேர் விரோதமான பிற்போக்கு என்ற மாறுபாடே கிடையாது; எதிர்க் கட்சிகளினிடையே போட்டி யென்பதே இல்லை. அது பெரும்பாலும் ஒருவகைப் பட்ட அபிப்பிராயங் கொண்டவர்களின் தொடர்பே யாகும். அடிக்கடி மாறுதலடையும் மந்திரிச்சபையைப் பார்த்து, அஃது ஓர் அராஜகக் களஞ்சியம் என்று கருதக்கூடிய அத் தேசத்தின் சரித்திரத்தைக் கூர்ந்து நோக்குங்கால், யாவரும் வியப்புறத்தக்க ஒழுங்கு அங்கு நிலவுறுவதைக் காணலாம். அங்கு ஆண்டு தோறும் சீர்திருத்தங்கள் வலுவடைகின்றன; குடியரசின் ஜனநாயக மூல தத்துவங்கள் வலிமை யெய்து கின்றன; போர்ப்படைகளிலும் மதஸ்தாபனங்களிலும் உள்ள பகைவர்கள் அழிவுறுகின்றனர்.

மாறுதல் அதிகமெனினும் கொள்கையில் தொடர்புள்ளது

மேற்கூறிய நிரந்தரமில்லாத் தன்மையால் நடைமுறையில் சில தொல்லைகள் ஏற்படுகின்றன. பொறுப்பை

எளிதில் யார்மீதுஞ் சுமத்த முடியாது. ஏதேனுமொன்றைச் செய்ததினுலும் அன்றேல் செய்யாமையாலும் உண்டான பிழைக்குப் பொறுப்பாளரென்று கூறும் படியாக நீண்டகாலம் மந்திரிகள் பதவியில் இருப்பதில்லை. இரண்டாவது, மந்திரிகள் பயன் தரத்தக்க நிர்மாண வேலையில் ஈடுபட முடிவதில்லை. மூன்ருவது, அரசாங்கவேலை அடிக்கடி தடைப்படுகின்றது. பிரெஞ்சு மந்திரியின் உத்தியோக காலம் குறுகியதாய் இருப்பதால், பிரெஞ்சு ஸிவில் ஸெர்விஸ் உத்தியோகஸ்தர் வைத்ததே சட்டமாகி விடுகிறது. ஏனெனில் புதிதாக வரும் மந்திரி பெரிய மாறுதல்கள் ஏதும் செய்ய விரும்பார். நிர்வாக இயந்திரம் பழைய பாதையிலேயே ஓடும் வண்ணம் விட்டு விடுவது வழக்கமாக இருக்கிறது. இவ்விதம் உத்தியோக வர்க்கத்தினர்மேற் சரியான கண்காணிப்பு இல்லாமற்போவதினுல் நிர்வாகத்தில் தாமதங்களும், ஊழல்களும் மிகுந்து கிடக்கின்றன.

நடைமுறையில் ஏற்படும் தொல்லைகள்

ஒரு நிர்வாக இலாகாவின் தலைவர் என்னும் பொறுப்பில் ஒரு பிரெஞ்சு மந்திரி செய்யவேண்டிய வேலை மிகவும் கடினமானது. நிரந்தர ஸிவில் ஸெர்விஸ் உத்தியோகஸ்தர்கள் அம்மந்திரியின்கீழ் வேலை செய்கிருர்கள். ஒவ்வொரு மந்திரியின் வேலையும் நான்கு அல்லது ஐந்து பிரிவுகளாக பெருக்கப்பட்டு அவை ஒவ்வொன்றுக்கும் தலைமையதிகாரியாக ஒவ்வொரு டைரக்டர் இருக்கிருர். இந்த டைரக்டர்கள் ஸிவில் ஸெர்விஸில் தலைமைப் பதவிகளை வகிப்பவர்களாவர். சில சமயம் இந்த அதிகாரிகள், “டைரக்டர்களின் கவுன்ஸில்” என்ற ஒரு கூட்டங்கூடி இலாகாவின் பொது நிர்வாகத்தைப்பற்றிப்

நிரந்தர ஸிவில் ஸெர்விஸூம் இலாகா அமைப்பும்

பேசுவர். அக்கூட்டத்திற்கு அந்த இலாகா மந்திரியே தலைமை வகிப்பார். இலாகாவின் வரவு செலவு சட்ட சபையில் விவாதிக்கப்படும்போது "சர்க்கார்க் கமிஷனர்கள்" என்ற பொறுப்பில் டைரக்டர்கள் அதிற் கலந்து கொள்ளுகிறார்கள். மானியங்களைப் பெற மந்திரிக்கு உதவி புரிகிறார்கள். நிர்வாக வேலையில் மந்திரிக்கு உதவிபுரியுமாறு இவர்கள் 'சிபார்சுக் கமிஷன்களின்' அங்கத்தினர்களாகவும் நியமனஞ் செய்யப்படுகிறார்கள். ராஜாங்க கவுன்ஸிலிலும் விசேஷ அங்கத்தினர்களாக ஸ்தானம் வகிக்கிறார்கள். ஆனால், நான்கு அல்லது ஐந்து உள் இலாகாக்களை (பீரோக்களை) மேற்பார்வையிடுவது தான் அவர்களுடைய முக்கியமான வேலை. நிர்வாக விஷயத்தில் இந்த 'பீரோக்கள்' தாம் முக்கியமான இயந்திரங்கள். அவை செய்யும் சிபார்சுகளின் மீதுதான் மந்திரி தம் தீர்ப்புக்களைக் கூறுகிறார். பார்லிமெண்டினால் நியமிக்கப்பெற்ற மந்திரிகளுக்கு உட்பட்டு வேலைசெய்ய வேண்டிய "பீரோக்களுக்கு"ப் பதிலாக, பிரான்ஸ் தேசத்தில் மந்திரிகளின் வேலைகளை வரையறை செய்து, பார்லிமெண்டின் வேலையை விரிவுப்படுத்தும் அதிகாரத்தை நிர்வாக "பீரோக்கள்" கைக்கொண்டிருக்கின்றன என்று ஓர் ஆசிரியர் கூறியுள்ளார்.

பிரிட்டினிலிருப்பது போலப் பிரான்ஸிலும் ஸிவில் ஸெர்விஸ் உத்தியோகங்களுக்கு நியமனம் ஒரு பரீக்ஷை மூலம் செய்யப்படுகிறது. ஸிவில் ஸெர்விஸில் பல தரங்களும் வகுப்புக்களும் இருக்கின்றன. தரமுறை பற்றியும் வகுப்புமுறை பற்றியும் உத்தியோகஸ்தர்களுக்கு அதிகச்சம்பளம் அல்லது பதவி, மந்திரியால் அளிக்கப்படுகின்றது. சில முறைகளையும் விதிகளையும் பின்பற்றி, டைரக்டர்கள் அடங்கிய ஒரு கவுன்ஸிலால் வரையறுக்கப்பட்ட ஒரு குறிப்பின்

படி மேனிலைமைகள் அளிக்கப்படுவனவேனும், அவற்றுள் நடு நிலைமை யில்லாமையால், முறை தவறுதல்களும் குறைகளும் கீழ் உத்தியோகஸ்தர்களிடையே நிகழ்ந்துகொண்டேயிருக்கின்றன. எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும் தாராளமான ஒரு பென்ஷன் முறையிருக்கிறது. விரிவான விசாரணையின்றி, அவர்களைப் பதவியினின்று விலக்கமுடியாது. சம்பளம் அதிகம் இல்லாவிடினும் உத்தியோகப் பதவியும் மதிப்பும் அதிகமாகவும் ஸ்திரமாகவும் இருப்பதால் மந்திரிகளின் கீழ் உத்தியோக மேற்பதற்குப் பெருத்த ஆவல் இருக்கிறது.

பிரெஞ்சு இலாகா நிர்வாகத்தில் உள்ள ஒரு விசேஷமென்னவெனில், மந்திரிகளுக்கும் ஸிவில் ஸெர்விஸ் உத்தியோகஸ்தர்களுக்கும் நடுவில் சில இடைத்தர உத்தியோகஸ்தர்கள் இருப்பதேயாம். அவர்களுக்குக் "காபினெட்" என்று பெயர். அதில் ஒரு தலைவர், ஓர் உபதலைவர், ஒரு காரியதரிசி மற்றுஞ்சில அங்கத்தினர் இருக்கின்றனர். அவர்கள் மந்திரியின் விருப்பப்படி நியமிக்கப்பெற்ற அவரது அந்தரங்க உதவியாளர் ஆவர். சாதாரணமாக அவர்களுக்குச் சம்பளம் கிடையாது. ஆனால், செல்வாக்குக்காகவும், பின் கிடைக்கும் பிரயோஜனத்திற்காகவும் அன்னோர் அப்பதவியை விரும்பி வருகின்றனர். மந்திரியின் அதிகாரத்தை அவர் 'காபினெட்' வகிக்கிறது. அது மந்திரியின் நிலைமையில் உள்ள வாழ்வைத் தனதாக ஏற்றுக்கொள்கிறது. மந்திரியார் தம் வேலையை விட்டு நீங்குமுன் தம் காபினெட் அங்கத்தினர்களுக்குத் தமது விசேஷ உத்தரவுகள் மூலம் நிரந்தர ஸெர்விஸில் உத்தியோகங்கள் ஏற்படுத்திக் கொடுத்துவிடுகின்றார்.

சட்ட சபை: ஸெனெட்

பிரெஞ்சுப் பார்லிமெண்டு இரண்டு சபைகளையுடையது. அவை மேற்சபை அல்லது ஸெனெட் என்றும், கீழ்ச்சபை அல்லது டெபுட்டிகளின் சேம்பர் என்றும் வழங்கப்பெறும். ஸெனெட்டில் 314 அங்கத்தினர்கள் இருக்கின்றனர். அவர்கள் ஜனங்களால் நேராகத் தேர்ந்தெடுக்கப்படுபவரல்லர். ஒவ்வொரு பிரதேசத்திற்கும் இரண்டு முதல் எட்டுப் பேர்கள் வரையில் உள்ள "தேர்தல் காலெஜ்" என்ற ஸ்தாபனத்தால் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். ஒரு பிரதேசத்தின் டெபுட்டிகள், பிரதேசக் கவுன்ஸிலின் அங்கத்தினர்கள், ஜில்லாக் கவுன்ஸில் அங்கத்தினர்கள், கம்யூன்கள் அல்லது நகர சபைகளின் அங்கத்தினர்கள், இவர்களுக்குத் "தேர்தல் காலெஜில்" இடமுண்டு. பிரான்ஸில் கம்யூன்கள் அதிகமாயிருப்பதால் தேர்தலில் வெற்றி அவைகளின் ஓட்டுக்களைப் பொறுத்திருக்கும். அதனால்தான், ஸெனெட்டைக் கம்யூன்களின் மகாசபையென்று அழைப்பது வழக்கம்.

நாற்பது வயதிற்குட்பட்டவர்கள் தேர்தல்களில் அபேக்ஷகர்களாக நிற்கக்கூடாது. வேறு நிபந்தனைகள் கிடையா. ஸ்தலவாஸி என்ற நிபந்தனைகூடக் கிடையாது. உத்தியோக காலம் ஒன்பது வருஷம். மூன்றில் ஒருபாகம் மூன்று வருஷத்திற்கு ஒருமுறை விலகி விடுவதால் எல்லாருக்கும் சேர்ந்தாற் போலத் தேர்தல் நடைபெறுவதில்லை. ஆதலின், பிரெஞ்சு ஸெனெட் ஒரு நிரந்தரக் கூட்டம். அது முழுதும் எப்பொழுதும் கலைக்கப்படுவதில்லை. ஸெனெட்டர்களின் சராசரி வயது அறுபது ஆகும். அனேக டெபுட்டிகள் நாளடைவில் ஸெனெட் அங்கத்தினர்களாகின்றனர். அதில் மாஜி மந்திரிகளெல்லோரும் இருப்பதால், திறமையிலும் அனுபவத்திலும் அதனைக்கீழ்ச்சபைக்கு ஒப்பிட்டே கூறலாம். நேர்

முகமற்றத் தேர்தல் முறையாலும், மூன்று வருஷத்திற்கொருமுறை அதை அரைகுறையாகப் புதுப்பிப்பதாலும் அது பொதுஜன நலத்தை நாடாத சபை யெனக்கூறும் நிலைமைக்கு வந்து விட்டது. ஆதலின், அது பழைய கொள்கைகளை ஆதரிக்கும் ஒரு பிற்போக்குக் கூட்டமேயாகும்.

அதிகாரங்கள்

நிதியைத் தவிர மற்றெல்லா விஷயங்களிலும் இரண்டு சபைகளுக்கும் சமமான சட்ட மியற்றும் அதிகாரங்கள் இருக்கின்றன. பண மசோதாக்கள், முதலில் டெபுட்டிகளின் சேம்பர் என்னும் கீழ்ச்சபையில் பிரேரிக்கப்பட்டு நிறைவேறும். மந்திரிகள் இரண்டு சபைகளுக்கும் பொறுப்புடையவர்கள். கீழ்ச்சபையைப் போலவே, ஸெனெட்டும் மந்திரிகளைப் பொறுப்பேற்றுக் கொள்ளும்படி கட்டாயப்படுத்தலாம். அது மந்திரிகளைக் கேள்விகள் கேட்கலாம்; நிர்வாக விஷயங்களில் விசாரணை நடத்தலாம்; மானியங்கள் கொடுக்க மறுக்கலாம். கீழ்ச்சபையைக் கலைக்க வேண்டுமானால் ஸெனெட்டின் சம்மதம் தேவையாகும். மந்திரிச்சபைக்குக் கீழ்ச்சபையில் மிக்க ஆதரவு இருப்பினும் அதற்கு ஸெனெட்டின் ஆதரவு இன்றியமையாததாகும். ஆதரவு இல்லாவிட்டால் அந்த மந்திரிச்சபை ராஜீநாமா செய்துவிட வேண்டும்.

அரசியல் திட்டத்தின்படி, ஸெனெட்டுக்குக் கீழ்ச்சபையோடு சமமான அதிகாரங்கள் இருக்கின்றனவெனினும், அது பிழை திருத்தங்களையே செய்து வருகின்றது. அதனால் அது கீழ்ச்சபையைப்போல் அவ்வளவு செல்வாக்குடையதன்று. கீழ்ச்சபை அத்தகைய பெருமையுற்றிருப்பதற்குக்காரணம், அஃது ஜனங்களால் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற அங்கத்தினர்களைக் கொண்டமைந்திருப்பதுதான். மேலும், நடைமுறையில் ஸெனெட்டின்

அதிகாரம் குறையவேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. ஏனெனில், சம அதிகாரங்களைக் கொண்ட இருசபைகளுடன், மந்திரிச்சபை அரசாங்கம் நடத்துவது சாத்தியமில்லை. மந்திரிகள் ஒரே ஒரு சபைக்குத்தான் பொறுப்பாளர்களாக இருக்கமுடியும்.

முட்டுக்கட்டைகளும் நெருக்கடிகளும்

இரண்டு சபைகளுக்கிடையே முட்டுக்கட்டையும் நெருக்கடியும் ஏற்படாமலில்லை. பண மசோதாக்கள் சம்பந்தமாக, டேபுட்டிகளின் சேம்பர் என்னும் கீழ்ச்சபைதான் முடிவான தீர்ப்புக் கூறுவதென்பது அரசியல் வழக்கமாகி விட்டது. அதனுடைய சிபார்சுகளில் ஏதேனுமொன்று ஸெனெட் சபையால் ஆட்சேபிக்கப்பட்டால், கீழ்ச்சபை மறுபடியும் அதனை நிறைவேற்றி வைத்தால், ஸெனெட் அதனை விட்டுக்கொடுக்கவேண்டியதே. மற்ற மசோதாக்கள் விஷயமாக வேறு இரு வழிகள் உள்ளன. (i) இரு சபைகளிலும் இதற்கென்று நியமிக்கப்பட்ட கமிட்டிகள் ஒன்றாகக்கூடி ஆராய்ச்சி செய்கின்றன. ஆனால் ஒவ்வொரு சபைக்கமிட்டியும் தன் அபிப்பிராயத்தைத் தனியாய் வெளியிடுகின்றது. மாறுபாடான அபிப்பிராய மேற்படுமேல் கீழ்ச்சபையின் தீர்மானமே பெரும்பாலும் நிலைநிற்கும். (ii) ஒரு பொதுவான ஒற்றுமை ஏற்படும்வரை அம்மசோதாவை, மந்திரி இரு சபைகளில் இங்குமங்குமாக மாறி மாறிக் கொண்டுபோய் வருவது வழக்கமாக இருக்கிறது.

பிரிட்டிஷ் பிரபுக்கள் சபைக்குள்ளன போலப் பிரெஞ்சு ஸெனெட்டுக்கும் நீதிபரிபாலன அதிகாரங்கள் உள்ளன. குடியரசுத் தலைவரையோ, அல்லது மந்திரிகளையோ விசா

ரிக்கவும் நாட்டிற்கு விரோதமான முயற்சிகளைப்பற்றி விசாரணை நடத்தவும் ஸெனெட் சபை ஒரு ஹைக்கோர்ட்டாக அமையும்.

பொதுவாக நோக்குமிடத்து, பிரெஞ்சு ஸெனெட் பிரிட்டிஷ் பிரபுக்கள் சபையைப் போல அவ்வளவு பயனற்றதன்று. ஆனால் நடைமுறையில் அது கீழ்ச்சபைக்கு உட்பட்டதேதான். கீழ்ச்சபை அவசரப்பட்டு ஏதேனும் ஒரு சட்ட நிர்மாணஞ் செய்தால், அதனை ஸெனெட் சபை நிதானப்படுத்தும் ஸ்தானத்தில் இருக்கின்றதென்னலாம். பிரஜைகளின் தொந்தரவின் மேல், கீழ்ச்சபை ஏதாவது ஒரு பிரேரணையைக் கொண்டுவந்தால், அதனை ஸெனெட் சபை, வேகமாகப் போகாமல் தாமதப்படுத்தி விடுகிறது. அவ்வாறு தடைசெய்வதாலே அந்தப் பிரேரணை பலனற்றுப் போய் விடும். தற்கால அரசியல் மேற்சபைகளுள் பிரெஞ்சு ஸெனெட்டைப்போலத் திறமையும் அறிவும் பொருந்திய சட்டசபையே கிடையாது என்றுரைப்பது மிகையாகாது.

கீழ்ச்சபை அமைப்பு

வயதுவந்த புருஷர்களால் கீழ்ச்சபை அங்கத்தினர்கள் நான்கு வருஷங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பூர்ண பிரஜா உரிமைகளைப்பெற்றுக் குறைந்தது ஆறு மாதம் ஏதேனுமொரு நகரத்திலோ, அல்லது கம்யூனிலோ (ஜில்லா) வசித்திருக்கும் 21 வயதிற்கும் மேற்பட்ட எந்தப்பிரெஞ்சு மனிதனுக்கும் ஓட்டு செய்ய உரிமை உண்டு. அங்கத்தினராக வர விரும்புவோர் 25 வயதடைந்தவராக இருக்கவேண்டும். 1928-ஆம் வருஷம் முதல் இங்கிலந்திலிருப்பது போலத் தேர்தல், ஒற்றை மெம்பர்த்தொகுதிகள் மூலம் நடைபெறுகின்றது. தற்காலம் சபையில் 615 டெபுட்டிகள் (பிரதிநிதிகள்) இருக்கின்றனர்.

கொள்கையும், நடைபெறும் முறையும்

ஒவ்வொரு வருஷமும் ஜனவரி மாதம் இரண்டாம் செவ்வாய்க்கிழமையன்று கீழ்ச்சபை கூடும். குறைந்தது ஐந்து மாதம் நீடித்திருக்கும். மந்திரிகளின் கோரிக்கையின் மீதோ, சபையின் சரிபாதி அங்கத்தினர்களின் வேண்டுகோளின் படியோ குடியரசுத் தலைவர் சபையைக் கட்டாயம் கூட்டவேண்டும். எல்லாச் சாதாரணக் கூட்டங்களையும் சபைத்தலைவர் தாங் கூட்டுகிறார். சபை தள்ளிவைக்கப்படுவதால் மசோதாக்கள் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இருப்பதுபோலக் காலாவதியாய்விடுவனவல்ல. கொள்கையிலும், மந்திரிச்சபையிலும் எம்மாறுதல்கள் ஏற்படினும் சபை நான்கு வருஷம் நீடித்திருக்குமாதலால், அது மந்திரிச்சபையின் மீது விரும்பத்தகாத அதிகாரத்தை மேற்கொண்டிருக்கின்றது என்னலாம். இக்காரணம் பற்றியே பொது ஜன அபிப்பிராயத்தையுஞ் சிறிதுகாலம் அது புறக்கணிக்கவுங் கூடும்.

பிரிட்டிஷ் முறைக்கும் இதற்குமுள்ள வேறுபாடு

பிரெஞ்சு சட்டசபையின் நடைமுறை பிரிட்டிஷ் முறையிலிருந்து பலவிஷயங்களில் மாறுபாடுள்ளது. அவையாவன:— (i) முற் கூறியபடி இருசபைகளிலும் பேசும் உரிமை மந்திரிகளுக்கு உண்டு. இலாகா உத்தியோகஸ்தர்கள்கூட தங்கள் பிரேரணைகளை ஆதரித்துச்சபைகளிற் பேசலாம். (ii) ஆங்கில காமன்ஸ் ஸபைத்தலைவர் போலன்றிப் பிரெஞ்சுக்கீழ்ச்சபைத் தலைவர் அரசியல்வாதியாக இருக்கலாம். விவாத காலங்களில் தலைவர் ஸ்தானத்தைத் தாற்காலிகமாகக் காலிசெய்துவிட்டு விவாதத்திற் கலந்து கொள்ளலாம். அவர் எப்பொழுதும் குடியரசுத் தலைவர் ஸ்தானத்தையும், பிரதம மந்திரி ஸ்தானத்தையும்

விரும்பும் நிலையில் இருப்பதால், பக்ஷபாதமின்றி இருக்க முடியாது. (iii) கீழ்ச்சபை 21 கமிஷன்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் எல்லா அரசியற் கட்சிகளிலுமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 40 அங்கத்தினர்கள் அவை ஒவ்வொன்றிலு மிருக்கிறார்கள். கீழ்ச்சபையிற் பிரேரிக்கப்படும் ஒவ்வொரு மசோதாவும் சம்பந்தப்பட்ட கமிஷனுக்குச் சமர்ப்பிக்கப்படும். அதனால் அது திருத்தப்படலாம். ஒவ்வொரு கமிஷனும் அதன் அங்கத்தினர்களிடையேயிருந்து ஒரு ரிப்போர்ட்டரைத் தேர்ந்தெடுக்கிறது. அவர் நிபுணசாட்சியங்களை விசாரிக்கலாம்; மந்திரிகளையும், உத்தியோகஸ்தர்களையும் விவரங் கூறும்படி கேட்கலாம். அவர் சமர்ப்பிக்கும் ரிப்போர்ட்டுடன் கூடிய மசோதாதான் சபையில் விவாதிக்கப்படும். அவர் தம் மசோதாவுக்குப் பொறுப்பாளி. கிரேட்பிரிட்டனில் இருப்பது போலன்றிச் சட்ட நிர்மாணத்தில் மந்திரியின் பொறுப்பு, அனேகமாக இல்லாமலே போகிறது. ஆனால், இம்முறையில் இதுவரை ஒருவித அதிருப்தியும் ஏற்படவில்லை. ஏனெனில், மந்திரிகளும், ரிபோர்ட்டர்களும் ஒற்றுமையுடன் வேலை செய்கிறார்கள். (iv) கமிஷன்களுள் முக்கியமானது "பட்ஜட்" கமிஷனாகும். நிதி மந்திரி, தம் சகாக்களிடமிருந்து வரும் திட்டங்களை வைத்துக்கொண்டு, வருஷாந்தர வரவு செலவுக்கணக்கைத் தயாரிக்கிறார். வருமானம் அதிகரிக்கத்தக்கதம் சிபார்சுகளை, வரவு செலவு திட்டத்தைச் சமர்ப்பிக்கும்போது, ஒரு பிரசங்கத்திற் கூறுகிறார். சபை அதைப் பட்ஜட் கமிஷனுக்கு அனுப்புகிறது. அக்கமிஷன் உடனே பல சப்கமிட்டிகளை நியமனஞ்செய்து விரிவான விசாரணைகளை மந்திரிகளுடையவும் மற்றும் உள்ள உத்தியோகஸ்தர்களுடையவும் உதவியினால் நடத்துகிறது. நிதி மந்திரிக்கும், கமிஷனுக்கும்

ஒருவிதத் தொடர்புங் கிடையாது. பட்ஜட் திட்டத்தின் அம்சங்களை மாற்றவும் திருத்தவும் அதிகரிக்கவும் அதற்கு அதிகாரங்கள் இருக்கின்றன. பின்னால் சபையில் நடக்கும் விவாதத்திற் கமிஷனின் ரிபோர்ட்டர் தாம் மசோதாவை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார். நிதி மந்திரி அவருக்குப் பின்னால் தாங்கிப் பேசுகிறார். பிரிட்டிஷ் முறைக்கு இது முற்றும் மாறுபாடானது. அங்கே நிதி மந்திரி தாம் பட்ஜட் பிரேரணைக்கு முழுப் பொறுப்புடையவர்.

கணக்குகள் பரிசோதனை

'கணக்குகள் கோர்ட்டு' என்ற ஒரு தனி ஸ்தாபன மூலம் வரவு செலவுக்கணக்கு பரிசோதனை செய்யப்படுகிறது. அக்கோர்ட்டு, வருஷ முடிவில் அரசாங்கக் கணக்குகளைப் பரிசோதனை செய்து முடிக்கிறது. பொது வருமானத்தின் வசூற் செலவுகளில் சம்பந்தப்பட்ட எல்லா உத்தியோகஸ்தர்கள் மேலும் அதற்கு அதிகாரம் உண்டு. மேலும் அது தன் பரிசீலனையைக் குடியரசுத் தலைவருக்குச் சமர்ப்பிக்கின்றது. அத்தலைவர் இரண்டு சபைகளும் "கணக்குகள் கோர்ட்டும்" சேர்ந்துள்ள ஒரு கமிட்டியை நியமிக்கிறார். இக்கமிட்டி தன் முடிவான அறிக்கையைப் பார்லிமெண்டிற்குச்சமர்ப்பிக்கின்றது.

கமிஷன்களுக்கு நிர்வாகத்தின் மீதும் அதிகாரம் உண்டு. எந்த இலாகாவின் வேலையையும் அது விசாரணை செய்யலாம். அவ்விலாகாவைச் சேர்ந்த எந்த உத்தியோகஸ்தரையும் அதுவரவழைத்து, அவரவர் நடைமுறைகளையும், செயல்களையும் தீவிரமாக ஆராய்ச்சி செய்யலாம். அனுபவத்தின் கௌரவத்தால், கமிஷன் அங்கத்தினர் நிபுணர்களென்று கருதப்பெறுவதால், அன்னோர் எந்த

இலாகாவையும் தைரியமாகப் பரிசோதனை செய்யும் அதிகாரம் பெற்றுள்ளார்.

கேள்வியும் இண்டர்பெலேஷனும்

(v) மந்திரிகள் தங்கள் கொள்கைகளை விவரித்துக் கூறும்படி வற்புறுத்தும் முறையில் கேள்வி கேட்கும் உரிமையைத் தாராளமாக டெபுட்டிகள் உபயோகிக்கிறார்கள். அவர்கள் வாய்மூலமாகவோ எழுத்து மூலமாகவோ கேள்விகள் கேட்கலாம். அக்கேள்விகளுக்கு மந்திரி விடையளித்தபிறகு கேள்வி கேட்ட அங்கத்தினர், அதற்குப் பதிற்கூறும் உரிமையை உடையர். அதற்கு மேல் விவாதம் அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் பிரெஞ்சு டெபுட்டிகளாற் கேள்விகேட்பதென்பது ஒரு வலிய உபகரணமாகக் கருதப்படுவதில்லை. முக்கியமான சந்தர்ப்பங்களில் இண்டர்பெலேஷன் என்னும் கேள்வி முறையை அனுசரிக்கிறார்கள். அதன்படி இதரக்கேள்வி எப்பொழுதும் எழுத்து மூலமாகவே இருக்கவேண்டும். அவ்விதம் அனுப்பப்பட்டதைத் தலைவர் படித்துவிட்டு அதனை அது சம்பந்தப்பட்ட மந்திரிக்கு அனுப்பிவிடுவார். அவ்விஷயம் பொதுக் கொள்கையைப் பற்றியதாயிருந்தால் அதனைப் பிரதம மந்திரிக்கு அனுப்புவார். பிறகு விவாதத்திற்கு ஒருநாள் நியமனஞ் செய்யப்படும். அன்று விவரம் கேட்டனுப்பிய சபை அங்கத்தினர் விவாதத்தைத் தொடங்குவார். மந்திரி பதிற் கூறிய பிறகு பொது விவாதம் நடக்கும். முடிவில் ஓட்டு எடுக்கப்படும். அந்தத் தீர்மானம் சட்டசபை மந்திரிச்சபையின்மீது ஏற்படுத்தும் தீர்மானமேயாகும். சர்க்காருக்கு எதிராக ஓட்டு அதிகம் ஏற்பட்டால் மந்திரிச்சபை உடனே ராஜீநாமா செய்துவிடும். இவ்வித இண்டர்பெலேஷன் கேள்வி முறையினின்று நிகழும் விவாதங்களாற் பல மந்

திரிச்சபைகள் வீழ்ந்திருக்கின்றன. மந்திரிச்சபையைத் தோற்கடிக்க இது ஒரு சாதாரண மார்க்கம். இதனால் தனி அங்கத்தினருக்கு வரம்பு கடந்த அதிகாரம் ஏற்படுகிறது.

(vi) ஒவ்வொரு மசோதாவிற்கும் இரண்டு "வாசிப்புக்கள்" தாம் உண்டு. பேச விரும்பும் அங்கத்தினர் காரிய தரிசியின் ஜாபிதாவிற் பதிவு செய்து கொள்ளவேண்டும். சாதாரணமாக டெபுட்டிகள் தங்கள் இடங்களிலிருந்தே பேசலா மென்றாலும், தலைவரின் நாற்காலிக்குக்கீழே யிருக்கும் ஒரு மேடையின் மீதிருந்துதான் பேச விரும்புகிறார்கள். எதிரே அங்கத்தினர்கள் வரிசை வரிசையாக வீற்றிருப்பதால், பிரசங்கஞ் செய்யவும், ஆர்ப்பாட்டஞ் செய்யவும் அஃது ஒரு தூண்டு கோலாகின்றது. ஓட்டெடுக்கும் முறையில் கைதூக்குவது, நிற்பது, பொதுச்சீட்டு, மேடையிற்சீட்டு என்று நான்கு விதங்கள் உள்ளன. கைதூக்குவதால் நிச்சயிக்க முடியாவிட்டால், 'ஆமாம்,' 'இல்லை', என்னும் நபர்களைத் தனித்தனியாக நிற்கவைத்து ஓட்டு எடுப்பார்கள். அம்முறையில் காரியதரிசிகளுக்குத் திருப்தி யில்லாவிடில் பொதுச் சீட்டு முறை கையாளப்படும். ஒவ்வொரு அங்கத்தினருக்கும் பின்னால் உள்ள மேஜையில், வெள்ளை நீலம் வர்ணங்களுள்ள சீட்டுக்கள் வைக்கப் பெற்றிருக்கும். அவற்றில் அவ்வங்கத்தினரது பெயர் அச்சடித்திருக்கும். வெள்ளைச்சீட்டு 'சாதகம்' என்றும், நீலச்சீட்டு, 'பாதகம்' என்றும் பொருள்படும். "பாலட்" பெட்டி வரிசையாகக் கொண்டு வரப்படும்பொழுது அங்கத்தினர் தாமே தம் சீட்டை அதிற் போடுவார். ஒருவருக்காக மற்றொருவர் ஓட்டு செய்யலாம். சபையில் வந்திராத ஓர் அங்கத்தவர் தம் சகாவைத் தமக்காகச் சீட்டைப்போடச் சொல்லலாம். ஆனால், இதனால் துர்வினியோகமும் ஏற்படுகின்றது. இம்முறையிற் சபைக்குத்

திருப்தியில்லையெனில், அங்கத்தினர் ஒவ்வொருவரும் பெயர் சொல்லிக் கூப்பிடப்படுவர். அப்படிக் கூப்பிடப்பட்டவர் மேடைக்குச்சென்று, சீட்டைக் காரியதரிசி கையில் கொடுக்க வேண்டும். இம்முறையிற் சபையில் இல்லாதவர்களுக்கு ஓட்டு கிடையாது. பதிவாகும் ஓட்டுக்களின் தொகை ஒரு இயந்திரத்தின் மூலங் கணக்கிடப்படுகிறது.

நீதி ஸ்தாபனம்

பிரான்ஸ் தேசத்தில் பொதுமக்கள் சட்டம் என்பது, தனி மனிதனின் நலத்திற்காக உள்ள சட்டத்தினின்றும் மாறுபாடுடையது. அவ்விரண்டையும் தனித்தனியே கவனிக்க இருதரப்பட்ட கோர்ட்டுக்கள் இருக்கின்றன.

நீதி மன்றம்: சாதாரண நியாயஸ்தலங்கள்

(1) ஒவ்வொரு ஜில்லாவிலும் தனியே ஒரு நியாயாதிபதி தலைமை வகிக்கும் நீதி மன்றம் ஒன்றிருக்கிறது. சிறு தொகைகள் சம்பந்தமான சில்லறை ஸிவில் வழக்குகளையுஞ் சில்லறைக் குற்றங்களையும் அது விசாரிக்கின்றது. பெரும்பாலும் நியாயாதிகாரி வழக்காளிகளைச் சமரசம் செய்து வழக்கை ராஜி செய்து கொள்ளுமாறு முயற்சி செய்வார். (2) நியாய ஸ்தாபன வரிசையில் அடுத்தது "முதல் கோர்ட்டு" அதில் ஒரு தலைவருங் குறைந்தது இரண்டு ஜட்ஜுகளும் இருக்கின்றனர். எல்லா விதமான ஸிவில் வழக்குகளையும் அது விசாரிக்கின்றது. குற்றத்தரப்பில் அதற்குத் திருத்தக் கோர்ட்டு என்று பெயர். அதனுடைய அதிகார எல்லை ஒரு மாகாணத்திற்குள் அடங்கியது. (3) அப்பீல் கோர்ட்டுக்கள் அடுத்தபடியாக உள்ளன. அவை மொத்தத்தில் இருபத்தைந்தாம். அவை அப்பீல்களைத்தாம் விசாரிக்கும். ஒவ்வொன்றிலும் ஐந்து ஜட்ஜுகள் இருக்கின்

றனர். அது (a) ஸிவில் சேம்பர், (b) கிரிமினல் சேம்பர், (c) குற்றச்சாட்டுச் சேம்பர் என்று மூன்று வகுப்புக்களாகப் பிரிக்கப்படும். (4) அஸைஸ் கோர்ட்டு என்பது, பெரிய நகரங்களிற் சில சமயங்களில் அமைக்கப்படும். அதுதான் பிரான்ஸின் பிரதான கிரிமினல் கோர்ட்டு. அதில் மூன்று நியாயாதிபதிகள் இருப்பார்கள். நீதி யிலாகா மந்திரியால் அந் நீதிபதிகளின் தலைவர் நியமனஞ் செய்யப்பெறுவர். மற்ற இருவரும் அப்பீல் கோர்ட்டிலிருந்தோ, முதல் கோர்ட்டிலிருந்தோ, தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பிரெஞ்சு நியாயஸ்தாபனங்களிலேயே இது ஒன்று தான் ஜூரியை உபயோகிப்பது. ஆனால் குற்றத்தை ஸ்தாபிப்பது தான் ஜூரியின் வேலை. (5) காஸேஷன் கோர்ட்டு தான் பிரெஞ்சு நியாய ஸ்தலங்களில் கிரீடமாகும். அது பாரிஸில் கூடும். அதில் மூன்று பிரிவுகளுண்டு. ஒவ்வொரு பிரிவிலும் ஒரு தலைவரும் 15 நியாயாதிபதிகளும் இருப்பார்கள். அதற்கு இரண்டு விசேஷங்கள் இருக்கின்றன. கீழ்க்கோர்ட்டின் தீர்ப்பைக் அது ஒப்பாவிட்டால் விசாரணைக்குத் திருப்பி அனுப்பிவிடும். இந்தக் கோர்ட்டின் தீர்ப்புக்கள், கீழ்க்கோர்ட்டுக்களைச் சட்டப்படிக் கட்டுப்படுத்தா.

அதிகாரப் பிரிவினையால் பிரான்ஸ் தேசத்தில் நிர்வாகக் கோர்ட்டுக்கள் என்ற ஸ்தாபனங்கள் இருக்க இடமேற்பட்டிருக்கிறது. சாதாரணக்கோர்ட்டுகளின் எல்லைக்குள் அடங்காத சில விஷயங்களை இவை விசாரித்துத் தீர்ப்புக் கூறுகின்றன. உத்தியோகஸ்தர்களின்மேல் சாட்டப்படும் குற்றங்கள் குறைகள் முதலியன இந்தக் கோர்ட்டுக்களில் பதிவாக வேண்டும். இதிலுள்ள விசேஷ மென்னவெனில், சாதாரணக் கோர்ட்டுக்கள், ஒரு பொதுக்காரியத்திற் குற்றஞ்

நிர்வாகக் கோர்ட்டுகள்

செய்த அதிகாரியை விசாரிப்பதால் நிர்வாக விஷயத்தில் நீதி மன்றம் தலையிடுவதுபோல ஆவத்தைத் தடுப்பதுதான். அனேக ஐரோப்பிய நாடுகளில் சர்க்கார் உத்தியோகஸ்தருக்கு இத்தகைய ஒரு தனியுரிமை ஏற்பட்டதால் நிர்வாகச் சட்டம் என்ற ஒரு விசேஷ கிளைச்சட்டம் அமுலில் இருக்கிறது.

பிரான்ஸ் தேசத்தின் நிர்வாகக் கோர்ட்டுக்கள், ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள ப்ரீபெக்டரல் கவுன்ஸில்களும் தேச முழுமைக்கும் பொதுவான ஒரு ராஜாங்கக் கவுன்ஸிலும் அடங்கியவை. முன்னர்க் கூறியவை முதற் கோர்டுக்கள். உத்தியோக முறை விசாரணைக்குப் பிறகு ஒவ்வொரு வழக்கும் இந்தக் கோர்ட்டுக்களில் விசாரிக்கப்படுகின்றது. அவற்றின் அங்கத்தினர் குடியரசுத் தலைவர் உத்தரவின்மேல் நியமிக்கப் பெறுகின்றனர். ஏதாவது ஒரு சர்க்கார்க் காரியாலயத்தில் அன்னோர்க்குப் பத்து வருஷம் சட்ட அனுபவம் இருக்கவேண்டும். உத்தியோக காலங் குறுகியிருப்பதாலும் ஊதியங் குறைவா யிருப்பதாலும் முதற்றரமானவர்கள் இப்பதவியை விரும்புகிறதில்லை.

ராஜாங்கக் கவுன்ஸிலோ, பொதுஜன மதிப்பில் மிகவும் உயர்ந்து விளங்குகின்றது. அதன் அமைப்பு நிர்வாகத்திற்கு கீழ்ப்படாதது. பெயருக்கு மட்டும் அதன் தலைவராக உள்ள நீதி மந்திரியைத் தவிர, மற்றும் பல மந்திரிகளின் பிரதிநிதிகளான 21 பேர்கள் இதில் அங்கத்தினராக இருக்கின்றனர். அன்னோர்க்கு "விசேஷ வேலைக் கவுன்ஸிலர்கள்" என்று பெயர். உத்தியோகஸ்தர் மீது ஏற்படும் வழக்குக்களில் விசாரணை நடக்கும்போது இவர்கள் பிரசன்னமா யிருப்பதில்லை. அதில் "சாதாரண வேலைக் கவுன்ஸிலர்கள்" என்ற 35 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தாம் நீதிபதிகளாக

இருப்பார்கள். இவர்கள் தலைவரின் உத்தரவின்மேல் நியமனஞ் செய்யப்படுகிறார்கள். இவர்களுள் பாதிப்பேர்கள் கவுன்ஸிலில் முக்கியமான ஸ்தானங்களில் அனுபவம் பெற்றவர்களா யிருப்பார்கள். மற்றவர்கள் தொழில் நடத்தும் உயர்தர வக்கீல்களாகவேனும், அரசாங்கத்தில் உயர்தர ஸ்தானங்கள் வகித்தவர்களாகவேனும் இருப்பர்.

ராஜாங்கக் கவுன்ஸில், ப்ரீபெக்டால் கவுன்ஸில்களிலிருந்து வரும் அப்பீல்களை விசாரணை செய்யும். சில வேளை நிர்வாகச் செயல்களையே நிராகரித்துத் தலைமை யதிகாரத்தையுங் கைக்கொள்ளும். அதன் நடைமுறை எளியதும், துரிதமானதும், செலவு குறைந்தது மாகும். அது ஆட்சி விஷயங்களில் மந்திரிச் சபைக்கு ஆலோசனையுங் கூறும்.

வழக்கு விசாரணை எந்தக்கோர்ட்டில் நடக்க வேண்டுமென்பதைப் பற்றி ஐயப்பாடு ஏற்படுங்கால் நிர்வாக இலாகா, நிர்வாகக் கோர்ட்டுக்களின் மேல், வழக்குக்களை வலுவிற் சுமத்தாமலிருப்பதற்குப் பாதுகாப்பாக மத்தியஸ்தக் கோர்ட்டு என்று ஒரு கோர்ட்டு இருக்கிறது. அது ஒருபுறச் சார்பு இல்லாமல் நடந்து கொள்ளும் வண்ணம் அமைக்கப் பெற்றுள்ளது. நீதி மந்திரிதான் அதன் தலைவர். அரசாங்கக் கவுன்ஸில்களிலிருந்து மூன்று பேர்களும் காஸேஷன் கோர்ட்டால் மூவரும் அதற்குத் தேர்ந்தெடுக்கப் பெறுகின்றனர். அதன் உத்தியோக காலம் மூன்று வருஷமாகும். ஆனால், வழக்கத்தில் அதே ஜட்ஜுகள் மீண்டும் தேர்ந்தெடுக்கப் பெறுகிறார்கள்.

மத்தியஸ்தக் கோர்ட்டு

டைஸி என்பவரைப் பின்பற்றிப் பல ஆசிரியர்கள், பிரான்ஸ் தேச நிர்வாக ஆட்சிமுறைச் சட்டத்தையும், நிர்

வாகக் கோர்ட்டுக்களையும் பெரிதுங் கண்டித்தெழுதியிருக்கின்றனர். அக்கோர்ட்டுக்களின் மூலம் நிர்வாகிகள் தங்கள் நடத்தையைப் பற்றித் தமது இஷ்டம்போலத் தீர்ப்புக்கள் அளித்துக் கொள்கிறார்களென்று கூறப்படுகின்றது. பிரிட்டிஷ் சட்ட ஆட்சியில் இருப்பது போலத் தனி மனிதர்களின் உரிமைகள் அவ்வளவாகப் பாதுகாக்கப் படுவதில்லையெனக் குறை கூறப்படுகின்றது. என்றாலும் சென்ற ஐம்பது வருஷங்களிற் பெரிதும் மாறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. பிரான்ஸ் தேச நிர்வாகக் கோர்ட்டுக்களுக்கு இப்பொழுது ஓர் உறுதிப்பாடான முறை ஏற்பட்டிருக்கிறது. ஒரு நேர்மையான வழக்குச்சட்டத் தொகுதியும் இருக்கின்றது. ஒரு பிரிட்டிஷ் பிரஜைக்கு இருக்கும் பாதுகாப்புக்களனைத்தும் இப்பொழுது ஒரு பிரெஞ்சு தனிமனிதனுக்கும் இருக்கின்றன. சில அம்சங்களில் இன்னும் அதிகமாகவே யிருக்கிற தென்னலாம். பிரெஞ்சு ஆட்சி முறைச் சட்டத்தைப் பற்றி முன்னிருந்த அபிப்பிராயம் மாறிக்கொண்டே வருகிறது. இங்கிலந்திலும், அமெரிக்காவிலும் உள்ள பொதுச்சட்டத்தில் இருக்கும் குறைகளும் ஊழல்களும் பிரெஞ்சு முறையில் இல்லை யென்று பலர் கருதுகின்றனர். டைஸி என்பவரே தம் முன் அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டு பின் வருமாறு கூறியுள்ளார். "இப்பொழுது பிரெஞ்சு உயர்தர நிர்வாகக் கோர்ட்டு நேர்மையான நீதிமன்றமாக அமைக்கப்பட்டுள்ளது. அது சர்க்கார் தாக்ஷிண்ணியத்திற்கு உட்பட்டதன்று. உத்தியோகஸ்தர்களின் ஆட்சிமுறைச் சட்டங்களை விவரமாய் ஏற்படுத்துவதால் தற்கால இங்கிலந்தும் பயனடையும் என்று தோன்றுகிறது. ஸிவில் உத்தியோகஸ்தர்களின் குற்றங்களை விசாரணை செய்யச் சாதாரணக்கோர்ட்டுக்கள் அவ்வளவு ஏற்றவை யென்பதும் நிச்சயமாக ஏற்படவில்லை. சர்க்காரின் கீழில்லாமற் சட்டத் தேர்ச்சியும் நிர்வாக அனுபவ

முள்ள ஒரு சிலர், அதிகாரிகளைப் பற்றிய ஆட்சிமுறைச் சட்ட வழக்குகளை ஹைக்கோர்ட்டைக் காட்டிலும் திறமையுடன் விசாரணை செய்யமாட்டார்களா வென்பது ஆலோசிக்க வேண்டிய விஷயமாகும்''.

இங்கிலந்தில் கட்சிகள் திறமையுடன் அமைக்கப்பட்டிருக்கின்றன. பார்லிமெண்டிலும், நாட்டிலுமுள்ள கட்சிகளின் நோக்கங்களும் ஏற்பாடுகளும் பொது

கட்சி ஏற்பாடு

ஜனங்களுக்கு நன்ருய்த்தெரியும். பிரான்ஸ் தேசத்திலோ பத்துக்குக் குறையாத அரசியற் கட்சிகள் இருக்கின்றன. அவற்றுள், ஐக்ய அபேதவாதக் கட்சி, தீவிர அபேதவாதக் கட்சி ஆகிய இரு கட்சிகள் தாம் சபைக்குள் ஒரு கட்சித் திட்டத்துடன் ஒத்து வேலை செய்கின்றன. பிரெஞ்சுக் கட்சி முறைகள் பொது மக்களுக்கு விளங்குவனவல்ல. ஆதலின், அவற்றிற்கு அங்கு ஆதரவு குறைவு. மந்திரிச்சபை, அதிகாரத்தில் இருப்பதற்காகப் பல கட்சிகளுடன் ஒப்பந்தஞ் செய்துகொள்ள வேண்டியிருக்கிறது. பிரிட்டிஷ் மந்திரிச்சபையைப் போலப் பார்லிமெண்டைக் கலைத்துப் பலங்கொள்ளும் எதிர்ப்பு ஆயுதம் அதற்கில்லை. ஒவ்வொரு ஓட்டும் முக்கியமாதலால் அங்கு உத்தியோக வேட்டைகளும் ஒப்பந்தங்களும், அதிகரிக்கின்றன. அதனல் நிர்வாகத்தின் வலிமை குன்றி மந்தப்பட்டுப் போகின்றது. பிரெஞ்சுச்சட்டசபை முறையில் மற்ருெரு குறை யென்னவெனில், பெருவாரியான அங்கத்தினர்கள் பின்பற்றும்படி செல்வாக்குள்ள கட்சித் தலைவர்கள் அங்கு இல்லை. ஒரு டெபுட்டியோ ஸெனெட்டரோ தம் திறமையாலும் ஊக்கத்தாலும் தலைவராகிவிட்டால், உடனே மற்றையோர் பொருமை கொண்டு அவரை எதிர்த்து வீழ்த்திவிட ஆழ்ந்து ஆலோசனை செய்கிருர்கள். மேலும், டிவி

ஷன் காலத்தில் கட்சி அங்கத்தினர்களை ஒன்றுசேர்த்துப் பலப்படுத்தப் ஆங்கிலக் கொறடாத்திட்டம்போல ஒன்றும் அங்கில்லை. மேற்கூறியபடி, தீவிர அபேதவாதிகளும், ஐக்ய அபேதவாதிகளுமே ஆங்கிலக் கட்சி முறையைப் பின்பற்று கின்றனர்.

சென்ற 20 வருஷங்களில் முக்கியமான பல மாறுதல் கள் ஏற்பட்டுள்ளன. ஒழுங்கீனமான சட்ட சபைக் கட்சி கள் மறைந்து வருகின்றன. ஆங்கில, அமெரிக்க முறை களை தழுவிக் கட்சித்திட்டம் அபிவிருத்தியடைந்து வரு கின்றது. சட்ட சபைக் கட்சிகளுடன் ஒத்து வேலைசெய்யுங் கட்சிக் கிளை நிலயங்கள் தேசம் முழுதும் ஆங்காங்கு இருக் கின்றன. அவை தேசீயப் போக்குடையன. அவை வருஷா வருஷங் கூட்டங்கூடி, மத்தியஸ்தலக் கமிட்டிகளை நியமனஞ் செய்து, அபேக்ஷகர்களை நிறுத்த ஏற்பாடு செய்து வருகின் றன. அபேதவாதக் குடியரசுக் கட்சியின் அமைப்பு இதற்கு ஓர் உதாரணமாகும். அதன் அங்கத்தினர்களுக்கு ஒரு சிறு கட்டணம் உண்டு. அவர்கள் அக் கட்டணத்தைச் செலுத் திக் கட்சிச் சீட்டைப் பெறுகின்றனர். ஒவ்வொரு இலாகா விலுமுள்ள ஸ்தலக் கூட்டங்கள் சமஷ்டியாகக்கூடி, வரு ஷாந்த காங்கிரஸுக்குப் பிரதிநிதிகளை யனுப்பும். ஒரு நிர் வாகக்கமிட்டி மூன்று மாதங்களுக் கொருமுறை கூடும். காங் கிரஸ்ஸால் தேர்ந்தெடுக்கப்பட்ட 9 அங்கத்தினர்களும் ஒவ் வொரு சமஷ்டியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு பிரதி நிதியும் அதில் அங்கத்தினராய் இருப்பார்கள். 15 பேர்கள் அடங்கிய ஒரு காரியக் கமிட்டியை அது நியமிக்கின்றது. அபேட்சகர்கள் கட்சி ஸ்தாபனத்திற்குக் கட்டணத்தொகை செலுத்த வேண்டும். அவர்கள் நியமனம், சம்பந்தப்பட்ட சமஷ்டிக் கமிட்டியின் அங்கீகாரத்தைப் பெற்றதாக இருக்க

வேண்டும். தேர்தலுக்குப் பிறகு, அவர்கள் தம் அரசியல் நடத்தையில் சமஷ்டிக்குப் பதிற் சொல்லும் பொறுப் புடையவர்கள் ஆவர்.

அத்தியாயம் 12

தென் ஆப்ரிக்கா யூனியன்.

தென் ஆப்ரிக்கா ஐக்கிய ஆட்சியின் அரசியலமைப்பு, 1909-ஆம் வருஷம் பிரிட்டிஷ் பார்லிமெண்டினுல் இயற்றப் பெற்ற தென் ஆப்ரிக்காச் சட்டத்தில் அடங்கியுள்ளது. இச் சட்டத்திற்கு முன்பு, கேப் காலனி, நேட்டால், டிரான்ஸ்வால், ஆரஞ்சு ரிவர் காலனி என்னும் நான்கு குடியேற்ற நாடுகளுந் தனித்தனியே பொறுப்பு வாய்ந்த சுய ஆட்சி நாடுகளாக இருந்தன. வர்த்தகம், சுங்கம் முதலிய விஷயங்களில் ஏற் பட்ட இடுக்கண்களாலும், உள் நாட்டுப் பாதுகாப்பிற்குப் பொது ஏற்பாடு செய்யவேண்டிய காரணம் பற்றியும், சுதேசி களின் பொருட்டுத் தனியே நடத்தவேண்டிய முறைகளைப் பற்றிய மாறுபாடுகளாலும் அந்நாடுகளுக்குள் ஓர் ஒற்றுமை யேற்பாடு இன்றியமையாததாகக் கருதப்பட்டது. 1908-ஆம் வருஷம் மே மாதத்தில் இந்நாடுகள் ஒன்றுகூடித் தென்னுப் ரிக்கா ஐக்கிய ஆட்சியை ஏற்படுத்தவும், அதற்குரிய அரசி யற்றிட்டத்தை உருவாக்கவும் அந்நான்கு நாடுகளின் சட்ட சபைகளிலிருந்து பிரதிநிதிகளைப் பொதுவான ஒரு தேசீய மகாசபைக்கு அனுப்பும்படி தீர்மானஞ் செய்து கொண்டன. அதன்படி நான்கு சட்ட சபைகளின் பிரதிநிதிகளும் 1908-ஆம் வருஷம் அக்டோபர்-மீ 12-ஆம் தேதியில்

உற்பத்தி

டர்பன் நகரிற்கூடி ஓர் அரசியலமைப்பு மசோதாவைத் திட்டஞ் செய்து, தனித்தனியே சட்டசபைகளின் சம்மதத்தைப் பெறுவதற்கு அனுப்பினர். 1909-ஆம் வருஷம், ஜூன்மீ இம் மசோதா, அச் சட்டசபைகளால் அங்கீகரிக்கப்பட்டதின்மேல், அவ்வரசிய லமைப்பு, பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு மன்னருடைய சம்மதத்தையும் பெற்றது.

இச் சட்டத்தின்படி, ஒப்பந்தஞ் செய்து கொண்ட நான்கு குடியேற்ற நாடுகளும், தத்தம் சுய ஆட்சி உரிமையைத் தவிர்த்துத் தென் ஆப்ரிக்கா யூனியனில் உள்பட்டு, கேப் ஆவ்குட் ஹோப், நேட்டால், டிரான்ஸ்வால், ஆரஞ்சு சுயேச்சை நாடு என்ற பெயர்களுடன் நான்கு சுய ஆட்சி மாகாணங்களாய் மாறின. கூட்டு அரசியல் திட்டங்களில் தென் ஆப்ரிக்கா யூனியன் அரசியலமைப்பு குறிப்பிடத் தக்கதேயாம். ஏனெனில், அதற்கு முன்பு நடைபெற்று வந்த கூட்டு அமைப்புக்களிற் சேர்ந்த நாடுகள், தத்தம் ராஜ்ய சுதந்திரங்களைச் சற்றும் இழந்துவிட மனமில்லாதவைகளாக இருந்தன. தென் ஆப்ரிக்காவிலோ, நான்கு நாடுகளும் தங்களுடைய சுயேச்சாதிகார உரிமைகளை முற்றிலுங் கைவிட்டுக் கேவலம் ஒரு நாட்டின் மாகாணங்களாகிவிடத் தாமே சம்மதித்தன.

தென் ஆப்ரிக்கா ஐக்கிய அரசியலமைப்பு, சில விஷயங்களில் ஒரு சமஷ்டித் திட்டத்தை ஒத்திருக்கிறது. முதலாவதாக, அது நான்கு நாடுகளுஞ் சேர்ந்து செய்து கொண்ட ஓர் ஒப்பந்தத்தின் பயனாக உண்டாயிற்று. இரண்டாவது, அரசியல் திட்டத்திலேயே மாகாணங்களுக்கென்று தனிமையாகச் சில சுய அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. மூன்

சில விஷயங்களில் சமஷ்டி அரசியலைப் போன்றது

ருவது, ஐக்கிய ஆட்சியின் ஸெனெட் சபை அமைப்பில் ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஏற்றத் தாழ்வின்றிச் சரிசமானமான அங்கத்தினர்களை அனுப்பும் உரிமை யளிக்கப்பட்டுள்ளது. அரசியல் நிர்வாக வேலையிற்கூட, இந்தச் சமத்துவம் புலப்படும்படிப் பிரிட்டோரியா தலை நகராகவும், கேப் டவுன் பார்லிமெண்டு கூடும் ஸ்தலமாகவும், புளும்பண்டேன் தலைமை அப்பீல் நியாயஸ்தலமாகவும் நிர்ணயிக்கப் பெற்றுள்ளன.

சர்வாதிகார ஐக்கிய ஆட்சி

ஆனால், சமஷ்டி அரசியற் சட்ட சபைகளுக்கும் தென் ஆப்ரிக்கா யூனியன் சட்டசபைக்கும் உள்ள வித்தியாசம் என்ன வென்றால், தென் ஆப்ரிக்காப் பார்லிமெண்டு சர்வாதிகாரம் பெற்றது. மாகாணங்களின் சட்டசபைகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் எல்லாம், யூனியன் பார்லிமெண்டுக்குள் அடங்கியவையே. வேண்டுமானால் அதற்கு அவ்வதிகாரங்களை எடுக்கவோ குறைக்கவோ எளிதிற் கூடும். 1934-ஆம் வருஷத்திய யூனியன் பதவிச் சட்டத்தின்படி யூனியன் பார்லிமெண்டு பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்குக்கூட கீழ்ப்பட்டதன்று. 1931ஆ-ம் வருஷத்திற்குப் பிறகு நிறைவேற்றப்பட்ட பிரிட்டிஷ் சட்டங்கள் யாதொன்றுக்கும் தென் ஆப்ரிக்கா யூனியனிற் செல்வாக்கில்லை.

அரசியற் சீர்திருத்தம்

அரசியற் சீர்திருத்தப் பிரேரணைகள் யூனியன் பார்லிமெண்டின் இரண்டு சபைகளும் ஒன்றுகூடி, மூன்றாம் முறையில் இருசபைகளின் மொத்த அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பாகங்களுக்குக் குறையாமல் உள்ள தொகுதியால் நிறைவேற்றப் பெற்றால் அவை சட்டமாகிவிடும்.

பிரிட்டிஷ் பார்லிமெண்டின் அனுமதியோ மன்னரின் சம்மதமோ வேண்டியதில்லை.

நிர்வாகம்

நிர்வாகத் தலைவர் கவர்னர் ஜெனரல் ஆவர். அவர், யூனியன் அரசாங்கத்தாரின் சிபார்சை அனுசரித்து மன்னரால் ஐந்து வருஷங்களுக்கு நியமிக்கப்படுவார்.

கவர்னர் ஜெனரல்

பேருக்கு மாத்திரம் தலைவரே யொழிய, அவருக்குச் சுய அதிகாரம் ஒன்றுமே யில்லை. யூனியன் நிர்வாகச் சபையின் இஷ்டப்படியே அவர் எல்லா விஷயங்களிலும் நடந்துகொள்ள வேண்டியவர். அரசியல் இலாகாக்களை நிர்வகிக்கப் பத்துப் பேர்களுக்கு மேற்படாமல் மந்திரிகளைக் கவர்னர் ஜெனரல் நியமிக்கலாம்.

நிர்வாகச் சபை

மந்திரிகள், நியமனகாலத்திலோ நியமனமாகி மூன்று மாதங்களிற்குள்ளோ பார்லிமெண்டு சபைகளின் ஒன்றில் அங்கத்தினராக இருக்கவேண்டும்.

இப்பதின்மருஞ் சேர்ந்ததுதான் தென் ஆப்ரிக்கா யூனியன் நிர்வாக சபையாகும். இவர்களைத்தவிர, சாதாரணமாக ஒன்றிரண்டு பேர்கள், இலாகாத் தலைவர்களா யில்லாமல் வெறும் மந்திரிகளாக நியமிக்கப்படுகிறார்கள். மந்திரிகளுக்கு சட்டசபை இரண்டிலும் உட்காரவும், அவ்விடங்களில் நிகழும் விவாதங்களிற் கலந்துகொள்ளவும் உரிமையுண்டு. ஆனால், ஓட்டு செய்யக்கூடாது. அமைப்பிலும், பொறுப்பிலும், சட்ட நிர்மாண நிர்வாகச் செயல்களிலும் இந்த நிர்வாக சபை பிரிட்டிஷ் காபினெட்டைப் பின்பற்றி யுள்ளது.

பார்லிமேண்டு

யூனியன் பார்லிமெண்டு இரு சபைகளையுடையது. அவை ஸெனெட்டும், அஸெம்பிளியுமாம். ஸெனெட்டில் மொத்த மெம்பர்கள் 40 பேர். ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் எட்டுப் பேர் வீதம் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். பாக்கி எட்டுப் பேர்களும் கவர்னர் ஜெனரலால் நியமிக்கப் படுகிறார்கள். ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஏற்பட்ட எட்டு மெம்பர்களும் அம்மாகாணத்தின் சட்டசபை அங்கத்தினர்களாலும், அம்மாகாணத்திலிருந்து யூனியன் அஸெம்பிளிக்கு அனுப்பப்பட்ட பிரதிநிதிகளாலும் ஒன்று கூடித் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். பத்துவருஷங்களோ, அல்லது மன்னரால் ஸெனெட்டு கலைக்கப்படும் வரையிலோ அவர்கள் மெம்பர்களாக இருக்கலாம். மெம்பர்களாக இருக்கவிரும்புவோர் முப்பது வயதிற்கு மேற்பட்டும், ஐந்து வருஷம் யூனியன் வாசிகளாகவும், குறைந்தது ஐந்நூறு பவுன் விலையுள்ள நிலமுடையவர்களாகவும் இருக்கவேண்டும். ஐரோப்பிய ஜாதிகளிற் சேர்ந்தவர்களே மெம்பராவதற்குத் தகுதியுள்ளவர்களாவர்.

ஸெனெட்டு: அமைப்பு

பண நிர்வாக சம்பந்தமான விஷயங்களைத் தவிர மற்ற காரியங்களில் இரண்டு சபைகளின் அதிகாரம் சமமே. வரவு செலவுகளைப் பற்றிய மசோதாக்கள் முதற் சபையில்தான் பிரேரணை செய்யப்பட வேண்டும். நிதியைப்பற்றிய மசோதா, ஸெனெட்டில் இருமுறை அங்கீகரிக்கப்படாவிட்டால், கவர்னர் ஜெனரல் இரண்டு சபைகளையும் ஒன்றுகூட்டிப் பெரும்பாலார் ஓட்டினால் அம்மசோதாவை நிறைவேற்றி வைக்கலாம். சாதாரணச் சட்ட மசோதாக்கள் இருமுறை அஸெம்

அதிகாரம்

பிளியினால் நிறைவேற்றப்பட்டு ஸெனெட்டில் இருமுறையும் நிராகரிக்கப்பட்டால், கவர்னர் ஜெனரல் இரண்டு சபைகளையும் ஒன்றுகூட்டிப் பெரும்பாலர் ஓட்டினால் நிறைவேறச் செய்யலாம்.

ஸெனெட்டில் நாற்பது அங்கத்தினர்களும் அஸெம்பிளியில் நூற்று நாற்பத்தெட்டுப் பேர்களும் இருப்பதால், சபைகள் ஒன்றுகூடும் போதெல்லாம் அஸெம்பிளியின் இஷ்டமே நிறைவேறும். ஆகையால், தென் ஆப்ரிக்கா யூனியன் ஸெனெட்டுக்குச் செல்வாக்கு மிகக் குறைவு. மசோதாக்களைப் பரிசீலனைசெய்து புனராலோசனைக்குக் கொண்டுவரும்படிச் செய்வதுதான் நடைமுறையில் அதன் வேலையாய்க் காணப்படுகிறது. இவ்வேலையை அது செவ்வனே செய்து வருகிறதென்பது பலபேர்களின் அபிப்பிராயம்.

அஸெம்பிளி: அமைப்பு

அஸெம்பிளிக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை, 21 வயதிற்கு மேற்பட்ட ஐரோப்பியருக்கு ஆண் பெண் என்ற வித்தியாசமின்றியுஞ் சொத்து நிபந்தனை இல்லாமலும் அளிக்கப்பட்டுள்ளது. சுதேசிகளுக்கும், கறுப்பு மனிதர்களுக்கும் பல நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவையாவன:- பெயர், விலாசம், தொழில் மூன்றையும் எழுதத் தெரியவேண்டும்; எழுபத்தைந்து பவுன் விலையுள்ள வீட்டிற் பன்னிரண்டு மாதங்களாக வசித்து வந்திருக்கவேண்டும்; அல்லது ஓட்டுக் கொடுக்கவேண்டிய ஊரில் மூன்றுமாத வாசிகளாகவும், வருஷத்திற்கு ஐம்பது பவுன் வருமானமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். கேப் ஆவ் குட் ஹோப்பில் மாத்திரம் இம்மாதிரியான நிர்ப்பந்தங்கள் ஒன்றுமில்லை.

தேர்தல் விஷயத்தில், நான்கு மாகாணங்களும் ஜனத் தொகையைப் பொறுத்து ஒற்றை மெம்பரைத் தேர்ந்தெடுக் குந் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. கேப்புக்கு 58-ம், டிரான்ஸ்வாலுக்கு 55-ம், ஆரஞ்சு சுயேச்சை நாட்டுக்கு 18-ம், நேட்டா லுக்கு 17-மாக, மொத்தம் 148 மெம்பர்கள் உண்டு. மெம்ப ராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள், 5 வருஷம் மாகாண வாசிகளாகவும், ஓட்டுக் கொடுக்க உரிமையுள்ளவர்களாகவும், ஐரோப்பிய ஜாதிக்காரர்களாகவு மிருக்கவேண்டும். முன்ன தாக மன்னராற் கலைக்கப்பட்டாலன்றி, ஒவ்வொரு அஸெம் பிளியும் 5 வருஷ காலம் நீடித்திருக்கும்.

தேர்தல்

30 மெம்பர்கள் கூடினால்தான் அஸெம்பிளி நடை பெறும். அங்கத்தினர்களிடமிருந்து ஒருவர் சபைத் தலைவ ராகப் பொறுக்கப்படுவர். மெம்பர்களின் பெரும்பாலார் ஓட் டினால் அவரைத் தள்ளிவிடலாம். அல்லது அவரே ராஜீநாமா செய்து விடலாம். ஓர் அங்கத்தினர் சபையின் அனுமதி யன்றி ஒரு வருஷ முழுவதும் பிரசன்னமாகாவிட்டால், அவர் தம் ஸ்தானத்தை யிழந்து விடுவார். வருஷத்திற்குக் குறைந்தது ஒரு முறையாவது பார்லிமெண்டு கூட வேண்டும்.

மாகாணங்கள்

ஒவ்வொரு மாகாணத் தலைவர்க்கும் அட்மினிஸ்ட்ரேட் டர் என்று பெயர். அவர் கவர்னர் ஜெனரலால் ஐந்து வருஷ காலத்திற்கு நியமிக்கப்படுவர். அவரை வேலையிலிருந்து நீக்க வேண்டுமானால் தகுந்த காரணம் பார்லிமெண்டுக்குத் தெரி விக்கவேண்டும். ஒவ்வொரு மாகாணத்திற்

நிர்வாகப் பொறுப்பு

கும் நிர்வாகக் கமிட்டி ஒன்று உண்டு. அது மாகாணச் சட்ட சபை அங்கத்தினர்களிலிருந்து அவர்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு பேர்களும், மாகாணத் தலைவருங் கூடியது. இந்த நிர்வாகக் கமிட்டி மெம்பர்கள் மாகாணச் சட்டசபையில் உட்கார்ந்து அங்கு நிகழும் விவாதத்தில் தலையிட உரிமையுண்டு. நிர்வாக விஷயங்களைப்பற்றியுள்ள தீர்மானங்களெல்லாம் அக்கமிட்டியின் பெரும்பாலரின் ஓட்டினால் நிறைவேறும்.

ஒவ்வொரு மாகாணத்திற்கும் சட்டசபை ஒன்று உண்டு. அதன் அங்கத்தினர்கள் யூனியன் பார்லிமெண்டு அங்கத்தினர்களைப்போலவே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அதில் குறைந்தது 25 மெம்பர்கள் இருக்க வேண்டும். அதற்கு மேல், பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது மாகாணங்களின் ஜனத்தொகையைப் பொறுத்தது. அங்கத்தினர்களுடையகாலம் மூன்று வருஷம். சபை வருஷத்திற்கு ஒரு முறையாவது கூடவேண்டும். அதைக் கூட்டுவதும், தள்ளிவைப்பதும் மாகாணத் தலைவர் பொறுப்பு. சபை அங்கத்தினர்களே சபைத் தலைவரை நியமனஞ் செய்து கொள்வார்கள்.

மாகாணச் சட்ட சபை அமைப்பு

சட்ட நிர்மாண விஷயத்தில் இச் சபைகளின் அதிகாரம் மிகக்குறைந்தது. யூனியனால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வரம்புக்கு உட்பட்டு, மாகாணங்கள் தத்தமக்கு வேண்டிய சட்டங்களை இயற்றிக் கொள்ளலாம். ஆனால், எச்சமயத்திலும் யூனியன் பார்லிமெண்டு மாகாணச் சட்டங்களை விலக்கிப் புதிய சட்டங்களை ஏற்படுத்தக்கூடும். மாகாணங்களையே

அதிகாரம்

அழித்து விடவும் யூனியன் பார்லிமெண்டுக்கு அதிகார முண்டு. சாதாரணமாகப் பின்வரும் விஷயங்கள் மாகாணச் சட்டசபைகளுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன:- வருமான வரி முதலிய நேர்வரிகள், மாகாண அவசியத்திற்கேற்ற கடன்கள், ஆரம்பக் கல்வி, விவசாயம், பாதைகளும், பாலங்களும், சந்தைகள், பஞ்சாயத்துக்கள், வைத்தியசாலைகள், ஏழைகளின் பாதுகாப்பு. மாகாண வரி வருமானத்திலிருந்தும், யூனியனால் வருஷந்தோறும் அளிக்கப்படும் பணத்திலிருந்தும் மாகாண அரசாங்கத்தின் செலவுகள் நடைபெறும்.

மொத்தத்தில் தென் ஆப்ரிக்கா யூனியனில் அடங்கிய மாகாணங்கள் கீழ்நிலைமையி லிருக்கின்றன. அவை நிதி விஷயத்திலும், சட்ட நிர்மாண விஷயத்திலும் யூனியன் பார்லிமெண்டின் சர்வாதிகாரத்திற்கு உட்பட்டுள்ளன. ஆதலின், மேற்பார்வைக்குச் சமஷ்டி அரசியல் அம்சங்களிற் சில தென் ஆப்ரிக்கா யூனியன் அரசியலிற் காணப்படினும், உண்மையில் சமஷ்டிக்கு அடிப்படையாகவுள்ள சமத்துவமும், ஒத்துழைக்கும் சினேக பாவமுஞ் சிறிதும் அங்குக் காணப்படுவதில்லை. நிதி விஷயத்தில் மாகாணங்களின் கேவல நிலைமையும், வருமானத்தை அதிகரிக்குஞ் சக்தியின்மையும், அவைகளை அழித்து ஒற்றை ஆட்சியாய்ச் செய்துவிட வேண்டுமென்ற பிரேரணைக்குக் காரணங்களாயிருக்கின்றன.

நீதி பரிபாலனம்

நீதி ஸ்தாபனங்களின் அமைப்பிலிருந்தே தென் ஆப்ரிக்கா அரசியல் சமஷ்டியிற் சேர்ந்த தன்றென்பது நன்கு புலப்படும். அரசியல் திட்ட விஷயமாய் ஏற்படும் விவாதங்களைக் கேட்டுத் தீர்மானஞ் செய்யவோ, அபிப்பிராயங்

கொடுக்கவோ நீதிபதிகளுக்கு உரிமை யில்லை. கிரேட் பிரிட்டனில் இருப்பது போல, பார்லிமெண்டு நிறைவேற்றிய சட்டங்களின்படியே நீதிபதிகள் தீர்மானஞ் செய்ய வேண்டும்.

தென் ஆப்ரிக்காவின் தலைமை நியாய ஸ்தாபனம் கீழ்ச்சொல்லியபடி, புளூம்பண்டேனில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு அப்பீலை விசாரிக்கும் அதிகாரமேயுள்ளது. மற்ற நியாய வினியோக அதிகாரங்கள் நான்கு மாகாணங்களிலும் உள்ள ஹைக்கோர்ட்டுகளிடம் இருக்கின்றன.

புளூம்பண்டேன் அப்பீல் கோர்ட்டில் நான்கு சாதாரண நீதிபதிகளும் ஒரு தலைமை நீதிபதியும் இருக்கிறார்கள். சில வருஷங்களுக்குமுன் தென் ஆப்ரிக்கா யூனியன் நியாய ஸ்தலங்களின் தீர்ப்பின்மீது பிரிட்டிஷ் பிரிவி கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்யும் உரிமை இருந்தது. 1931-ஆம் வருஷத்திய வெஸ்ட் மின்ஸ்டர் சட்டப்படி இவ்வுரிமை குடியேற்ற நாடுகளில் எடுபட்டுப் போய்விட்டது.

நீதிபதிகள், கவர்னர் ஜெனரலால் நியமனஞ் செய்யப்படுகின்றனர். வேலையி லிருக்கையில் அவர்களின் சம்பளத்தைக் குறைக்க முடியாது. திறமைக் குறைவிற்காகவோ, அதிருப்திகரமான நடத்தையின் காரணம் பற்றியோ நீதிபதிகளை நீக்கவேண்டுமென்று யூனியன் பார்லிமெண்டின் இரு சபைகளும் வேண்டினாலொழிய கவர்னர் ஜெனரல் அவர்களை வேலையிலிருந்து விலக்கமுடியாது.

கட்சிகள்

1899—1902-ல் நடந்த பூர் சண்டைக்குப் பிறகு கட்சிப் பிரிவினை உண்டாயிற்று. போத்தா, ஸ்மட்ஸ் ஆகிய இரண்டு பேர்களுஞ் சேர்ந்து தென் ஆப்ரிக்காக் கட்சியை

ஏற்படுத்தினார்கள். அதன் நோக்கம் பிரிட்டிஷாருக்கும் டச்சுக்காரருக்கும் ஒற்றுமையையும் நட்பையும் ஏற்படுத்து வதுதான். மற்ற கட்சிகள் பிரிட்டிஷ் ஐக்கியக் கட்சியும், டச்சு தேசியக் கட்சியுமாம். இவைகளைச் சேர்ந்தவர்கள் தம் முடைய ஜாதி நலத்தையே கருதினவர்கள்.

போத்தாவின் மரணத்தினாலும், 1920-ஆம் வருஷத் தில் தொழிற்கட்சி ஒன்று கிளம்பியதினாலும் முன்னிருந்த கட்சிப் பிரிவினை மாறுதல் அடைந்தது. தென் ஆப்ரிக்காக் கட்சியும், பிரிட்டிஷ் ஐக்கியக் கட்சியும் ஸ்மட்ஸ் தலைமையின் கீழ் ஒருங்கு சேர்ந்து 1921-ஆம் வருஷத்திய தேர்தலில் தேசியக் கட்சிக்கும், தொழிற் கட்சிக்கும் போட்டியாக நின்று வெற்றியடைந்தது. ஆனால் வரவர ஸ்மட்ஸின் செல் வாக்கு குறைந்து விடவே, தொழிற் கட்சியும், தேசியக் கட் சியும் ஹேர்ட்ஸாக் தலைமையின் கீழ் ஒன்றாய்க்கூடித் தென் ஆப்ரிக்காக் கட்சியைத் தலையெடுக்க வொட்டாமற் செய்து விட்டது. பின்பு நடந்த தேர்தல்களில் தேசியக் கட்சி தனி யாகவே வெற்றிபெற்று மிக்க வலிமை யடைந்தது. மற்ற கட்சிகள் தாழ்ந்து போயின.

தேசியக்கட்சி, ஜாதி வித்தியாசத்தை மிகவும் பாராட்டு கிறது. அதில் ஒரு பாகத்தார் மன்னர் ஆட்சிக்கு விரோத மாகவும், கிரேட் பிரிட்டனின் சத்துருவாகவும் இருக்கிறார் கள். இன்னுஞ் சிலர் பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களை நீக்கி விட்டு டச்சுக்காரர்களை நியமிக்கவேண்டுமென்றும், எல்லா ரும் இரண்டு பாஷைகளைக் கற்கும்படிக் கட்டாயப்படுத்தப் பட வேண்டுமென்றும் வற்புறுத்துகிறார்கள். இவர்களின் நோக்கம், நாட்டிலிருக்கும் ஆங்கிலேயர்கள் ஆப்ரிக்கான்ஸ் என்ற சுதேசபாஷையைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்

படுதே. இன்னுமொரு சிக்கலான விஷயம் தென் மேற்கு ஆப்ரிக்காவைப் பற்றியது. அதில் ஜெர்மனி தேசத்தார் அதிகம். அது இப்போது தென் ஆப்ரிக்கா யூனியனுல் சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு ஆளப்படுகிறது. அதை முற்றிலும் தென் ஆப்ரிக்கா யூனியன் நாட்டிலேயே சேர்த்து, ஐந்தாவது மாகாணமாகச் செய்துவிட வேண்டுமென்பது தேசீயக் கட்சியாரின் நோக்கம். ஆனல், அங்குள்ள ஜெர்மானியர் இதற்கு எளிதிற் சம்மதிப்பார்களா வென்பது சந்தேகத்திற் கிடமாக இருக்கிறது.

இரண்டாம் பாகம்

அத்தியாயம் 13

சமஷ்டி:
நிபந்தனைகளும் அம்சங்களும்

ஒரு தேசத்தினுட்பட்ட பல நாடுகளின் சுய ஆட்சிக்கும், அத்தேச முழுவதும் ஒன்ருகக் கருதக்கூடிய ஒரு பொதுவான ஒற்றுமைக்கும் ஓர் இணைப்பு ஏற்படுத்தவேண்டிய அவசியத்தினின்றும் பிறந்த அரசிய லமைப்பே சமஷ்டி யெனப்படும். சமஷ்டியில் இருவகை அரசாங்கங்கள் உண்டு. வெளிநாட்டு விஷயங்களில் சமஷ்டியில் அடங்கிய எல்லா நாடுகளின் பிரதிநிதியாகவும், உள்நாட்டுப் பொது விஷயங்களில் அந்நாடுகளின் சார்பாகவும் தலைமை வகித்து ஆட்சி புரியும் மத்திய ஸ்தாபனம் அவற்றில் ஒன்று. தனித்தனியான நாடுகளின் அரசாங்கங்கள் மற்ருென்று. சமஷ்டி அரசாங்கமும்,

சமஷ்டி

அதனுள் அடங்கிய நாடுகளின் அரசாங்கங்களும் அரசியல் திட்டத்தில் நிர்ணயித்திருக்கிறபடி, அதிகாரங்களைத் தமக்குள் பகிர்ந்து கொள்ளும்.

சமஷ்டி ஏற்பாட்டிற்கு அனுகூலமான நிபந்தனைகள் மூன்றும். முதலாவது, இரத்த சம்பந்தத்தாலோ, மதம், பாஷை, அரசியல் ஒற்றுமை முதலிய கட்டுப்பாடுகளாலோ, ஒற்றுமைப்பட்டுச் சேர்க்கையை விரும்பும் பல தனி நாடுகள் ஒன்றுக்கொன்று சேர்ந்தாற்போல அருகில் அமைந்திருக்கவேண்டும். இரண்டாவது, புதிதாக அமைக்கப்பட்ட சமஷ்டிச் சர்க்காரைவிடத் தன் நாட்டின் சர்க்காரிடமே தனிப் பிரஜைக்கு அதிகப் பற்றுதல் இருக்கவேண்டும். இத்தகைய பிரிவினை கொண்ட பற்றுத்தான், சமஷ்டித் தத்துவத்தின் உயிர்நிலை என்னலாம். மூன்றாவது, சமஷ்டியின் நாடுகளுக்குள் ஒன்றுக்கொன்று அதிகமான ஏற்ற தாழ்வுகள் இருக்கக்கூடா. ஒரு சமஷ்டியில் ஓரிரண்டு நாடுகள் மற்றவைகளைவிட வலிமையுஞ் செல்வாக்கு முடையனவாய் இருக்கு மேல், அஃது மற்ற நாடுகளுக்கு ஆபத்தை விளைவிப்பதாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட ஜெர்மன் சமஷ்டி இதற்கு ஒரு நிதர்சனமாகும்.

சமஷ்டிக்கு அனுகூலமான நிபந்தனைகள்

தனி நாடுகள், சமஷ்டி அரசியலை விரும்பப் பல காரணங்கள் உண்டு. ஸ்விட்ஜர்லந்திலும் அமெரிக்காவிலும் நேர்ந்தவாறு, கொடுங்கோன்மை விபத்து, அன்னிய நாடுகளின் படையெடுப்பு, வெகு காலமாக ஒரு பொதுவான அரசாட்சியின் கீழிருப்பது, இவை காரணமாகவும், கனடாவில் நிகழ்ந்ததுபோலத் தனி நாடுகளில் வசிக்கும் பல ஜாதியர்களுள் நேரிடும் போர் முதலிய சச்சரவுகளின் கஷ்டங்

களாலும், அந்நாடுகள் முடிவில் ஒரு சமஷ்டிச் சேர்க்கையை விரும்பலாம். ஆஸ்ட்ரேலியா போன்ற மற்ற தேசங்களில், வரி, வியாபாரம் முதலியவற்றால் உண்டான சச்சரவுகளையும், சிக்கல்களையும் நிவர்த்திக்கச் சமஷ்டி அரசியல் ஏற்பட்டதும் உண்டு.

முக்கிய அம்சங்கள்

ஒன்றுபடும் நாடுகளுக்குள் ஏற்படும் ஓர் ஒப்பந்தத்தின் முடிவே சமஷ்டி எனப்படுவது. அந்த ஒப்பந்தம் ஒரு சாசனத்தில் அடங்கியிருக்கும். அதை எளிதில் மாற்றுவது முடியாதகாரியம். ஒரு தனி ஸ்தாபனத்தாலோ அல்லது குறிப்பிட்ட ஒரு முறையினாலோ தான் அரசியற்றிட்டத்தைத் திருத்தவோ அல்லது மாற்றவோ கூடுமானபடியால், சமஷ்டி அரசியற் றிட்டங்கள் பொதுவாக வளைந்து கொடுக்காத இயல்புள்ளன என்று சொல்லலாம்.

1. அரசியற் திட்டம் வளைந்து கொடுக்காதது

ஒவ்வொரு சமஷ்டியிலும் அதனதன் சட்டத்திருத்த விஷயம் முக்கியமானதாகும். சமஷ்டியினுட்பட்ட தனி நாடுகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களுக்கு ஆதாரம் எழுத்து மூலமாக ஏற்பட்ட உடன்படிக்கையே. அதை மத்திய அரசாங்கத்தார் எளிதில் திருத்தி விடக் கூடுமேல், தனி நாடுகளின் உரிமைகளுக்குக் கேடு உண்டாகும். அவ்வாறின்றி, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இருப்பதுபோலச் சமஷ்டி அரசியலைத் திருத்துவதில் தனி நாடுகளுக்குப் பங்குச்சுதந்திரம் இருந்து விட்டால் அவசரமான தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு மத்திய ஸ்தாபனத்திற்கு இருக்கும் வலிமை போய்விடும். ஆஸ்ட்ரேலியாவில் இருப்பதுபோல ஜனங்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளுவதென்பது இன்னுங் கெடுதலாக

முடியும். ஏனெனில், சாதாரணமாக ஓட்டு அளிக்கும் பொது ஜனங்கள், முக்கியமான அரசியல் மாறுபாட்டைப் பற்றி அபிப்பிராயங் கூறுவதற்குப் போதிய அனுபவமும் பயற்சியும் உடையவ ராகார்.

2. அதிகாரப் பிரிவினை

சமஷ்டியின் இரண்டாவது அம்சம், மத்திய ஸ்தாபனத்திற்கும், சமஷ்டி நாடுகளுக்கும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுப்பதாகும். இவ்விஷயத்திற் பொது விதி யாதெனில், சமஷ்டியிற் சேர்ந்த எல்லா நாடுகளுக்கும் பொதுவாகவுள்ள விஷயங்கள் மத்திய சர்க்காராலும், தனி நாடுகளின் உள்நாட்டு விஷயங்கள் அவ்வவற்ருலுங் கவனிக்கத்தக்கனவாம். இவ்விதியை நடைமுறையிற் கொண்டுவர இரண்டு வழிகள் இருக்கின்றன. சமஷ்டிச் சர்க்காருக்கு உரியனவாக அளிக்கப்படும் அதிகாரங்களைச் சாசனத்தில் தெளிவாக நிர்ணயித்து விட்டால், மற்ற அதிகாரங்கள் அனைத்தும் தனி நாடுகளைச் சேர்ந்தவையெனக் கொள்ளலாம். அன்றேல், தனி நாடுகளின் அதிகாரங்களைத் தெளிவாகக் குறிப்பிட்டு விட்டால் மற்ற விஷயங்கள் மத்திய சர்க்காருக்கென்று ஏற்பட்டு விடும். சமஷ்டியில் இந்தப் பிரிவினையின் பயன் மிகவும் முக்கியமான தாகும். ஏனெனில், குறிப்பிடப்பட்ட எந்த அதிகாரமும் ஓர் எல்லைக்குள் அடங்கிவிடும். அவ்விதம் தீர்மானிக்கப்படாத அதிகாரத்திற்கு ஒரு வரம்பில்லை. ஆதலின், ஒரு சமஷ்டியின் தன்மை, மத்திய சர்க்காரின் அதிகாரங்கள் இன்னவை என்றும், தனி நாடுகளின் அதிகாரங்கள் இன்னவை என்றுங் குறிப்பிடப் பட்டிருப்பதைப் பொறுத்ததாகும். அமெரிக்க ஐக்கிய நாடுகள் முன்னே கூறிய வழியையும், கனடா பின்னே குறிப்பிட்ட வழியையும் பின்பற்றுவனவாம்.

எவ்வழியைப் பின்பற்றிச் சென்றாலும், எத்தகைய கவனத்துடன் ஒவ்வொரு அதிகாரமும் ஆழ்ந்து தீர்மானிக்கப் பட்டாலும், காலஞ் செல்லச் செல்ல அதிகார வரம்புகளைப் பற்றிய விவாதம் ஏற்படுவது இயற்கையேயாகும். தனி நாடுகளின் உரிமைகளுக்கும், சிறிது சிறிதாக வளர்ந்து வரும் மத்திய ஸ்தாபனத்தின் அதிகாரங்களுக்கும் என்றும் விரோத உணர்ச்சி யேற்படுவது திண்ணம். அதனால் சச்சரவுகள் உண்டாம். மேலும், முதலிற் சமஷ்டிச் சர்க்காருக்கு அளிக்கப்பெற்ற அதிகாரங்கள் போதாவென்பது போகப் போகத்தான் தெளிவாகும். நாட்டின் அபிவிருத்திக்கு ஏற்றவாறு அதிகாரப் பிரிவினையில் மாறுபாடு ஏற்படவேண்டுவது இன்றியமையாததாகையால் சமஷ்டி அரசியலுக்கு ஓரளவு வளைந்து கொடுக்குந் தன்மை இருக்க வேண்டியது அவசியமாகும். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அதன் தலைமைக் கோர்ட்டின் தீர்மானங்களாற் சமஷ்டிச் சர்க்காரின் அதிகாரங்கள் சமயத்திற்கேற்ப எளிதாக மிக விரிவடைந்திருக்கின்றன.

சமஷ்டி அரசியலின் இந்த அதிகாரப் பிரிவினையின் பயனாக ஏற்படும் மற்றோர் அம்சம் யாதெனில், சட்டங்களும் அரசியல் இயந்திர உறுப்புக்களும், இரு அரசாங்கங்களுக்கும் தனித்தனியே இருப்பனதான். ஆகையால், சமஷ்டியில் உள்ள ஒவ்வொரு பிரஜையும் இரண்டு அரசாங்கங்களின் சட்டங்களுக்கும், நிர்வாக உத்தியோகஸ்தர்களுக்கும் கீழ்ப்பட்டு நடக்க வேண்டிய நிலைமைக் குள்ளாகிறான்.

சமஷ்டி அரசியலின் மூன்றாவதான முக்கிய விஷயம் யாதெனில், நீதி நிலயத்தின் முக்கிய தத்துவமேயாகும். பொதுவாக நீதிபதியின் கடமை, சட்டத்தைத் தெளிவாக

விளக்கிச் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு பொருத்திக்காட்டுவதேயாகும். ஆனல், சமஷ்டியின் நீதிபதி அரசியலின் பாதுகாப்பாள ராகவும் இருக்கிறுர்.

3. அரசியல் திட்ட விளக்கம்

சமஷ்டி அரசாங்கமே ஓர் ஒப்பந்தத்தின்மேல் ஏற்படுவதாதலின், இரு கட்சியாரையும் ஒப்பந்த நிபந்தனைகளுக் குட்படுத்தி நடத்தி வைக்கும் அதிகாரி யொருவர் இருக்கவேண்டியது இன்றியமையாத தாகும். குறிப்பிட்ட ஒரு விஷயம் மத்திய சர்க்காருக்கு உரியதா, அன்றேல் தனி நாடுகளுக்கு உரியதா என்பதைப் பற்றித் தீர்மானஞ் செய்யும் அதிகாரம் சமஷ்டி நீதிபதிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆதலின், சமஷ்டி நீதிநிலயம், நியாய வினியோகம் என்ற போக்கில் அரசியல் திட்டத்தின் தன்மையையே ஒருவாறு மாற்றிவிடலாம். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இவ்வாறு சில நிகழ்ச்சிகள் நேர்ந்துள்ளன.

அத்தியாயம் 14

அமெரிக்க ஐக்கிய நாடுகள்

அரசியல் உற்பத்தியும், அதன் விசேஷங்களும்

தற்கால அமெரிக்க ஐக்கிய நாடுகளுள் பதின்மூன்று, 1775-ஆம் வருஷத்திற்கு முன் பிரிட்டிஷ் அரசாங்கத்தைச் சேர்ந்த குடியேற்ற நாடுகளாகவே யிருந்தன. ஒவ்வொன்றிலும் தனித்தனியே ஒரு கவர்னர் சட்டசபையோடு கூடிய ஒரு அரசியலை நடத்திவந்தார். மேற்கூறிய 1775-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4-ஆம் தேதி அவை

பிரிட்டிஷ் அரசாங்கத்தினின்றும் விலகி, தனிச்சுயேச்சை கொண்டவைகள் என்று விளம்பரஞ் செய்து கொண்டன. ஒத்துழைத்துப் பல காரியங்களை நடத்தவேண்டி யிருந்தமையால் அந்நாடுகள், ஒரு சமஷ்டி அரசியல் திட்டத்தை வகுத்து அதன்படிப் பொதுப் பாதுகாப்புக்கும் அவ்வவற்றின் உரிமைகளின் சம்ரக்ஷணைக்குமாக ஒரு வலிமை வாய்ந்த நேச சங்கமாக அமைந்து கொண்டன. அதனால் அவை ஐக்கிய காங்கிரஸ் என்ற ஒரு பொது ஸ்தாபனத்திற்குச் சில அதிகாரங்களை அளித்தன. பின்னர், இவ்வதிகாரங்கள் தேவைக்கு வேண்டிய அளவு விரிவாக இல்லாமை தெரிந்தது. காங்கிரஸின் ஒரு தீர்மானப்படி, ஜார்ஜ் வாஷிங்டன் தலைமையில் எல்லா நாடுகளிலிருந்தும் வந்த பிரதிநிதிகளின் கூட்ட மொன்று பிலடல்பியாவில் 1787-ஆம் வருஷம் மே மாதம் 25-ஆம் தேதி கூடிற்று. அந்தக் கூட்டம், ஒரு புது அரசியல் திட்டத்தைத் தயாரிப்பதென்றும், அந்தத் திட்டத்திற்கு ஒவ்வொரு நாட்டின் பிரஜைகளினுடைய சம்மதத்தையும் பெறவேண்டு மென்றும் தீர்மானித்தது. அதன்படியே புது அரசியல், 1787-ஆம் வருஷம் செப்டெம்பர் மாதம் 17-ஆம் தேதி யன்று பெருவாரியான நாடுகளின் பிரதிநிதிக் கூட்டங்களாகிய "கன்வென்ஷன்களால்" அங்கீகாரஞ் செய்யப் பட்டது. 1789-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 4-ஆம் தேதி, அப்புது அரசியல், அனுஷ்டானத்திற்கு வந்தது. சில நாடுகளின் கன்வென்ஷன்கள் தத்தம் அங்கீகாரத் தீர்மானத்துடன் சில திருத்தப் பிரேரணைகளையும் அனுப்பின. அத்திருத்தப் பிரேரணைகளும் முடிவில் அங்கீகரிக்கப் பட்டன.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல்தான் உலகத்தில் சமஷ்டி அரசியல் திட்டங்களிலேயே மிகவும் உயர்ந்ததும்

பெயர் போனதுமாகும். சமஷ்டி ஜனநாயகத்திற்கு அது ஓர் உதாரணமாகவும், ஒரு வரையறையாகவும் இருக்கின்ற தென்னலாம்.

ஜனங்களின் அரசியல்

அது பொது ஜனங்களிடமிருந்தே உற்பத்தியாகியிருக்கிறதென்பது தான் அதன் பிரத்யேக அம்சம். அந்த அரசியல் திட்டத்தின் முகவுரையில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது:— "இன்னும் திறமையான கூட்டுறவு கொள்ளவும், நியாயஸ்தாபனஞ் செய்யவும், உள்நாட்டு அமைதியை நிலைநாட்டவும், பொதுப் பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்யவும், பொது நன்மையை அபிவிருத்தி செய்து சுயேச்சாதிகாரத்தின் பயன்களை ஐக்கியப் பிரதேசப் பிரஜைகளாகிய நாங்களும் எங்கள் சந்ததியாரும் அடையவும் ஐக்கியப் பிரதேசப் பிரஜைகளாகிய நாங்கள் இந்த அரசியல் திட்டத்தை இந்நாட்டிற்கு ஏற்படுத்தி ஊர்ஜிதப் படுத்துகிறோம்".

திட்டம், மிகவும் காரியாம்சம் நிறைந்த ஒரு பத்திரமாகும். 'உரிமைகள் மசோதா' என்று சில தனி நாடுகளில்

திட்டம் காரியாம்சமான பத்திரம்

இருந்ததுபோல அதில் ஆடம்பரமான அறிக்கையொன்றுங் கிடையாது. அரசியல் மூல தத்துவங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்குமென்று எண்ணி அவைகளை வீணாகக்குறிப்பிடாமல், முக்கிய அரசியல் உறுப்புக்களை அமைத்து, அவைகளின் அதிகாரங்களை வரையறை செய்திருக்கின்றனர். சில தனி நாடுகளின் விருப்பத்திற்கிணங்கிச் சேர்க்கப்பெற்ற முதல் எட்டுத்திருத்தங்கள் கூடச் சில காரியப் போக்குக்களைப் பற்றியே உள்ளன.

அரசியலின் மூலாதார அமைப்பை மிகச் சுருக்கமாகவும், அடக்கமாகவும் விளக்குஞ் சாசனம் இது ஒன்றுதான்.

அஸ்திவார மட்டுமேதான், முழுக்கட்டிட மன்று

அரசியல் அமைப்பு பூர்த்தியானதன்று. அது அடிப்படையேயாகும். எவ்வளவு சுருக்கமாக இருக்கக்கூடுமோ, அவ்வாறே அது நிர்வாகச்சட்ட நிர்மாண, நீதிபரிபாலன இலாகாக்களை ஸ்தாபிக்கும் விதிகளைக் கூறுகின்றது. அரசியலின் அமைப்புவேலை இங்கு முடிவடைகிறது. இவற்றிக்குமேல் அது ஒன்றுஞ்செய்யாமலிருப்பதுதான் அதன் வலிமைக்குக் காரணமென்னலாம். மூலாதாரச் சட்டங்களுக்குமேல், விவரங்களில் அது ஈடுபட்டால், அதற்குறிய மாறுபடுந் தன்மையையும், வளைந்துகொடுக்குந் தன்மையையும் அது இழந்துவிடும். சிக்கலில்லாமலும் எளிதாகவுமிருப்பதால், இவ்வரசியல் முறை நீடித்திருக்குந் தன்மை வாய்ந்துள்ளதென்பது வெளிப்படை.

சரிக்கட்டுதல்களும் தடைகளும்

பிரிட்டனில் பார்லிமெண்டு சர்வாதிகாரம் பெற்றிருப்பது போல அமெரிக்க அரசியல் திட்டத்தில் யாதொரு ஸ்தாபனத்திற்கும் அத்தகைய சர்வாதிகாரங் கிடையாது. அதிகார ஸ்தாபனங்களில் ஒன்றுக்கொன்று, சரிக்கட்டுகளும் தடைகளும் ஏற்படுத்தப் பெற்றிருக்கின்றன. தனி நாடுகள் தேசீய அரசியலுக்கு எதிரிடையாகவும், பிரதிநிதிச்சபை ஸெனெட்டுக்கு எதிரிடையாகவும், ஸெனெட் பிரதிநிதிச் சபைக்கு எதிரிடையாகவும், தலைவருக்குக் காங்கிரஸ் ஒரு முட்டுக் கட்டையாகவும், காங்கிரஸுக்குத் தலைவர் ஒரு பெரிய அணையாகவும் அமைந்துள்ளன. இவை யனைத்திற்கும் புறத்தே நீதி ஸ்தாபனம் அமைந்துள்ளது. இத்தகைய முட்டுப்பாடுகள் நிறைந்த அரசியல் எங்ஙனம் இதுவரை திருப்திகரமாக நடைபெற்று வருகிறதென்பது ஓர் ஆச்சரியமாகத் தோன்ற

லாம். அதன் காரணம் யாதெனில், அமெரிக்கர்கள் அவர்களுடைய அரசியல் திட்டத்தைக் கேவலம் ஒரு சட்டசாசனம் என்றுமட்டுங் கருதாமல் அதனைப் பொது வாழ்வுக்குரிய ஓர் உயரிய நிரூபணம் என்றே அனுஷ்டானத்திற் கொண்டுவந் திருப்பது தான்.

அதிகாரப் பாகுபாடு

அரசியல் திட்டத்தில் எந்த அதிகாரங்கள் அதற்கென்று குறிப்பிட்டளிக்கப்பெற்றிருக்கின்றனவோ அவற்றைத்தான் தேசிய அரசாங்கம் பெற்றிருக்கின்றது. காங்கிரஸின் அதிகாரங்கள் பதினெட்டுத் தலைப்புக்களில் விளக்கப் பெற்றிருக்கின்றன. அவையாவன:—

(1) வரிகள், தீர்வைகள், சுங்கங்கள், முதலியவைகளை விதிப்பது, அவற்றை வசூலிப்பது; கடனைத்தீர்ப்பது; பொதுப் பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்வது; ஐக்கிய நாடுகளின் பொதுநன்மையைக் கவனிப்பது.

(2) ஐக்கியநாடுகளின் நாணயத்தின்மீது அதன் சார்பாகக் கடன் வாங்குவது.

(3) பிறநாடுகளுடனும், உள்நாட்டுப் பிரதேசங்களுடனும் அமெரிக்க இந்தியருடனும் வியாபாரத்தைச் சீர்திருத்தி நடத்துவது.

(4) அன்னியர்களுக்குப் பிராஜாவுரிமை அளிப்பதற்குப் பொதுச்சட்டம் ஏற்படுத்துவது; கடன்காரர்களைப் பற்றித் தேசமுழுவதற்கும் பொருந்திய சட்டம் இயற்றுவது.

(5) நாணயம் அடித்து அதன் மதிப்பைத் தீர்மானித்து, அந்நிய நாட்டு நாணயங்களுடன் மாற்று விகிதத்தையும், எடை படி முதலியவற்றையும் நிர்ணயிப்பது.

(6) கள்ளத்தனமாகப் போலி நாணயங்களும் நோட்டுக்களும் உண்டாக்குபவர்களுக்குத் தண்டனை விதிப்பது.

(7) தபால் ஆபீஸ்களையும் தபால் மார்க்கங்களையும் ஏற்படுத்துவது.

(8) கலைகளின் அபிவிருத்தியின் பொருட்டு ஆசிரியர்களுக்கு உதவி யளிப்பதற்காகக் கொஞ்ச காலத்திற்கு அவர்களுடைய நூல்களுக்கும், ஆராச்சியின் பயன்களுக்கும் தனியுரிமை கொடுப்பது.

(9) தலைமைக் கோர்ட்டுக்குப் கீழ்ப்பட்ட நியாய ஸ்தலங்களை ஸ்தாபிப்பது.

(10) கடற்கொள்ளைகள் முதலிய குற்றங்களையும் ராஜ்யநீதிக்கு விரோதமான குற்றங்களையும் செய்பவரைத் தண்டிக்க நியதி யேற்படுத்துவது.

(11) யுத்த அறிக்கை செய்வது.

(12) சேனைகளைத் திரட்டி அவற்றைக் காப்பாற்றி வருவது.

(13) கடற்படையை யமைத்துப் பரிபாலிப்பது.

(14) போர்ப்படைகளை நிர்வகிக்கும் விதிகளை இயற்றுவது.

(15) யூனியன் அதிகாரங்களை நடத்திவைக்கவும், கலகங்களை யடக்கவும், பிற நாட்டுப் படையெடுப்புக்களை யெதிர்க்கவும் குடிப்படைகளைக் கூட்ட ஏற்பாடு செய்வது.

(16) குடிப்படைகளை யேற்படுத்தி ஆயுதங்கொடுத்து அவற்றிற்குப் பயிற்சி யளிப்பது; ஆனால், அவற்றின் அதிகாரிகளை நியமிப்பதும், காங்கிரஸ் இட்ட கட்டளைப்படி சேனைகளைப் பயிற்சி செய்வதற்கு அதிகாரங் கொடுப்பதும் தனித்தனி நாடுகளுக் குரியனவே.

(17) காங்கிரஸின் தீர்ப்பாலும், தனி நாடுகளின் அனுமதியாலும் ஐக்கிய சர்க்காரின் தலைமை ஸ்தானத்திற்குப் பத்து சதுர மைலுக்குள் தனி ஆட்சி புரிவது. தனி நாட்டின் சட்ட சபையின் சம்மதத்தின்மேல், கோட்டைகள், வெடிமருந்து வைக்குமிடங்கள், கப்பல் கட்டுமிடங்கள், முதலிய மற்ற பொதுக் கட்டிடங்களுக்காக வாங்கப்பட்ட இடங்களிலும் மேற்கண்ட அதிகாரஞ் செலுத்துவது.

(18) மேற்கூறிய அதிகாரங்களையும், அரசியல் திட்டத்தில் ஐக்கிய சர்க்காருக்கோ, அல்லது அதன் இலாகாவிற்கோ அதிகாரிக்கோ அளிக்கப்பட்ட மற்ற அதிகாரங்களையும் நடைமுறையிற் கொண்டுவருவதற்குத் தேவையான எல்லாச் சட்டங்களையும் இயற்றுவது.

மேற்கூறியவை யொழிந்த மற்ற அதிகாரங்களனைத்தும், தனி நாடுகளிடமோ பொதுஜனங்களிடமோ உள்ளன. சுருக்கமாகக் கூறுமிடத்து, குறிப்பிட்ட பொது விஷயங்களில் தேசீய சர்க்கார் சர்வாதிகாரம் பெற்றதாகும். ஆனால், முக்கியமான வேலைகளான, அமைதியையும் சட்டத்தையும் நிலை நிறுத்தல், ஸ்தல ஆட்சி, ஸிவில் கிரிமி

னல் நியாய விநியோக முறையின் அமைப்பு, கல்வி, சுகாதாரம், போலீஸ், குடிப்படை இவையனைத்தும் தனி நாடுகளின் சர்க்கார்களிடமே இருக்கின்றன. இதில் பொறுப்பு இன்னாருடையது என்பதில் ஏதேனும் அபிப்பிராய பேதமும் சச்சரவு மேற்படுமேல், கட்சியை ஸ்தாபித்து நிரூபிக்க வேண்டியது தேசீய சர்க்காரின் கடமையாகும். அரசியல் திட்டத்தின்படி, அந்த அதிகாரம் தன்னுடைய தென்று தேசீய சர்க்கார் நிரூபித்தா லொழிய அது தனி நாடுகளுக்கே உரியது எனக் கருதப்படும்.

அரசியல் விளக்கம்

இந்த இரு தனித்தனி ஆட்சிகளுக்கும் இடையேயுள்ள வழக்குகள் ஐக்கியநாடுகளின் தலைமைக் கோர்ட்டால் விசாரிக்கப்படும். ஒவ்வொன்றையும் அதன் எல்லைக்குள்ளேயே இருத்தி, ஒரு குறிப்பிட்ட அதிகாரம் அரசியலில் எதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற தென்பதை இந்தக் கோர்ட்டு தீர்மானித்துவிடும். இவ்விரண்டு ஆட்சிகளுக்கிடையே ஒத்துழைப்பை யுண்டாக்க இது ஒரு மூலமாக இருக்கிறது.

அரசியல் திருத்தங்கள்

அரசியலைத் திருத்தச் சில நிபந்தனைகள் உள்ளன. இரண்டு சபைகளின் அங்கத்தினர் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு அவசியமெனக் கருதினால் அரசியல் திருத்தங்களைக் காங்கிரஸ் பிரேரிக்கலாம். அல்லது எல்லாத் தனி நாடுகளின் சட்டசபைகளில் மூன்றில் இரண்டு பங்கு செய்து கொண்ட மனுவின்மேல் திருத்தங்களைப் பிரேரணை செய்யக் காங்கிரஸ் ஒரு கன்வென்ஷனைக் கூட்டலாம். மேற்கூறிய திருத்தப்பிரேரணைகள் ஒவ்வொன்றும் நான்கில் மூன்று நாடுகளிலுள்ள சட்ட சபைகளினாலோ, அல்லது

நான்கில் மூன்று நாடுகளில் கூட்டப்பட்ட கன்வென்ஷன் களாலோ அங்கீகரிக்கப்பட்டாற்ருன் அவை ஐக்கிய நாடுக ளின் அரசியல் திட்டத்தின் உறுப்புக்களாகும். மேற்கூறிய இருவழிகளில் எவ்வழிப்படிப் பிரேரணைகள் அங்கீகரிக்கப் பெறவேண்டுமென்பதைக் காங்கிரஸ்தான் தீர்மானஞ் செய்ய வேண்டும். ஆனல், வழக்கத்தில் ஒவ்வொரு திருத்த மும், காங்கிரஸின் பிரேரணையின் மேலும், தனி நாடுகளின் சட்ட சபைகளுடைய அங்கீகாரத்தினுலுமே நிறைவேறப் பெறுகின்றது.

எல்லாச் சமஷ்டி அரசியல்களும் வளைந்து கொடுக்காத வைகளே. அமெரிக்காவின் திட்டத்தில் அத்தன்மை அதிக மாக இருக்கிறது. ஏனெனில், அரசியலைத் திருத்தும் முறை மிகவும் சிக்கலானது. அதனல், திருத்தங்களே குறைவு என்னலாம். இதுவரையில் இரண்டாயிரம் தீர்மானங்கள் அரசியல் திருத்த விஷயமாகக் காங்கிரஸுக்கு வந்தும், 21 தீர்மானங்களே தாம் நிறைவேறி யிருக்கின்றன. இந்தத் தடைக்குப் பரிகாரமாக, நீதிபதிகளின் சட்ட விளக்கங் களும், அரசியல் சம்பந்தமற்ற முறைகளும், ஸ்தாபனங் களும், பல மாறுதல்களை உண்டாக்கி யிருக்கின்றன. ஆத லால், அரசியல், உருவத்தில் வளைந்து கொடுக்காததா யிருந் தாலும், அனுஷ்டானத்தில் காலத்திற்கேற்ப இயன்றவாறு விருத்தியடைந்திருக்கிறது. அரசியற் சட்டங்களும் புது விஷயங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்றவாறு நீட்டப் பெற்றிருக்கின்றன.

சமஷ்டியி லடங்கிய தனி நாடுகளின் அரசியல்கள்

அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில், தற்காலம், 48 தனி நாடுகள் இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் குடியரசு உருவி

ளுள்ள ஒரு சட்ட பூர்வகமான அரசியல் திட்டம் இருக்கிறது. அது காங்கிரஸ் அதிகாரத்திற்கு உட்பட்டதன்று.

அரசியல் அமைப்பு ஜனங்களால் தாராளமாகத் திருத்தப்படக் கூடியது

பொது ஜனங்களிடமிருந்து பிறந்த தாகையால் ஜனங்கள் அதை நிர்ப்பந்தமின்றித் திருத்தலாம். சாதாரணச் சட்டங்களுக்கெல்லாம் அரசியல் திட்டம் மேலானது. சமஷ்டி அரசியலில் இருப்பதைவிட அதில் விவரங்கள் அதிகமாக இருக்கின்றன. பல நாடுகளின் அரசியல் திட்டங்களில் உரிமைகள் மசோதா ஒன்றும், சில சில்லறை விதிகளும், அரசாங்க அமைப்புச் சுருக்க விவரமும் அடங்கியிருக்கின்றன.

ஒவ்வொரு நாட்டிலும் ஸெனெட் என்றும் பிரதிநிதிச் சபை யென்றும் இரு சபைகள் இருக்கின்றன. ஸெனெட்

சட்டசபை

அங்கத்தினர்கள் சாதாரணமாக நான்கு வருஷங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். கீழ்ச்சபையில் அங்கத்தினர்களின் காலம் இரண்டு வருஷங்களே. இவ்விரு சபைகளுக்கும் சமமான அதிகாரங்கள் உண்டு. அனேக நாடுகளில் நிதி மசோதாக்கள் கீழ்ச்சபையில் தான் பிரேரிக்கப்படும். ஸெனெட், தேசத்துரோகம் முதலிய ராஜீய குற்றங்களைச் செய்தவர்களுக்கு விசாரணை நடத்துங் கோர்ட்டாகவும், நிர்வாகத்தாற் செய்யப்படும் உத்தியோக நியமனங்களை உறுதிசெய்யும் அதிகார முடையதாகவும் இருக்கிறது. தேசீய சர்க்காருக்காக ஒதுக்கி வைக்கப்படாத எல்லா விஷயங்களிலும் தனி நாடுகளின் சட்ட சபைகளுக்கு முழு அதிகாரமும் உண்டு. சட்ட சபைகளில் ஏற்படும் வேலைகள் நிரந்தரமாய் அமைந்துள்ள கமிட்டிகளால் நடைபெறும்.

கவர்னரும் நிர்வாக உத்தியோகஸ்தர்களும்

ஒவ்வொரு நாட்டிற்கும் கவர்னர் தாம் நிர்வாகத்தலைவர். அவர் பிரஜைகளால் நேர் முகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவரது உத்யோககாலம் சில நாடுகளில் இரண்டு வருஷங்களாகவும், மற்றுஞ் சில நாடுகளில் இரண்டு முதல் நான்கு வருஷங்கள் வரையிலும் ஆகும். போர்ப்படைகளின் தளகர்த்தரும் அவரே. அவர், சட்டங்கள் நடைபெறும் முறைகளைக் கவனித்துப் புதுச்சட்டங்கள் இயற்றவும் சிபார்சு செய்கின்றார். இரண்டு நாடுகளைத் தவிர மற்ற நாடுகளில் கவர்னருக்குச் சட்டங்களை நிராகரிக்கும் அதிகாரம் உண்டு. ஆனால் சபையின் மூன்றில் இரண்டு பங்கு ஓட்டுக்களால் கவர்னரின் நிராகரிப்பை விலக்கி விடலாம். நிர்வாகத்தின் முக்கிய அதிகாரிகள் கவர்னரால் நியமனஞ் செய்யப்படுபவ ரல்லர். பொது ஜனங்களாலேயே அன்னோர் தேர்ந்தெடுக்கப் பெறுவர். அத்தகைய அதிகாரிகள், சட்ட சபைகளுக்கோ, கவர்னருக்கோ, பதிற் சொல்லவேண்டியவர்களும் அல்லர். கவர்னரும், நாட்டுச்சர்க்காரின் மற்ற முக்கிய உத்தியோகஸ்தர்களுஞ் சேர்ந்து நிர்வாக அதிகாரிகள் ஆவார்களா என்பதே சந்தேகிக்கக்கூடிய விஷயமாகும். ஏனெனில் நடைமுறையில் நடவடிக்கைகள் பெரும்பாலும் நகரங்களாலும் கவுண்டிகளாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்தல உத்தியோகஸ்தர்களாலேயே நடத்தப் பெறுகின்றன. நாட்டின் மத்திய நிர்வாகத்திற்கும் அவர்களுக்கும் பொறுப்பில் நெருங்கிய சம்பந்தம் கிடையாது.

பெரும்பாலும், நீதிபதிகள் ஜனங்களாலேயே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். சில நாடுகளிற் சட்ட சபைகள் நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கின்றன. சிலவற்றில் ஸெனெட்டின் அனுமதியுடன் நீதிபதிகளைக் கவர்னர் நியமனஞ் செய்கிறார்.

அவர்களின் உத்தியோககாலம் பொதுவாக இரண்டு வருஷங்களாகும். சில நாடுகளில் அவர்களின் நன்னடத்தையையும் திறமையையும் பொறுத்து அக்காலம் நீட்டப்படுவதுமுண்டு.

பல நாடுகளில், சட்ட சபைகளிடத்தில் பொது ஜனங்களுக்கு நம்பிக்கை யில்லை. லஞ்சம், சிபார்சு முதலியவற்றால் சட்டங்களை குயுக்திக் குள்ளாகி விடுகின்றன. ஆகையால் அவ்வித சந்தர்ப்பங்களிற் பொது ஜனங்களே ஒன்றுகூடித் தம்மிடையேயுள்ள சிலரது முயற்சியின் மீது சட்டங்களை இயற்றவோ, சட்ட சபைகள் நிறைவேற்றிய மசோதாக்களை எதிர்க்கவோ, அல்லது ஆதரிக்கவோ விதிகளை ஏற்படுத்துகின்றனர். இதைத்தவிர, மற்றொரு விசேஷம் யாதெனில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை அங்கத்தினர்கள், அதிகாரிகள், நீதிபதிகள் முதலானோர் பொது ஜனங்களுடைய தீர்மானப்படி உத்தியோககாலம் முடிவதற்கு முன்னரேயே அவர்களுடைய வேலைகளிலிருந்து நீக்கப்படலாம்.

தேசீய சர்க்கார்

நிர்வாகம்

ஜனாதிபதி அல்லது தலைவர்

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசிய லமைப்பைச் சிருஷ்டித்தவர்கள், மான்டேஸ்க்யூ, பிளாக்ஸ்டன் முதலிய அரசியல் நிபுணர்களின் அபிப்பிராயங்களைத் தழுவி, அரசாங்க அதிகாரத்தைச் சட்ட நிர்மாணம், நிர்வாகம், நீதிபரிபாலனம் என மூன்று பிரிவுகளாக வகுத்து, மூன்று தனி அதிகார ஸ்தாபனங்களை நிறுவினார்கள். நிர்வாக இலாகா வளர வளரப் பிரஜைகளின் உரிமைக்கு ஆபத்து உண்டாகும்

என்று உணர்ந்து அமெரிக்கர்கள் கிரேட் பிரிட்டனில் இருப்பது போன்ற நிர்வாக முறையை எதிர்த்தனர். ஒற்றுமையும், பொறுப்பும் இணைந்து இருக்கவேண்டுமென்பது அன்னோர் கொள்கை. ஏனெனில், ஒருவரே நிர்வாகத்தை யேற்றுக் கொள்வரேல் அவரிடம் பொறுப்பை நிச்சயமாகச் சுமத்தலாமாதலின், நான்கு வருஷங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு தலைவரிடம் நிர்வாக அதிகாரம் முழுவதும் ஒப்படைக்கப்பட்டது. அந்த ஸ்தாபனத்திற்கு அபேக்ஷகராக வருகிறவர் குறைந்தது, 35 வயது அடைந்தவராக இருக்கவேண்டும். மறுபடியும் அவரே தலைவராகத்தேர்ந்தெடுக்கப்படலாம். ஆனால் நடைமுறையில், மறு தேர்தல் ஒருதரந்தான் ஒருவருக்கு நடக்கின்றது.

தலைவர் தேர்தல் முறை

ஒரு நாட்டிற்குக் காங்கிரஸில் எத்தனை பிரதிநிதிகள் உண்டோ அத்தனை பேர்களை, தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக அந்நாட்டு ஜனங்கள் பொறுக்கியெடுப்பார்கள். இத்தேர்தல் கட்சிமுறையின் படியே நடைபெறும். இரண்டு கட்சிகளும் தனித்தனியாகத் தலைவரைத் தேர்ந்தெடுப்பவர்களின் ஜாபிதா ஒன்றை ஜனங்களுக்குச் சமர்ப்பிக்கின்றன. ஜனங்கள் இவ்விரு ஜாபிதாக்களில் ஒன்றுக்கு ஓட்டு செய்கிறார்கள். இவ்விதம் பல நாடுகளிலிருந்தும் பொறுக்கப் பெற்றவர்கள், தலைவரையும் உபதலைவரையும் தேர்ந்தெடுப்பதால் அவர்களுக்குத் "தலைவரைத் தேர்ந்தெடுப்பவர்" என்று பெயர். ஆனால், அவர்கள், தலைவர், உபதலைவர் ஆகிய இரண்டு ஸ்தானங்களுக்கும் தத்தம் கட்சிகளால் நியமிக்கப்பட்டவருக்கே ஓட்டுச்செய்வதாக, அவர்களின் தேர்தலுக்குச் சில மாதங்கள் முன்னதாக ஏற்படுத்தப்படும் நாமினேஷன் கூட்டத்தில், உறுதிமொழி

யளித்து விடுவதால் அவர்களுக்குத் தேர்தலில் தனிச்சுதந்திரங் கிடையாது. ஆகையால், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தலைவர் உண்மையில் ஜனங்களின் பெரும்பாலோர் ஓட்டினால் தேர்ந்தெடுக்கப்படுகிறவ ராவர்.

உபதலைவரும் இவ்விதமே அதே சமயத்தில் தேர்ந்தெடுக்கப்படுகிறார். தலைவர் மரணமடைந்தால், பாக்கியிருக்கும் அவரது உத்தியோக காலத்திற்கு உபதலைவர் தலைமை வகிக்கிறார். தலைவரையும் உபதலைவரையும், தேசத்துரோகம்போன்ற பெரிய குற்றஞ் செய்தவர்களென விசாரணையில் தீர்மானிக்கப்பட்டால் தான் வேலைகளிலிருந்து நீக்கமுடியும்.

அரசியலின் ஆதிகர்த்தர்கள் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் ஜனப்பிரதிநிதிகள் சுயேச்சைகொண்டும், பட்சபாதமின்றியும் அவர்களின் கடமையை நிறைவேற்ற வேண்டுமென்று கருதினார்கள். ஆனால் நடைமுறையில் இவ்வெண்ணம் கட்சி ஸ்தாபனத்தின் தலையீட்டால் நன்கு நடைபெறவில்லை. "தலைவரைத் தேர்ந்தெடுப்பவர்" ஓர் ஓட்டுச் செய்யும் இயந்திரமாகவும், கட்சிக் கட்டுப்பாடு என்றும் சூத்திரத்தால் ஆட்டப்பெறும் பாவையாகவும் ஆகிவிட்டார் என்று கூறலாம். இதற்கு முக்கிய காரணம், காங்கிரஸின் மூன்றில் இரண்டு பாகமும் தனி நாடுகளின் முக்காற் பாகமும் சம்மதித்தால் தான் எவ்வித அரசியல் திருத்தத்தையும் நிறைவேற்ற முடியு மென்றிருக்கும் முக்கிய அரசியற் கொள்கை நடைமுறையில் பயன் படாதவாறு, காங்கிரஸ் கட்சிச் சங்கங்களும் நாமிநேஷன் கூட்டங்களும் தங்கள் இஷ்டப்படித் தீர்மானங்களை யமைப்பதேயாம். ஆகையால், அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தலைவரைப் பொது ஜனங்களின் பிரதிநிதி யென்று பாவிக்க முடியாது; அ வர் ஒரு கட்சியின் தலைவரென்றே

நினைக்கவேண்டும் என்று வில்ஸன் என்னும் அரசியல் நிபுணர் காங்கிரஸ் அரசாங்கம் என்ற நூலில் விரிவாகக் கூறியுள்ளார்.

தலைவர் அதிகாரங்களும், வேலைகளும்

தலைவரின் அதிகாரங்கள் பின்வருவனவாம்:– தரைப் படை கடற்படைகளுக்கு அதிபதித்தன்மை; மன்னிப்பு அளித்தல்; ஸெனெட்டின் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்களது சம்மதத்தின்மேல் அன்னிய நாடுகளுடன் உடன்படிக்கை செய்து கொள்ளுதல்; ஸெனெட்டின் அங்கீகாரத்துடன் தூதர்கள், மந்திரிகள், கான்ஸல்கள், நீதிபதிகள் முதலியவர்களை நியமித்தல்; காங்கிரஸின் மசோதாக்களை அங்கீகரித்தல். (அதன் மசோதாக்களை அவர் அங்கீகரிக்காமல் திருப்பிவிடலாம். அவ்வாறு தலைவர் நிராகரிப்பரேல் அதனை மாற்றக் காங்கிரஸ் மறுபடியும் அம் மசோதாக்களை மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்களின் ஓட்டுக்களால் நிறைவேற்றலாம்.) தலைவர், அடிக்கடி நாட்டின் நிலைமையைப் பற்றிக் காங்கிரஸுக்கு சமாசாரம் தெரிவிக்க வேண்டும். இந்த அறிக்கைகள் மிகவும் முக்கியமானவை. இவ்வித அறிக்கைகள் மூலம் அவர் சில விசேஷமான அரசியல் விதிகளையும், சட்ட நிர்மாணஞ் செய்ய வேண்டிய வழிகளையுங் குறிப்பிட் டனுப்புவார். நிகழ்தற்கரிய விசேஷ சந்தர்ப்பங்களில் அவர் இரண்டு சபைகளையுமோ, அன்றேல் ஒன்றை மட்டுமோ கூட்டலாம். சபைகளைத் தள்ளிப்போடும் தேதியைப் பற்றி அவைகளினிடையே அபிப்பிராய பேதம் ஏற்படுமேல், அவர், தாம் சரியெனக் கருதுங் கால அளவுக்குச் சபைகளை ஒத்திவைக்கலாம். சட்டங்கள் சரியாக நிறைவேறுகின்றனவா வென்று கவனித்துப் பார்த்துக் கொள்ள வேண்டியதும் அவர் பொறுப்பேயாகும்.

சுருக்கமாகக் கூறுமிடத்து, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தலைவருக்கு உண்மையான அதிகாரம் இருக்கிறது. அவர் ஒரு முடிசூடா மன்னர். அவர் நான்கு வருஷங்களுக்கு அரசியலை யேற்றுப் பரிபாலிக்கிறார். ஆனால், எல்லாம் அந்த ஸ்தானத்தை வகிப்பவருடைய தன்மையையும் சாமர்த்தியத்தையும் பொறுத்திருக்கின்றன. சட்டங்கள் சரியாக நிறைவேறுகின்றனவா வென்பதைக் கவனிக்கவேண்டியதாகிய பொறுப்பை அவர் எவ்வாறு ஏற்றுக்கொண்டு நடத்துகிறார் என்பதையே இவை எல்லாம் பொறுத்திருக்கின்றன. மகத்தான இந்த ஸ்தானத்தை வகிக்கத் தகுதியுள்ளவரெனக் கருதப் பெறும் அத்தலைவர், ஐரோப்பிய தேசங்களிற் சிறந்து விளங்கும் முடிமன்னர்களின் செல்வாக்கிலும், மரியாதையிலும் பெருமையிலும் ஒரு சிறிதுங் குறைந்தவ ராகார். அவர் ஸ்தானத்திற்குள்ள ஒரே குறை, அவர் நேரே சட்ட சபைகளுக்குத் தலைமைவகிக்க முடியாததே. அவர் பிரதிநிதிகள் மூலமாகத் தூரத்திலிருந்தே தான் உத்தரவு போடமுடியும். இதனால் சட்டசபைகளுக்கும் நிர்வாகத்திற்கு மிடையே ஒத்துழைப்பு சிரமமாகும். காங்கிரஸ் நிறைவேற்றுஞ் சட்டங்கள் நிர்வாகத்தின் அனுபோகத்திற்கு ஒத்தவையாயும், கட்டுப்பாடுடையனவாயும் பெரும்பாலும் இரா. நிர்வாகத்தின் உற்சாகமும் வேகமுங் குறைந்துபோம்.

சட்டங்களை நிறைவேற்றுவதிலும், அரசாங்க காரியங்களை நடத்துவதிலும் தலைவருக்கு உதவிபுரியச் சில காரியதரிகள் இருக்கின்றனர். அவர்களே இலாகாக்களின் தலைவர்கள். அவர்கள் தலைவரின் மந்திரிச்சபை அங்கத்தினர்கள். தலைவரே அவர்களை நியமிக்கின்றார். ஆனால், அவர் அவ்வாறு அன்னோர்களை நியமிப்பதற்கு ஸெனெட் சபையின்

அங்கீகாரத்தைப் பெறவேண்டும். அவர் இஷ்டப்பட்ட வரையில் மட்டுமே அவர்களுக்கு உத்தியோக காலமாகும். அவர்கள், தலைவருக்குத்தான் பதில் சொல்லக் கட்டுப்பட்டவர்கள். தலைவரின் மந்திரிச்சபை, ஓர் அரசியல்வாதிகளின் கூட்டமன்று. கட்சிக்கு வேண்டி சிரமப்பட்டு உழைத்ததற்காகச் சில சமயங்களில் உத்தியோக ரூபமாகப் பரிசுகள் அளிக்க வேண்டிவருமேனும், பொதுவாக இலாகாத் தலைவர்கள் அனைவரும் அவரவர் வேலை யனுபவத்தையும், திறமையையும், தகுதியையும் பொறுத்தே நியமனஞ் செய்யப்படுகிறார்கள்.

சட்டசபை: காங்கிரஸ்

அரசியல் திட்டத்தின்படி, சட்டமியற்று மதிகாரம் முழுவதுங் காங்கிரஸினிடமே யுள்ளது. ஸெனெட்டும், ஜனப்பிரதிநிதிச் சபையுஞ் சேர்ந்ததே காங்கிரஸ் எனப்படுவது. அதிகத் தொகைகொண்ட ஜனநாயக ஸபை யாகிய கீழ்ச்சபைக்கு ஒரு கடிவாளம்போல இருக்கவே ஸெனெட் சபை அமைக்கப்பட்டிருக்கிறது.

ஸெனெட்: அமைப்பு

முதலில் ஸெனெட் பல நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்டதாயிருந்தது. அதாவது பல நாடுகளின் சட்ட சபைகளால் தேர்ந்தெடுக்கப் பெற்ற அங்கத்தினர்களால் அமைந்திருந்தது. 1913-ஆம் வருஷத்திய திருத்தத்தின்படி ஒவ்வொரு நாட்டின் ஜனங்களே நேராக அவ்வவற்றின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டு மென்பது ஏற்பட்டது. ஒவ்வொரு நாட்டிற்கும் தனித்தனியே இரண்டு பிரதிநிதிகள் வீதம் நாற்பத்தெட்டு நாடுகளுக்கும் 96 பிரதிநிதிகள் ஸெனெட்டில் இருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட

அன்னோர் ஆறு வருஷகாலம் ஸெனெட்டில் அங்கத்தினராய் இருப்பார்கள். மூன்றில் ஒருபாகம் அங்கத்தினர் இரண்டு வருஷங்களுக்கு ஒருமுறை விலகிவிடுவதால் அமெரிக்க ஸெனெட் ஒரு நிரந்தர சபையாகும். ஸெனெட்டில் அங்கத்தினராய் வருபவருக்குக் குறைந்தது முப்பது வயதாவது ஆகியிருக்கவேண்டும். மேலும், அவர்கள், ஐக்கிய நாடுகளின் பிரஜைகளாக ஒன்பது வருஷங்களும், பிதிநிதிகளாக நிற்கும் நாடுகளில் வசித்தும் இருக்கவேண்டும்.

சிறிய நாடுகளைப் பெரிய நாடுகள் ஆழ்த்திவிடும் என்ற அச்சத்தாலேதான் எல்லா நாடுகளுக்குஞ் சமமாகப் பிரதிநிதிகள் ஏற்படுத்தப்பட்டனர். தனி நாடுகளிடம் ஆட்சி வன்மை இருக்கின்றதென்பதற்கு ஓர் அறிகுறியாகவும், அதனை நிலை நிறுத்த ஒரு கருவியாகவும் இந்தச் சமப்பிரதிநிதித்துவம் ஏற்படலாயிற்று. ஸெனெட்டில் எந்த நாட்டின் பிரதிநிதித் தன்மையையும் அதனுடைய சம்மதமின்றிக் குறைக்க முடியாதென்று இருப்பதால், ஸெனெட் சபை, தனி நாடுகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பையையும் பெருமையையும் உடையதென்னலாம்.

நிதியைத் தவிர மற்ற விஷயங்களில் இருசபைகளுக்கும் சம அதிகாரங்கள் உள்ளன. வரி மசோதா தவிர, எந்த மசோதாவும் ஏதாவது ஒரு சபையிற் பிரேரிக்கப் பட்டாற் போதும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அரசியல் நிர்வாகத்தார் சட்டசபைகளுக்குத் தலைமை வகிப்பதில்லையாதலின், ஸெனெட் சபைக்குச் சட்டமியற்றும் வேலை ஒரு பெரும்பகுதியாக இருக்கின்றது. அச்சபைக்குச் சாதாரண மசோதாக்களைப் போலவே, நிதி மசோதாவிலும்

வேலைகள்:
1. சட்டமியற்றுதல்

திருத்தங்கள் கொண்டு வரவும், ஒன்றினை நிராகரிக்கவும் அதிகாரம் உண்டு. வழக்கத்தில், கீழ்ச்சபையின் வரவு செலவு மசோதாக்களைத் திருத்திப் பதிலாகத் தன் பிரேரணைகளை அமைப்பதில் அது சிறிதும் பின்வாங்கியதில்லை.

இருசபைகளுக்குஞ் சச்சரவு ஏற்படின் அவ்விஷயம் ஒரு கூட்டுக்கமிட்டியால் விசாரிக்கப்படும். அக்கமிட்டியின் அங்கத்தினர்கள் இருசபைகளின் பிரதிநிதிகளாவர். அன்னோர் ஸெனெட் சபையின் தலைவராலும், ஜனப் பிரதிநிதிச் சபையின் தலைவராலும் நியமனஞ் செய்யப்பெறுவர். இந்தக் கூட்டுக்கமிட்டியின் அறிக்கை பொதுவாக இரு சபைகளாலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

ஒரு மசோதா ஒரே விதமாய் இரு சபைகளிலும் நிறைவேறுவிட்டால், அது தலைவரின் அனுமதிக்கு அனுப்பப்படுவதில்லை. தலைவர் ஒரு மசோதாவை அங்கீகரிக்காமற் காங்கிரஸுக்குத் திருப்பிவிடலாம். ஆனால், இரு சபைகளிலும் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்களின் ஓட்டுக்களால் தலைவரது நிராகரிப்பை விலக்கவுங்கூடும்.

தேசத்துரோகம் முதலிய பெரிய குற்றங்களின் விசாரணையை ஸெனெட் சபைதான் நடத்துகிறது. தலைவரைத் தவிர மற்றெல்லா உத்தியோகஸ்தர்களைப் பற்றிய விசாரணைகளிலும் உபதலைவர்தாம் தலைமை வகிப்பார். தலைவரே குற்றஞ்சாற்றப்பெற்றால், அவ்விசாரணையில் பிரதம நீதிபதியே தலைமை வகிக்கவேண்டும். ஆனால், ஸெனெட்டின் இந்த வேலை அவ்வளவு முக்கியமானதாகக் கருதப்படுவதில்லை.

2. நீதி விநியோகம்

அமெரிக்க ஸெனெட் சபையின் மிக முக்கியமான விஷயம், இரு சிறந்த நிர்வாக வேலைகள் அதனிடம் ஒப்படைக்கப் பட்டிருப்பதேயாம். அவைகளில் ஒன்று அன்னிய நாடுகளுடன் தலைவர் செய்யும் உடன்படிக்கைகளை அங்கீகரிப்பதும் நிராகரிப்பதுமாம். அங்கீகாரத்திற்கு மூன்றில் இரண்பங்கு அங்கத்தினர் அனுமதி அளிக்கவேண்டும். தலைவரால் நியமிக்கப்பெற்ற பெரிய உத்தியோகஸ்தர்களை அந்த வேலைகளில் ஊர்ஜிதப் படுத்தும் அதிகாரம் மற்றொன்றாகும். நடைமுறையில், மந்திரிச்சபை அங்கத்தினர்களை தலைவர் தேர்ந்தெடுத்துக் கொள்வதில் ஸெனெட் சபை தலையிடுவதில்லை. மற்றெல்லா நியமனங்களிலும், முக்கியமாக ஒவ்வொரு நாட்டிலுமிருக்கும் சமஷ்டி உத்தியோகஸ்தர்களை நியமிப்பதில், ஸெனெட் அதன் அதிகாரத்தை விட்டுக் கொடுக்காமல் இரகசியமாகச் சர்ச்சை பண்ணி தீர்மானஞ் செய்கிறது. ஆனால், ஸெனெட்டின் இந்தவேலையை அனேக அரசியல் நிபுணர்கள் கண்டிக்கிறார்கள்.

3. நிர்வாகம்

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் உபதலைவர் ஸெனெட் கூட்டத்தில் அக்கிராசனம் வகிக்கிறார். அச்சபை, தன் வேலைகளைப் பல நிரந்தரக் கமிட்டிகளாகக் கூடிச்செய்து முடிக்கிறது. ஒவ்வொரு மசோதாவும் அது சம்பந்தப்பட்ட விஷயாலோசனைக் கமிட்டிக்கு அனுப்பப்படுகிறது. இக்கமிட்டிகளின் தலைவர்களுக்கு மிகுந்த செல்வாக்கும் அதிகாரமு மிருக்கின்றன. அவர்கள் எப்பொழுதும் நிர்வாக சபையுடன் கலந்துகொள்வார்கள். அதனால் அதிகாரப்பிரிவினைக்கொள்கையில் ஏற்படும் குறைகளைத் தவிர்க்க இடமேற்படுகிறது. இக்கமிட்டிகளில் அங்கத்தினர்களின் தொகை குறைந்திருப்பதால் ஆராய்ந்து ஒரு காரியத்தைச்

செய்வதற்குப்போதிய வசதி இருக்கிறது. விவாதமும் விரிவாக நடக்கலாம்.

அமெரிக்க அரசியல் திட்டத்திலேயே ஸெனெட் சபை தான் புதுமையும் வெற்றியும், பொருந்தியுள்ள ஸ்தாபன மாகும். அதன் நீண்ட உத்தியோக காலமும் நிரந்தரத்தன் மையும், குறைந்த அங்கத்தினர்களை யுடைமையும், அதன் விரிவான அதிகாரங்களுஞ் சேர்ந்து, அச் சபையைக் கீழ்ச் சபைக்கு மேம்பட்டதாகச் செய்து விட்டன. அது அதிகச் சுதந்தரத்துடனும், தைரியத்துடனும் தன் அதிகாரங்களைச் செலுத்தி வருகின்றது. அதனை அனுபவமிக்க சிறந்த அரசி யல் வாதிகள் நிறைந்த ஒரு கோஷ்டியென எல்லோரும் ஒப்புக்கொள்கிருர்கள். அது காங்கிரஸின் அதிகார ஸ்தானத் தையே கைப்பற்றிக் கொண்டுவிட்ட தென்னலாம்.

ஜனப்பிரதிநிதிச் சபை: அமைப்பு

ஜனப்பிரதிநிதிச்சபை, பிரஜைகளால் இரண்டு வருஷங் களுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினரைக் கொண்ட தாகும். தத்தம் நாடுகளின் ஜனப்பிரதிநிதிச் சபையினரைத்தேர்ந்தெடுக்கும் உரிமை யுள் ளவரே, இந்த ஜனப்பிரதிநிதிச் சபைக்கும் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். ஒவ்வொரு நாட்டிற்கும் ஏற்படும் பிரதிநிதிகளின் தொகை அதன் ஜனத்தொகையைப் பொறுத்ததாகும். தற்காலம் அச்சபையில் 435 அங்கத்தினர்கள் இருக்கின்றனர். ஓட்டு அளிப்பதற்கு ஜாதி, நிறம், முன் அடிமைத்தன்மை, ஆண் பெண் என்ற வேறுபாடு, முதலிய நிர்ப்பந்தங்கள் சாதாரண மாகக் கிடையா. ஆகையால், 21 வயதிற்கு மேற்பட்ட ஆட வர், பெண்டிர் அனைவரும் ஓட்டு அளிக்கும் சுதந்திரம் உடையவர்களே. ஆனல், எல்லா நாடுகளிலும் இம்முறை

அனுஷ்டிக்கப்படுவதில்லை. பல நாடுகளிற் சொத்து உடைமையும், கல்வியுடைமையும் ஓட்டு அளிப்பதற்கு உரிமையைக் கொடுப்பனவாகக் கொள்ளப்படுகின்றன. உதாரணமாகச் சில நாடுகளில் வரிசெலுத்துவோருக்கு மாத்திரமே ஓட்டு உரிமையுண்டு. சிலவற்றிற் படிக்கத்தெரிந்தவர்களுக்குத்தான் வாக்குரிமை யுண்டு. மஸாச்யுஸெட்ஸில் ஓட்டர்களுக்கு ஆங்கிலம் படிக்கத் தெரியவேண்டும். சில தென்னாடுகளில் ஓட்டு அளிப்போர், தாங்கள் படிக்கும் விஷயத்திற்குப் பொருள்கூறுந் திறமையுள்ளவர்களா யிருக்கவேண்டும். எல்லோருக்கும் வாக்குரிமையுண்டு என்ற அரசியல் விதியைப் புறக்கணிப்பதற்கும், நீக்கிரோவர்களை ஓட்டளிக்கும் சுதந்தரத்தினின்றும் விலக்குவதற்கும், மற்றும் பல தடைவழிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நாடும், ஓட்டு அளிக்கத் தகுதியுள்ளவர்களைத் தீர்மானித்து, அவர்கள் ஓட்டுச்செய்யும் முறைகளையும் தேர்தல் தொகுதிகளின் பிரிவு முதலிய விஷயங்களையுங் கவனித்துக்கொள்ளும். ஒரு ஜனப்பிரதிநிதி ராஜீநாமாச் செய்தால் அந்த ராஜீநாமாவை அந்நாட்டுக் கவர்னருக்கு அனுப்பவேண்டும். சட்டசபைத் தலைவருக்கு அனுப்பவேண்டியதில்லை. மறு தேர்தல் நடத்தும்படி உத்தரவுகளைக் கவர்னர்தாம் அனுப்புவார்.

அங்கத்தினர் இருபத்தைந்து வயதிற்குக் குறையாதவர்களா யிருக்கவேண்டும். அவர் ஐக்கிய நாடுகளின் பிரஜையாகக் குறைந்தது பத்து வருஷங்கள் இருந்திருக்கவேண்டும். மேலும், அவர் தம் தொகுதியின் நாட்டில் வசிப்பவராகவும் இருக்கவேண்டும். ஒருவர் சபையில் அங்கத்தினராக இருக்கும்போது புதிதாய் ஏற்படுத்தப்பட்ட எந்த ஸிவில் உத்தியோகத்திலும் அவர் நியமனம் பெறக்கூடாது. மேலும், ஐக்கிய நாடுகளில் அரசாங்க உத்தியோகம் வகிக்கும் எவருஞ் சட்ட சபைகளில் அங்கத்தினராக இருக்கக்கூடாது.

நிதியைப் பற்றிய விஷயங்களைக் கீழ்ச்சபைதான் முதலில் ஆரம்பிக்கவேண்டும். தலைவர் முதலிய பெரிய அதிகாரிகளைக் குற்றச்சாட்டு மூலம் கண்டித்து விசாரணை செய்ய அக்கீழ்ச் சபைக்குத்தான் அதிகாரமுண்டு. சட்ட நிர்மாணத்தில் அதன் அதிகாரங்கள் ஸெனெட் சபைக்கு உள்ளவை போன்றனவே. அதற்கு நிர்வாக வேலை கிடையாது.

அதிகாரங்கள்

அங்கத்தினர்க்குள்ள குறைந்த கால வரையறையும் அவர்களின் அதிகமான தொகையுஞ்சேர்ந்து சபை தனது வேலையை விரைவிற் செய்யுமாறு தூண்டுகின்றன. அதனால், சபையின் நடைமுறை விதிகள், வேறெந்தச் சட்ட சபையையும் விட மிக்க கடுமையாக இருக்கின்றன.

வேலை நடத்தும் முறை

பிரிட்டனிலும் பிரான்ஸிலும் உள்ளபடி, சபையில் தலைமை வகித்து, வேலைகளைச் சீர்படுத்தி நடத்தப் பொறுப்பேற்கும் மந்திரிச்சபை யில்லாமையால், அதன் வேலையைச் சீராக்கக் கமிட்டிகள் ஏற்பட்டிருக்கின்றன. இத்தகைய கமிட்டிகள், ஏறக்குறைய அறுபதிற்கதிகம் இருக்கின்றன. இவைதாம், அமெரிக்க அரசியல் முறையின் தனிச்சிறப்பாகும். இக்கமிட்டிகளைச் சபைதான் நியமிக்கின்றது. வீதாசார முறைப்படி, பெரும்பான்மையர், சிறுபான்மையர் ஆகிய இரு கட்சிகளின் பிரதிநிதிகள் இவற்றில் இருக்கின்றனர். பிரேரிக்கப்படும் ஒவ்வொரு மசோதாவும் அக்கமிட்டிகளுக்கு அனுப்பப்படுகின்றது. அக்கமிட்டிகள் தத்தங் கூட்டங்களைத் தனித்தனியே நடத்துகின்றன. அவை, மந்திரிகளைத் தம்முன் வந்து தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்

கமிட்டி ஏற்பாடு

கும்படிச் செய்யலாம். ஆனால், அம்மந்திரிகளின் சிபார்சுக் களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்கிற அவசியமில்லை. இக் கமிட்டிகளின் தலைவர்கள் மிக்க செல்வாக்குடையவர்கள். அவர்களுள், வரிக் கமிட்டி, செலவுக் கமிட்டி இவற்றின் தலைவர்கள் நிதிக் காரியதரிசியைவிட மேலான செல்வாக்கும் அதிகாரமும் உள்ளவர்கள். இந்தக் கமிட்டிக ளனைத்தும், சட்டசபையின் சிறு உட்பிரிவுச் சபைகள் என்னலாம். இவை, மசோதாக்களை மறுபடியுஞ் சபைக்குச் சமர்ப்பிக்கா மலும் இருக்கலாம். கமிட்டிகளி லிருந்து திரும்பி வரும் மசோதாக்களைப் பற்றிச் சபையில் நடைபெறும் விவாதம் வெறும் முறையை யொட்டியதே. விரிவான விவாதம் யாதொன்றும் நடைபெறுவதில்லை. பல மசோதாக்கள் சபைக்குத் திரும்பி வராமலே கமிட்டிகூடும் அறைகளி லேயே முடிவடைந்து விடுகின்றன.

இந்த "கமிட்டி ஏற்பாடு" முறையில், நியாயந் தவறி நடப்பதற்கும் லஞ்சம் பெறுவதற்கும் இடமிருக்கின்றது. தங்களுடைய சட்ட நிர்மாணிகள் யாவரென்பது ஓட்டுக் கொடுப்பவர்களுக்குத் தெரியாது. கமிட்டி நடைமுறைகளைப் பத்திரிகைகளிற் போடமுடியாது. முறையற்ற செல்வாக்கின் நிர்ப்பந்தங்களுக்கும், பல மாறுாட்டங்களுக்கும் தக்க வசதி கள் அமைந்துள்ளன. இது நிர்வாகத்தின் கொள்கைகளையும், நடைமுறைகளையும் தடைப்படுத்துகிறது. அதிலும் பெரும் பான்மைக் கட்சி, தலைவருக்கு விரோதமாக இருந்துவிட்டால் விஷயம் விபரீதமே. திறமையைக் காட்ட ஒருவருக்குமே இடமில்லை. போதுமான எதிர்வாத மின்றியும், ஆராய்ச்சி யின்றியுமே மசோதாக்கள் சட்டமாகலாம். பொதுவாகக் கூறுமிடத்து, கமிட்டிகள் ஏற்பாட்டினால், சட்ட நிர்மாணத் தில் ஒன்றுபடுத்தும் ஒரே நோக்கங்கொண்ட ஓர் உறுதி

யான கொள்கைக்கு இடமில்லை. சச்சரவுகளும், சட்டங்களில் முரண்பாடுகளும் உண்டாகின்றன. இவ்வதிகாரப் பிரிவினை யால் அரசியலின் பொறுப்பும் பிரிவுபட்டுச் சீர் குறைகிறது.

மேற்கூறிய காரணங்களால் அமெரிக்க சட்டசபையின் முறை, ஒரு தனிவகையாக வுள்ளது. சட்ட நிர்மாண அதிகாரம் காங்கிரஸினிடமேதான் இருக்கிறது. நிர்வாகத்தினிடம் இல்லை. சட்டசபைகள் அரசாங்கத்தின் நிர்வாகிகளுடன் சம்பந்தமே யில்லாமல் யுக்தியோசனைகளைச் செய்கின்றன. பல விதங்களிற் காங்கிரஸ் ஒரு நிர்வாகக் கூட்டமாகும்.

ஜனப்பிரதிநிதிச் சபையின் தலைவர் சபையினரால் முறைப்படித் தேர்ந்தெடுக்கப் பெற்றாலும், அவர் ஒரு கட்சியைச் சேர்ந்தவரே ஆவர். அடுத்த தேர்தலில் அவர் கட்சி வெற்றி பெற்றால்தான் அவருக்கு உத்தியோகமோ, வருமானமோ நிலை பெறும். அவர் விவாதங்களில் தலைமை வகித்து அமைதி ஏற்படுத்துகின்றார். கேள்விகளின் ஒழுங்கு முறைகளையும், பேசுகிறவர்களின் வரிசைக் கிரமங்களையும் தீர்மானஞ் செய்கின்றார். ஆனால், அவர் தம் கட்சியின் பிரேரணைகள் இனிது நிறைவேறும் நோக்கத்துடனே தான் சபையை நடத்துவார்.

சபைத்தலைவர்

நீதிஸ்தாபனம்

அமெரிக்க அரசியல் முறையில் நீதிஸ்தலங்கள் தாம் சீர்தூக்கிக் காட்டும் நிறைக்கற்கள் என்னலாம். இவை, பிரஜைகளுக்கும் சர்க்காருக்கு மிடையே நிறுத்தநிறை போன்ற நடுநிலைமையை உண்டாக்குகின்றன. சர்க்காரின் பல இலாகாக்களி னிடையிலும் இவை சமரஸத்தை ஏற்படுத்துகின்றன. பிரஜைகளில் ஒவ்வொருவனும் தன் உரிமை

களை அனுபவிக்கத்தக்க பாதுகாப்பளித்து, அரசியல் முறையைப் பற்றித் தீர்ப்புக்கள் கூறுகின்றன. அரசியலின் பாதுகாப்பாளர்களும் அந்நீதி மன்றங்களே தாம். மேலும், அவை தேசிய சட்டசபைக்கும், தனி தேசங்களின் சட்டசபைகளுக்கும் ஏற்படும் சச்சரவுகளைத் தீர்க்கின்றன. அன்றியும், அவை பெரிய சர்க்கார் இலாகாக்கள் மற்ற இலாகாக்களை ஆக்கிரமிக்காம லிருக்கும்படி, பார்த்து வருகின்றன. மற்ற தேசங்களிற் சட்டசபை இயற்றுவதை நீதிஸ்தலங்கள் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டும். ஆனால், அமெரிக்காவில் அரசியல் திட்டத்திலேயே சட்டசபையின் அதிகாரங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறபடியால், அரசியல் விதிகளைப்பற்றி, நீதிஸ்தலங்கள் தீர்ப்புக் கூறலாம். அத்தீர்ப்புக்களினாற் சட்ட சபைகளின் அதிகாரம் எல்லைக்குட்படுகிறது.

அமைப்பு

அரசிய லமைப்பின்படி ஐக்கிய நாடுகளின் நீதியதிகாரம், ஒரு தலைமைக் கோர்ட்டிடமும், காங்கிரஸ் அப்போதைக் கப்போது ஏற்படுத்தும் கீழ்க்கோர்ட்டுக்களிடமும் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. தலைமைக்கோர்ட்டில் ஒரு பிரதம நீதிபதியும், எட்டுக் கூட்டு நீதிபதிகளும் உண்டு. அதன் வருஷாந்தக் கூட்டம் வாஷிங்டன் நகரில் நடைபெறும். குறைந்தது அதற்குக் ஆறு ஜட்ஜுகள் கூடவேண்டும்.

தலைமைக் கோர்ட்டுக்கு அடுத்தாற்போல ஒன்பது சுற்றுப் பிரயாண அப்பீல் கோர்ட்டுக்கள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றிலும் மூன்று அல்லது நான்கு நீதிபதிகள் இருப்பார்கள். பிரதம நீதிபதியும் தலைமைக் கோர்ட்டின் மற்ற ஜட்ஜுகளும் இந்தச் சுற்றுப் பிரயாணக் கோர்ட்டுக்களில் தங்கள் ஆதின எல்லைக்குள் ஜட்ஜுகளாக உட்காருகிறார்கள்.

டிஸ்டிரிட் கோர்ட்டுக்களிலிருந்து வரும் அப்பீல்களை, இந்தக் கோர்ட்டுக்கள் விசாரணை செய்யும். அவற்றின் தீர்ப்புக்கள் பெரும்பாலும் முடிவானவைகளே.

காங்கிரஸ், நியாயாதிபதிகளின் நியமன விதிகளை இயற்றுவதுடன், தலைமைக்கோர்ட்டுக்குக் கீழ்க்கோர்ட்டுக்களை ஏற்படுத்தக்கூடும். தலைமைக்கோர்ட்டு ஜட்ஜுகளின் தொகை, அதின் அமைப்பு, நடைமுறை முதலியவற்றை காங்கிரஸ் தீர்மானிக்கலாம். ஆனால், சமஷ்டிக்கோர்ட்டின் வேலைகளைத் தனி நாடுகளின் கோர்ட்டுக்களுக்கு மாற்றிவிடக் காங்கிரஸுக்கு அதிகாரங் கிடையாது.

செனெட்டின் அங்கீகாரத்துடன் ஐக்கிய நாடுகளின் தலைவர் தாம், நீதிபதிகளை நியமிக்கின்றார். நன்னடத்தையைக் கொண்டு அன்னோர் உத்தியோக காலம் நீடிக்கும். உத்தியோகஞ் செய்யுங்காலத்தில் அவர்களின் சம்பளங் குறைக்கப்படமாட்டாது. குற்றச்சாட்டினால்தான் அவர்களை உத்தியோகத்திலிருந்து நீக்கமுடியும். தலைமை நியாயஸ்தலத்தின் நீதிபதிகள், மிக்கக் கல்வித்தேர்ச்சி யுள்ளவர்களென்றும் நிர்ப்பயமாகத் தீர்ப்புக்கூறுபவர்களென்றும் பிரசித்தி பெற்றவர்களே.

உத்தியோக காலம்

கட்சிகள்

1787-ஆம் வருஷத்திய திட்டத்தின் பயனாக இரண்டு அரசியற் கட்சிகள் உண்டாயின. அவை தேசீயக் சர்க்காரின் அதிகாரத்தை அதிகரிக்கச் செய்யவேண்டுமென்று வாதித்த சமஷ்டி வாதிகள் கட்சி, தனி நாடுகளின் உரிமைகளுக்காக வாதித்த பொது ஆட்சிவாதிகள் கட்சி என்பன. நாளடை

வில் முதற்கட்சி, பலக் குறைவடைந்து மறைந்தே போயிற்று. பொது ஆட்சி வாதிகளின் கட்சி, செல்வாக்குப் பெற்று ஐக்கிய நாடுகளின் ஜனநாயகக் கட்சியாகத் தீர்ந்து விட்டது.

ஜனநாயக வாதிகளும், பொது ஆட்சி வாதிகளும்

ஆண்ட்ரூ ஜாக்ஸன் தலைவராக இருக்கும்போது (1829-1836) ஜனநாயகக் கட்சி, மிகத்தீவிரமாகத் தனிமனிதக் கொள்கையை ஆதரித்தது. அதாவது ஒவ்வொருவருக்கும் பூர்ண வாக்குரிமையும் பிரஜைகளுக்குரிய உரிமைகளும் வேண்டுமென்பதே. இதற்குப் பெருத்த எதிர்ப்பு ஏற்பட்டது இயற்கையே. அடிமைக்கொள்கை பொது ஆட்சி வாதிகளின் சிறப்பை விரிவாக்கியது. அவ்விஷயம் உள்நாட்டுப்போரால் தீர்ந்து போனதெனினும், தீர்மானமான நோக்கங்களோ கொள்கைகளோ இல்லாமலே, இன்றும் ஜனநாயகக் கட்சியும், பொது ஆட்சி கட்சியும் இருந்துவருகின்றன. இவ்விரு கட்சிகளைப் பற்றியும் ஒரு பிரபல ஆசிரியர் பின் வருமாறு கூறியுள்ளார். "அவை சீட்டு ஒட்டப்பட்ட காலிப் புட்டிகளே. அவற்றில் எந்தத் திராவகத்தை வேண்டுமானாலும் ஊற்றலாம். தீர்மானக் கொள்கை ஒன்றுமில்லாமலே ஒவ்வொரு கட்சியும் தேர்தலில் வெற்றிபெறப் பார்க்கிறது."

கட்சி யேற்பாடு

அரசியலில், நிர்வாகத்திற்கும் சட்டசபைக்குமிடையே விதிக்கப்பெற்ற அதிகாரப் பிரிவினை, நடைமுறையில் அனுஷ்டானத்தில் வர முடியவில்லை. இவ்விரண்டையும் பிணைப்பதற்கு, ஒரு விசேஷ அரசியல் ஸ்தாபனம் ஏற்படுவது இன்றியமையாததாயிற்று. யூனியனில் மென்மேலும் சில பிரதே

சங்களும், பாகங்களும் சேரச்சேரத் தலைவர் ஸ்தானத்திற்கு அபேக்ஷகர்களைப் பொறுக்கும் வேலையும், கவர்னர்கள் முதலிய பெரிய பதவிகளுக்குத் தகுதியுள்ளோர்களைத் தேர்ந்தெடுக்கும் வேலையும் மிக்க சிரமமுள்ளவையாகிவிட்டன. எல்லா நாடுகளிலும் அரசாங்கம் தேர்தல் முறையாலே நடந்து வந்தது. எல்லா உத்தியோகஸ்தர்களும் தேர்ந்தெடுக்கப் பெற்று வந்தனர். உத்தியோக காலமோ குறுகியது. தேர்தலில் வெற்றி பெற்றவர்களுக்குத்தான் பதவியும் வேலையும் என்பது நியாயமாகக் கருதப்பட்டது. வெற்றிபெற்ற கட்சியினருக்கு எல்லா உத்தியோகங்களும் அளிக்கப்பட்டன. தேர்தல்களும் அடிக்கடி ஏற்பட்டமையால், கட்சியேற்பாடு திறமையாக நடக்கவேண்டிய அவசியம் உண்டாயிற்று. ஜனங்களே எல்லா உத்தியோக ஸ்தானங்களுக்கும் நியமனஞ் செய்வதென்பது சாத்தியமன்று. ஆகையால், ஐக்கிய நாடுகள் முழுவதிலுஞ் சிறு கட்சி நிலயங்கள் பல ஏற்படுத்தப்பட்டன. ஆரம்பக்கூட்டம் (அதாவது மிகவுஞ் சிறிய தேர்தல் தொகுதியில் நடக்கும் ஓட்டர்களின் கூட்டம்) முதல், தேசீய நியமனக் கன்வென்ஷன் கூட்டம் வரையில் ஒரு விரிவான கட்சி அமைப்பு ஏற்பட்டது. தேசீய நியமனக் கன்வென்ஷன் தான் இந்த ஏற்பாட்டின் சிகரமாகும். அதுதான், தலைவர் உபதலைவர் ஸ்தானங்களுக்குக் கட்சியபேக்ஷகர்களைத் தேர்ந்தெடுக்கும்.

அரசியற் கட்சியேற்பாடு, சட்ட பூர்வகமாக ஏற்பட்ட அரசியல் திட்டம், அத்திட்டத்தை விளக்க அமைக்கப்பட்ட நீதிஸ்தாபனம், இம்மூன்றும் ஐக்கிய நாடுகளின் அரசியலின் விசேஷ நலங்கள் என்று லார்டு பிரைஸ் கூறியுள்ளார். உண்மையில், கட்சியேற்பாடு, தொடக்கத்தில் ஐக்கிய நாடுகளுக்கு மிகவும் உதவியளிப்பதாக இருந்தது. தேர்தல்

கட்சி ஏற்பாட்டின் உபயோகங்கள்

வேலையை முன்னதாக வகுத்து, ஓட்டுச்செய்வோர் தங்கள் கடமையை இயற்ற அது உதவி புரிந்தது. மேலும், அது பெரும்பான்மைக் கட்சியின் அதிகாரத்தை நிலை நிறுத்தியது. ஏழைகள் செல்வவான்கள், உள்நாட்டார் பிற நாட்டினர், அனைவரையும் வித்தியாசமின்றி ஒன்று சேர்த்து ஐக்கிய நாட்டுப் பிரஜைகளுக்குள் ஓர் ஒற்றுமையை ஏற்படுத்தியது. கட்சி யேற்பாடுதான் முதன் முதலாக உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் அங்குவந்து குடியேறினவர்களை அமெரிக்க ஜனங்களுடன் ஒன்று சேர்த்தது. அதுவே, அன்னியர் வந்து குடியேறினவுடனே அவர்களைத் தன்னுடன் இழுத்துக்கொண்டு அந்நாட்டுச் சண்டை சச்சரவுகளில் ஈடுபடும்படிச் செய்தது. கடைசியாக, அது நாட்டில் உள்ள எல்லா வகுப்பினரையும் தரம் பார்த்துப் பிரித்து, அவர்களுக்குத் தகுதியான ஸ்தானங்களில் அமர்த்தி, அமைதியை உண்டாக்கிற்று.

கேடுகளும், ஊழல்களும்

ஆனால், அமெரிக்கக் கட்சிஸ்தாபனம் சட்டசபைப் பிரதிநிதிகள் செய்யும் வேலையில் ஊக்கங் கொள்வதில்லை. ஏனெனில், ஏதாவது ஒரு நடவடிக்கையெடுத்துக்கொள்ளத் தேவையான கொள்கையோ, விதிகளோ, திட்டமோ அதனிடமில்லை. ஜனப்பிரதிநிதிகள் தலைவர்களுக்கு ஒழுங்குடன் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்றுகூட அது நிர்ப்பந்தஞ் செய்ய முடியாது. இதற்குக் காரணம், காங்கிரஸில்கட்சிகளுக்குத் தீர்மானமான தலைவர்கள் இல்லை. இங்கிலந்தில் அரசாங்கத்திற்கும், எதிர்க்கட்சிக்கும் உள்ள கட்டுப்பாடுகளும் ஒப்பந்தங்களும் இங்கு இல்லாமையால், ஊழல்களும் குறைகளுங் காணப்படுகின்றன.

அமெரிக்கக் கக்ஷியேற்பாட்டில் ஊழல்கள் அதிகமாகவே, சில சூழ்ச்சிக்காரர்களின் கைகளிலேயே கட்சிகள் யாவும் அடங்கியிருந்தன. இதற்குப் பெருத்த எதிர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து மேற்கூறிய ஊழல்களை யகற்றச் சட்டங்களை முன்னிட்ட முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. பிரஜைகளின் ஆரம்பக்கூட்டம் இப்பொழுது சட்டத்தால் ஏற்பட்ட ஒரு ஸ்தாபனமாகிவிட்டது. ஒரு சிலர் சேர்ந்து இனி இக்கூட்டங்களில் முரண்பாடுகளைச் செய்ய முடியாது. இவற்றில் ஜனங்கள் நேர் முகமாகவே நியமனங்கள் செய்ய வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. இவை ஜனநாயக ஆட்சிக்கு மிக்க சாதகமானவையெனப் பாராட்டப்படுகின்றன.

அத்தியாயம் 15

ஸ்விட்ஜர்லந்து I

நிகரற்ற அரசியல் திட்டம்: கான்டன்களின் அரசாங்கம்

பதின்மூன்றாவது நூற்றாண்டின் இறுதியில் யூரி, ஷ்வீட்ஸ், அண்டர்வால்டேன், என்னும் மூன்று ஸ்விட்ஜர்லந்தின் காட்டுப் பிரதேசங்களால், தற்காப்புக்காக ஏற்படுத்தப்பட்ட சங்கம், நாளடைவில் வலுப்பெற்று, விருத்தியடைந்து, பதினாறாவது நூற்றாண்டில் பதின்மூன்று பிரதேசங்களடங்கிய ஒரு கூட்டமைப்பு அரசியலாக மாறிற்று. பின்னர் உண்டான பல ராஜீயக் கிளர்ச்சிகளின் பலனாக ஸ்விஸ் அரசியலில் அநேக மாறுதல்கள் ஏற்பட்டன. முடிவில், 1874-ம் வருஷம்

உற்பத்தி

பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி நாட்டின் இரு சட்ட சபைகளும் ஒன்றுகூடி ஒரு புதிய சமஷ்டித் திட்டத்தை வகுத்தன. அத்திட்டம் பொதுஜன சம்மதத்தைப் பெற்றது. அத்திட்டமே, பின்னர்ச் செய்யப்பட்ட சில சிறு திருத்தங்களுடன், இன்று "ஸ்விஸ் கான் பிடரேஷன்" என்ற பெயருடன் நடைபெற்று வருகிறது.

ஸ்விட்ஜர்லந்தின் மக்கள், ஜாதியிலும் மதத்திலும், பாஷையிலும் பல பிரிவுகளைக் கொண்டிருந்தும், தற்காப்பு விஷயத்தில் ஒன்று பட்டவர்களாயிருந்து சிறப்பு ஏற்படுத்தியுள்ள அரசியல் திட்டம் உலகிலுள்ள மற்ற குடியரசுத்திட்டங்கள் அனைத்தினும் மிக்க சிறப்புற்றதெனக் கருதப்படுகின்றது. அந்நாட்டில் ஜனநாயகக் கொள்கை நன்குவேரூன்றி நிலைபெற்றுள்ளதென்னலாம். அங்குள்ள சிறுநாடுகளே அந்தச் சமஷ்டியின் உறுப்புக்கள். அந்நாடுகளுக்குப் பிரஜைகளே மன்னர்கள். அவர்களாலேயே மாஜிஸ்ட்ரேட்டு முதலிய பெரிய உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப் பெறுகின்றனர். பொதுஜனங்கள் கூடி இயற்றியுள்ள சட்ட திட்டங்களன்றி அங்கு வேறு அதிகாரங்கள் கிடையா. சட்டசபைகள் இருக்கின்றனவெனினும், இன்றுஞ் சட்ட நிர்மாணத்திலும், அவற்றை நிறைவேற்றுவதிலும் பொது ஜனங்களுக்கு உரிமையுண்டு.

ஸ்விஸ் சமஷ்டியில், 22 கான்டன்கள் இருக்கின்றன. அவைகளுள் மூன்று அரைக்கான்டன்களாகப்பிரிக்கப் பெற்றுள்ளன. ஆகவே, அந்தச் சமஷ்டியில் 25 உறுப்புக்கள் உள்ளன. ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு தனியரசாங்கமும், தனிச் சட்டமும் உண்டு. தேசத்தைத் அன்னிய நாட்டாருக்குக் கீழாக்காமற் பார்த்துக்கொள்வது, உள்நாட்டில் அமைதியும் ஒழுங்கும் நிறுவுவது, கான்

டன்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பது, பொது நலத்தை அபிவிருத்தி செய்வது, இவை ஸ்விஸ் சமஷ்டியின் நோக்கங்களாம். ஒவ்வொரு கான்டனின் நில எல்லைகளுக்கும், சுதந்திரத்திற்கும், அரசியலுக்கும், பிரஜைகளின் உரிமைகளுக்கும், ஒரு குறைவும் ஏற்படாவண்ணம் பாதுகாத்து வருவதாகச் சமஷ்டி உத்தரவாதங் கொடுத்துள்ளது.

ஒவ்வொரு கான்டனின் அரசியல் திட்டமும் சமஷ்டிச் சட்டசபையின் அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும். சிறு திருத்தங்கூடச் சமஷ்டிச் சட்டசபையினால் அங்கீகரிக்கப் படாவிடிற் செல்லாது. இவ்விஷயத்தில் இது அமெரிக்க சமஷ்டித் திட்டத்திற்கு நேர் மாறுபாடானது. ஸ்விஸ் சமஷ்டியிற் சிறிது பெரிது என்ற பேதமின்றி எல்லாக் கான்டன்களும் சம அந்தஸ்தும், உரிமைகளும் பெற்றவை. ஆனால், அவை தமக்குள்ளேயே அரசியல் சம்பந்தமாக எவ்வித உடன்படிக்கையையுஞ் செய்து கொள்ளக்கூடாது. சில குறிப்பிட்ட விஷயங்களைப் பற்றி கான்டன்கள் தமக்குள் உடன்படிக்கைகள் செய்து கொள்ளலாம். அவைகளுக்குள் ஏற்படும் சச்சரவுகளைச் சமஷ்டிச் சர்க்காரின் தீர்மானத்திற்கு அனுப்பவேண்டும். எந்தக் கான்டனும் சண்டையோ, யுத்த ஏற்பாடோ செய்யக்கூடாது.

ஜனங்களின் ஆட்சி என்ற கொள்கைக்கு அரசியலமைப்பின் அங்கங்களின் மூலம் பூர்ண சுதந்திரம் அளித்திருக்கும்

அரசியலின் தனி அம்சங்கள்

இந்த ஸ்விஸ் திட்டம் ஒரு நிகரற்ற திட்டமாகும். அரசியல் திட்டமும் ஜனங்களாற்றான் சட்டமாக்கப்பட்டது. ரெபரெண்டம் என்னும் ஜனவாக்குப்பெறும் முறையாலும், இனிஷியேட்டிவ் என்னுஞ் சட்டத்தைத் துவக்கும் முறை

யாலும், பிரதிநிதித் தன்மையை மேற்கொண்ட ஜனநாயகத்தில் இருக்குங் குறைகளை நீக்க முயற்சிகள் செய்யப்படுகின்றன. முதன் முறை, சட்ட நிர்மாண வேலையை பிரதிநிதிச் சபையிலிருந்து ஜனங்களின் முன்னே கொண்டுவந்து முடிவு செய்வதற்குக் வசதியளிக்கின்றது. இரண்டாவது முறை, ஜனங்கள் தாம் விரும்பியவாறு சட்டங்களை இயற்றிக்கொள்வதற்கு ஏதுவாகின்றது. ஸ்விட்ஜர்லந்தின் நிர்வாக அதிகாரிகள், சட்டசபைகளில் தம் செல்வாக்கைக் கொண்டு நாட்டையாளும் சர்வாதிகாரம் வாய்ந்த ஒரு மந்திரிச் சபையின் அங்கத்தினரல்லர். அவர்கள், குறித்தகாலம் வரையில் தங்கள் வேலையை ஜனங்களினுடைய மேற்பார்வையிற் செய்யும் பொதுஜன ஊழியர்களே யாவர்.

தனி உரிமை மசோதா இல்லை

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலைப்போல ஸ்விஸ் திட்டம் அவ்வளவு சிற்றடக்கமானதன்று. ஓர் அரசியற் சாசனத்தில் விளக்கவேண்டாத பல சிறு விஷயங்களெல்லாம் இதில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. இதில் யாதொரு தனியுரிமை மசோதாவுங் கிடையாது. ஆனல் பொது விதிகளைக் கூறும் முதல் அத்தியாயத்தில் தனி மனித உரிமைகளைப்பற்றிப் பல சட்டப் பிரிவுகள் இருக்கின்றன. உதாரணமாக, ஒரு பிரிவின்படிச் சட்டத்தின்முன் எல்லா ஸ்விஸ் மக்களும் சம உரிமை அல்லது நிலைமை யுடையவர்களே. ஸ்விட்ஜர்லந்தில் நிலைமை, பிறப்பு, உயர்குடும்பம், முதலிய தனியுரிமைகளே கிடையா. மற்றொரு பிரிவின்படி, பத்திரிகைகளுக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது. பிரஜைகள், சங்கங்கள் ஏற்படுத்தி அவற்றின்மூலம் மனுச் செய்து கொள்ள உரிமையுண்டு. ஜூரிகள் மூலம் விசாரணையென்பது கிடையாது. அசாதாரணமான விசாரணை ஸ்தா

பனங்கள் ஏற்படுத்துவது கூடாது. மதவிஷயமாகத் தத்தம் இஷ்டம்போல வழிபடுவதற்கு வேண்டிய வசதிகளும் உரிமைகளும் எல்லாக் கான்டன்களிலும் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், மதக்கொள்கைகள் ஜனசமூகக் கடமைகளுக்கு மாறுபட்டிருக்கக் கூடாது. ஒருவனிடமிருந்து அவன் சம்பந்தப்படாத மதக்கூட்டத்தார் வரிகள் வாங்கக்கூடாது.

அதிகாரப் பிரிவினை

அதிகாரப்பிரிவினை சம்பந்தமாக இங்குக் கையாளப்பட்டுவருங் கொள்கை அமெரிக்காவில் சமஷ்டிச் சாக்காரில் உள்ளதுபோன்றதே. சமஷ்டிச் சர்க்காருக்கு என்று அளிக்கப்பெற்ற அதிகாரங்கள் நீங்கலாக, மற்ற எல்லாவற்றிலும் கான்டன்களெல்லாம் தத்தம் பிரதேசங்களிற் பூர்ண ஆட்சிப்பொறுப்பு கொண்டவைகளே. அதாவது, சமஷ்டிச் சர்க்காருக்கு உரியவையெனக் குறித்தளிக்கப்படாத எல்லா அதிகாரங்களையும் அவைகளே நடத்துகின்றன. ஆகையால், ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் யார் அதிகாரம் பெற்றவர் என்ற சச்சரவு ஏற்படும்பொழுது, சாதாரணமாகக் கான்டனின் சார்பாகவே அபிப்பிராயங் கொள்ளப்படும்.

சமஷ்டிச் சர்க்காரின் தனிப்பட்ட உரிமைகள்

சமஷ்டிச் சர்க்காருக்குச் சில விஷயங்களில் தனிப்பட்ட அதிகாரங்களும் மற்றவைகளிற் சமமான அதிகாரங்களும் இருக்கின்றன. தனியதிகாரங்களாவன:— அன்னியநாட்டுவிவகாரங்கள், போர்ப்படை விஷயங்கள், நிதி, தேசத்தின் நன்மைக்குரிய பொதுவான தொழில் அபிவிருத்தி வேலைகள்.

(1) அன்னிய நாட்டு விவகாரங்களைச் சமஷ்டிச் சர்க்கார் கவனிக்கும். அந்நிய நாடுகளுக்குத் தூதர்களை நியமனஞ்

செய்வது, பிறநாட்டிலிருந்து வரும் தூதர்களை வரவேற்பது, போர்புரிவது, சமாதானஞ் செய்வது, வியாபாரம் வரிகள் விஷயமாக ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் செய்வது, முதலியன அதன் வேலைகளாம். பொதுச் சிக்கனம், பொலீஸ், எல்லை விஷயங்கள், முதலியவைகளிற் கான்டன்களே அன்னிய நாடுகளுடன் உடன்படிக்கைகள் செய்து கொள்ளலாம். ஆனால் சமஷ்டிக்கு விரோதமாகவோ, மற்ற கான்டன்களுக்குப் பாதகமாகவோ அவைகள் இருக்கக்கூடா என்ற நிபந்தனை மட்டும் உண்டு.

(2) சமஷ்டியோ அல்லது கான்டன்களோ நிரந்தரமாய்ச் சேனைகளைத் திரட்டி அவற்றைப் பரிபாலித்து வரக்கூடாது. திடீரென்று ஒரு கான்டனுக்கு ஓர் ஆபத்து நேரிடின், அது அந்நிகழ்ச்சியைச் சமஷ்டிச் சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டும். அப்பொழுது சமஷ்டிச் சர்க்கார் எல்லாக் கான்டன்களையும் அதற்கு உதவி புரியுமாறு உத்தரவிடும். அதற்கிணங்கி எல்லாக் கான்டன்களும் நடக்கவேண்டும். பத்துவயதிற்கு மேற்பட்ட பையன்கள் ஸ்கூல்களில் போர்ப்படைப் பயிற்சி பெறவேண்டு மென்பது சட்டம். அங்கு ஒவ்வொரு ஆடவனும் அரசாங்கத்தால் அழைக்கப்படும் பொழுது போர் முகத்திற்குச்செல்ல வேண்டிய கடமையுடையவனுவன். படைகளின் அமைப்பு, பயிற்சி, நிர்வாகம், யுத்ததளவாடங்கள் முதலியவனைத்தையும் சமஷ்டிச் சர்க்காரே கவனிக்கும். ஆனால் சைனியத்தின் பல வகுப்புகளின் ஏற்பாடு, அவைகளைத் திறமையாகக் பரிபாலிப்பது, அவற்றின் அதிகாரிகளை நியமனஞ் செய்தல், பதவி, சம்பளம் இவற்றின் உயர்ச்சி, முதலியவைகளைக் கான்டன்கள் தாம்கவனிக்கவேண்டும். ஆயினும், அவை சமஷ்டிச் சர்க்கார் ஏற்படுத்தியிருக்கும் பொது விதிகளைப் பின் பற்றியே நடக்க வேண்டும்.

(3) நிதி விஷயத்தில், சமஷ்டியின் சொத்து, தபால் தந்தி, நாணயம், பாங்கி, சுங்கம், காவல், சாராயம், வெடி மருந்து செய்வது, இவற்றைச் சமஷ்டிச் சர்க்காரே கவனிக்கும். இவைகளிலிருந்து வருமானம் செலவிற்குப் போதாவிட்டால் அது கான்டன்களின் நிலைமைக்கேற்றவாறு அவற்றின் உதவியைக் கேட்கலாம். சமஷ்டிச் சர்க்கார் இராணுவ வேலையிலிருந்து விலகவேண்டுமென்று கேட்பவருக்கு விதிக்கும் வரியைத்தவிர வேறெந்த வரியையும் நேர்முகமாக விதிக்க முடியாது.

(4) பதிப்புரிமைகளும், பேட்டேன்டுகளும் சமஷ்டி நிர்வாகத்தின்கீழ் இருக்கின்றன. இருப்புப்பாதைகள் அதற்குச் சொந்தமானவை. அவைகளை நிர்வகித்து நடத்துவதும் அதுதான். மேற்படிப்பு, சர்வகலாசாலைப்படிப்பு, இவற்றையும் அதுவே நிர்வகிக்கிறது.

சேர்ந்தனுபவிக்கும் அதிகாரங்கள்

கான்டன்களுடன் சேர்ந்தாற்போலச் சமஷ்டிச் சர்க்காரும் சில அதிகாரங்களைச் செலுத்துகிறது. தொழில், இன்ஷ்யூரன்ஸ், பத்திரிகைகள் நிர்வாகம், போக்கு வரவுக் குரிய சாலைகளமைப்பும் அவற்றின் நிர்வாகமும், இவைகளிற் கான்டன்களுக்கும் சமஷ்டிக்கும் அதிகாரங்கள் உள்ளன. ஆனால், சமஷ்டிச் சர்க்கார் இயற்றுஞ் சட்டம் தனிக்கான்டன் சட்டத்தை மீறியதாகும்.

சுங்கம். தபால், தந்தி முதலிய சில விஷயங்களுக்குச் சமஷ்டிச் சர்க்காருக்குத் தனி யாட்சிஸ்தாபனங்கள் இருந்தபோதிலும், இருப்புப்பாதை, கல்வி, எடுத்தல் முகத்தல் நீட்டல் என்ற அளவைகள், முதலிய பகுதிகளுக்கு அதிக

மாகக் கான்டன் நிர்வாகிகளின் ஒத்துழைப்பையும், உத வியையும் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. அமெரிக்க அரசியன் முறைக்கு மாறுபாடாக இருக்கும் இந்த விசேஷ ஏற்பாட்டின் நோக்கங்கள் இரண்டு. முதன்மையாக, இருவித ஸ்தா பனங்களினால் ஏற்படக்கூடிய வீண் செல வைக் குறைக்கின்றது. ஸ்விட்ஜர்லந்து போன்ற சிறிய தேசத்திற்கு இது ஒரு முக் கியமான விஷயமாகும். இரண்டாவது, கான்டன்கள் சமஷ்டி யிடங் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கும், நல்லெண்ணத்திற் கும் இது ஓர் அறிகுறியாக இருக்கிறது. மேலும், சில அதி காரங்கள் மத்திய சர்க்காரிடம் இருப்பது ஜனங்களுக்கு அதி ருப்தியை உண்டாக்காது.

நிர்வாக ஸ்தாபனங்கள் கான்டன்க ளுடையனவே

மற்றொரு விஷயத்திலும் ஸ்விட்ஜர்லந்தின் அரசியன் முறைக்கும், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியன் முறைக் கும் வேறுபாடுள்ளது. அதாவது, அமெ ரிக்கக் காங்கிரஸோ, அல்லது தனி நாடோ நிறைவேற்றுஞ் சட்டம் அரசியல் திட்டத் திற் குட்பட்டதா என்பதைச் சமஷ்டிக் கோர்ட்டு விசாரணை செய்து தீர்ப்பளிக்கும். ஆனால், ஸ்விட் ஜர்லந்திலோ, சமஷ்டிச் சட்டசபைதான் அவ்விஷயத்தைத் தீர்மானிக்கும். அரசியல் திட்டத்தைவிளக்கிக்கூறும் பொறுப் பைச் சட்டசபையினிடமே விட்டுவிடுவது, அவ்வளவு நல்லதா என்ற ஐயப்பாடு யாவர் மனத்தும் எழக்கூடியதே. அரசியல் சம்பந்தமே யற்ற ஒரு தனி நீதி ஸ்தாபனம் அப் பணியைச் செய்யவிடுவது மேலானதாகும் என்பது யாவரா லும் ஒப்புக் கொள்ளக்கூடிய விஷயமாகும். ஆனால், நீதி இலாகாவை நிர்வாகத்திற்கும், சட்ட நிரூபண அதிகாரத்

அரசியலின் விளக்கம்

திற்கும் கீழே அடக்கிவைத்திருப்பதுதான், ஐரோப்பிய உள்நாடுகளில் தொன்று தொட்டு வரும் அரசியல் வழக்கமாக இருந்து வருகிறது.

அரசியல் திட்டத்தில் முழுமாறுதலுக்கும் ஒரு பாகத் திருத்தத்திற்கும் விதிகள் ஏற்பட்டுள்ளன. ஆனால், அவ்விரண்டிற்குமுள்ள மாறுபாடுகள் தெளிவாகவும் நுணுக்கமாகவும் நிர்ணயிக்கப்படவில்லை. முழுமாறுதலுக்கு மூன்று வகைகள் சொல்லப் பட்டிருக்கின்றன. அவை மிகவும் நீண்டவையாய் இருப்பதாலும், 1874-ம் வருஷத்திற்குப் பிறகு அவை, கையாளப் பெறாமையாலும், அவற்றை இங்கே விளக்கத் தேவையில்லை.

அரசியல் திருத்தம்

திட்டத்தின் ஒரு பாகத்தைத் திருத்துவதற்கு இரு வழிகள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அதில் ஒன்று எளிதானதும், அடிக்கடிக் கையாளக்கூடியதுமாகும். சமஷ்டிச் சட்டசபைகள் இரண்டும் தனித்தனியே ஒரு திருத்தத்தை நிறைவேற்றவேண்டும். அவ்வாறு நிறைவேறியபின் அத் திருத்தம் பொதுஜனங்களுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது. பெரும்பான்மையான கான்டன்களும், தேசமக்களும் அதை ஆதரித்தால், அது சட்டமாகி அனுஷ்டானத்திற்கு வரும். ஒவ்வொரு கான்டனின் ஓட்டும், அதன் பிரஜைகளின் பெரும்பாலார் ஓட்டுக்களைக் கொண்டு தீர்மானிக்கப்படும். பாதிக் கான்டன்களின் ஓட்டுக்கள் அரையோட்டுக்களாகக் கணக்கிடப் படுகின்றன.

மற்றொருவழி, இனிஷியேட்டிவ் என்பதாகும். அதன் படி, 50,000 ஓட்டர்கள் ஒன்று சேர்ந்து ஒரு திருத்தம் வேண்டியதென்று பொதுவாக மனுச்செய்து கொள்ளலாம்.

சமஷ்டிச் சட்டசபை அதற்கிணங்கினால், திருத்த மசோதா ஒன்றை உருவாக்கி, அதற்குப் பிரஜைகளின் அனுமதியைப் பெறவேண்டும். இதுவுமன்றி, 50,000 ஓட்டர்கள் தாமே ஒரு திருத்தத் தீர்மானத்தைக் கொண்டுவரலாம். சமஷ்டிச் சட்டசபை இதனை அங்கீகரிக்காவிடில், பொது ஜனங்களின் அபிப்பிராயத்தைப் பெற்று, அதற்கேற்ற மசோதாவை தயாரித்து ஜனங்கள் சம்மதத்திற்கு அனுப்பவேண்டும். ஜனங்களிற் பெரும்பான்மையோர் அம்மாறுதலை ஆதரித்து விட்டால், ஜனங்களின் விருப்பப்படி அரசியல் திட்டம் மாற்றப்பட்டதாகக் கருதப்படும். எந்தத் தீர்மானமும், பொது ஓட்டர்களிற் பெரும்பான்மையோரும், கான்டன்களின் பெரும்பான்மையும் அங்கீகரித் தாற்றான் சட்டமாகும்.

கான்டன்களின் அரசியல்கள்

ஒவ்வொரு கான்டனுக்கும் ஒரு தனி அரசியல் திட்டம் இருக்கிறது. சமஷ்டிச் சட்ட சபையின் சம்மதியுடன் அவ்வரசியலைத் திருத்தக் கான்டன் சர்க்காருக்கு உரிமையுண்டு. ஆனால், சமஷ்டி அரசியலுக்கு மாறுபாடாக அதில் யாதொன்றும் இருக்கக் கூடாது. கான்டன் சர்க்கார் குடியரசு முறையைத் தழுவியதாக இருக்கவேண்டும். பெரும்பான்மையரான பிரஜைகள் இஷ்டப்பட்டால் அவ்வரசியலில் திருத்தங்கள் செய்ய வசதியிருக்க வேண்டும். தங்கள் அரசியல்களைச் சிறப்புறச் செய்வதற்கு ஸ்விஸ் கான்டன்கள் எப்பொழுதும் ஆராய்ச்சிகளும், பரீக்ஷைகளும் செய்துகொண்டே இருக்கின்றன. அவை, ஐரோப்பாவின் ஜனநாயக உருவை அமைக்கும் உலைக் கூடங்கள் என்னலாம். கான்டன்கள் என்னும் 25 பட்டறைகளிற் சாத்தியமான எல்லா அரசியல் திட்டங்

பலவிதத் திட்டங்கள்

களும் காய்ச்சியடித்துச் செப்பனிடப் படுகின்றன. பரீக்ஷை களில் ஏதேனுமொன்று வெற்றிகரமாக அமைந்தால், அதனை ஒன்றன் பின்னென்றாக எல்லாக் கான்டன்களும் கைக் கொண்டுவிடும். முடிவில் அது சமஷ்டித் திட்டத்தின் ஓர் அம்சமாக நிலை நிறுத்தப்பெறும், சமஷ்டித் திட்டமே கான் டன்களின் இத்தகைய அனுபவத்தால் தான் மிக்க மேம் பாடும், விருத்தியுமடைந்திருக்கின்றது. இக் கான்டன்கள் ஜனநாயக ஆட்சி முறைகளுக்கு விதை தெளிக்கப் பெறும் நாற்றங்கால்கள் என்று ஒருவர் கூறியுள்ளார்.

சட்ட சபை

சட்ட நிர்மாண ஏற்பாட்டில், கான்டன் சர்க்கார்களுக் குள்ளேயே பல வேறுபாடுகள் இருக்கின்றன. சில கான்டன் களில் மூலாதாரமான பொது அதிகாரங்க ளனைத்தும், லாண்ட்ஸ் ஜேமேய்ன்ட் என்ற பிரஜைகளின் பிரதம சபையிடம் ஒப்படைக் கப் பட்டிருக்கின்றன. மற்றவைகளில் ஒரு பிரதிநிதிச் சபையே எல்லா அதிகாரங்களையும் வகித்துவருகின்றது. ஆனால், பிரதிநிதிச் சபையுள்ள கான்டன்கள் இருவகைப் படும். ஒன்றில், சட்ட நிர்மாண விஷயத்திற் பொதுஜன வாக்குப் பெறும் முறை, அவசியமாக நிறைவேறப் பெற வேண்டும். மற்றொன்றில், ஜனங்கள் இஷ்டப்பட்டால் மாத்திரமே அம்முறை கையாளப்படும்.

கான்டனிலுள்ள வயது வந்த எல்லா ஆடவர்களுங் கொண்ட கூட்டத்திற்கு “லாண்ட்ஸ் ஜெமெய்ன்ட்” என்று பெயர். அது பசும்புல் படர்ந்த மைதானத்தில் வருஷத்திற் கொருமுறை கூடுகின்றது. அது லாண்ட மான் என்ற பிரதம நிர்வாக அதிகாரியின் தலைமையிற் கூடும். அவர் சென்ற வருஷத்து நிகழ்ச்சிகளைப் பற்றி ஒரு சுருக்கமான

முன்னுரைப் பிரசங்கஞ்செய்த பிறகு கடவுள் வணக்கஞ் செய்வர். அதன்பிறகு நடவடிக்கைகள் தொடங்கப் பெறும்.

1. "லாண்ட்ஸ் ஜெமெய்ன்ட்" அமைப்பும், அதிகாரமும்

அது லாண்டு ராத் என்னும் பெரிய கவுன்ஸில் சமர்ப்பித்த பிரேரணைகளையெல்லாங் கவனித்து ஆராயும். கை தூக்கு முறைப்படித்தான் ஓட்டு எடுப்பது அங்குள்ள சாதாரண வழக்கம். அரசியல் திருத்தங்களுக்கு அதிகாரங் கொடுத்தல், சட்டங்கள் இயற்றுதல், வரிகளை அனுமதித்தல், கான்டனின் எல்லா நீதி நிர்வாக அதிகாரிகளையுந் தேர்ந்தெடுத்தல், முதலிய அதன் வேலைகளாம்.

2. பெரிய கவுன்ஸில்

பெரிய கவுன்ஸில் என்பதற்குக் கான்டனல் கவுன்ஸில் என்றும் பெயர். இது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு பிரதிநிதிச்சபை. பிரதம சபையான "லாண்ட்ஸ்ஜெமெய்ன்ட்" இருக்குமிடங்களில் இதன் வேலைகள் மிகக் குறைவே. அவை, அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பது, கணக்குகளைப் பரிசோதிப்பது, விசேஷ உத்தரவுகள் போடுவது, அஸெம்பிளிக்குப் பிரேரணைகள் சமர்ப்பிப்பது, முதலியனவாம். ஆனால், "லாண்ட்ஸ்ஜெமெய்ன்ட்" சபை இல்லாத மற்ற கான்டன்களில், பெரிய கவுன்ஸில் என்பது ஒரு முக்கியமான ஸ்தாபனமாகும். அந்நாடுகளில் அதுதான் சட்டமியற்று மதிகாரமுடையது. ஆனால், எங்குப் பொது ஜனங்களின் ஓட்டுப்பெறும் முறை கட்டாயமாக உள்ளதோ, அவ்விடம் அதன் பிரேரணைகள் தாற்காலிக மானவையே. எங்குப் பொதுஜன ஓட்டு, கட்டாயமில்லையோ, அங்கு அதன் தீர்மானங்கள் முடிவானவை. அது நேர்முகமாக ஜனங்களின் ஓட்டுக்களால் தேர்ந்தெடுக்கப் படுவதாகும். ஓட்டுக்கொடுப்

பவர்கள் பூர்ணப் பிரஜை யுரிமைவாய்ந்த இருபது வயதிற்கு மேற்பட்ட ஆடவர்களாக இருக்கவேண்டும். உத்தியோக காலம் ஒரு வருஷம் முதல் ஆறு வருஷங்கள் வரையில் நீடிக்கலாம். ஆனால், பெரும்பான்மையான கான்டன்களில் மூன்று முதல் நான்குவருஷங்கள் வரையில்தான் நீடிக்கப்படுகின்றது. அதே அங்கத்தினர்கள் மறுபடியும் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சம்பளம் மிகவுங் குறைவாதலால் அங்கத்தினருக்கு அவ்வளவு உற்சாக முண்டாவதில்லை. சாதாரணமாகக் கவுன்ஸில் வருஷத்திற்கு இருமுறை கூடுகிறது. அது பொதுவாகக் கண்காணிப்புச் செய்து வரவுசெலவுத் திட்டத்தை அனுமதிக்கின்றது. சர்க்காரின் எந்த இலாகாவும் அதைக் கலைக்க முடியாது. அது தானே தன் கூட்டத்தை அடிக்கடி ஒத்திவைத்துக் கொள்ளும்.

கான்டன்களில் ஜனங்களின் நேர்முகமான சட்ட நிர்மாணம்

ஜன வாக்களிக்கும் முறை, ஜனங்களுக்குள்ள சட்டம் துவக்கும் உரிமை, ஆகிய இவ்விரண்டினால் ஜனங்களே நேர்முகமாகச் சட்டமியற்றுவதுதான் ஸ்விட்ஜர்லந்தின் கான்டன் அரசியல்களில் அமைந்துள்ள விசேஷச் சிறப்பாகும். ஜனவாக்குப் பெறும் முறையானது, சட்டசபை நிறைவேற்றும் ஒரு விஷயத்தை ஜனங்களுடைய அங்கீகாரத்திற்கோ, அல்லது நிராகரிப்புக்கோ விட்டுவிடுவதாம். அதன்மூலம், ஜனங்கள் இஷ்டப்படாத ஒரு சட்டம் நடைபெற இடமின்றி நின்றுவிடும். அரசியல் முறை மாறுதல்களுக்கும், திருத்தங்களுக்கும் சாதாரணச் சட்டங்கள் இயற்றுவதற்கும் இது உபயோகமாகும். முன் சொன்னது ஒவ்வொரு கான்டனிலும் இருக்கின்றதெனினும், அது ஸ்விட்ஜர்லந்திற்கே யுள்ள தனி விசேஷமன்று. பல இதர நாடுகளிலும் அது வழக்கத்திற் கையாளப்

பெற்றுவருகின்றது. சாதாரணச் சட்டங்களுக்கும் இம் முறையைப் பின் பற்றுவதுதான் ஸ்விட்ஜர்லந்தில் உள்ள சிறப்பாகும்.

இம் முறையிலேயே இரு விதங்களுண்டு. ஒன்று சட்ட சபையில் நடைபெறும் ஒவ்வொரு விஷயமுங் கட்டாயமாக ஜனங்களின் ஓட்டுக்கு விடப்படுவது. மற்றொருவிதம், ஒரு குறிப்பிட்ட தொகையுள்ள ஓட்டர்களின் விருப்பத்தின் மேல் ஒரு விஷயம் பொது ஓட்டுக்கு விடப்படுவது. சட்டம் இயற்றப்பெற்ற ஒருமாத முடிவுக்குள் இத்தகைய விருப்பத்தைத் தெரிவிக்கும் மனு, கான்டன் நிர்வாக சபைக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டும். ஜனங்கள் ஒரு சட்டத்தை நிராகரித்து விட்டால், நிர்வாகசபை அவ்விஷயத்தைச் சட்ட சபைக்கு ஓர் அறிக்கை மூலம் தெரிவிக்கும். சட்டசபை அச்சட்டத்தைத் தள்ளுபடி செய்து விட்டதாகப் பிரசுரப் படுத்தி விடும்.

பொதுஜனங்கள் சட்டம் துவக்கும் முறை (இனிஷியேட்டிவ்)

சட்டசபை செய்ததும், செய்யாது விட்டதுமான, பிழைகளையுங் குறைகளையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்தி அமைக்குமாறு ஜனங்கள் தூண்டுதல் செய்யும் முறைக்கு இனிஷியேட்டிவ் என்று பெயர். அதன்படி ஜனங்கள் பிரேரணைகளைக் கொண்டுவந்து, அவை சட்டங்களாக நிறைவேறுமாறு செய்வார்கள். சட்டசபை எதிர்த்தாலும், அதனால் ஒன்றும் பயனில்லை. இந்த உரிமை எல்லா ஸ்விஸ் கான்டன்களிலும் உள்ளது. இவ்விதத் தூண்டுதன்முறையை மேற்கொண்டு மனுச் செய்து கொள்வார் தொகை, பல கான்டன்களில் ரெபரெண்டத்திற்கு வேண்டிய தொகையேயாகும்.

அவ்விண்ணப்பத்திற் கண்ட பிரேரணையைச் சட்டசபை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும். சட்டசபை அதை அங்கீகரிக்காவிட்டால், அது ஜனங்களுக்கு ஒரு பதில் பிரேரணையைச் சமர்ப்பிக்கலாம். ஆனால், மனுவிற்கண்ட பிரேரணையின் மேற்றான், ஜனங்கள் ஓட்டுச்செய்ய வேண்டும். அவர்கள் தீர்மானம் முடிவானதாகும்.

காண்டன் நிர்வாகம்

நிர்வாக சபைக்கு ஒவ்வொரு காண்டனிலும் ஒவ்வொரு பெயரிட்டிருப்பினும், பொதுவாக அதற்கு இராஜாங்கசபையென்றே பெயர் கூறுவது பொருத்தமாகும். அதன் அங்கத்தினரின் தொகை ஐந்து முதல் பதின்மூன்று வரையிலுமாக அமைந்துள்ளது. உத்தியோககாலம் ஒன்றுமுதல் ஐந்து வருஷங்கள் வரையிலுமாக இருக்கிறது. பெரும்பான்மையான காண்டன்களில் அங்கத்தினர்கள் பொது ஜனங்களாலேயே தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். மற்றக் காண்டன்களில் பெரிய கவுன்ஸிலாலோ, அல்லது சட்டசபையினாலோ தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். கவுன்ஸில் தான் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்கிறது. அவர் தான் காண்டனின் சார்பாகப் பேசும் உரிமை யுடையவர்.

சட்டங்களை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவது, அமைதியை நிலைநிறுத்துவது, நிதியின் கணக்குகளை வரையறை செய்து அமைப்பது, உத்தரவு பெற்றால் மசோதாக்களை உருவாக்குவது, இவையனைத்தும் நிர்வாகக் கவுன்ஸிலின் வேலைகளாம். அதிற் பல அரசாங்க இலாகாக்கள் இருக்கின்றன. ஒவ்வொரு இலாகாவுக்கும் ஒரு கவுன்ஸிலர் தலைமை வகிக்கிறார். ஆனால், எல்லாக் காரியங்களும் கவுன்

ஸிலின் பெயராலேயே நடைபெறுகின்றன. கவுன்ஸில் அங்கத்தினர்கள் சட்ட சபைகளிற் பேசலாம். ஆனால், ஓட்டுக் கொடுக்கும் உரிமை அன்னோர்க்கில்லை. அவர்கள் பெரும்பாலும் பலதடவை மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். அநுபவம் நிறைந்த அன்னோர் தொடர்ந்து உத்தியோகத்தில் இருப்பது கவுன்ஸிலுக்கு ஒரு சிறந்த வலிமை யளிப்பதாகும்.

ஸிவில், கிரிமினல் வழக்குக்களுக்குத் தனித்தனியே நியாயஸ்தலங்கள் இருக்க வேண்டுமென்ற பெருங் கொள்கைப்படி காண்டன் நீதிமன்றங்கள் நீதிஸ்தாபனம் அமைக்கப் பெற்றுள்ளன. கீழ்தரக் கோர்ட்டுக்களின் நீதிபதிகளுக்குச் சம்பளம் இல்லை. அவர்களை முக்கிய மத்தியஸ்தர்களென்று கூறுவதே பொருத்த முள்ளதாகும். ஏனெனில், அவர்கள் கடமை விசாரணைக்கு முன் சமரஸஞ்செய்ய வேண்டுவதேயாகும். இந்த நீதி மன்றங்களுக்கு அடுத்தபடியாக ஜில்லா நீதி சபை யிருக்கிறது. அதில் ஐந்து முதல் ஏழு நீதிபதிகள் வரையில் இருக்கின்றனர். அவர்கள் ஜனங்களின் ஓட்டுக்களால் நான்கு வருஷங்களுக்குத் தேர்ந்தெடுக்கப் பெறுகின்றனர்.

அதற்கு மேலாகக் காண்டன் கோர்ட்டு இருக்கிறது. அது அப்பீல்களை விசாரிப்பதுடன், காண்டனின் நீதி பரிபாலனத்தைப் பற்றிச் சட்டசபைக்கு ஒரு வருஷாந்த அறிக்கையை அனுப்புகின்றது. ஸிவில் வழக்குக்களில் ஜூரிகள் அமைக்கப்படுவதில்லை. சில காண்டன்களில் உள்ள கீழ்தரக் கோர்ட்டுக்களிற் கிரிமினல் வழக்குக்களுக்கு ஜூரிகள் நியமிக்கப் பெறுகின்றனர். நீதிபதிகளின் உத்தியோக

காலம் ஆயுள் வரையில் என்பதில்லாவிடினும், நடைமுறையில் அன்னவர்களே தொடர்ச்சியாகப் பலமுறை தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சில வழக்குக்களில் மட்டுந்தான் சமஷ்டிக்கோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

அத்தியாயம் 16

ஸ்விட்ஜர்லந்து II

சமஷ்டிச் சர்க்கார்

சமஷ்டிச் சர்க்காரின் அங்கங்கள் நான்கு. அவை 1. சமஷ்டிக் கவுன்ஸில் என்ற ஏழு அங்கத்தினர்கள் கூடிய நிர்வாக சபை. 2. சமஷ்டிச் சட்டசபை. இதில் இராஜாங்க சபை, தேசீய சபை என இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. இவைகளிடமே சட்ட நிர்மாண அதிகாரம் இருக்கின்றது. 3. சமஷ்டி விசாரணைக் கோர்ட்டு. இதுதான் ஸ்விஸ் சமஷ்டியின் நீதிமன்றம். 4. அரசியல் விஷயங்களில் நேர்முகமாகவே ஓட்டுக் கொடுக்கும் ஜனத்தொகுதியினர்.

சமஷ்டி நிர்வாகம்: சமஷ்டிக் கவுன்ஸில்

ஸ்விஸ் சமஷ்டியின் தலைமையான கண்காணிப்பும், நிர்வாக அதிகாரமும் ஏழு அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு கவுன்ஸிலிடம் இருக்கின்றன. சமஷ்டியின் இரு சட்ட சபைகளின் அங்கத்தினர்கள் ஒன்றுகூடி, தேசீய சபைக்கு அங்கத்தினர்களாகத் தகுதியுடைய பிரஜைகளினிடையேயிருந்து, இந்த நிர்வாகக் கமிட்டி கவுன்ஸிலர்கள் எழுவரையுந் தேர்ந்தெடுக்கின்றனர். ஆனால், ஒரு கான்டனுக்கு ஒரு கவுன்ஸிலருக்கு மேல் தேர்ந்தெடுக்கக்

கூடாது. நடைமுறையிற் சில கான்டன்களிலிருந்து நிரந்தரமாகக் கவுன்ஸிலர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சமஷ்டிக் கவுன்ஸிலின் உத்தியோக காலம் மூன்று வருஷங்கள். ஆனால், தேசீய சபையின் பொதுத்தேர்தல் முடியும் பொழுதெல்லாம் நிர்வாகக் கவுன்ஸிலும் புதுப்பிக்கப்படுகின்றது. உத்தியோக காலத்தில் அதன் அங்கத்தினர்கள் வேறு உத்தியோகமோ தொழிலோ ஏற்கக் கூடாது. இவ்வெழுவரில் இருவர் சட்ட சபையால் ஒவ்வொரு வருஷத்திற்கும், தலைவராகவும் உபதலைவராகவும் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். வழக்கப்படி உபதலைவர் தலைவர் பதவிக்கு உரிமையுடையவராவர். இப்பதவிகளுக்குத் தொடர்ந்தாற்போல இருமுறை ஒருவரையே தேர்ந்தெடுப்பது கூடாது.

ஸ்விஸ் தலைவர் என்பார், அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தலைவர்போலத் தலைமை நிர்வாக அதிகாரி யல்லர். ஆங்கிலப் பிரதம மந்திரியைப்போலப் பெரும்பான் சமஷ்டித் தலைவர் மைக் கட்சியின் தலைமை பூண்டு, மற்ற மந்திரிகளை வேலையிலிருந்து நீக்கவும், சட்ட சபையைக் கலைக்கவும் அதிகாரம் பெற்றவரு மல்லர். ஸ்விஸ் சமஷ்டித்தலைவர், மந்திரிச் சபையின் அக்கிராசனர் மட்டுமே. அவருடைய துணைவர்களான மற்ற மந்திரிகளுக்கு இல்லாத விசேஷ அதிகாரம் ஒன்றும் அவருக்குக் கிடையாது. மற்றவர்களைப் போல அவரும் ஓர் இலாகாவுக்குத் தலைமை வகிக்கிறார். பேரளவில் மட்டுமுள்ள நாட்டிற்குத் தலைவர் என்னும் பதவியில், அரசாங்க ஆடம்பரங்களுக்கு வேண்டிய சடங்குகளனைத்தையும் நடத்துகிறார். தன்னாட்டுள்ளும், வெளி நாடுகளிலும், சமஷ்டியின் பிரதிநிதியாக இருக்கிறார்.

ஸ்விஸ் சமஷ்டியின் பிரஸிடேண்டு என்று அவருக்குப் பெயர் வழங்குகிறது. பல இலாகாக்கள் கொண்டுவரும் பிரேரணைகளைச் சமஷ்டியின் ஆலோசனைக்காக முதல் ஆராய்ச்சி செய்ய வேண்டியது அவருடைய கடமைகளுள் ஒன்றாகும். பல இலாகாக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்குங் காரியங்கள் சரியாய் நடைபெறுகின்றனவா வென்று பார்த்துக் கொள்ள வேண்டியதும் அவர் பொறுப்பாகும். சில அவசரச் சமயங்களில் தம் பெயரால் நடவடிக்கை நடத்தும்படிச் சமஷ்டி நிர்வாகச் சபை அவருக்கு அதிகாரங் கொடுப்ப துண்டு. ஆனால், பிறகு அவர் அச்சபையின் அங்கீகாரத்தைப் பெற, ஓர் அறிக்கை மூலம் தெரிவித்துக் கொள்ளவேண்டும். ஆகையால், சமஷ்டி நிர்வாகச் சபையின்மீது அவருக்கு ஒருவித அதிகாரமுங் கிடையாதென்பது விளங்குகின்றது. அரசியல் திட்டத்திலேயே அவருக்கு உரிமைகள் அளிக்கப்பட்டமை, நிர்வாகக் கவுன்ஸிலின் பொருட்டு வசதியாய்க் காரியத்தை நடத்துவதற்காகவே.

ஒவ்வொரு கவுன்ஸிலரின் தலைமையின் கீழும் ஓர் இலாகாவாக, ஏழு நிர்வாக இலாகாக்கள் இருக்கின்றன. அவற்றின் நிர்வாகங்களுக்கு மேற்கூறிய சமஷ்டித் தலைவரே மேலான பொறுப்புள்ளவர். ஆனால், எல்லாத் தீர்மானங்களுங் கவுன்ஸிலின் பெயராலேயே செய்யப்படுகின்றன. அவை, அவர்கள் ஒன்று சேர்ந்துசெய்த தீர்மானங்களாகவே கருதப்படும். அதன் கூட்டத்திற்குக் குறைந்தது நான்கு கவுன்ஸிலர்கள் இருக்கவேண்டும். ஏதாவதொரு இலாகாவின் வேலை சம்பந்தமாய்ச் சமஷ்டிச் சட்ட சபையில் விவாதம் ஏற்படுமேல், அப்பொழுது அவ்விலாகத் தலைவரான கவுன்ஸிலர் அதிற்கலந்து கொண்டு, கேள்விகளுக்குத் தக்க விடைகள் அளித்தும், விளங்காத விஷயங்களைத் தெளிவித்துங் காட்டுவார்.

சமஷ்டி நிர்வாகக் கவுன்ஸில் ஒரு மந்திரிச் சபை யன்று. அதன் அங்கத்தினர்கள், மசோதாக்களை உருவாக்கி, அவற்றைச் சட்ட சபைக்குச் சமர்ப்பித்து, அவைகளை ஆதரித்துப் பேசினாலும், அவர்கள் சட்ட சபை அங்கத்தினரல்லர். எந்த அரசியற் கட்சியின் பிரதிநிதிகளு மல்லர். யாதொரு திட்டமுங் கொள்கையுங் கொண்டவர்களு மல்லர். சட்டசபை அவர்களுடைய பிரேரணைகளைப் புறக்கணித்து, அன்னோர் நடைமுறைகளைத் தாக்கினாலுங்கூட அக் கவுன்ஸிலர்கள் தங்கள் பதவிகளை ராஜீநாமா செய்வதில்லை. மூன்று வருஷம் வரையில் தங்கள் உத்தியோக காலத்தைக் கழித்தே நீங்குவர். மந்திரிச்சபையைப் போல ஒன்று சேர்ந்து வெற்றியையோ, வீழ்ச்சியையோ பெறும் சபை யஃதன்று. ஆனால், அதனுடைய அங்கத்தினர்களின் அனுபோகத்தைச் சமஷ்டிச் சட்டசபை அலட்சியஞ் செய்வதில்லை. ஆதலின், நடைமுறையிற் சமஷ்டி நிர்வாகக் கவுன்ஸில் தலைமை வகித்துச் சட்ட நிர்மாணத்திற் பெருத்த செல்வாக்கு கொண்டிருக்கிறது. சட்ட சபையின் நிர்வாகக் கமிட்டியென்று அதற்குப் பெயரிட்டிருப்பதும் ஒருவாறு பொருத்த முடையது.

ஸ்விஸ் சமஷ்டி நிர்வாகக் கவுன்ஸில் மந்திரிச் சபை யன்று

சமஷ்டி நிர்வாகக் கவுன்ஸில், சமஷ்டிச் சட்டங்களையும் தீர்மானங்களையும் நடை முறைக்குக் கொண்டுவந்து, சமஷ்டிக்கோர்ட்டின் தீர்ப்புக்களையும் நிறைவேற்றுகிறது; கான்டனுக்குள் ஏற்படும் சமாதானங்களையும், பரிவர்த்தனைகளையும் நடை முறைக்குக் கொண்டு வருகிறது; அந்நிய நாட்டு விவகாரங்களை நடத்துகிறது; கான்டன்கள் தத்தமக்குள்ளும் இதர நாடுகளோடும் செய்து

சமஷ்டி நிர்வாகக் கவுன்ஸிலின் வேலைகள்

கொள்ளும் உடன்படிக்கைகளைப் பரிசீலனை செய்கிறது; ராணுவ ஸ்தாபனத்தை நிர்வகிக்கிறது; சமஷ்டிக்குக் கொடுக்கப்பட்ட மற்றுஞ் சில வேலைகளையும் கவனித்துப் பொதுவாக எல்லாச் சமஷ்டி உத்தியோகஸ்தர்களையுங் கண்காணிப்புச் செய்கிறது; சமஷ்டிச் சட்ட சபைக்கோ, அல்லது வேறு அதிகார ஸ்தாபனத்திற்கோ, தனியாக ஒதுக்கிவைக்கப்படாத உத்தியோகங்களுக்கு நியமனஞ் செய்கிறது; சமஷ்டிச் சட்டசபையின் ஒவ்வொரு சாதாரணக் கூட்டத்திலும், நிர்வாகத்தைப் பற்றியும் உள்நாட்டு வெளிநாட்டு நிலைமைகளைப்பற்றியும் ஓர் அறிக்கையைச் சேர்ப்பிக்கிறது; சமஷ்டியின் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்துச் சட்டசபைக்குச் சமர்ப்பிக்கின்றது.

நிர்வாகம்

இரு சட்ட சபைகளின் ஆலோசனைக்கு மசோதாக்கள் தயார் செய்வதும், அதன் பரிசீலனைக்கு அனுப்பப்பட்ட தனி அங்கத்தினரின் பிரேரணையைப்பற்றி அபிப்பிராயங் கூறுவதும், சட்ட சபையின் விருப்பப்படி மசோதாக்கள் உருவாக்குவதும், சமஷ்டிக் கவுன்ஸிலின் சட்ட நிர்மாண சம்பந்தமான வேலைகளாம். சில சமயங்களில், விசேஷ விதிகளை இயற்றும் அதிகாரமும் அதற்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

சட்ட நிர்மாணம்

சமஷ்டிக் கவுன்ஸிலுக்குச் சில நீதிபரிபாலன அதிகாரங்களும் இருக்கின்றன. அரசியல் திட்டத்தின்படி, சமஷ்டி விசாரணைக் கோர்ட்டின் அதிகாரத்திற்குட்படாத எல்லா நிர்வாக சம்பந்தமான வழக்குக்களையும் அது விசாரித்துத் தீர்ப்புக் கூறுகின்றது. ஒவ்வொரு கான்டன் அரசியலைப் பாதுகாக்

நீதி பரிபாலனம்

கும் விஷயத்தில், அது சமஷ்டிச் சட்ட சபையைக் கலக்காமல் தானே நேர்முகமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

ஸ்விஸ் குடியரசியலில் குறிப்பிடத் தக்கதாக விளங்கும் அங்கங்களில் ஒன்று; அதன் நிர்வாகக் கவுன்ஸிலே யாகும்.

ஸ்விஸ் நிர்வாகக் கவுன்ஸில் அமைப்பின் சிறப்புக்கள்

பிரிட்டனிலும், பிரான்ஸிலும் இருப்பது போல நிர்வாக சபை மன்னரின் சார்பாகவோ குடியரசுத் தலைவரின் சார்பாகவோ காரியம் நடத்துகிறதில்லை. அதற்கு அதிகாரங்கள் அரசியல் திட்டத்திலேயே நேர்முகமாக அளிக்கப்பட்டிருக்கின்றன. அது சட்ட சபைக் குட்பட்டதன்று. சட்ட சபை, ஆங்கில பிரஞ்சு மந்திரிச் சபைகளைப் போல அதனை வேலையிலிருந்து நீக்க முடியாது. அது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நிர்வாகத்தைப் போலவும் இல்லை. ஏனெனில், அமெரிக்காவில் நிர்வாகம் வகிப்பவர்கள் சட்ட சபை விவாதங்களிற் கலந்துகொள்ள முடியாது. மேலும், ஸ்விட்ஜர்லந்தில் பிரதம மந்திரி யென்று ஒருவர் கிடையாது. ஸ்விஸ் நிர்வாகச் சபைத்தலைவர் தமக்குச் சமமான சகாக்களின் முதல்வர் என்பது மட்டுமே.

ஸ்விஸ் நிர்வாகக் கவுன்ஸில் யாதொரு அரசியற் கட்சிக்கும் பிரதிநிதியன்று. அது முழு ஜன சமூகத்திற்கு மட்டுமே பிரதிநிதி யாகும். ஆகையால், அரசியற் கட்சிகளின் பற்றில்லாமல், திறமை, புத்தி நுட்பம், அனுபவம் வாய்ந்தவர்களே இதிற் சேர்ந்து வேலைசெய்ய நியமிக்கப்படுகிறார்கள். நிர்வாகத்திற்கும் சட்ட சபைக்கும் தொடர்பு விட்டுப் போகாமல் சமஷ்டி நிர்வாகக் கவுன்ஸில் அங்கத்தினர்கள் சட்ட சபை விவாதத்திற் கலந்து கொள்ளும் வழக்கமும் இருக்கிறது. ஆகையால், இந்த ஏற்பாட்டில் பிரிட்டிஷ் மந்தி

ரிச்சபையின் நன்மைகள் முழுவதும் இருக்கின்றன. ஆனால், அதிற் காணப்படுங் குறைகள் ஸ்விஸ் சமஷ்டி நிர்வாக கவுன்ஸிலில் இல்லை. மேலும், இதில் மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன ரெனினும் மறு தேர்தலில் தமக்கு ஸ்தானம் கிடைக்குமென்ற நிச்சயமிருப்பதால், கவுன்ஸிலர்கள் மிக்க தைரியம் வாய்ந்தவர்களாகவும், சுதந்திர மனப்போக்குள்ளவர்களாகவு மிருக்கிறார்கள். வழக்கத்தில் அவர்களது உத்தியோக காலம் பெரும்பாலும் நிரந்தரமானதென்றே சொல்லலாம். அதனால், நிர்வாகத்தின் கொள்கை, தொடர்பும் வளர்ச்சியும் பெற்று வருகின்றது.

நிர்வாகத்திற்கும் சட்ட சபைக்குமுள்ள இணைப்பு முறை, அரசியலில் மிகவும் சிக்கலான விஷயங்களில் ஒன்று. ஸ்விட்ஜர்லந்தில் மட்டுமே, இவ்விஷயம் வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றது. அதன் நிர்வாக அதிகாரிகள் அரசியற் கட்சிகளுக்குட்பட்டவரல்லர். பிரசித்திபெற்ற பல அரசியற்சாஸ்திர ஆராய்ச்சியாளர்கள் இம்முறையை மிகவும் பாராட்டி யெழுதியுள்ளார்கள்.

சமஷ்டிச் சட்டசபை

ஸ்விஸ் சமஷ்டியின் மேல்சபை அல்லது இரண்டாவது சபை ராஜாங்க சபை யெனப்படும். சமஷ்டியைச் சேர்ந்த நாடுகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் முறையில் அது அமைக்கப் பெற்றிருக்கிறது. நிலப்பரப்பு, ஜனத்தொகை யென்னும் ஏற்றத்தாழ்வின்றி, ஒவ்வொரு கான்டனுக்கும் இரண்டு பிரதிநிதிகளாக, மொத்தம் 44 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்தல் முறையும், உத்தியோக காலமும்

ராஜாங்க சபை

அந்தந்தக் கான்டனின் விருப்பத்திற்கே விடப்பட்டிருக்கின்றன. அதனால், ஸ்விஸ் கான்டன்கள், தேர்தல் நிபந்தனைகளில் ஒன்றுக்கொன்று பெரிதும் மாறுபட்டு இருக்கின்றன. சில கான்டன்கள் தங்கள் பிரதிநிதிகளை ஒரு வருஷத்திற்கொருமுறை தேர்ந்தெடுக்கின்றன. சில மூன்று அல்லது நான்கு வருஷங்களுக்கு தேர்ந்தெடுக்கின்றன. ஆனால், மூன்று வருஷகாலம் என்பது அங்குப் பெரும்பாலும் ஒரு பொது விதியாகிவிட்டது. சில பிரதிநிதிகள் பொது ஜனங்களால் நேர்முகமாகவே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சிலர் கான்டன் சட்டசபைகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அக்கான்டன்கள் எப்பொழுது வேண்டுமானாலும் தாம் தேர்ந்தனுப்பிய பிரதிநிதிகளைத் திருப்பி அழைத்துக்கொள்ளலாம். இரண்டு கான்டன்கள், சட்ட சபைகளுக்கு இந்த அதிகாரத்தைத் தெளிவாக அளித்திருக்கின்றன. கான்டன்களே அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கின்றன.

தேசீயக் கவுன்ஸில் என்ற கீழ்ச்சபையில் 187 அங்கத்தினர் இருக்கிறார்கள். 1930-ம் வருஷத்து ஒரு சட்டப்படி, அவர்கள் நேர்முகமாக நான்கு வருஷகாலத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஒவ்வொரு கான்டனிலும் 22,000 பிரஜைகளுக்கோ, அல்லது அத்தொகையின் பெரும் பான்மைப் பகுதிக்கோ ஒரு பிரதிநிதியுண்டு. வயது வந்த ஆடவர்களுக்குமட்டுமே வாக்குரிமை உண்டு. வாக்குரிமை பெற்ற ஒவ்வொருவரும் தேர்தலில் அபேட்சகராக நிற்கலாம். பாதிரிகளுக்கு இவ்வுரிமை கிடையாது.

தேசீயக் கவுன்ஸில்

ஜனங்களுடையவும், கான்டன்களுடையவும் உரிமைகளுக்கு உட்பட்டு, சமஷ்டியின் அதிகாரம், அதன் சட்ட

சமஷ்டி அஸெம்பிளியின் அதிகாரங்கள்

சபையாகிய அஸெம்பிளிக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்குச் சட்ட நிர்மாண நிர்வாக நீதிபரிபாலன அதிகாரங்கள் இருக்கின்றன. ஜனங்களின் சம்மதத்திற்குட்பட்டு சமஷ்டிச் சட்டசபை எல்லாச் சட்டங்களையும் அரசியல் திருத்தங்களையும் நிறைவேற்றலாம். சமஷ்டி நிர்வாகக் கவுன்ஸிலர்கள், சமஷ்டி விசாரணைக்கோர்ட்டு சான்ஸெலர், சேனையதிகாரி இன்னோர்களை அது தேர்ந்தெடுக்கிறது. போர் தொடங்குவதும், சமாதானம் செய்வதும் அதனுடைய வேலைகளே. மன்னிப்புக்கள் அளிப்பதும், அமைதியை நிலை நிறுத்துவதும், பிற நாடுகளுடன் ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் செய்வதும் அதுவே. மேலும், சமஷ்டிச் சேனைகளை நிர்வகிப்பது, சமஷ்டி நிர்வாகக் கவுன்ஸில் சமஷ்டி விசாரணைக்கோர்ட்டு இவற்றின் வேலைகளைக்கண்காணிப்பது வரவுசெலவுத் திட்டங்களை அங்கீகரிப்பது முதலியனவும் சமஷ்டிச் சட்டசபைக்குரிய அதிகாரங்களே. சமஷ்டி நிர்வாகத்தின்மீது ஏற்படும் குற்றங்குறைகளை விசாரணை செய்து தீர்ப்பளிப்பதும், சமஷ்டிச் சர்க்காரின் பல இலாகாக்களின் இடையே ஏற்படும் முட்டுப்பாடுகளை விலக்குவதும் அதன் நீதிபரிபாலனச் செயல்களாம்.

இரண்டு சட்டசபைகளும் அதிகாரத்தில் சரிசமானமானவையே. எந்த விஷயமும் இருசபைகளில் ஏதேனுமொன்றில் எந்த அங்கத்தினராலும் பிரேரிக்கப்படலாம். இரு சபைகளும் தனித்தனிக்கூடி ஓட்டு செய்கின்றன. எங்கிலும், அவைகளின் ஒற்றுமையின் மேற்றான் சமஷ்டிச் சட்டங்கள், தீர்ப்புக்கள், தீர்மானங்கள் யாவும் நிறைவேறுகின்றன.

கீழ்ச்சபைத் தலைவரின் விருப்பப்படி இவ்விரு சபைகளும் அடியிற் குறிப்பிடும் மூன்று விஷயங்களுக்காக ஒன்று கூடும். (1) சமஷ்டி அதிகாரிகளில் யார் எதைச் செய்யவேண்டும் என்பதில் ஏற்படும் அபிப்பிராய பேதங்களைத் தீர்த்து முடிவு செய்தல். (2) மன்னிப்பு முதலியன அளித்தல். (3) சமஷ்டி நிர்வாகக் கவுன்ஸிலர்கள், சமஷ்டி நீதிபதிகள், சான்ஸெலர், சேனாதிபதி முதலியவர்களை நியமித்தல். தேசீயக் கவுன்ஸிலில் 187 அங்கத்தினர்கள் இருப்பதால், இக்கூட்டங்களில் அதுவே மிகுதியான பலம் பொருந்தியிருக்கும்.

கூட்டு நடவடிக்கை

இருசபைகளுக்கும், சட்டப்படி சரிசமானமான நிலைமை இருந்த போதிலும் நடைமுறையில் ராஜாங்க சபைக்கு அதிகாரமும், செல்வாக்கும் குறைவுதான். ஏனெனில் சமஷ்டி நிர்வாகக் கவுன்ஸிலர்கள், வழக்கத்தில் கீழ்ச்சபையிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவதால், அதைப் பின்பற்றியே தங்கள் கொள்கைகளையும், காரியத்தையும் நடத்துகின்றனர். மேலும், வேலையில்லாத ஒரு சோம்பேறிக் கூட்டமென்ற ஓர் அபவாதப் பெயர் ராஜங்க சபைக்கு ஏற்பட்டுவிட்டது. உண்மையில், அது ஒரு சிறு சபையாக இருப்பதால், தன் வேலையை விரைவில் முடித்துவிட்டு ஓய்வு பெற்றிருக்கிறது. ஆதலால், எல்லா நாடுகளிலும் இருப்பதுபோல ஸ்விட்ஜர்லந்திலும் கீழ்ச்சபையே மிகவும் முக்கியமானதாகக் கொள்ளவேண்டும். எங்கிலும், ராஜாங்க சபையை எடுத்துவிடுவதாக வரும் பிரேரணைகள் தோற்றுவிடுகின்றன. இருசபை யாட்சியில் அச்சபைக்கும் ஒரு பற்று இருக்கின்றதென்றே கூறலாம். ஆனால், பிற நாடுகளின் அரசியல்களைப் பின்பற்றி அமைத்த ஓர் உறுப்பாகையால், அது ஸ்விட்ஜர்

லந்தின் சுதேச ஏற்பாட்டிற்குச் சரியாகப் பொருந்தவில்லை என்பதில் உண்மை யிருக்கிறது.

தேசியக்கவுன்ஸில் சாதாரணமாக வருஷத்தில் இரு முறை கூடும். முதற்கூட்டம் நவம்பர் மாதம், முதல் திங்கட் கிழமையிலும் இரண்டாங் கூட்டம் டிஸம்பர் மாதம், முதல் திங்கட்கிழமையிலும் கூடும். ஆனால், வேலையின் மிகுதியால் மார்ச்சு மாதத்தில் ஒரு கூட்டமும், மற்ற மாதங்களில் சில அதிகப்படியான கூட்டங்களும் நடைபெறவேண்டுவது அவசியமாகி விட்டது. சமஷ்டி நிர்வாகக் கவுன்ஸில் தான் அதனைக்கூட்டுகின்றது. அல்லது, நாலிலொருபங்கு அங்கத்தினர்களோ, அல்லது ஐந்து கான்டன்களோ, சபையைக் கூட்டுமாறு கேட்டுக்கொள்ளலாம். ஒரு கூட்டத்திற்கு ஒரு தலைவர், ஓர் உபதலைவர், நான்கு கணக்கெடுப்பவர்கள், தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்கள் சேர்ந்து பல கமிட்டிகளின் அங்கத்தினர்களை நியமனஞ் செய்கிறார்கள்; ஓட்டுப் பிரிவினையைக் கணக்கெடுக்கிறார்கள்; அங்கத்தினர்கள் வராமையால் ஏற்படும் சிக்கல்களைப் பற்றி முடிவு செய்கிறார்கள். தொடர்ந்து நடைபெறும் இரு கூட்டங்களுக்கு ஒரே தலைவரும் உபதலைவரும் இருக்கக்கூடாது. ஆனால், ஒரு வருஷ நடவடிக்கைகள் யாவும் ஒரு கூட்டமாகவே கருதப்படுகின்றன. அங்கத்தினர்களுள் பெரும்பாலார் ஓட்டுக்களின்படித் தான் தீர்மானங்கள் நிறைவேறும். ஒவ்வொரு மசோதாவும் கீழ்ச்சபையிலோ, அல்லது மேற்சபையிலோ, சமர்ப்பிக்கப் படுவதாகக் கருதப்படுவதில்லை. சமஷ்டிச் சபையிற் கொண்டு வருவதாகவே கொள்ளப்படும். கூட்டம் தொடங்குமுன்னரே, சமர்ப்பிக்கவேண்டிய மசோதாக்களையும் தீர்மானங்களையும், சமஷ்டிக் கவுன்ஸில் இரு சபைத்தலைவர்களுக்கும்

அமைப்பும் நடைமுறையும்

அனுப்புகின்றது. அவர்கள் ஒவ்வொருவரும் அவற்றைப் பாகுபாடு செய்துகொண்டு தம் பாகத்தைத் தம் சபையிற் கொண்டு வருகிறார்கள். இதனால், காலதாமதம் ஏற்படாமல் விரைவில் காரியம் நடைபெறுகின்றது. ஓட்டுக்கள் சமமாக ஏற்படும்போது ஒருபுறம் தம் ஓட்டையளிக்கக் கூடிய உரிமை தலைவருக்கு உண்டு. செல்வாக்கோ, அதிகாரமோ இல்லாவிடினும் தேசீயக் கவுன்ஸிலின் தலைவர் பதவி மிகவும் விரும்பப்படுகின்றது.

ஒரு கூட்டம் மூன்று வாரங்களுக்குமேல் நீடிப்பதில்லை. கவுன்ஸில், காரிய நிகழ்ச்சியிலேயே தன் முழு நோக்கத்தையுஞ் செலுத்துகின்றது. மேடைப்பிரசங்கத்திற்கு அங்கு இடமில்லை. உத்தியோக முறையில் அறிக்கைகள் எடுக்கப்படுவதுமில்லை. அதன் நிகழ்ச்சிகளைப் பத்திரிகைகளும் பிரசுரஞ் செய்யா. ஜர்மன், பிரஞ்சு, இத்தாலியன் ஆகிய மூன்று உத்தியோக முறையான பாஷைகளிலும் விவாதம் நடைபெறும். மொழிபெயர்ப்பும் உண்டு. விவாதப் பேச்சு உலக நடையில் வழங்குவது போலக் காரியப் போக்குக்கு ஒத்ததாகவே இருக்கும். ஆடம்பரமான விசேஷப்பிரசங்கத்திற்கு அங்கு மதிப்பு கிடையாது. பிரான்ஸில் நடைபெறுவதுபோல அங்கத்தினர்கள் ஒரு மேடையிலிருந்து பேசுவதில்லை. தத்தமக்குரிய இடங்களிலேயே இருந்துகொண்டுதான் பேசுவார்கள். பொதுவாகப் பார்லிமெண்டு விவாதங்களிற் காணப்படும் வசையும் சீற்றமும் அங்கு காணப்பெறா. உருக்கமான பேச்சுக்களும், உணர்ச்சிப்பெருக்குக்களுங் கிடையா. ஒவ்வொரு விஷயத்திலும் அங்கத்தினர் மூன்று முறை பேசலாமென்றாலும், அவர்கள் தேவையில்லாவிடத்து அவ்வுரிமையை மேற்கொண்டு வீண்பொழுது போக்குவதில்லை. யாரேனுமொருவர் பயனற்ற முறையில்

வீணே பேசிக்கொண்டிருந்தால், சபை காலியாகிவிடும்; அல்லது அங்கத்தினர்கள் தமக்குள் பேசவோ, பத்திரிகைகள் படிக்கவோ தொடங்கிவிடுவார்கள். இக்காரணங்களாலேயே, காரியத்திற் கண்ணுயிருக்கும் சபையென்று உலகமெங்கும் கொண்டாடும் புகழுக்கு அது காரணமாக விளங்குகின்றது.

சான்ஸெலர்

சமஷ்டிச் சான்ஸெலர் என்பவர், மூன்று வருஷங்களுக்குச் சமஷ்டி அஸெம்பிளியால் தேர்ந்தெடுக்கப்படுகின்ருர். சட்டசபை நடவடிக்கைகளைத் தொகுத்து எழுதிவைத்துக்கொள்ள வேண்டியது அவருடைய கடமையாகும். சட்டங்களைப் பிரசுரித்து அவற்றை நடைபெறும் வண்ணம் அனுப்புவதும் அவரது வேலையே. சட்டசபைக் கூட்டம் நடைபெருதபோது, அவர், சமஷ்டிக் கவுன்ஸிலின் காரியதரிசியாக இருந்து, அதன் கூட்டங்களின் உத்தரவுகளையும், கடிதங்களையும் தயார் செய்கிருர்.

சமஷ்டி நீதிமன்றம்

சமஷ்டி கோர்ட்டும் அதன் அமைப்பும்

ஸ்விட்ஜர்லந்து சமஷ்டியின் தலைமைக் கோர்ட்டுக்கு பெடரல் ட்ரிபுனல் என்று பெயர். அதில் 24 நீதிபதிகளும், பிரதியாக வேலை பார்க்க 9 நீதிபதிகளும் இருக்கின்றனர். அவர்கள், சமஷ்டிச் சட்ட சபையால் ஆறு வருஷ காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேசீயக் கவுன்ஸில் அங்கத்தினராக அமரும் நிலைமை வாய்ந்த எந்த ஸ்விஸ் பிரஜையும் இந்த நீதிபதி ஸ்தானத்திற்குத் தேர்ந்தெடுக்கப் படலாம். ஆனல், அந்நீதிபதிகளைத் தேர்ந்தெடுப்பதில் முற்கூறிய மூன்று தேசீய பாஷைகளுக்கும் பிரதிநிதித் தன்மை பொருந்தியதாக இருக்கவேண்டும். நீதி

பதிகள் ஒருவர்க்கொருவர் உறவினர்களாகவோ சமஷ்டிச் சட்டசபை அங்கத்தினர்களாகவோ இருக்கக்கூடாது. அவர்கள், வேறு தொழிலோ, வேலையோ செய்யவுங்கூடாது. அஸெம்பிளி, அவர்களிடையேயிருந்து ஒரு தலைவரையும் ஓர் உபத்தலைவரையும் தேர்ந்தெடுக்கிறது.

அது ஸிவில் வழக்குகளில் முதல் கோர்ட்டாக, சமஷ்டிக்கும் கான்டன்களுக்கும் ஏற்படும் சச்சரவுகளை விசாரணை செய்கிறது; மேலும், சமஷ்டிக் அதிகாரங்கள் கும், சங்கங்களுக்கும் தனி மனிதர்களுக்கும் இடையிலும், பல கான்டன்களுக்கிடையிலும், அல்லது கான்டன்களுக்கும் தனிமனிதர்களுக்குமிடையேயும் நிகழும் தகராறுகளையும் விசாரித்துத் தீர்க்கின்றது. வழக்கில் சம்பந்தப்படும் தொகை குறைந்தது 3000 பிராங்குகளாயிருக்க வேண்டும். சமஷ்டிச் சட்டத்தில் அதற்கு அளிக்கப்பட்டிருக்கும் ரயில்வே விவகாரங்கள், கமிஷன்கள் கலைப்பு, முதலியவைகளிலும் அது தீர்ப்பளிக்கும். கட்சிக்காரர்கள் சம்மதப்பட்டால் அது கான்டன் கோர்ட்டுக்களுக்கு மேலே ஓர் அப்பீல் கோர்ட்டாகவும் இருக்கும். அரசியல் திட்டப்படி, சமஷ்டி, கான்டன் இவற்றின் அதிகாரங்களில் ஏற்படும் சச்சரவுகள், கான்டனுக்குள்ளே நிகழும் சச்சரவுகள், எல்லைப்புறத் தகராறுகள். பாதுகாப்பாக அளிக்கப்பட்ட உரிமைகள் புறக்கணிக்கப் பட்டதாகத் தனி மனிதராலோ சங்கங்களாலோ கொடுக்கப் படும் மனுக்கள், இவைகளில் தீர்ப்பளிக்கும் அதிகாரங்கள் இதனிடமே அமைந்துள்ளன. மேலும், சமஷ்டி நிர்வாகத்திற்கு விரோதமாகக் கலகம், துரோகம், பலாத்காரம், ஸர்வ தேசியச் சட்டத்தை மீறுவது, சேனை விஷயங்களிற் தலையிடுவதால் ஏற்படும் ராஜீயக் குற்றங்கள், சட்ட சபையின் அனு

மதி பெற்றுக் கான்டன் கோர்ட்டுக்கள் அனுப்பும் மற்ற கிரிமினல் குற்றங்கள், இவையனைத்தையும் இந்தக் கோர்ட்டே விசாரித்துத் தீர்ப்புக்கூறும்.

ஸிவில், கிரிமினல் வழக்குக்களுக்காக இந்தக் கோர்ட்டு இரு சபைகளாகப் பிரிந்து கொள்கிறது. ஒவ்வொரு சபையிலும் மூன்று முதல் பதினேரு நீதிபதிகள் வரையில் இருக்கலாம். பதினேரு நீதிபதிகளைக் கொண்ட முழுச் சபை சில முக்கிய வழக்குக்களை விசாரிப்பதற்கு உரிமை பெற்றுள்ளது.

சமஷ்டிக் கோர்ட்டின் குறைபாடுகள்

ஸ்விஸ் அரசியல் திட்டத்திலேயே, இந்தச் சமஷ்டிக் கோர்ட்டு தான் மிகவும் பலக்குறைவுள்ளது. முதலாவது, அமெரிக்க ஐக்கிய நாடுகளைப் போலல்லாமல், இதன் அதிகாரங்களைச் சட்டசபை குறைத்து விட்டது. சமஷ்டிச் சட்டசபை நிறைவேற்றிய சட்டங்களையே இது பின் பற்றி நடக்க வேண்டும் சமஷ்டிச் சபையின் சட்ட நிர்மாணம், அரசியல் திட்டத்திற்கு மாறுனதென்று கூறுவதற்கு இதற்கு உரிமையில்லை. கான்டன் சட்டங்கள் சமஷ்டிச் சட்டங்களுக்கு மாறுக இருந்தால் அவை செல்லாதவை யெனக் கூறலாம். இரண்டாவது, தன் தீர்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு இதற்குத் தனியுரிமை கிடையாது. இதற்குக் கான்டன் அதிகாரிகளின் உதவியைத்தான் இது எதிர்பார்க்கவேண்டும். மூன்ருவது, இந்தக் கோர்ட்டுக்கு நிர்வாக நடவடிக்கைகளிலோ, உத்தியோகஸ்தர்கள் மீதோ, யாதொரு அதிகாரமுங் கிடையாது. அவ்வதிகாரங்கள் யாவும் சமஷ்டிக் கவுன்ஸிலிடத்தும், அஸெம்பிளியிடத்துமே இருக்கின்றன. நீதிபதிகள் ஆறு வருஷ காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப் படுவதால், அவர்களின் சுயேச்சை ஒருவாறு

குறைவு படுவதே யாகும். அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தலைமைக்கோர்ட்டு நீதிபதிகளின் பெருமைக்குக் காரணம், அவர்கள் ஒருவருக்குங் கீழ்ப்படியாது சுயேச்சையுடன் இருப்பதே தான். ஸ்விஸ் சமஷ்டிக் கோர்ட்டும் ராஜாங்க சபையும், முறையே அமெரிக்கத் தலைமைக் கோர்ட்டையும், ஸெனெட்டையும் மாதிரியாகக் கொண்டு அமைக்கப்பட்டமையால், அவையிரண்டும் வெற்றிகரமாக நடைபெறவில்லை.

பிரஜைகள் நேர்முகமாகச் சட்டமியற்றுதல்

பொதுஜனவாக்குப் பெறும் முறையாலும், பொதுஜனங்கள் சட்டந்துவக்கும் முறை மூலமாகவும், கான்டன்களின் சட்ட நிர்மாணத்தில் ஜனங்கள் நேர்முகமாகக் கலந்து கொள்வதைப் பற்றி, இதற்கு முன்னே விளக்கியுள்ளோம். இங்குச் சமஷ்டிச் சட்ட நிர்மாணத்திற் பொது ஜனங்களுக்குள்ள உரிமையைச் சுருக்கமாகக் குறிப்பிடுவோம்.

சாதாரணமாக எல்லாத் தேசங்களிலுஞ் சட்ட சபைகளால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள், சர்க்கார் வெளியிடும் தேதியிலிருந்து அமுலுக்கு வரும். ஆனால், ஸ்விட்ஜர்லந்தில் அத்தகைய மசோதாக்கள், அவசரமென்று சட்ட சபையாற் குறிப்பிடப்பட்டாலொழிய, மூன்று மாதகாலம் பரீக்ஷையில் இருக்கும். அவற்றைப்பற்றிப் பொதுஜனங்களின் அபிப்பிராயங்களைப் பெறவேண்டுமென்று மனுச் செய்து கொள்ளப் பிரஜைகளுக்கு உரிமையுண்டு.

பிரசுரிக்கப்பட்ட மசோதாக்களின் பிரதிகள் எல்லாக் கான்டன்களுக்கும் அனுப்பப்படும். 90 நாட்கள் ஜனங்கள் அவைகளைப் பரிசீலனை செய்யலாம். 30,000 பிரஜைகளோ, அல்லது எட்டுக் கான்டன்களோ, பொதுஜன அபிப்பிராயத்

தைப் பெறவேண்டுமென்று சமஷ்டிக் கவுன்ஸிலுக்கு மனுச் செய்து கொள்ளலாம். மனுதார்கள் தாங்களே கையெழுத்துப் போடவேண்டும். ஸ்தலத்துத் தலைமையதிகாரி அதில் அத்தாட்சியாகக் கையெழுத்திட வேண்டும். உடனே பொது ஜனங்களின் ஓட்டு எடுப்பதற்குக் கவுன்ஸில் ஒரு தேதியைக் குறிப்பிடும். ஆனல், சமஷ்டி முழுவதிலும் ஒரே தேதியில் ஓட்டு எடுக்கப்படவேண்டும். ஓட்டர்களில் பெரும்பாலார் மசோதா வொன்றை ஆதரித்தால்தான் அது சட்டமாகும். 90 நாட்களுக்குள், இவ்வித மனு வராவிட்டால், மசோதாக்கள் சட்டமாகிவிடும். இம்முறைக்குச் சமஷ்டி ரேபரேண்டம் என்று பெயர். சமஷ்டி பட்ஜெட்டைப் பற்றியும் அன்னிய நாட்டு உடன்படிக்கைகளைப் பற்றியும், இம்முறை கையாளப் படுவதில்லை.

சட்ட நிர்மாண விஷயத்திற் பொது ஜனங்களின் ஓட்டுக்களைப் பெறுவதைப் பற்றி, அரசியல் அறிஞர்களுள் அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன. பிரதிநிதித்தன்மை வாய்ந்த அரசாங்கத்தினுள்ள குறைகளை நீக்க, ரேபரேண்டம் ஒரு தக்கவழி யென்பது ஒரு சாரார் கொள்கை. தற்கால ஜனநாயக ஆட்சி, கட்சி ஸ்தாபனத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. பொதுத் தேர்தல்களில், ஓட்டர்கள் தங்களுடைய அபிப்பிராயத்திற்கு ஒத்த கொள்கைகளைக் கொண்ட கட்சி அபேட்சகர்களுக்கு ஓட்டு அளித்தவுடன், அவர்களின் பொறுப்பு முடிந்து விடுகிறது. பிறகு அவர்களின் பிரதிநிதிகள் அவர்களுக்குக் கட்டுப்பட்டவ ரல்லர். கட்சித் திட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடப்பவரே யாவர். சபையிற் பிரதிநிதிகளுக்குச் சுயேச்சையாய் ஓட்டு அளிக்க இயலாது. மேலும், பெரும்பான்மைக்

இவ்வுரிமை நன்மை பயப்பதா?

கட்சி அதன் பலத்தைக்கொண்டு எவ்விதச் சட்டத்தையும் நிறைவேற்றலாம். சிறு பான்மையோராகிய எதிர்க்கட்சியினர்களின் பிரசங்கங்களும், முயற்சிகளும் பயன்படா. ஆகையால், ஓட்டர்களின் அபிப்பிராயத்திற்கு மாருக, அதிகாரத்திலிருக்கும் கட்சி ஒரு சட்டதிட்டத்தை ஏற்படுத்தலாம். ஜனங்களுக்கு அதைத் தடுக்க இடமில்லை.

பொது ஜனவாக்குப் பெறும் முறையில், எந்தச் சட்டமும் ஜனங்கள் அபிப்பிராயத்திற்கு விரோதமாக இருந்தால், அனுஷ்டானத்திற்கு வரமுடியாது. ஆதலின், ஜனநாயக ஆட்சி உண்மையாக நடைபெறும். இரண்டாவது, சட்ட நிர்மாணத்திற்கு இம்முறை தேசமக்களின் அங்கீகாரத்தை முத்திரை போட்டுவைத்தது போலாக்குகிறது. ஒவ்வொருவனும், பொதுமக்கள் சம்மதித்த சட்டத்திற்குக் கீழ்ப்படிவது தன் கடமையெனக் கருதுவான். சில வகுப்பினர்களின் அதிருப்தியும் எதிர்ப்புங் குறைவுபடும். மூன்ருவதாக, தேசமக்களின் முடிவான தீர்ப்பு ஏற்பட்டு விட்ட பிறகு, வீணை கிளர்ச்சியும், எரிச்சலும் நின்றுவிடும். புரட்சியும் ஏற்படாது. கடைசியாக, இம்முறையினுற் பொது ஜனங்களுக்கு அரசியல் விஷயங்களில் ஊக்கமும், கவனமும் அதிகரிக்கும். ஆதலின், ஸ்விட்ஜர்லந்து பிரஜைகளுக்கு அரசியல் அறிவை வளர்க்க, இம்முறை ஓர் ஒப்பற்ற சாதனமாக விளங்குகின்றதென்னலாம்.

ஆனுல், இது திருப்திகரமான முறையன்று என்பது அநேகர் அபிப்பிராயம். பொதுஜனங்கள் நேராகச் சட்டமியற்றுவதாற் சட்டசபையின் பொறுப்புணர்ச்சி குறைந்துவிடுகிறது. சில சமயங்களில், அப்பொறுப்பு இல்லாமலே ஆகிவிடும். மேலும், பிரதிநிதிகள் பொதுவாகப் பொறுப்பு

வாய்ந்தவர்களும், அனுபவமும் அறிவுமுடையவர்களுமாவர். பொது மக்களுக்குச் சட்டங்களின் நுணுக்கமான அம்சங்கள் நன்கு விளங்குமென்பது எதிர்பார்க்கக்கூடியதன்று. ஆதலின், இம்முறை, பொறுப்பாளிகளையும் அறிஞர்களையும் விட்டுப் பொறுப்பற்றவர்களிடமும் அறிவில்லாதவர்களிடமும் மனுச்செய்து கொள்வது போலவேயாகும். இவையன்றி, தற்காலச் சட்ட நிர்மாணமோ மிகச் சிக்கலானது. அதில் உள்ள பல சிக்கல்களையும் முடிச்சுக்களையும் பிரித்தெடுத்துச் சீர் செய்து, ஜனங்களின் நேர்முகமான அபிப்பிராயத்தைப் பெறுவதென்பது, மிகச் சிரமமான வேலையாகும். உதாரணமாக, இந்தியத் தொழில்களுக்கும் வியாபாரத்திற்கும் பாதுகாப்பு வேண்டுமா வென்பதைப் பற்றி, இந்திய வாக்காளர்கள் ஓட்டுச் செய்வதில் கஷ்டம் ஏற்படாது. ஆனால், ஒவ்வொரு வரி விஷயமாகவும் பொதுஜன அபிப்பிராயத்தைப் பெறுவதென்பது சாத்தியமென்று வைத்துக் கொண்டாலும், பாதுகாப்பு வரிகளின் விவரங்களைக் குறிப்பிடும் ஒரு சட்டத்தைப்பற்றி அபிப்பிராயங் கொடுப்பதற்கு அவர்களிற் பெரும்பாலோர்க்குப் போதிய அறிவு இராது. கட்சிப் பிரசாரர்களும், ராஜீய வாதிகளும் பிரசாரம் நடத்தி ரேபரேண்டம், இனிஷியேட்டிவ் இவைகளுக்குச் சாதகமாகவோ, பாதகமாகவோ ஓட்டர்களைத் திருப்பமுடியும். ஆதலின், இம்முறைகளால் கட்சித் தலையீட்டின் ஊழல்களை ஒழிக்க முடியாது. மேலும், நடைமுறையில் அபிப்பிராயங் கொடுக்கும் பொது ஜனங்களின் தொகையும், உற்சாகமும் அவ்வளவு திருப்திகரமாகவுமில்லை.

ஸ்விட்ஜர்லந்தில் இவ்விதம் பொதுஜனங்கள் சட்ட நிர்மாண விஷயத்தில் நேர்முகமாக ஓட்டுச்செய்யும் முறை வெற்றிகரமானதென்றே வைத்துக்கொண்டாலும், அதை

மற்றநாடுகளிலும் ஏற்படுத்துவ தென்பதில், மிக்க ஜாக்கிரதை யிருக்கவேண்டும். ஸ்விட்ஜர்லந்தின் அரசியல் நிலைமை வேறெங்கு மில்லை. அது மிகச்சிறிய நாடு. அங்குச் சுய ஆட்சி அனுபவம் நீண்டகாலமாக உள்ளது. அதன் ஜனசமூகம் ஒன்றுபட்டது. அங்குப் பிரஜைகளில், ஒன்று சேராத வகுப்பினர் மிகக் குறைவு. ஜனங்கள் பொதுவாக அறிவாளர்கள். அவர்களுக்கு உண்மையான தேசபக்தியுமுண்டு. அவர்கள் கட்சிஸ்தாபனங்களின் அடிமைகள் அல்லர். அங்குச் செல்வத்தினுல் ஏற்ற தாழ்வுகள் கிடையா. ஆதலின், ஏழை பணக்காரர் என்ற பேதம் அதிகமில்லை. ஜனங்கள் அமைதியுடன் வாழ்கின்றனர். இத்தகைய ஒரு தனி நிலைமை வாய்ந்த நாட்டின் அரசியல் திட்டத்தையும், முறைகளேயும் மற்ற நாடுகள் பின்பற்றுவது உசிதமாகாது.

ஸ்விஸ் முறை மற்ற தேசங்களுக்கு ஒவ்வாது

கட்சிகள்

தற்காலம் ஸிவிட்ஜர்லந்தில் பின் வருங் கட்சிகள் பிரதானமானவைகளாய் விளங்குகின்றன. (1) காதலிக் கன்ஸெர்வெட்டிவ், (2) தீவிரவாதிகள், (3) சமூக ஜனநாயகவாதிகள், (4) விவசாயிகள். ஒரு தலைமுறைக்கு முன் ஸ்விஸ் அரசியலில், ஒரு வலிய கட்சியாக இருந்த லிபரல்கள் இப்பொழுது அநேகமாக மறைந்தே போயினர். பொதுவுடைமைக் கட்சிக்குப் பெருத்த ஆதரவில்லை.

காதலிக் கன்ஸெர்வெட்டிவ் கட்சியார் பிற்போக்காளர்கள். அவர்களுடைய முக்கிய நோக்கம், மதப் பாதுகாப்பும் அவர்களுடைய மதத்தினரின் நலமுமே யாம். சமீபகாலமாக, அவர்கள் தொழிலாளர் கட்சியையும் ஆதரித்து வருகின்ற

னர். இப்பொழுது அவர்களுடைய பலம், தேசீய கவுன்ஸி லில் வேறு இரண்டு முற்போக்குக் கட்சிகளின் பலத்திற்கு ஒப்பாக இருக்கிறது.

தீவிர வாதிகள் எனப்படுவோர் நடுக்கட்சியைச் சேர்ந் தவர்கள். அவர்களுடைய முக்கியமான நோக்கங்கள், சமஷ்டி அதிகாரத்தை அதிகரித்தல், நேர்முகமான ஜன நாயக ஆட்சி முதலியன. கவுன்ஸிலில் அவர்கள் தாம் பெரும்பான்மைப் பலங் கொண்டவர்கள். அவர்களுடைய கட்சி ஸ்தாபனம் விசாலமாயும் ஆழ்ந்துமுள்ள அடிப்படை யையுங் கட்டுக்கோப்பையுங் கொண்டது. தொழிலாளர். நிதித்தலைவர் இவர்களிடம் அதற்குச் செல்வாக்குண்டு. ப்ராட்டேஸ்டேண்டு குடியானவர்களும் அதனை ஆதரிக் கின்றனர்.

சமூக ஜனநாயக வாதிகள் மூன்றும் கட்சியாகும். இதர நாடுகளில் அபேத வாதிகள் கொண்டுள்ள கொள்கை யையே அவர்கள் மேற்கொள்கின்றனர். ஆகையால், தொழிற் சாலைகள் இருக்குமிடங்களில் அவர்களுக்குச் செல்வாக்கு அதிகமாக இருக்கிறது. அபேதவாதக் கொள்கையில் ஸ்விஸ் நாட்டார் எளிதில் ஈடுபடமாட்டார்களெனினும், அபேத வாதிகளின் பிரசாரங்களால் அவர்கள் வரவரச் சிறிது சிறி தாக அரசியல் அறிவு பெற்றுவருகின்றனர். தேசீய கவுன் ஸிலில் இக்கட்சி இப்பொழுது ஒரு முக்கிய ஸ்தானம் வகித்து வருகிறது.

நான்காவது கட்சி விவசாயிகளுடையது. அது குடி யானவர்களின் சங்கத்திலிருந்து உற்பத்தியானது. அச் சங்கம், 1919-ம் வருஷம் தீவிரவாதக் கட்சியிலிருந்து பிரித்து அமைக்கப்பட்டது. விவசாய விஷயத்தில் மட்

டும் தான் அது கவனம் வைக்கிறது. அக்கட்சியினருக்கு யாதொரு தீவிரமான அரசியற் கொள்கையு மில்லாததால் தேசிய விஷயங்களில் அவர்கள் ஒரு கீழ்ப்பட்ட ஸ்தானத்தையே வகிக்கிறார்கள்.

கட்சியமைப்பு

ஒவ்வொரு முக்கியமான கட்சிக்கும் மத்தியஸ்தாபனம் ஒன்று உண்டு. அவ்வவக்கட்சிகளுக்குக் கிளைகளாக ஒவ்வொரு கான்டனிலும் சிறு கட்சிகள் இருக்கின்றன. எல்லாத் தேசிய விஷயங்களிலும் அக்கிளை ஸ்தாபனங்கள், மத்திய ஸ்தாபனத்தின் உத்தியோகஸ்தர்கள் சொற்படி நடக்கின்றன. ஒவ்வொரு கட்சியின் மத்தியக் கமிட்டியிலும் 30 முதல் 50 வரையில் அங்கத்தினர்கள் இருக்கிறார்கள், அவர்கள் வருஷா வருஷம் கான்டனாலோ, "டையட்" டாலோ தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.

'டையட்' என்பது ஆண்டு தோறும் ஒரு முக்கியமான நகரில் நடைபெறுங் கட்சிக் கூட்டமாகும். நாட்டின் எல்லாப் பாகங்களிலிருந்தும் அதற்குப் பிரதிநிதிகள் வருவார்கள். கட்சியின் வருஷாந்த அறிக்கையும், கணக்குக்களும் அக்கூட்டத்திற் சமர்ப்பிக்கப்படும். அது முக்கியமான பொதுப் பிரச்னைகளைப் பற்றி விவாதித்துச் சமஷ்டிச் சட்ட சபையின் வேலையைப் பரிசீலனை செய்கின்றது. அடுத்த வருஷத்திற்கு ஒரு திட்டமும் தயாரிக்கிறது. தேசிய கவுன்ஸில், ராஜாங்க சபை இவற்றின் பிரதிநிதிகளும் இதிற் கலந்து கொள்கிறார்கள்.

இத்தனைக் கட்சிகளும், அமைப்புக்களும் இருந்த போதிலும் ஸ்விஸ் அரசியல் வாழ்க்கையில் சச்சரவுகளோ,

மனஸ்தாபங்களோ கிடையா. மும்மதங்களைத் தழுவி, மூன்று மொழிகளைப் பேசும், மூவகையினரான பிரஜைகளிடையே, இத்தகைய அரசியல் ஒற்றுமை கட்சிச் சச்சரவு யேற்பட்டிருப்பது மிகவும் வியக்கத் தக் கிடையாது கதே. இவ்வாறு அங்நாட்டுப் பிரஜைகள் அரசியற் போக்கில் ஒற்றுமைப் பட்டிருப்ப தற்குக் காரணங்களும் சில உள. அபிப்பிராய பேதங்களுக்கும் விவாதங்களுக்கும் இடங்கொடுக்கும் குடியேற்ற நாட்டுத் தகவல்களோ, அங்நியநாட்டுத் தகவல்களோ ஸ்விட்ஜர் லந்திற்குக் கிடையா. பாதிரிகளை நடத்துவதைப்பற்றிய நியதியைத்தவிர மத வித்தியாசங்கள் வழக்கத்தில் அங்நாட்டு அரசியற் போக்கை பாதிப்பதில்லை. செல்வத்தில் ஏற்ற தாழ்வுகள் அங்நாட்டு மக்களுக்குள் அதிகமில்லையாதலால் ஏழை, பணக்காரனென்ற வகுப்பு வாதமுங் கிடையாது. ஸ்விஸ் மக்கள் கண்மூடித்தனமாக பெரிய பெயரையோ, மனிதரையோ பின்பற்றி வழிபடுபவரல்லர். எதிர்க்கட்சியினரைப் பதவியிலிருந்து நீக்கித்தாம் உத்தியோகங்களைப் பெறுவது தான் அரசியலின் நியமம் என்று அவர்கள் கருதுவதில்லை. எந்தக்கட்சியினராயினும் காரியப்போக்கில் திறமையையும், அனுபவத்தையுமே அவர்கள் எதிர் பார்க்கின்றனர். அவர்களுடைய நாட்டின் விசேஷ இயற்கையமைப்பே ஒற்றுமையையும், தேசபக்தியையும் ஊட்டி வளர்ப்பதாகும். அன்னோர் அபிப்பிராய பேதங்களைப் பொருட்படுத்தாது, தேச நன்மையையே நோக்கமாகக் கொண்டுள்ளார்கள். அத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த அரசியலில், கட்சியைப் பின்பற்றிக் கேவலம் வயிற்றுப் பிழைப்பையே பெரிதாகக் கருதும் ராஜீய வாதிகளும், வெறும் பேச்சுக்காரர்களும் தலைகாட்ட முடியாது. சட்டசபையிலும் அங்கத்தினர்கள் உட்காரும் வரிசை அவரவர்கள் ஊரைப் பொறுத்ததாய் இருக்கிறதேயொழிய

கட்சியைப் பொறுத்து இல்லை. சபை நடைமுறைகள் யாவும், மனஸ்தாபமும், பகைமையும், எரிச்சலும் ஏற்பட இடமின்றி அமைக்கப் பட்டிருக்கின்றன. முக்கியமான உத்தியோகஸ்தர்கள் யாவரும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு விடுகிறார்கள். பெரும்பான்மைக் கட்சிக்கு இதில் சம்பந்தமே கிடையாது. முக்கியமான அரசியல் விஷயங்களில் முடிவான தீர்ப்பு கூறும் அதிகாரம் ஜனங்களிடத்திலேயே இருப்பதால், ஸ்விஸ் சட்டசபைக் கட்சிகள் வெற்றிப்பறை முழக்கி ஆரவாரிக்க இடமில்லை.

அத்தியாயம் 17

ஸோவியத் அபேதவாதக் குடியரசுகளின் யூனியன்

(ஸோ. அ. கு. யூ.)

1917-ம் வருஷம் மார்ச்சு மாதம் ஜனங்கள் செய்த கலகத்தின் காரணமாக ரஷ்ய சக்கரவர்த்தியின் அரசாங்கம்
வீழ்ச்சியுற்றது. ரஷ்ய சக்கரவர்த்தி இரண்
உற்பத்தி வரலாறு டாம் நிக்கோலஸ் முடி துறந்தார். இளவரசர்
லுவ்லின் கீழ் டூமோ சபை ஒரு தாற்காலிக
அரசாங்கத்தை ஏற்படுத்தியது. ஆனால், அவ்வாண்டிலேயே அது பல முறை சீர்திருத்தப்பட்டது. முடிவாக **1917**-ம் வருஷம் நவம்பர் மாதம் பால்ஷிவிக் அபேதவாதக் கட்சியார் பெட்ரோகிராட் நகரைக் கைப்பற்றி, அரசியல் நிர்வாகத்தையுங் கைக்கொண்டு, அதனை அகில ரஷ்ய ஸோவியத்* காங்கிரஸ் கையில் ஒப்படைத்தனர்.

---

*ஸோவியத் என்றால் தொழிலாளர்களின் சபை என்று பொருள்

1918-ம் வருஷம் ஜுலை மாதம் 10-ம் தேதி ஐந்தாவது காங்கிரஸ், புது அரசாங்கத்தின் அரசியல் திட்டத்தை அங்கீகரித்தது. புது ஆட்சியின் பெயர், ரஷ்ய அபேதவாத சமஷ்டி ஸோவியத் குடியரசு என்பது. 1922-ம் வருஷம் டிஸம்பர் மாதம் நான்கு முக்கிய ஸோவியத் குடியரசு நாடுகளின் பிரதிநிதிகள் மாஸ்கோ நகரிற் கூடி ஓர் ஐக்கிய சமஷ்டி உடன்படிக்கை செய்து கொண்டனர். அதன் படி ஓர் அபேதவாதக் குடியரசு ஸோவியத் யூனியன் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த யூனியனில் ரஷ்ய அபேதவாத சமஷ்டி ஸோவியத் குடியரசும் மூன்று இதர சமஷ்டிக் குடியரசுகளும் இருந்தன. 1922-ம் வருஷம் டிஸம்பர் மாதம் பிரஜைகளின் தீர்மானப்படி அவைகள் ஒரு சமஷ்டி நாடாக அமைக்கப்பட்டன. பிறகு ஐக்கிய சமஷ்டியில் மூன்று இதரக் குடியரசுகளுஞ் சேர்ந்தன.

இந்தத் திட்டத்திற் கண்ட ஸோவியத் நாடு, முளை தோன்றும் பருவத்திலிருந்தது. அரசிய லியந்திரம் நடைமுறைவேலை அனுபவத்திலிருந்து, அதன் அமைப்பும் ஸ்தாபனங்களும் மாறி அமைய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆகையால், ஒரு புதிய அரசியல் திட்டத்தைத் தயார் செய்வதற்காக, ஸ்டாலினின் தலைமையில் ஓர் அரசியல் அமைப்புக் கமிஷன் நியமிக்கப்பட்டது. அதன் அறிக்கை 1936-ம் வருஷம் நவம்பர் மாதம் அகில யூனியன் ஸோவியத் காங்கிரஸில் பரிசோதனை செய்யப் பெற்று, அதன் அங்கீகாரத்தின் மேல் சட்டமாயிற்று.

ஸோவியத் அபேதவாதக் குடியரசுகள் சம உரிமைகளுடன் சேர்ந்துழைப்பதென்ற கட்டுப்பாட்டின் மீது ஏற்பட்ட சமஷ்டி நாடே, ஸோவியத் குடியரசுகள் யூனியன் என்ப

தாகும். அதில் 11 தனி எண்ணிக்கைகளான உட்பிரிவுகள் இருக்கின்றன. அவையாவன:— (1) ரஷ்ய ஸோவியத் சமஷ்டி அபேதவாதக் குடியரசு. (2) யுக்ரேரியன் ஸோ. ச. அ. கு. (3) வெள்ளை ரஷ்யன் ஸோ. ச. அ. கு. (4) அஸெர் பெய்ஸன் ஸோ. ச. அ. கு. (5) ஜியார்ஜியன் ஸோ. ச. அ. கு. (6) ஆர்மீனியன் ஸோ. ச. அ. கு. (7) டர்க்மென் ஸோ. ச. அ. கு. (8) உஸ்பெக் ஸோ. ச. அ. கு. (9) தாட்ஷிக் ஸோ. ச. அ. கு. (10) குஷாக் ஸோ. ச. அ. கு. (11) கிர் கிஸ் ஸோ. ச. அ. கு. இவற்றின் கீழும், பல பிரதேசங்கள், மாகாணங்கள், சுயேச்சை மாகாணங்கள், ஜில்லாக்கள், நகரங்கள், கிராமங்கள் இருக்கின்றன. இவையனைத்தும் தத்தம் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் கொண்ட ஸோவி யத்துக்களாலேயே பரிபாலிக்கப்படுகின்றன.

இச்சமஷ்டிச் சங்கம், தாமாகவே விரும்பிச் சேர்ந்து கொண்ட சம உரிமை வாய்ந்த குடியரசுகளால் அமைந்ததா கும். ஒவ்வொரு குடியரசும் வேண்டும் போது அதிலிருந்து விலகிக்கொள்ளும் உரிமையைக் கொண்டிருக்கிறது. வேறு எந்தச் சமஷ்டித் திட்டத்திலும் இந்த உரிமை கிடையாது. எல்லாச் சமஷ்டி அரசியல்களிலும், சமஷ்டி கலைக்கக்கூடாத ஓர் ஒற்றுமை வாய்ந்ததென்று கருதப்படு கின்றது

விலகிக்கொள்ளும் உரிமை

நாட்டின் பொருளாதார அமைப்பிற்கு அளிக்கப்பட்டி ருக்கும் தனிச்சிறப்பே ஸோவியத் ஐக்கிய அபேதவாதக் குடியரசு சமஷ்டியின் அரசியலில் மற்றொரு விசேஷமென்னலாம். அது தொழிலாளர் களும், விவசாயிகளும் அடங்கிய ஒரு பொதுவுடமை நாடு. தொழிலாளர் பிரதிநிதிகளின் ஸோவி

சமூக அமைப்பு

யத்துக்களே இதற்கு மூலாதாரம். நிலச் சுவான்தார்களும், முதலாளிகளும் அதிகாரமிழந்து போனதின் பலனுக இவை வளர்ந்தோங்கின. எல்லா அதிகாரங்களும் நகரங்களிலும் கிராமங்களிலும் வாழும் தொழிலாளர்களிடம் இருக்கின்றன. முதலாளித்தன்மை என்னும் செல்வாக்கின் மீது ஏற்பட்டிருந்த பொருளாதாரக் கொள்கையும், மனிதனை மனிதன் கொள்ளையடிக்கும் முறையும் ஒழிந்ததால், ஒரு புதுமையான பொதுவுடைமைப் பொருளாதாரத் தன்மையும், பொருளுற்பத்தி மூலங்களைப் பொதுவுடைமையாக்குங் கொள்கையும் ஸ்தாபிக்கப் பெற்றன. இவை தாம் ரஷ்ய சமஷ்டியின் பொருளாதார மூலம். தொழிலாளர்களும், விவசாயிகளும் இந்த பொதுவுடைமைப் பொருளாதார முறையுடன் ஒரு மனிதன் தன் உழைப்பால் மற்றொரு மனிதனைக் கொள்ளையடிக்காமல் ஏற்படுஞ் செல்வத் தொகுதியையும் கொள்ளலாமென்று சட்டம் அனுமதி யளிக்கின்றது. வேலையிலிருந்து வரும் ஊதியத்தையும், சேமிப்பையும், வீடு முதலிய குடும்பப் பொருள்களையும், சொந்த சௌகரியத்திற்காக வேண்டியவைகளையும் ஒரு மனிதன் பொருளாக வைத்திருப்பதைச் சட்டம் அனுமதித்துப் பாதுகாப்புஞ் செய்கின்றது. 'வேலை செய்யாதவனுக்கு உணவு கிடையாது' என்ற தத்துவத்தின்படி ரஷ்ய சமஷ்டியில் வேலை செய்யக் கூடிய ஒவ்வொருவனும் கட்டாயமாக வேலை செய்தாக வேண்டும். பொதுவுடைமைக் கொள்கைப்படி, திறமையைப் பொறுத்து ஒவ்வொருவனிடமிருந்து வசூலித்தலும், வேலையைப் பொறுத்து ஒவ்வொருவனுக்கும் ஊதியங் கொடுத்தலும் ரஷ்யாவில் அனுஷ்டானத்தில் இருந்து வருகின்றன.

யூனியன் பிரஜைகளின் உரிமைகளையும், கடமைகளையும் விரிவாகக் குறிப்பிடும் அட்டவணை யொன்று அரசியல்

திட்டத்தில் அடங்கியிருக்கிறது. வேறு எங்கும் காணப் பெறாத சில ஒப்பற்ற உரிமைகள் அதில்இருக்கின்றன. யூனியன் பிரஜைகளுக்கு வேலை பெறும் உரிமையுண்டு. வேலையின் அளவுக்கும், திறமைக்கும் ஏற்றபடியே கூலி கொடுக்கப்படும். இவ்வுரிமையை ஒவ்வொருவனும் நிச்சயமாகப் பெறுவதற்குச் சாதகங்களும் ஏற்பட்டிருக்கின்றன. தேசீயப் பொருளாதாரத்தைப் பொதுவுடைமை முறைப்படி அமைத்தது, ஸோவியத் சமூகத்திற் பொருளுற்பத்திச் சாதனங்கள் எப்பொழுதும் வளர்ந்து வருவது, பொருளாதார மந்தமும் நெருக்கடியும் ஏற்படாமலிருப்பது, வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிக்கப் பெற்றது, இக்காரணங்களால் ஒவ்வொரு பிரஜைக்கும் வேலைபெறும் உரிமை நிச்சயமாகப் பயன்படுவதாகும்.

வேலை பெறும் உரிமை

பிரஜைகளுக்கு ஓய்வு கொள்ளவும் உரிமையுண்டு. பொதுவாகத் தொழிலாளர்களின் வேலை நேரம் தினம் ஏழு மணிகளாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வருஷத்திலும் சம்பளத்துடன் வருஷாந்த ரஜா கொடுக்க ஏற்பாடாயிருக்கிறது. எல்லா இடங்களிலும், ஆரோக்கியத்திற்குரிய ஸ்தலங்கள், ஓய்வுச்சாலைகள், தொழிலாளர்கள் உபயோகத்திற்கேற்ற விளையாட்டிடங்கள் முதலிய பல வசதிகள் அளிக்கப் பெற்றிருக்கின்றன. முதுமையடைந்த நிலைமையிலும், நோயினாற் பீடிக்கப்பட்டு வேலைசெய்யுந் திறமை இழந்தவிடத்தும் உபகாரச் சம்பளம் அளிக்கப்படுகின்றது. அரசாங்கத்தின் செலவில், தொழிலாளர்களுக்கு எங்கும் இன்ஷ்யூரன்ஸ் வசதிகள் இருக்கின்றன. இலவசமான வைத்திய உதவியும், சுகாதார நிலயங்களும் எளிதிற் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஓய்வு பெறும் உரிமை

கல்வி உரிமை ஸோ. அ. கு. யூனியன் பிரஜைகளுக்குக் கல்வி பெறும் உரிமையு முண்டு. ஆரம்பக் கல்வி கட்டாயமாய் எல்லோருக்கும் இலவசமாக அளிக்கப்படுகின்றது. உயர்தரக் கலாசாலை களிற் பெரும் பான்மையாக மாணவர்களுக்கு உதவிச் சம்பளம் கொடுக்கப் படுகின்றது. அந்தந்த நாட்டுப் பாஷை களிற் பயிற்சி யளிக்கப் படுகின்றது. ஆலைகள், தொழிற் சாலைகள், நாட்டுப் பண்ணைகள், இயந்திர ஸ்தாபனங்கள் முதலியவற்றில் வேலை செய்யத் தொழிலாளர்களுக்கு இலவசமான தொழிற்பயிற்சியும், இயந்திரப் பயிற்சியும் கொடுக்கப் படுகின்றன.

ஸ்திரீகளின் சம உரிமை ஸோவியத் யூனியனில், ராஜீய, பொருளாதார, சமூகக் கலைத்துறைகளிற் பெண்டிர்க்கும் ஆடவரை யொப்ப சம உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கும், வேலை, ஓய்வு, வேலைக்கு ஏற்ற ஊதியம் பெறுதல், இன்ஷ்யூரன்ஸ் வசதி, கல்வி முதலிய எல்லா உரிமைகளும் உண்டு. பிரசவ காலங்களிற் சம்பளத்துடன் ரஜா அல்லது ஓய்வு பெறும் உரிமையும் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. பிரசவ ஆஸ்பத்திரிகள், சிகிச்சைச் சாலைகள் முதலிய சௌகரியங்களும் இருக்கின்றன.

பிரஜா உரிமைக்கு ஜாதித் தடையில்லை நாடு, ஜாதி யென்ற வித்தியாசமின்றி எல்லோருக்கும் பொருளாதார, சமூக, ராஜீயத்துறைகளிற் சம உரிமைகள் என்றைக்கும் நிலையாக ஏற்பட்டிருக்கின்றன. வெளிப்படையாகவோ அல்லது மறைவாகவோ, இவ்வுரிமைகளுக்கு நிர்ப்பந்த மேற்படுத்தினாலும், அல்லது ஜாதி தேசம் காரணமாக மறைவாகவோ வெளிப்படையா

கவோ சலுகை ஏற்படுத்தினாலும் சட்டப்படி அது குற்றமாகும். மதத்திற்கும் அரசியலுக்கும் சம்பந்தமில்லை. மதத்திற்கும் பள்ளிக்கூடங்களுக்கும் தொடர்பு கிடையாது. ஆகையால், ஒவ்வொருவரும் தம்முடைய விருப்பப்படியிருக்கச் சுதந்திரம் உண்டு. மதச் சடங்குகள் செய்யவோ, மதத்திற்கு விரோதமாகப் பிரசாரஞ் செய்யவோ எல்லாப் பிரஜைகளுக்கும் உரிமை யுண்டு.

வாக்குச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம், பொதுக் கூட்டச் சுதந்திரம் முதலியன

ஸோ. அ. கு. யூனியன் பிரஜைகளுக்குப் பேச்சுச் சுதந்திரமுண்டு. பத்திரிகைகளுக்குப் பதிப்புச் சுதந்திரமும் இருக்கிறது. பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் முதலியவைகளுக்குத் தடையே யில்லை. தொழிலாளர்களுக்கும், தொழிலாளர் சங்கங்களுக்கும் அச்சுக்கூடங்கள், காகிதம், பொதுக் கட்டிடங்கள் முதலிய பல பிரசார வசதிகள் அளிக்கப் பெற்றிருப்பதால், மேற்கண்ட உரிமைகளுக்குச் சர்க்கார் ஜவாப்தாரி என்பது தெரிகிறது. பொதுக்கூட்டங்களிலும், விளையாட்டுப் பாதுகாப்புக் கூட்டங்களிலும், கலை சாஸ்திர ஆராய்ச்சிச் சபைகளிலுஞ் சேர்ந்து வேலை செய்யப் பிரஜைகளுக்குச் சுதந்திர முண்டு.

பிரஜைகளின் கடமைகள்

உடல் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்கப் பெற்றுள்ளது. ஒரு கோர்ட்டின் தீர்ப்போ, அல்லது குற்றச் சாட்டு உத்தரவோ இன்றி, யாரையுங் கைதியாகச் சிறை செய்ய முடியாது. வீடுகளுக்குப் பாதுகாப்பும், கடிதப் போக்கு வரவு ரகசியமும் சட்டத்தாற் உறுதிபடுத்தப் பட்டிருக்கின்றன. அன்னிய நாட்டுப் பிரஜைகளுக்கும்

அங்கு வசிப்பதற்கு உரிமையுண்டு. நாட்டின் பொருளை விருத்தி செய்து பாதுகாப்பது ஒவ்வொரு பிரஜையின் கடமையாகும். அப்பொருளைத் திருடவோ, நாசஞ் செய்யவோ முயல்பவர்கள் ஜனங்களின் விரோதிகளே யாவர். சட்டப்படி எல்லோரும் ராணுவப் பயிற்சி பெறவேண்டும். தொழிலாளர்கள், விவசாயிகள் இவர்களது போர்ப்படையில் ஒவ்வொரு பிரஜையுஞ் சேரவேண்டியது பெரிய கடமையாகும். தாய் நாட்டைப் பாதுகாப்பது ஒவ்வொரு மக்களின் உயர்ந்த பொறுப்பு. தேசத்துரோகம், உறுதி மொழியினின்றுந் தவறுதல், பகைவருடன் சேருதல், அன்னிய நாட்டிற்கு இரகசிய விஷயங்களைத் தெரிவித்தல், இவை மிகக் கொடிய குற்றங்களாகக் கருதப் பட்டு மிகக் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படும்.

சமஷ்டித் தத்துவப்படி அதிகாரப் பிரிவினை

ஸோ. அ. கு. யூனியன், அதன் முக்கிய அதிகார ஸ்தாபனங்கள் மூலமாகவும், அரசாங்க அங்கங்கள் மூலமாகவும் பின்வரும் அதிகாரங்கள் பெற்றுள்ளது:— அன்னிய நாடுகளுடன் உடன்படிக்கை செய்துமுடிப்பது; போர் தொடங்குதலும், சமாதானஞ் செய்தலும்; யூனியனில் புதுக் குடியரசுகளைச் சேர்ப்பது; சமஷ்டித் திட்டம் நடைபெறுவதை மேற்பார்வையிடுதலும், அதன்படி தனிக்குடியரசுகளின் எல்லை மாறுதல்களை அங்கீகரிப்பதும்; யூனியனின் தற்காப்பு ஏற்பாடும், சேனைகளின் அமைப்பும்; அன்னியநாட்டு வியாபாரம், தேசீயப் பொருளாதார அமைப்பு; யூனியனின் வரவு செலவுத்திட்ட அங்கீகாரம்; வரி வருமானங்களின் அங்கீகாரம்; பாங்கிகள், தொழில், விவசாய ஸ்தாபனங்கள், அகில சமஷ்டி வியாபார ஸ்தாபனங்கள், இவற்றை நிர்வகிப்பது;

போக்கு வரவு சாதனங்களின் நிர்வாகம்; தேச சொத்து, இன்ஷ்யூரன்ஸ் நிர்வாகம்; கடன்வாங்குவதுங் கொடுப்பதும்; நிலம், உலோகங்கள், காடுகள், நீர் நிலைகள், இவற்றின் பொருளுற்பத்தியைப் பற்றி மூலாதார விதிகள் இயற்று தல்; கல்வி விஷயத்தில் பிரதமக் கொள்கைகளை நிலை நாட்டு தல்; சுகாதாரத்தைப் பாதுகாத்தல்; தேசீயக் கணக்குக் களின் முறைகளை ஏற்படுத்தல்; அடிப்படையான தொழிற் சட்டங்களை நிர்மாணஞ் செய்தல்; சட்ட நிரூபணம்; சட்ட நடைமுறை; ஸிவில், கிரிமினல் சட்டங்கள் முதலியவைகளை ஏற்படுத்தல்; யூனியன் பிரஜைகளின் கடமைகளைப் பற்றி யும், அன்னிய நாட்டினர் உரிமைகளைப் பற்றியும், அகில யூனியன் மன்னிப்பு விடுதலை முதலியவைகளைப் பற்றியும், சட்டங்கள் இயற்றுதல்.

மேற்கண்டவைகளுக்கு உட்பட்டுத்தான் தனிக்குடி யரசுகளின் அரசாட்சி யதிகாரம் நிலைபெறுகின்றது. இவ் வதிகாரங்களுக்கு உட்படாத விஷயங்களில் ஒவ்வொரு குடி யரசும் சுயேச்சையாய் அதன் அதிகாரங்களைச் செலுத்து கின்றது. அத்தகைய அதிகாரங்களுக்கு யூனியன் பாது காப்பு அளிக்கின்றது. ஒவ்வொரு குடியரசுக்கும், தனி அம் சங்கள் கொண்ட அரசியல் திட்டம் இருக்கின்றது. அது யூனியன் திட்டத்தை அனுசரித்துத்தான் ஸ்தாபிக்கப் பட்டுள்ளது. குடியரசுகளுடைய எல்லைகளை அவைகளு டைய சம்மதமின்றி மாற்றமுடியாது. யூனியன் சட்டங்கள் தனிக்குடியரசுகளிலும் செல்லத்தக்கவையே. ஒரு குடியர சுச் சட்டம் யூனியன் சட்டத்திற்கு மாறுபட்டால் யூனியன் சட்டந்தான் மேலாக நிலைபெறும். யூனியன் பிரஜைகள் எல்லோருக்கும் நிபந்தனைகள் ஒரேவிதமானவை தாம். குடி யரசின் பிரஜை ஒவ்வொருவரும் யூனியன் பிரஜையே யாவர்.

அரசியல் திட்டத் திருத்தம்

உயர்தரக் கவுன்ஸில் என்று பெயருடைய யூனியன் சட்டசபையின் அபிப்பிராயப்படியேதான் அரசியல் திட்டத்தைத் திருத்த முடியும். அச்சபையின் இரு பிரிவுகளிலும் மூன்றில் இரண்டு பங்குள்ள அங்கத்தினரால் திருத்தம் நிறைவேற வேண்டும். சாதாரணச் சட்டங்கள் இயற்றும் சபைதான் அரசியல் திட்டத்தையும் திருத்துகின்றது. அரசியல் திருத்தத்திற்கு மூன்றில் இரண்டு பங்கான பெரும்பான்மைப் பலம் வேண்டுமென்பதே வித்தியாசம். ஆதலால், ஸோ. அ. கு. யூனியன் அரசியல் திட்டம் வளைந்து கொடுக்கக்கூடிய திட்டம் என்றுதான் கருத வேண்டும்.

மத்திய அரசாங்கத்தின் அமைப்பு

சட்டசபை: யூனியன் உயர்தரக் கவுன்ஸில்

ஸோ. அ. கு. யூனியனில் அரசியல் அதிகாரம் பெற்ற தலைமை நிலயம் உயர்தரக் கவுன்ஸில் என்பதாம். அது அரசியல் திட்டத்தில் அதற்கேற்பட்ட அதிகாரங்கள் யாவற்றையும், அதற்குக் கீழ்ப்பட்ட ஸ்தாபனங்களான "பிரிஸிடியம்," "யூனியன் ஜனங்களின் கமிஸார்கள் கவுன்ஸில்," "யூனியன் ஜனங்களின் கமிஸார்கள்," இவற்றின் அதிகாரங்களுக்குப் பாதகமின்றியும் அவற்றில் தலையிடாமலும் நடத்தும்.

யூனியனின் உயர்தரக்கவுன்ஸில் தான் அதனுடைய சட்ட நிர்மாணவேலை முழுவதையும் செய்கின்றது. அதில், யூனியன் கவுன்ஸில் என்றும், தேசங்களின் கவுன்ஸில் என்றும் இரண்டு சபைகள் இருக்கின்றன. மற்ற தேசங்களிலிருக்கும் கீழ்ச்சபையைப் போல யூனியன் கவுன்ஸிலும்,

மேல் சபையைப்போலத் தேசங்களின் கவுன்ஸிலும் வேலை செய்கின்றன. மூன்று லக்ஷம் ஜனங்களுக்கு ஒரு பிரதிநிதி என்ற விதியின்படி யூனியன் கவுன்ஸிலுக்கு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.

அமைப்பு: இருசபைகள் யூனியன் கவுன்ஸில் ii தேசங்களின் கவுன்ஸில்

யூனியன் குடியரசுகளின் உயர்தரக் கவுன்ஸில்களாலும், சுயேச்சை மாகாணங்களிலிருக்கும் தொழிலாளர் பிரதிநிதிகளின் ஸோவியத்துகளாலும் நியமிக்கப்பட்ட அங்கத்தினர்களைக் கொண்டது தேசங்களின் கவுன்ஸில் எனப்படுவது. அதற்கு ஒவ்வொரு யூனியன் குடியரசிலிருந்து பத்துப் பிரதிநிதிகளும் ஒவ்வொரு சுயேச்சைக் குடியரசிலிருந்து ஐந்து பிரதிநிதிகளும், ஒவ்வொரு சுயேச்சை மாகாணத்திலிருந்து இரண்டு பிரதிநிதிகளுமாகத் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். பிரதிநிதிகள் நான்கு வருஷங்களுக்குத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். யூனியன் கவுன்ஸில் ஸோவியத் யூனியன் ஜனங்களின் பிரதிநிதியாகவும், தேசங்களின் கவுன்ஸில் சமஷ்டித் தனி நாடுகள் சட்ட சபைகளின் பிரதிநிதியாகவும், இருப்பதாகக் கருதப் படும்.

இரண்டு இருக்கின்றன. அதிகாரம்

கவுன்ஸில்களுக்கும் சமமான உரிமைகள் இரண்டும் சட்ட மியற்றத்தொடங்கலாம். இரண்டு சபைகளிலும் பெரும்பான்மை ஓட்டுக்கள் பெற்றுவிட்டால், ஒரு பிரேரணை சட்டமாகிவிடும். யூனியனின் உயர்தரக் கவுன்ஸில் நிறைவேற்றுஞ் சட்டங்கள், அதனுடைய பிரிஸிடியத்தின் அக்கிராசனர், காரியதரிசி, இவர்களுடைய கையெழுத்துக்களுடன் பிரசுரிக்கப்படும். இரண்டு சபைகளும் ஒரே காலத்திற் கூடிக்கலையும். ஒவ்வொரு சபையிலும் தேர்ந்

தெடுக்கப்பட்ட ஓர் அக்கிராசனர், இரண்டு உப அக்கிராசனர்கள், அவற்றின் ஏற்பாடுகளைக் கவனித்துக் கூட்டங்களை நடத்துகிறார்கள். உயர்தரக் கவுன்ஸில் பிரிஸிடியத்தால் கூட்டப்படுகிறது. பிரிஸிடியத்தின் விருப்பத்தின் மீதும், யூனியன் குடியரசுகளில் ஏதாவதொன்றின் கோரிக்கையின் மீதும், விசேஷக்கூட்டங்களும் நடைபெறலாம்.

இரண்டு சபைகளுக்குள் ஏதேனுமொரு விஷயத்தில் அபிப்பிராய பேதமேற்பட்டால் இருசபைகளிலிருந்தும்

முட்டுக் கட்டைகள்

சமமாகப் பிரதிநிதிகளைக்கொண்ட ஒரு ஸமரஸ கமிஷனுக்கு அவ்விஷயம் அனுப்பப்படும். அக்கமிஷன் அதைப்பற்றி ஒரு தீர்மானத்திற்கும் வராவிட்டாலும். அதன் தீர்ப்பு ஏதேனுமொரு சபைக்குத் திருப்திகரமாயிராவிட்டாலும் அவ்விஷயம் மறுபடியும் இரு சபைகளிலும் ஆலோசிக்கப் படும். இரு சபைகளும் அப்போதும் ஒரு மனப்படாவிடில், பிரஸிடியம் உயர்தரக் கவுன்ஸிலைக் கலைத்து மறு தேர்தலுக்கு ஏற்பாடு செய்கிறது.

இரண்டு சபைகளும் ஒன்றுகூடி, உயர்தரக்கவுன்ஸிலின் பிரஸிடியத்தைத் தேர்ந்தெடுக்கின்றன. கலப்புக் கூட்டங்கள் இரண்டு சபை அக்கிராசனர்களாலும் மாறி மாறி நடத்தப்படுகின்றன.

தொழிலாளர் டெபுட்டிகளின் ஸோவியத்துகள், யூனியன் உயர்தரக் கவுன்ஸில், குடியரசுகளின் உயர்தரக் கவுன்ஸில்கள், மாகாண நகரகிராமத் தொழிலாளர்

தேர்தல்முறை

ஸோவியத்துகள், இவைகளுக்கெல்லாம் பிரதிநிதிகள், நேர்முகமாய் ரகசியச் சீட்டுப் பதிவு முறைப்படி, வாக்குரிமை பெற்ற எல்லோரா

லும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். புத்தி சுவாதீனம் இல்லாதவர்களும், சட்டப்படி வாக்குரிமை இழந்தவர்களுந்தவிர, 18 வயதிற்கு மேற்பட்ட மற்ற எல்லாப் பிரஜைகளும் தேர்தல்களில் ஓட்டுச்செய்யவும், பிரதிநிதிகளாக நிற்கவும் தகுதியுள்ளவர்களாவர். ஜாதி, மதம், நாடு, கல்வி, செல்வம், பழைய நிலைமை, இவைகளிற் பேதமின்றி எவரும் ஓட்டுச்செய்யவும், தேர்தலில் நிற்கவும் உரிமை பெற்றவர்களே. பெண்களுக்கும் இத்தகைய உரிமைகள் உண்டு. ஒருவருக்குப் பாதிக்குமேல் ஓட்டுக்கள் கிடைத்தால் தான், தேர்தலில் வெற்றி பெற்றவராவர். பிரான்ஸ் தேசத்தில் இருப்பது போல இங்கும் இரண்டாம் முறை ஓட்டு எடுக்க இடமிருக்கிறது. தேர்தல் தொகுதிகளிலிருந்து அபேட்சகர்கள் நிறுத்தப்படுகிறார்கள். சமூக ஸ்தாபனங்களும், தொழிலாளர் சங்கங்களுமே அபேட்சகர்களை நிறுத்த வேண்டும். பொதுவுடைமைக் கட்சி ஸ்தாபனங்களும், தொழில் யூனியன்களும், கூட்டுறவுச் சங்கங்களும், இளைஞர் சங்கங்களும், கலைச் சங்கங்களுங் கூட அபேட்சகர்களை நிறுத்தலாம். ஒவ்வொரு பிரதிநிதியும், தானும், தொழிலாளர் டெபுட்டிகளின் ஸோவியத்தும் செய்த வேலைகளையும் பற்றி ஓட்டர்களுக்கு விவரங் கூறவேண்டும். ஓட்டுக் கொடுப்பவர்களுள் பெரும்பான்மையோர் தீர்மானத்தின் மீது, சட்டத்திற் கண்டபடி, எப்பொழுது வேண்டுமானாலும், பிரதிநிதியை நீக்கி விடலாம்.

நிர்வாகம்

ஸோவியத் அபேதவாதக் குடியரசுகள் யூனியனின் நிர்வாக வேலைகள் மூன்று ஸ்தாபனங்களாற் செய்யப்படுகின்றன. அவையாவன:— யூனியன் கவுன்ஸிலினுடைய "பிரஸிடியம்," "ஜனங்களின் கமிஸார்களின் கவுன்ஸில்," "யூனியன் ஜனங்களின் கமிஸார்கள்."

"பிரஸிடியம்" என்பதுதான் மிகவும் முக்கியமான ஸ்தாபனமாகும். உயர்தரக் கவுன்ஸிலின் ஒரு நிரந்தரக் கமிட்டி போன்றது அது. அதில், ஓர் அக்கிராசனர், நான்கு உப அக்கிராசனர்கள், ஒரு காரியதரிசி, 31 இதர அங்கத்தினர், ஆக மொத்தம் 37 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இவர்களெல்லோரும் யூனியன் உயர்தரக் கவுன்ஸிலின் இரண்டு சபைகளின் கலப்புக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். அது தன் நடைமுறைகளைப்பற்றி உயர்தரக் கவுன்ஸிலுக்குப் பதிற் சொல்லவேண்டிய பொறுப்புடையது.

பிரஸிடியம்

உயர்தரக்கவுன்ஸிலின் கூட்டங்களைப் பிரஸிடியம் தான் கூட்டுகிறது. அதன் இரண்டு சபைகளுக்குள் அபிப்பிராய பேதம் ஏற்பட்டுவிட்டால் அவற்றைக் கலைத்து மறு தேர்தல்களுக்கு ஏற்பாடு செய்கிறது. தன் இஷ்டப்படியோ, அல்லது யூனியன் குடியரசுகளில் ஒன்றின் பிரேரணையின் மீதோ, அது உயர்தரக் கவுன்ஸிலைக் கலைக்கலாம். தன் பொறுப்பிலேயே பொதுஜனவாக்குப் பெறும் முறையையும் நடத்தலாம். "யூனியன் ஜனங்களுடைய கமிஸார்கள் கவுன்ஸில்" குடியரசுகளின் கவுன்ஸில்கள் இவைகளுடைய உத்தரவுகளும், தீர்ப்புக்களும் சட்டத்திற்கு விரோதமாயிருந்தால், அவற்றை விலக்கிவிட இதற்கு அதிகாரம் உண்டு. உயர்தரக் கவுன்ஸிலின் கூட்டங்களுக் கிடையே அதன் வேலைகளைப் "பிரஸிடியம்" கவனிக்கிறது. உயர்தர கவுன்ஸிலின் தீர்மானத்திற் குட்பட்டு "யூனியன் ஜனங்களின் கமிஸார்களை" நியமிக்கிறது. பட்டங்களையும், மன்னிப்புக்களையுங் கொடுக்கிறது. சமஷ்டிப் போர்ப்படையின் தலைமைத் தளபதியை நியமிப்பதும், வேலையைவிட்டு நீக்குவதும் அதுவே. போர்ப் படையிற் சேரப் பிரஜைகளுக்கு அது கட்டளையிடுகின்றது;

சர்வதேச உடன்படிக்கைகளை அங்கீகரிக்கிறது. அன்னிய நாடுகளுக்குப் பிரதிநிதிகளை நியமனஞ் செய்வதும், அவர்களை விலகிவிடுமாறு உத்தரவளிப்பதும் அதன் வேலைகளே. சுருக்கமாகக் கூறுமிடத்து, "பிரஸிடியம்" தான் ஸோ. அ. கு. யூனியன் கட்டிடத்தின் சிகரமாகும். சில சமயங்களில் அது மற்ற நாடுகளின் மன்னரோ, அல்லது தலைவரோ, செய்யும் வேலைகளைச் செய்கிறது. சில சந்தர்ப்பங்களில் அதுவே மந்திரிச்சபை போலவும் நடந்துகொள்கிறது.

ஸோவியத் யூனியனில் முக்கிய நிர்வாக அதிகாரம் "ஜனங்களின் கமிஸார்கள் கவுன்ஸிலிட" மிருக்கிறது. அது

ஜனங்களின் கமிஸார்கள் கவுன்ஸில்

தான் அரசாங்கத்தை நடத்தும் சர்க்காராகும். உயர்தரக் கவுன்ஸிலின் இரண்டு சபைகளுடையவும் கலப்புக் கூட்டத்தில் அது ஏற்படுத்தப்படுகிறது. அது உயர்தரக் கவுன்ஸிலுக்குப் பதிற் சொல்லவேண்டிய பொறுப்புடையது. அதில் தலைவர், உபதலைவர், ஸோவியத் கண்காணிப்புத் தலைவர், கலைக்கமிட்டித் தலைவர், உயர்தரக் கல்விக் கமிட்டித் தலைவர், விவசாயப் பொருள் வாங்கும் கமிட்டித் தலைவர், ஜனங்களின் கமிஸார்கள், இவர்கள் அடங்கியுள்ளார்கள்.

நடைமுறையில் இருக்கும் சட்டங்களின்படி, தீர்ப்புகளும் உத்தரவுகளும் போட்டு அவற்றின் நடவடிக்கைகளைப்

வேலைகள்

பார்வையிடுதல்: (அவ்வுத்தரவுகள் சமஷ்டி முழுவதிலும் நடைபெற வேண்டியவை) கீழிருக்கும் பல கமிஸார்கள், யூனியன் பொருளாதாரக் கலைஞான ஸ்தாபனங்கள், இவற்றின் வேலைகளை ஒன்று கூட்டி நடத்தல்; பொதுஜன அமைதிக்கு

வேண்டிய செயல்களைப் புரிதல்; நாட்டின் நன்மைக்கும், பிரஜா வுரிமைகளைப் பாதுகாப்பதற்கும் ஏற்பாடுகள் செய்தல்; தேசத்தின் ராணுவ அபிவிருத்தியை நாடுதல்; உயர் தரக் கவுன்ஸில் அங்கத்தினர் கேட்கும் விஷயங்களுக்கு மூன்று நாட்களுக்குள் எழுத்து மூலமாகவோ, நேரிலோ விடையளித்தல்; இவையனைத்தும் 'ஜனங்களின் கமிஸார்கள் கவுன்ஸில்' வேலைகளாம்.

ஜனங்களின் கமிஸார்கள்

அரசாங்கத்தின் பல இலாகாக்களும் 'யூனியன் ஜனங்களின் கமிஸார்' களால் நடத்தப்படுகின்றன. பாதுகாப்பு, அன்னிய நாட்டு விஷயங்கள் வியாபாரம், ரயில்வேக்கள், போக்குவரவு, பெரிய தொழில்கள், இவைகள் தாம் கமிஸார் இலாகாக்கள். "பிரஸிடியம் தான் இவைகளை ஸ்தாபிக்கின்றது. தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட வேலையைக் கவனிக்கும் ஒவ்வொரு போர்டுக்கும் தலைவராக ஒரு கமிஸரி இருக்கிறார். உயர் தரக் கவுன்ஸில் அங்கத்தினர்கள் கேட்கும் கேள்விகளுக்கு அவர் பதிற் கூறவேண்டும்.

ஸ்தல ஆட்சி ஸ்தாபனங்களும் யூனியன் குடியரசுகளின் உறுப்புக்களும்

மாகாணங்கள், சுய ஆட்சி கொண்ட மாகாணங்கள், பிரதேசங்கள், ஜில்லாக்கள், நகரங்கள், கிராமங்கள் இவைகளிலிருக்கும் அரசாட்சி ஸ்தாபனங்களெல்லாம், ஸோவியத் தொழிலாளர் டெபுட்டிகளால் அமைந்தவை தாம். இவர்கள் இரண்டு வருஷங்களுக்குத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். பிரதிநிதித் தன்மையின் அளவை அந்தந்தக் குடியரசே தீர்மானித்துக் கொள்ளுகிறது. அமைதியை நிலைநிறுத்தல், சட்ட வழிபாடு, பிரஜா உரிமைப் பாதுகாப்பு, வரவு செலவுத்

திட்டம் அமைத்தல், இவையனைத்தும் இந்த ஸோவியத்துக் களின் வேலைகளாம். இவைகளால் தேர்ந்தெடுக்கப்படும் நிர் வாகக் கமிட்டிகள் தாம் அவ்வேலைகளைச் செய்கின்றன. அவற் றில், ஒரு தலைவரும், ஓர் உபத்தலைவரும், மற்றும் பல அங் கத்தினர்களும் இருப்பார்கள். தங்களைத் தேர்ந்தெடுக்கும் ஸோவியத்திற்கு அவர்கள் பதிற் சொல்ல வேண்டியவர்கள்.

யூனியனிலிருப்பது போலவே தனிக் குடியரசுகளி லும், உயர்தரக் கவுன்ஸில், "ஜனங்களின் கமிஸார்கள் கவுன்ஸில்" முதலியன இருக்கின்றன. உயர்தரக் கவுன்ஸில் தான் சட்ட மியற்றும் அதிகாரம் பெற்றுள்ளது. குடியர சின் அரசியல் திட்டத்தை அது ஏற்கிறது. அதன் அதிகா ரத்திற் குட்பட்ட சுயேச்சை கொண்ட குடியரசுகளின் அர சியல்களுக்குச் சம்மதம் அளிக்கின்றது; பொருளாதாரக் கொள்கையையும், வரவு செலவுத் திட்டத்தையும் அங்கீகரிக் கிறது; மன்னிப்பு விடுதலை அதிகாரங்களைச் செலுத்துகிறது; "பிரஸிடியம்", "ஜனங்களின் கமிஸார்களின் கவுன்ஸில்" இரண்டையுந் தேர்ந்தெடுக்கிறது. 'பிரஸிடியத்தில்' ஒரு தலைவர், அவர் பிரதிநிதிகள், மற்ற பல அங்கத்தினர்கள் இருக்கின்றனர். அதன் அதிகாரம் அந்தந்தக் குடியரசின் அரசியலால் தீர்மானிக்கப்படுகிறது. 'கமிஸார்கள் கவுன் ஸில்' அரசாங்கத்தை நடத்துகிறது. யூனியன் "ஜனங் களின் கமிஸார்கள் கவுன்ஸில்" செய்யும் வேலைகளைத்தாம் இது குடியரசுக் குள்ளும் செய்கின்றது.

நீதி ஸ்தாபனம்

ஸோ. அ. கு. யூனியன் உயர்தரக் கோர்ட்டு, யூனியன் குடியரசுகளின் உயர்தரக் கோர்ட்டுக்கள், மாகாணக் கோர்ட் டுக்கள், யூனியன் உயர்தரக் கவுன்ஸிலால் ஏற்படுத்தப்படும்

விசேஷக் கோர்ட்டுக்கள், "ஜனங்களின் கோர்ட்டுக்கள்", இவைகள் அனைத்தும் நீதி பரிபாலனஞ் செய்கின்றன. அனேகமாய் எல்லாக் கோர்ட்டுக்களிலும் நீதிபதிகள், ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சில கூட்டு நீதிபதிகளுடன் சேர்ந்து தான் வழக்குகளை விசாரிக்கிறார்கள்.

ஸோ. அ. கு. யூனியன் உயர்தரக் கோர்ட்டுத் தான் மேலான நீதி ஸ்தாபனமாகும். மற்ற எல்லாக் கோர்ட்டுக்களின் வேலைகளையும் அதுதான் மேற் நீதிபதிகளைத் பார்வை செய்கின்றது. உயர்தரக் கோர்ட்டு தேர்ந்தெடுத்தல் நீதிபதிகளும், விசேஷக் கோர்ட்டு நீதிபதிகளும் உயர்தரக் கவுன்ஸிலால் ஐந்து வருஷங்களுக்குத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். "ஜனங்களின் கோர்ட்டுக்களின்" நீதிபதிகள் மூன்று வருஷங்களுக்கு அந்தந்தத் தொகுதி ஜனங்களாலேயே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

கோர்ட்டு நடைமுறைகள் அந்தந்தப் பிரதேசத்தின் பாஷையிலேயே நடக்கின்றன. பாஷை தெரியாதவருக்கு ஒரு மொழி பெயர்ப்பாளர் அனுமதிக்கப்படுவர். எல்லாக் கோர்ட்டுக்களிலும் வழக்கு விசாரணை வெளிப்படையாகவே நடக்கும். குற்றவாளிக்குப் பதிலளிக்கும் உரிமை உண்டு. நீதிபதிகள் யாருக்கும் கீழ்ப்படிந்தவர்க ளல்லர்; சட்டத்திற்கே கீழ்ப்படிந்தவ ராவர்.

ஜனங்களின் கமிஸார்கள், அவர்களுக்குக் கீழிருக்கும் ஸ்தாபனங்கள், விசேஷ ஸ்தானங்கள் வகிக்கும் தனி உத்தியோகஸ்தர்கள், யூனியன் பிரஜைகள் ஆகிய பிராஸிக்யூட்டர் இவர்கள் எல்லோராலும் சட்டங்கள் ஒழுங்காகக் கடைப் பிடிக்கப்பட்டு வருகின்றனவா என்பதைக் கவனிக்கும் அதிகாரம் பிராஸிக்யூட்டர் என்பவ

ரிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. அவர் யூனியன் உயர்தரக் கவுன்ஸிலால் ஏழு வருஷங்களுக்கு நியமனஞ் செய்யப்படுகிறார். கீழ்ப்பட்ட பிராஸிக்யூட்டர்கள் (குடியரசுகள், மாகாணங்கள்; நகரங்கள் முதலியவைகளுக்குத் தேவையானவர்கள்) யூனியன் பிராஸிக்யூட்டரால் நியமனஞ் செய்யப்படுகிறார்கள். இந்தப் பிராஸிக்யூட்டர்கள் யாதொரு ஸ்தல ஸ்தாபனத்திற்குங் கட்டுப்பட்டவர்க ளல்லர். யூனியன் பிராஸிக்யூட்டருக்கு மட்டுமே அவர்கள் பதிற் சொல்ல வேண்டியவர்கள்.

புது ஸோவியத் அரசியல் திட்டம், 1918-ம் வருஷத் திட்டத்திற்கு மேலானது. வயது வந்த எல்லோருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டு விட்டது. குடி

முடிவு

யானவர்களுக்கு இன்றித் தொழிலாளர்களுக்கு மட்டும் தேர்தல் விஷயத்தில் சலுகையிருந்தது ஒழிந்து போய்விட்டது. சம உரிமை பெற்ற நேர்முகமான ரகசியத் தேர்தல் முறை எங்கும் ஏற்பாடாகிவிட்டது. மூலாதாரச் சுதந்திரங்களும் ஊர்ஜிதமாகிவிட்டன. பொதுவுடைமைப் பொருளாதாரக் கொள்கையின் கீழ், தனி மனிதர்கள் (தொழிலாளர், குடியானவர்கள்) சொந்த உழைப்பில் சிறு சேமிப்பு வைத்துக் கொள்ள வசதிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. நீதிஸ்தாபனம் சுயேச்சையாய் நடைபெறுகின்றது. பொதுவுடைமைக் கட்சிக்குத் தனிச் சலுகை ஒன்றுங் கிடையாது. இனிமேல் அது தீவிர பிரசாரத்தால் தான் தன் செல்வாக்கைக் காப்பாற்றிக் கொள்ள முடியம்.

ஆனல், மிக நேர்த்தியாக விளங்கும் இந்த அம்சங்கள் நடை முறையில் உபயோக மில்லாமற் போகலாம். தனி நாடுகளுடைய சட்ட சபைகளின் பிரதிநிதியாக இரண்டாஞ் சபை

இருப்பது, வேலை எளிதில் நடைபெறுவதற்கு இடையூருக முடியலாம். தொழிலாளர் பிரிவுகளினிடையே குறைகள் உரிமைகளைப் பற்றிச் சச்சரவுகள் ஏற்படலாம். உருவாய் அமைந்துள்ள அரசியற் கட்சிகள் இல்லாமையால், பொதுவுடைமைக் காரர்களுக்கு மற்ற கட்சிகளைக் காட்டிலும் அதிக வலிமை உண்டாகலாம். நீதிபதிகளின் தேர்தல் முறையும், குறுகிய உத்தியோக காலமும், அவர்களுடைய சுயேச்சாதிகாரத்தைக் குன்றச் செய்து விடலாம்.

ஆனல், விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் கொடுக்கப் பட்டிருக்கும் பேரதிகாரம் மனித சமூகத்தின் நிலைமையைத் திருத்தியமைக்கக் கூடிய சக்தி கொண்ட ஆயுதமாக மாறலாம். இப்பொழுது உலகத்திற்கே, மாஸ்கோ நகரம் ஒரு மகத்தான வழி காட்டியுள்ளது. அனேக நாடுகளில் தனி மனித உரிமையே போய்விடுமோ என்ற அச்சம் உதித்திருக்கும்படியுள்ள இக்காலத்தில், ரஷ்யா, நேர் எதிரான மார்க்கத்தில் முன்னேறிச் செல்வது மெச்சத்தக்கதே. இந்தப் புது அரசியல் திட்டத்தைப்பார்த்தால், ஸோவியத் ரஷ்யா, உலகத்தில் இரு பெரிய ஜன நாயகங்களான அமெரிக்க ஐக்கிய நாடுகள், கிரேட் பிரிட்டன் இவைகளுடன் ஒப்பிடக் கூடியதென்பது உறுதிப்படுகின்றது.

மூன்றாம் பாகம்

அத்தியாயம் 18

இந்தியா 1

(1935-ம் வருஷத்திய இந்திய கவர்ன்மெண்டு ஆக்ட்)

சமஷ்டி உற்பத்தியும் முக்கிய அம்சங்களும்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிரேட் பிரிட்டன், இந்து தேசம் இவ்விரண்டிற்கு முள்ள அரசியற் சரித்திரத்தில் ஒரு புதிய மாறுபாடு ஆரம்பமாயிற்று. 1909-ம் வருஷத்து இந்தியா கவுன்ஸில் சட்டம் பல சீர்திருத்தங்களை ஏற்படுத்தியது. ஆனால் பொறுப்பு வாய்ந்த அரசியலை ஸ்தாபிக்க வேண்டுமென்ற நோக்கம் பிரிட்டிஷாருக்கு இல்லை. சட்ட மியற்று மதிகாரம் முழுவதும் நிர்வாகத்தினிடையே தான் இருந்தது. மாகாண அரசாங்கமெல்லாம் சர்வாதிகாரம் பெற்ற மத்திய சர்க்காரின் வெறும் அங்கங்களாகவே யிருந்தன. அரசியற் பொறுப்பு முழுதும், பிரிட்டிஷ் பார்லிமெண்டினிடையே தான் இருந்தது. இந்தியா காரியதரிசியே இப் பொறுப்பை வகித்து வந்தார்.

புதிய அரசியல் திட்டத்தின் உற்பத்தி

மகாயுத்தம் தொடங்கின பிறகு ஒரு புதிய நிலைமை யேற்பட்டது. 1917-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் இந்தியா காரியதரிசி, மாண்டேகு என்பவர், மன்னர் சார்பாக ஓர் அறிக்கையை வெளியிட்டனர். அதன்படி இந்தியாவில் பொறுப்பு வாய்ந்த ஆட்சியை ஏற்படுத்துவது பிரிட்டிஷ் சர்க்காரின் நோக்கமென்றும், அதை நிறைவேற்ற இந்தியர்

களை அதிகமாக நிர்வாக இலாகாக்களிற் சேர்த்துக் கொள்வ தென்றும், படிப் படியாகச் சுயாட்சி ஸ்தாபனங்கள் ஏற்படுத் தப் படுமென்றும் வாக்களிக்கப்பட்டது.

இவ்வறிக்கையின் பின்னர், 1918-ம் வருஷத்தில் இந் தியா காரியதரிசியும், வைஸராயுங் கலந்து எழுதி வெளியிட்ட அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு, 1919-ம் வருஷத்தில் ஒரு புதிய இந்திய அரசியற் சட்டம் பார்லிமெண்டில் நிறை வேற்றப் பெற்றது. அதன்படி மாகாணச் சட்டசபைக்கும் அரசாங்கத்திற்குஞ் சில குறிப்பிட்ட விஷயங்களிற் பூர்ண அதிகாரம் கொடுக்கப் பட்டது. வாக்குரிமையும், ஜனப்பிரதி நிதிகளின் தொகையும் பெருக்கப் பெற்றன மாகாணச்சர்க்கார் விஷயங்கள் இரண்டு பிரிவுகளாக வகுக்கப் பெற்றன. அவற் றுள் ஒன்றில் அடங்கிய அதிகாரங்களெல்லாம், ஜனப் பிரதி நிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்புவாய்ந்த மந்திரி களிடம் ஒப்படைக்கப்பட்டன. இந்த மந்திரிகளின் இலா காக்களுக்கு "மாற்றப்பட்ட இலாகாக்கள்" என்றும், மற்ற வைகளுக்கு "ஒதுக்கிவைக்கப்பட்ட இலாகாக்கள்" என்றும் பெயர்கள் வழங்கலாயின. மத்தியசர்க்காரில் ராஜாங்கக் கவுன்ஸில், அஸெம்பிளி என்ற இரு சட்டசபைகள் ஏற்படுத் தப் பட்டன. இச்சபைகளுக்கு விரிவான சட்டமியற்றும் அதிகாரமும், ஜனப் பிரதிநிதிகள் பெரும்பான்மை அங்கத் தினராக இருக்கும் உரிமையும் அளிக்கப்பட்டன. ஆனால், நிர்வாகக் கவுன்ஸிலர்கள், சட்ட சபைக்குப் பொறுப்புடைய வரல்லர். கவர்னர் ஜெனரலின் அதிகாரத்திற் சற்றுங் குறைவு ஏற்படவில்லை. முன்போலவே அவர் இந்தியா காரிய தரிசிக்கே பதிற் சொல்ல வேண்டியவரா யிருந்தார். இச் சட் டம் அமுலுக்கு வந்து, பத்து வருஷங்களான பின் புனரா லோசனைக்கும் திருத்தத்திற்கும் ஏற்பாடு செய்யப்படு மென் றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

1919-ம் வருஷத்திய அரசியற் சட்டம் இந்தியர்களுக்குத் திருப்தி யளிக்கவில்லை. பிரிட்டிஷ் சர்க்காரிட மிருந்த அவநம்பிக்கை அதிகமாயிற்று. பெருத்த "ஒத்துழையாமை இயக்கம்" தொடங்கியது. சீர்திருத்தப் பெற்ற சட்டசபைத் தேர்தல்கள் எங்கும் பகிஷ்கரிக்கப்பட்டன. ஆனால், நிதானக் கட்சி, பிற்போக்குக் கட்சி, இவைகளிற் சேர்ந்தவர்களைக் கொண்டு, அரசாங்கத்தார், புதிய திட்டத்தின்படி அரசியலை ஒருவாறு நடத்தலாயினர். சிறிது காலத்திற்குள், மாகாணங்களில் ஏற்படுத்தப்பட்ட "இரட்டை ஆட்சி" யின் குறைகளும், மத்திய சர்க்கார் சட்டசபைக்குப் பதிற் சொல்ல வேண்டிய பொறுப்பில்லாமையால் ஏற்பட்ட குறைகளும் புதிய அரசியற் சட்டத்தின் பயனின்மையை வெளியாக்கி விட்டன. அரசியல் திட்டத்தை உடனே திருத்தவேண்டுமென்று மத்திய அஸெம்பிளியில் ஒரு தீர்மானம் பெரும்பான்மை ஜனப்பிரதிநிதிகளால் நிறைவேற்றப்பட்டது. ஸ்வராஜ்யக் கட்சியின் இயக்கத்தால் நாட்டின் அரசியல் திட்டத்திற்கு எதிர்ப்பு வலுத்தது. பூர்ண ஸ்வராஜ்யத்தை ஸ்தாபிக்கும் ஒரு திட்டத்தைத் தயாரிக்க ஒரு வட்டமேஜை மகாநாடு கூட்டவேண்டுமென்று தீர்மானஞ் செய்யப்பட்டது. இவற்றை யெல்லாம் மத்திய சர்க்கார் அலட்சியஞ் செய்யவே, மத்திய அஸெம்பிளி எல்லா மானியங்களையும் நிராகரித்தது. கவர்னர் ஜெனரல் தன் விசேஷ அதிகாரத்தைக் கொண்டுதான் அவற்றைப் பெறவேண்டியதாயிற்று.

கடைசியாகப் பத்து வருஷகாலம் முடியு முன்னரேயே 1927-ம் வருஷத்தில் பார்லிமெண்டு ஒரு கமிஷனை நியமித்தது. இக்கமிஷனிலிருந்த 11 அங்கத்தினர்களும் பிரிட்டிஷ்காரர்களே. ஆகையால், இந்துதேசத்தில் அதற்குத் தீவிரமான எதிர்ப்பு ஏற்பட்டது. அக்கமிஷனுடன் ஒத்துழைப்பு

கூடாதென்று நாடெங்கும் கிளர்ச்சி பரவியது. நிதானக் கட்சி வாதிகள்கூட அக்கமிஷனைக் கண்டித்துப்பேசினார்கள். முடிவில் சமரசஞ் செய்யப்பட்டது. மேற்சொல்லிய கமிஷன் மத்திய சட்டசபையால் நியமிக்கப்பெறும் ஓர் இந்திய கமிட்டியுடன் சம அந்தஸ்தோடு வேலைசெய்ய வேண்டிய தென்றும், இரண்டு கமிஷன்களின் அறிக்கைகளும் பார்லிமெண்டின் இரு சபைகளினுடையவும் ஒரு கலப்புக் கமிட்டிக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டுமென்றும் தீர்மானமாயிற்று. இது சரியான காலத்தில் வெளியிடப்படாததால், இந்திய கமிட்டிக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்க அஸெம்பிளி மறுத்துவிட்டது. ராஜாங்க சபை மட்டும் மூன்று பிரதிநிதிகளை அனுப்பியது. மற்ற மூவரையும் வைஸராயே அஸெம்பிளியிலிருந்து நியமனஞ்செய்தார்.

ஸைமன் கமிஷன் என்று பெயர் கொண்ட பிரிட்டிஷ் கமிஷன் 1928, 1929-ம் வருஷங்களின் இறுதியில் இரு முறை இந்தியாவுக்கு வந்தது. ஆனால், அது எங்கும் பகிஷ்கரிக்கப்பட்டது. அதன் அறிக்கை 1930-ம் ஆண்டு மே மாதம் வெளியாயிற்று. இந்தியர்கள் ஒரே மனமாக அதன் சிபார்சுகளை எதிர்த்தனர். வைஸராயின் உறுதிமொழிகளும் பிரசங்கங்களுங் கூட ஜனங்களின் அவநம்பிக்கையைக் குறைக்க முடியவில்லை. காங்கிரஸால் தொடங்கப்பட்ட சாத்விக எதிர்ப்பு இயக்கம் நாளுக்கு நாள் விருத்தியடைந்தது. ஆனால், பிரிட்டிஷ் சர்க்கார் தன் வழியிலேயே சென்றது. 1931-ம் வருஷம் நவம்பர் மாதம் லண்டனில் ஒரு வட்டமேஜை மகாநாடு கூடிற்று. அதன் முக்கியமான தீர்மானங்கள் பின்வருவன: (i) சுதேச ராஜ்யங்களுட்பட ஓர் அகில இந்திய சமஷ்டி ஸ்தாபனம் (ii) மாகாணங்களிற் சுய ஆட்சி (iii) சில பாதுகாப்புக்கள், ஒதுக்கப்பட்ட சில இலா

காக்களின் நிர்வாகம், இவைகளைத்தவிர மற்ற விஷயங்களில் மத்திய சர்க்கார் ஜனப் பிரதிநிதிகளுக்குப் பதிற்சொல்ல வேண்டிய பொறுப்பு (iv) வாக்குரிமை விஸ்தரிப்பு. மகாநாட்டின் முடிவில் அரசியல் நிர்வாகப் பொறுப்பை மத்தியச்சட்ட சபைக்கும், மாகாணச் சட்ட சபைகளுக்கும் கொடுத்து விடுவது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் நோக்கமென்று பிரதம மந்திரி கூறினர்.

இடையே, இந்திய அரசாங்கத்திற்கும் காங்கிரஸிற்கும் நடந்த சண்டையால் அரசாங்க நிர்வாகமே சீர்குலைந்து போயிற்று. முடிவில் ஏற்பட்ட சமரசத்தின்படி, ஒத்துழையாமை இயக்கம் நிறுத்தப்பட்டது. சர்க்கார் எல்லா அரசியற் கைதிகளையும் விடுவிக்கவும், சில நிபந்தனைகளுக்கு உட்படவும் சம்மதித்தது. ஆகையால் 1931-ம் வருஷ இறுதியில், நடந்த இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டில் காங்கிரஸ், அதன் பிரதிநிதியான மகாத்மா காந்திஜீ மூலம் கலந்து கொண்டது. 1932-ம் வருஷம் கூட்டப்பெற்ற மூன்றுவது வட்டமேஜை மகாநாட்டில், தொழிற் கட்சியும் காங்கிரஸும் சில காரணங்களை முன்னிட்டுக் கலந்து கொள்ளவில்லை. இந்தியாவில் அரசியற் போராட்டம் அதிகரிக்கலாயிற்று.

இம்மூன்று வட்டமேஜை மகாநாடுகளின் முடிவான பலனுக, 1933-ம் வருஷம் மார்ச்சு மாதம் "வெள்ளைப் பத்திரம்" என்ற ஓர் அறிக்கை வெளியாயிற்று. பார்லிமெண்டின் ஒரு தனிக்கலப்புக் கமிட்டி அதைப் பரிசீலனை செய்து தெரிவிக்குமாறு உத்தரவிடப்பட்டது. பார்லிமெண்டின் இருசபைகளின் அங்கத்தினர்களும் அடங்கிய அக்கமிட்டி பல சாக்ஷிகளை விசாரணை செய்து அதன் அறிக்கையை 1934-ம் வருஷம் வெளியிட்டது. அதை ஆதாரமாகக்

கொண்ட ஒரு மசோதாவைத் தயாரிக்கும்படிப் பார்லிமெண்டு பிரிட்டிஷ் சர்க்காருக்கு அனுமதி கொடுத்தது. அம்மசோதா, 1935-ம் வருஷம் ஜனவரி மாதம் பிரகடனஞ் செய்யப்பட்டு, பார்லிமெண்டின் இரு சபைகளிலும் நிறைவேற்றப்பெற்று, 1935-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 2-ம் தேதி மன்னரின் அங்கீகாரம் பெற்றது.

அதில் வரையறை செய்யப்பட்ட புது அரசியல் திட்டம் ஒரு சமஷ்டியாகும். பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களும் சுதேச சமஸ்தானங்களும் அதன் உறுப்புக்களாகும். அந்தச் சமஷ்டி ஸ்தாபனத்தின் பூர்வாங்கமாக, முந்திய சட்டங்களின்கீழ் இந்தியா காரியதரிசியும், இந்தியா கவர்ன்மெண்டும் கொண்டிருந்த அதிகாரங்களும், மன்னருக்குச் சுதேச சமஸ்தானங்களிலிருந்த அதிகாரங்களும் மன்னரால் திருப்பி எடுத்துக் கொள்ளப்பட்டுப் புனர் விநியோகஞ் செய்யப்படும். புதுத் திட்டப்படிச் சுதேச சமஸ்தானங்கள் சம்பந்தமாய் மன்னருக்கு உள்ள உரிமைகளைக் கவனிக்க ஒரு பிரதிநிதி நியமிக்கப்பெறுவர்.

இவ்வரசியல் திட்டம், இந்திய ஜனப்பிரதிநிதிகள் கூடிய ஒரு தேசிய சபையால் அமைக்கப்பெற்றதன்று.

அரசியல் திட்டம் ஜனங்களால் ஏற்படுத்தப் பட்டதன்று

இந்தியர்களின் தலையில் பிரிட்டிஷ் பார்லிமெண்டினால் வலுவில் சுமத்தப் பட்டதேயாகும். வட்டமேஜை மகாநாடுகளுக்குச் சென்றிருந்த இந்தியப் பிரதிநிதிகளின் அபிப்பிராயங்களுக்கு நேர் விரோதமாகக் கூடச் சில நிபந்தனைகள் அதிற் சேர்க்கப் பட்டுள்ளன. ஆதலின், இவ்வரசியல் திட்டத்திற்கு ஜனசம்மதத்தின் பலம் இல்லை.

திட்டம் மிகவும் நீண்டது

இந்தத் திட்டம் மிகவும் நீண்டது. அவசியமற்ற காரியப் போக்கின் விவரங்களும் விதிகளும் அதிற் குறிக்கப்பட்டுள்ளன. கடன்வாங்குவது, கணக்குப் பரிசோதனை செய்வது, ஸிவில் ராணுவ ஸெர்விஸ்களின் பாதுகாப்புக்கான விசேஷ விதிகள், ஸெர்விஸ்களின் நியமன விதிகள், வியாபாரச் சலுகை விதிகள், இவற்றைப் போன்ற விஷயங்களுக்கு அதில் விஸ்தாரமான விளக்கங் காணப்படுகிறது. சுதேச சமஸ்தானங்கள் சமஷ்டியிற் சேருவதற்காக ஏற்பட்ட நிபந்தனைகளை விவரிக்கும் "சமஷ்டிப் பிரவேச சாசனம்" அச்சட்டத்தில் ஓர் உறுப்பாக அமைந்துள்ளது. இத்தகைய விதிகள் உலகில் வேறு எந்த அரசியல் திட்டத்திலுங் காணப் பெறுவன அல்ல.

சுதேச சமஸ்தானங்களும் சமஷ்டி ஸ்தாபனமும்

புதிய திட்டம், பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களும் சுதேச சமஸ்தானங்களும் அடங்கிய ஒரு சமஷ்டி ஸ்தாபிக்கிறது. எல்லாச் சமஸ்தானங்களின் ஜனத்தொகையிற் பாதியளவாவது கொண்டனவும், மேற்சபைக்கு 52 அங்கத்தினர்களை யனுப்பும் உரிமை கொண்டனவுமான சமஸ்தானங்கள் சமஷ்டியிற் சேரச் சம்மதித்தவுடன், பார்லிமெண்டின் கோரிக்கையின் மீது மன்னரால் வெளியிடப்பட்ட பிரகடனத்திற் குறிப்பிட்ட தேதியிலிருந்து, இந்திய சமஷ்டி ஆரம்பமாகும். ஒரு சுதேச சமஸ்தானம் அனுப்பிய "சமஷ்டிப் பிரவேச சாசனம்" மன்னரின் கையெழுத்து பெற்றவுடன் அந்த சமஸ்தானம் இந்தியச் சமஷ்டியிற் சேர்ந்ததாகக் கருதப்படும். சமஸ்தானத்திற் சமஷ்டிச் சட்டசபைக்கு அளிக்கப்பட்ட அதிகார விஷயங்கள் பிரவேச சாசனத்திற் குறிக்கப்பட்டிருக்

கும். அரசியற் சட்டத்தின் ஷரத்துக்களைத், தம் சமஸ்தானத்திற்குச் சம்பந்தப்பட்ட வரையில் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருவதாக, ஒவ்வொரு சுதேச மன்னரும் பிரவேச சாசனத்தில் ஒப்புக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பிரவேச சாசனமும் அரசியல் திட்டத்தைப் போலவே நீதிஸ்தலங்களால் மதிக்கப்படவேண்டும். மன்னரின் பிரகடனத்திற்கு முன் சமஷ்டியிற் சேராத சமஸ்தானங்கள் பின்பு சேரலாம். ஆனால், சமஷ்டி ஆரம்பமாகி 20 வருஷங்களுக்குப் பிறகு சமஷ்டிச் சட்டசபையின் சம்மதமின்றி, யாதொரு சமஸ்தானமும் சமஷ்டியிற் சேரமுடியாது.

சிக்கலான அமைப்பு

இந்திய தேசத்தின் விஸ்தாரம், பெருத்த ஜனத்தொகை, மதவேறுபாடு, வகுப்புச் சச்சரவுகள், சுதேச சமஸ்தானங்கள், இவையெல்லாங்கூடிச் சமஷ்டித் திட்டத்தை ஆக்கியோர்க்குப் பல சிக்கலான பிரச்னைகளை யுண்டுபண்ணி யிருக்க வேண்டும். ஆகையாற்றான், இப்புதிய திட்டத்திற் சில விநோத அம்சங்களும், ஒழுங்கீனங்களும் காணப்படுகின்றன.

மாகாணங்களுக்குச் சுய ஆட்சி அளித்தல்

முன் கூறியபடி, தனி நாடுகள் தம் சுய அதிகார உரிமைகளிற் சிலவற்றைத் தவிர்த்துச் சாசன மூலமாக ஏற்படுத்தும் மத்திய ஆட்சி ஸ்தாபனமே, சமஷ்டி அரசியலின் விசேஷ அம்சமாகும். இந்தியச் சமஷ்டியில் சுதேச சமஸ்தானங்கள் சம்பந்தப்பட்ட வரையிற்றான் இது பொருந்துவதாகும். மாகாணங்கள் மத்திய சர்க்காருக்கு விட்டுக்கொடுக்கக்கூடிய அதிகாரங்கள் ஒன்றுமே இல்லை. மத்திய சர்க்கார்தான் மாகாணங்களுக்குச் சில

முக்கியமான அதிகாரங்களை மாற்றவேண்டி யிருக்கிறது. ஆகையால், மாகாணங்களுக்குச் சில சுய அதிகாரங்களை அளிப்பதுதான் புதிய சமஷ்டி ஸ்தாபனத்திற்கு முதற்படியாகும். இது, வேறு எந்தச் சமஷ்டி அரசியலிலும் காணப்பெறாத ஒரு விசித்திரமான அம்சமாகும்.

அங்கத்தினர்களிடையே சமத்துவமின்மை

இந்தியச் சமஷ்டியில் இருவகை அரசாங்கங்கள் ஒன்றுபடுகின்றன. அவற்றில், பிரிட்டிஷ் அரசியற் பழக்கங்களை ஒட்டிய சட்ட திட்டமும் பார்லிமெண்டரி ஆட்சியும் பெற்று வரும் மாகாணங்கள் ஒன்று. சுயேச்சாதிகாரம் புரிந்துவரும் சுதேச சமஸ்தானங்கள் மற்றொரு வகையைச் சேர்ந்தவை. இங்ஙனம் அடிப்படையிலேயே வேறுபட்ட இருவகை அங்கத்தினர்கள் ஒருங்கு சேரும் சமஷ்டியில் ஆரம்பத்தில் சமத்துவம் ஏற்படுவது அரிது. பிரிட்டிஷ் இந்திய மாகாணங்கள் சமஷ்டியிற் சேர்ந்தே தீரவேண்டும்; சுதேச சமஸ்தானங்களோ இஷ்டப்பட்டாற் சேரலாம், அன்றேல் விலகி யிருக்கலாம். இதனாலேயே இரண்டிற்கு முள்ள வேற்றுமை நன்கு புலப்படும். மேலும், சமஷ்டி ஆரம்பிப்பதற்குத் தேவையான குறிப்பிட்ட அளவு சமஸ்தானங்கள் சேர்ந்துவிட்டால், அவைகளுக்குச் சமஷ்டி சட்டசபையில் அளவுக்கு மீறிய பிரதிநிதித்துவம் ஏற்பட்டு விடும். அன்றியும், சமஷ்டிச் சர்க்காருக்கு மாகாணங்களிலிருப்பது போன்ற அதிகாரம் பிரவேச சாசனப்படி சமஸ்தானங்களில் இராது. ஆனால், மற்ற சமஷ்டிகளின் அனுபவத்திலிருந்து நாம் ஒன்று எதிர்பார்க்கலாம். காலக்கிரமத்தில், சுதேச சமஸ்தானங்கள் தங்கள் சலுகைகளை விட்டுக்கொடுத்து, மாகாணங்களைப் போலவே

ஆகிவிடும். சமஷ்டிச் சர்க்காரின் அதிகாரமும் நாளடைவில் அதிகரித்து வலிமை யடையும்.

தேசம் முழுவதையுமே ஓர் அரசியலின் கீழ்க்கொண்டு வந்து இணைப்பதே புதிய திட்டத்தின் நோக்கமாகும். இது வரையில் சமஸ்தானங்களுக்கும், மாகாணங்களுக்கும் யாதொரு அரசியற் சம்பந்தமுங் கிடையாது. பிரிட்டிஷ் பார்லிமெண்டு, பிரிட்டிஷ் இந்தியாவுக்குச் சட்டங்கள் இயற்றியதே தவிர, சமஸ்தானங்களின் மீது அதற்கு நேர்முகமான அதிகாரமும் இல்லை. ஏனெனில், பார்லிமெண்டு தான் மன்னர் மூலமாகவும், கவர்னர் ஜெனரல் மூலமாகவுமே சமஸ்தானங்களில் தலையிட முடியும். அகில இந்தியச் சமஷ்டி இந்த வித்தியாசத்தை ஒழித்துவிடும். மேலும், அது மாகாணங்களுக்கும் சமஸ்தானங்களுக்கு மிடையே ஓர் அரசியலிணைப்பையும் ஏற்படுத்தும். அரசியற் சட்டப்படி சமஷ்டி அதிகாரிகளுக்குச் சில குறிப்பிட்ட விஷயங்களிலே சுதேச சமஸ்தானங்களில் தலையிட அதிகாரம் உண்டு.

சமஷ்டியிற் சேர்ந்த ஒரு சமஸ்தானம் அதைவிட்டு வெளியேற முடியாது. சமஷ்டிப் "பிரவேச சாசனம்" ஓர் ஒப்பந்தம் போன்றது. அதிற் கையெழுத்திட்ட பிறகு, அதை விலக்க மன்னருக்கே அதிகாரங் கிடையாது. ஆகையால், சமஷ்டியை விட்டு விலகும் உரிமையை எந்தச் சுதேச மன்னருங் கொண்டாட முடியாது. பிரிட்டிஷ் பார்லிமெண்டில் அரசியற் சட்டத்திற்குத் திருத்தஞ் செய்வதின் மூலமே தான் ஒரு சமஸ்தானம் வெளியேற முடியும். ஆனால், இது எளிதில் நடக்கக்கூடியதன்று. பார்லிமெண்டு இதற்கு ஒரு

சமஷ்டியிலிருந்து வெளியேறும் உரிமை கிடையாது

போதும் சம்மதிக்காது. ஏனெனில், காமன்ஸ் ஸபையில் மசோதா விவாதத்தி லிருந்தபோது, அங்கே இந்தியா காரிய தரிசி நிச்சயமாக "டொமினியன் பதவி" முடிவிற் கொடுப்ப தாகக் கூறிய உறுதிமொழிக்கு அது நேர் விரோதமாக இருக்கும்.

அதிகாரப் பிரிவினை

அதிகாரப் பிரிவினை விஷயத்தில் அரசியற் சட்டம் அமெரிக்க முறையையும் பின்பற்றவில்லை; கனடா முறையை யும் பின்பற்றவில்லை. அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசியல் திட்டத்தில் தேசீய (சமஷ்டி) சர்க்காரின் அதிகாரங்கள் வரிசை யாகக் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. அவை யொழிந்த மற்ற அதிகாரங்கள் தனி நாடுகளுக்கு உரியவை. கனடாவில் மாகாணக்களுக்கென்று குறிப்பிடப்படாத அதி காரங்கள் டோமினியன் சர்க்காரிடம் இருக்கின்றன. இந்தியச் சமஷ்டியின் முறையோ வேறுபாடானது. திட்டத்தில் மூன்று ஜாபிதாக்கள் இருக்கின்றன. அவை, சமஷ்டிச் சட்ட அதிகார ஜாபிதா, மாகாணச் சட்ட அதிகார ஜாபிதா, பொது அதிகார ஜாபிதா என்பனவாம். பொது அதிகார ஜாபிதா விற்கண்ட விஷயங்களைப் பற்றிச் சமஷ்டிச் சட்டசபை யும் மாகாணச் சட்டசபையும் சட்ட மியற்றலாம். ஆனால், சமஷ்டிச் சட்டத்திற்கு எப்பொழுதும் மாகாணச் சட்டத் திற்கு மேற்பட்ட ஸ்தானம் உண்டு. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்களின் சட்டசபைகளுடைய கோரிக்கையின் மீது, எந்த மாகாண விஷயத்தைப் பற்றியும் சமஷ்டிச் சட்டசபை சட்டமியற்றலாம். இந்தியாவின் பாது காப்பையே பாதிக்கும் ஒரு நெருக்கடி யேற்பட்டிருக்கிற தென்று கவர்னர் ஜெனரல் பிரகடனஞ் செய்தால், சமஷ்டிச் சட்டசபை ஒரு மாகாணத்திற்கு அதன் ஜாபிதாவிற் கண்ட

விஷயங்களைப்பற்றிச் சட்ட மியற்றலாம். பார்லிமெண்டின் இரு சபைகளாலும், அனுமதிக்கப்பட்டா லொழிய, அந்தச் சட்டம் ஆறுமாத காலத்திற்குமேல் செல்லாது. எப்பொழுது வேண்டு மானாலும் அது கவர்னர் ஜெனரலால் விலக்கப்படலாம். ஒரு சமஷ்டிச் சமஸ்தானத்திற்கு சமஷ்டிச் சட்டசபை சட்ட நிர்மாணஞ் செய்யும் அதிகாரமானது அதனுடைய பிரவேச சாசனத்தால் தீர்மானிக்கப்படுகிறது. சமஸ்தானத்திற்குப் பொருந்தும் ஒரு சமஷ்டிச் சட்டத்திற்கும், அந்தச் சமஸ்தானத்திற் குரிய தனிச் சட்டத்திற்கும் மாறுபாடு இருந்தால் சமஷ்டிச் சட்டந்தான் நிலையுறுவதாகும். சமஸ்தானச் சட்டம் செல்லுபடி யாகாது.

சட்ட நிர்மாண விஷயங்கள் முழுவதையும் இம்மூன்று ஜாபிதாக்களிலும் அடக்கிவிட வேண்டுமென்பது நோக்கம்.

மிகுந்திருக்கும் அதிகாரங்கள்

ஆயினும், நிர்ணயிக்க முடியாத சில விஷயங்கள் பின்பு ஏற்படலாம். இப்படி மிகுந்திருக்கும் விஷயங்களில், சமஷ்டிச் சட்டசபையா, அல்லது மாகாணச் சட்டசபையா, எது சட்டமியற்ற வேண்டிய தென்பதைத் தீர்மானிக்குமதிகாரம் கவர்னர் ஜெனரலுடையது. இது அவருடைய இஷ்டத்தைப் பொறுத்ததாகையால், அவர் மந்திரிச் சபையுடன் கலக்க வேண்டியதில்லை.

சமஷ்டிச் சட்டசபைகளின் மீதும், மாகாணச் சட்ட சபைகளின் மீதும் அரசியற் சட்டம் சில வலிய நிர்ப்பந்தங்களை விதித்திருக்கிறது. பிரிட்டிஷ் இந்தியாவுக்கு வேண்டிய சட்ட மியற்றுமதிகாரம் பார்லிமெண்டிடம் இருக்கிறதென்று மறுபடியுங் குறிப்பாக உறுதிப்படுத்தியிருக்கிறது. சமஷ்டிச் சட்டசபைக்கும் மாகாணச் சட்ட சபைகளுக்கும்

மன்னரைப் பற்றியாவது, அரச வம்சத்தினரைப் பற்றியாவது, மன்னர் வார்சைப் பற்றியாவது, அரசாட்சி உரிமையைப் பற்றியாவது, சட்டமியற்ற அதிகாரங் கிடையாது. சைனியச் சட்டம், ஆகாய விமானச் சட்டம், கடற்படைப் பயிற்சிச் சட்டம், இவற்றைப் பாதிக்கும்படியான விதிகளும் இயற்ற முடியாது. அரசியல் திட்டத்தையோ, அதன்படி மன்னர் செய்யும் கவுன்ஸில் உத்தரவையோ மாற்ற முடியாது.

இந்தியச் சட்ட சபைகள் பூர்ண அதிகாரங் கொண்டவையல்ல

மேலும், கவர்னர்கள் அல்லது கவர்னர் ஜெனரல், இவர்களின் அபிப்பிராயத்திற்கும், சொந்தத் தீர்ப்புக்கும் விடப்பட்ட விஷயங்களிலும், பொலீஸ், ஐரோப்பிய பிரிட்டிஷ் பிரஜைகளின்மேல் குற்றச்சாட்டு, இந்தியாவில் ரிஜிஸ்தர் செய்யப்படாத கம்பெனிகள், பிரிட்டிஷ் இந்தியாவில் அமுலிலிருக்கும் பார்லிமெண்டரிச் சட்டம், சமஷ்டி நாணய விகிதம், ரிசெர்வ் பாங்கி அமைப்பு வேலைகள், முதலிய இனங்களிலும், கவர்னர் ஜெனரலின் முன் அனுமதியின்றிச் சமஷ்டிச் சட்டசபையோ அல்லது மாகாணச் சட்டசபையோ அரசியற் சட்டத்தையாவது, "கவுன்ஸில் உத்தரவு"களையாவது திருத்துமாறு பிரேரணை கொண்டுவர முடியாது. மேலும், இந்தியச் சட்டசபை இயற்றிய சட்டம் அரசியல் திட்டத்தின் சில பிரிவுகளுக்கு விரோதமாக இருக்கிறதென்று சந்தேகம் ஏற்பட்டால், அதற்குக் கவர்னர் ஜெனரல் அனுமதி கொடுக்காமல் அதை மன்னரின் அங்கீகாரத்திற்கு ஒதுக்கிவைக்கவேண்டுமென்று கவர்னர் ஜெனரலுக்கு அளிக்கப்பட்டிருக்கும் 'ஆக்ஞாபத்திரத்தில்' கண்டிருக்கிறது. அதேவிதம் ஒரு கவர்னரும், தமக்குச் சந்தேகமேற்படும்போது, ஒரு மசோதாவைக் கவர்னர் ஜெனரல் அங்கீகாரத்திற்கு ஒதுக்கிவைத்துக் கொள்ளலாம்.

சமஷ்டிச் சட்ட அதிகார ஜாபிதா

சமஷ்டிச் சட்ட அதிகார ஜாபிதாவில் 59 பிரிவுகள் இருக்கின்றன. அவற்றுள் பின்வருவன சில முக்கியமான இனங்கள்:— பிரிட்டிஷ் மன்னரின் இந்திய கடற்படை ஸ்தாபனம், ராணுவ விமானப் படைகள்; அன்னிய நாட்டு விவகாரங்கள், உடன்படிக்கைகள்; பிறநாடுகளுடன் ஒப்பந்தங்கள்; நாட்டைவிட்டு வேறு நாட்டிற்குக் குற்றவாளியை அகற்றிச் செல்ல அதிகாரம்; மத விஷயங்கள்; நாணய விகிதம்; நாணயப்பதிப்பு; சமஷ்டிப் பொதுக்கடன்; தபால், தந்தி, டெலிபோன் முதலியன; சமஷ்டி உத்தியோகங்களும், உபகாரச் சம்பளங்களும்; சமஷ்டி மராமத்து வேலைகள்; சமஷ்டியின் பூமிகள், கட்டிடங்கள்; அகில இந்தியப் புத்தகாலயங்களும் மியூசியங்களும்; இந்திய சர்வேக்கள்; ஆதிகால சரித்திர ஞாபகார்த்த சின்னங்கள்; காசி, அலிகார் சர்வ கலா சாலைகள்; ஜனத்தொகைக் கணிப்பு; அன்னிய நாட்டு, உள்நாட்டுக் குடியேற்றம்; இருப்புப்பாதைகள்; கப்பல் கட்டுவதும் ஓட்டுவதும்; மீன்வரி (பாசிவரி); விமானலயங்கள் முதலியன; பதிப்புரிமை, வர்த்தகக்குறிகள், பேட்டெண்டுகள்; பாங்கிஸ்தாபனம்; இன்ஷ்யூரன்ஸ்; உலோகச் சுரங்கங்களும் எண்ணெய்ச் சுரங்கங்களும், தொழிற் கணகாணிப்பும் தொழிலபி விருத்தியும்; உப்பு, சுங்கங்கள், கலால்; விவசாயமல்லாத மற்ற வருமானவரி; உண்டியல்கள், செக்குகள், பிராமிஸரி நோட்டுக்கள், இன்ஷ்யூரன்ஸ் பத்திரங்கள், ரசீதுகள், முதலியவற்றின் ஸ்டாம்புக் கட்டணம்; வார்சு வரிகள்; ரயில்வேக் கட்டணங்களும் வரிகளும்.

மாகாணச் சட்ட அதிகார ஜாபிதாவில் முக்கியமான இனங்கள் பின் வருவன:— பொதுஜன அமைதி; நீதிபரிபாலனம்; சமஷ்டிக் கோர்ட்டு தவிர மற்றெல்லாக் கோர்ட்

டுக்களின் நிர்வாகமும் கோர்ட்டுக் கட்டணமும்; பொலீஸ், சிறைச்சாலைச் சீர்திருத்தங்கள்; மாகாணத்தின் கடன்; மாகாண உத்தியோக வர்க்கம்; உத்தியோக மாகாணச் சட்ட நியமனக் கமிஷன்; பலவந்தமாக நிலத்தை அதிகார ஜாபிதா எடுத்துக்கொள்வது; மாகாணப் புத்தகாலயங்களும், மியூசியங்களும்; ஸ்தல ஆட்சி ஸ்தாபனங்கள்; சுகாதாரம்; ஜனனமரணப் பதிவு; கல்வி; மற்ற ஜாபிதாக்களி லில்லாத போக்கு வரவுக்குறிய சாதனங்கள்; விவசாயம்; நிலவுரிமை; காடுகள்; (சமஷ்டி அதிகாரத்திற்குட்பட்டு) சுரங்கங்கள்; சந்தைகள்; மாகாணத்திற்குள் வர்த்தகம்; எடைகளும் அளவுகளும்; உணவுப் பொருள்கள் கலப்பு; வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை நிவாரணம்; பந்தயங்களும் சூதாட்டமும்; நாடகசாலைகள், சினிமாக்கள் நிர்வாகம்; நில வரிகள்; சாராயம் கஞ்சா முதலிய கலால்வரி; விவசாய வருமானம்; மாகாணத்திற்குச் சொந்தமான நிலம், சுரங்க உரிமைகள் முதலியவைகளின் வரி; நிலச் சொத்தின் மீது வார்சு வரி; தலைவரி; தொழில்கள் வரி; பொருள்கள் மீதும் உல்லாசச் செலவுகள் மீதும் வரி; சுங்கவரி; சமஷ்டி ஜாபிதாவிற் குறிப்பிடப்பெறாத பத்திரங்களுக்கு ஸ்டாம்புக் கட்டணம்.

இவ்விரு ஜாபிதாக்களிலுஞ் சேர்க்கப்படாத மற்ற முக்கிய விஷயங்கள், பொது ஜாபிதாவிற் சேரவேண்டியவையெனக் கொள்ளலாம்.

அரசியற் சட்டம், அதன்கீழ் ஏற்பட்ட "கவுன்ஸில் உத்தரவு", இவற்றின் விளக்கத்தைப்பற்றியோ, ஒரு பிரவேச சாசனத்தின் மூலம் சமஷ்டிச் சர்க்காருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகார எல்லையைப் பற்றியோ, சமஷ்டிச்

சர்க்காருக்கும், சமஷ்டி சமஸ்தானங்களுக்கும் மாகாணங்களுக்கும் இடையே ஏற்படும் சச்சரவுகளிலும் வழக்குகளிலும், சமஷ்டிக்கோர்ட்டு, தீர்ப்புகூறும் அதிகாரம் பெற்றுள்ளது. இத்தீர்ப்பின்மேல் பிரிவி கவுன்ஸிலுக்கு அப்பீல் உண்டு.

அரசியற் சட்ட விளக்கம்

சமஷ்டிச் சட்டசபை இயற்றுஞ் சட்டங்களுக்கு மாகாண நிர்வாக அதிகாரிகளும், சமஸ்தான நிர்வாக அதிகாரிகளும் செல்வாக்கு அளிக்கவேண்டும். சமஷ்டிச் சர்க்காரின் உத்தரவுப்படி ஏதாவதொரு மாகாணச் சர்க்கார் நடக்கத் தவறினால், கவர்னர் ஜெனரல் அவ்வுத்தரவை அம்மாகாணக் கவர்னருக்கு நேராக அனுப்பலாம். மாகாண கவர்னர் அதை நிறைவேற்றி வைக்கவேண்டிய பொறுப்புள்ளவர். சமஷ்டிச் சட்டத்தைக் கடைப்பிடித்து நடக்கும் வகையில், ஏதாவதொரு சமஸ்தானாதிபதி தவறி விட்டதாகத் தோன்றினால், கவர்னர் ஜெனரல் அந்தச் சுதேசமன்னர் கூறுங் காரணத்தைக் கவனித்துப் பிறகு தாம் சரியென்று நினைக்கும் உத்தரவை அம்மன்னருக்கிடலாம்.

சமஷ்டிச் சட்டங்களை நிறைவேற்றும் ஸ்தாபனம்

அரசியற் சட்டம் அமுலுக்கு வந்து பத்து வருஷங்களுக்குப் பிறகு, சமஷ்டிச் சட்டசபையும், மாகாணச் சட்டசபையும் பின்வரும் விஷயங்களின் அரசியற் சட்டத்தைத் திருத்தவேண்டிய தீர்மானங்களை நிறைவேற்றலாம். அவை, சமஷ்டிச் சட்டசபை, மாகாணச் சட்டசபை இவைகளின் அமைப்பும், அங்கத்தினர் தொகையும், மாகாணச்

அரசியல் திருத்தம்

சட்டசபைகளின் எண்ணிக்கையும், வாக்குரிமையும், தேர்தல் முறையும் ஆம்.

ஆனால், சமஷ்டியின் மேற்சபைக்கும் கீழ்ச் சபைக்குமுள்ள பிரதிநிதிகளின் அளவு வீதத்தையோ, அல்லது மாகாண சமஸ்தான பிரதிநிதிகளின் அளவு வீதத்தையோ பாதிக்கும்படி திருத்தப் பிரேரணையைக் கொண்டுவரக் கூடாது. அரசியற் சட்டத் திருத்தப்பிரேரணையை மந்திரிச் சபையின் சார்பாக ஒரு மந்திரி கொண்டுவர வேண்டும். இப்படிப் பிரேரிக்கப்பட்டு நிறைவேறிய தீர்மானம், அதனால் பாதிக்கப்படக்கூடிய சிறுபான்மையோரின் அபிப்பிராயத்துடன் மன்னருக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டும். அவையெல்லாம் பார்லிமெண்டிற்கு அனுப்பப்படும். ஆறுமாதத்திற்குள், மன்னர் கைக்கொள்ளத் தீர்மானித்திருக்கும் முறையை இந்தியா காரியதரிசி "கவுன்ஸில் உத்தரவாக" பார்லிமெண்டிற்குச் சமர்ப்பிப்பார். அது பார்லிமெண்டினால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

மேலும், முன் குறிப்பிட்ட விஷயங்களில், கவுன்ஸிலுடன் கூடிய மன்னர், ஒரு "கவுன்ஸில் உத்தரவு" மூலம் திருத்தஞ் செய்து, பிரிட்டிஷ் சர்க்கார், சமஷ்டிச் சட்டசபை, அத்திருத்தத்தினால் பாதிக்கப்படும் சிறுபான்மையோர், இவர்களுடைய அபிப்பிராயங்களுடன் பார்லிமெண்டிற்கு அனுப்பலாம். பார்லிமெண்டு அங்கீகரித்தால் அத்திருத்தம் சட்டமாகி விடும்.

அத்தியாயம் 19

இந்தியா II : மாகாணங்கள்

சமஷ்டியின் உறுப்புக்களாகும் மாகாணங்களுக்கு கவர்னர் மாகாணங்கள் என்று பெயர். தற்காலம் அவை சென்னை, பம்பாய், வங்காளம், ஐக்கிய மாகாணங்கள். பஞ்சாப், பீகார், மத்திய மாகாணங்கள் (பீரார் உள்பட), அஸ்ஸாம், வடமேற்கு எல்லை மாகாணம், ஒரிஸ்ஸா, சிந்து, என்பனவாம்.

நிர்வாகம்

கவர்னர் : நியமனமும் சம்பளமும்

ஒவ்வொரு மாகாணத்திற்கும் மேலான நிர்வாக அதிகாரி கவர்னர். மாட்சிமை தங்கிய மன்னரால், சாதாரணமாக ஐந்து வருஷ காலத்திற்கு அவர் நியமனஞ் செய்யப்படுகிறார். அவருடைய சம்பளம் மாகாணத்தின் தன்மைக்கேற்ப, வருஷம் ரூ. 66,000 முதல் 120,000 வரையில் வித்தியாசங் கொண்டுள்ளது. உத்தியோகத்தை அவர் மேன்மையோடும், செல்வாக்கோடும் வகிப்பதற்குத் தேவையான மற்ற வசதிகளும் அவருக்கு அளிக்கப்படுகின்றன.

கவர்னர், மன்னருடைய பிரதிநிதி மட்டுமன்று. ஆஸ்ட்ரேலிய மாகாணங்களில் இருப்பதுபோல, மந்திரிச்சபையின் யோசனைப்படி நடக்கும் வெறும் பெயருக்கு மட்டும் உள்ள தலைவருமல்லர். அரசியற் சட்டத்தின்கீழ் அவருக்குச் சில முக்கியமான நிர்வாக சட்ட நிர்மாண அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. மாகாணச் சட்டசபைக்கு எந்த விஷ

யங்களிலெல்லாம் அதிகாரமிருக்கின்றதோ, அவையனைத்தி லும் அவருக்கு அதிகாரம் உண்டு. தம்மிஷ்டப்படி தம் வேலைகளைக் கவனிக்கத் தாமே காரியதரிசியையும், மற்ற சிப்பந்திகளையும் நியமித்துக்கொள்ளலாம்.

அதிகாரங்களை வகிப்பதில் கவர்னருக்கு உதவி செய்வதற்கும், ஆலோசனை கூறுவதற்கும் ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு மந்திரிச்சபை இருக்கிறது. தம் மந்திரிச்சபை விருப்பப்படி அவர் மந்திரிகளைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுகிறார். மந்திரிகள் கவர்னர் இஷ்டப்படும்வரை உத்தியோகம் வகிப்பார். அவர்கள் சட்டசபை அங்கத்தினராய் இருக்கவேண்டும். ஆனால், நியமன காலத்திலேயே அப்படியிருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. மாகாணச் சட்டசபை அவர்களுடைய சம்பள விகிதத்தைத் தீர்மானிக்கும். ஆனால், அச்சம்பளத்தை அவர்களுடைய உத்தியோக காலத்திற்குள் மாற்ற முடியாது. மாகாணத்து நிர்வாக நடவடிக்கை முழுதும் கவர்னர் பெயரால் வெளியிடப்படும். மாகாண உத்தரவுகளும், அறிக்கைகளும், கவர்னர் இயற்றிய விதிகளின்படி பிராமாணிக்கப்பட்டிருக்கவேண்டும். கவர்னர் மந்திரிகளுக்கு நிர்வாக இலாகாக்களைப் பிரித்துக் கொடுக்கலாம். மாகாணச் சர்க்காரின் நடைமுறைகளைப் பற்றிய எல்லாத் தகவல்களையும் கேட்டறிந்துகொள்ள அவருக்கு அதிகாரமுண்டு. கவர்னரின் விசேஷப் பொறுப்பைப் பாதிக்கும் எவ்விஷயத்தையும் தம் தகவலுக்குக் கொண்டுவரும்படி, அது சம்பந்தப்பட்ட இலாகா காரியதரிசிக்கு, அவர் ஆக்ஞையிடலாம்.

கவர்னரின் விசேஷப் பொறுப்புக்கள் பின் வருவனவாம்:- மாகாணத்திலோ, அல்லது மாகாணத்தின் ஏதாவ

தொரு பகுதியிலோ, அமைதிக்குப் பலத்த ஆபத்து ஏற்ப டாமல் தடுப்பது; சிறுபான்மை வகுப்பினரின் நியாயமான உரிமைகளைப் பாதுகாப்பது; உத்தியோக வர்க்கத்தினர்களுக்கும், அவர்களுக்குக் கீழுள்ளவர்களுக்கும் சட்டப்படி ஏற்பட்ட உரிமைகளைப்பெற வசதி யளிப்பதும், பாது காப்பதும்; பிரிட்டிஷ் பிரஜைகளுக்கோ, பிரிட்டிஷ் வர்த்தகர்களுக்கோ பாதகமான சலுகைகள் ஏற் படாமல் தடுப்பது; ஒதுக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அமைதியையும், நல்லாட்சியையும் அளிப்பது; சுதேச சமஸ் தானத்தின் உரிமைகளையும், அதன் மன்னரின் உரிமைகளை யும், பதவியையும், பாதுகாப்பது; கவர்னர் ஜெனரல் இடும் உத்தரவுகளை மாகாணத்தில் நிறைவேற்றி வைப்பது.

கவர்னரின் விசேஷப் பொறுப்புக்கள்

மேற்கூறிய விசேஷப் பொறுப்புக்களைத் தவிர, கவர் னர் யுக்தானுசாரப்படிச் செய்யவேண்டிய மற்ற வேலைகளும் இருக்கின்றன. அவை பின் வருவனவாம்:— புரட்சி, பலாத்கார இயக்கங்களை அடக்கு வது; மந்திரிகளைத் தேர்ந்தெடுப்பது; மந்தி ரிச்சபைக் கூட்டங்களில் தலைமை வகிப்பது; அரசாங்க ரகசிய விஷயங்களை வெளியிடும் குற்றத்தை விசாரிப்பது; ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் கவர்னர் யுக்தானுசாரப்படி நடப்பதா, அல்லது தம் சொந்தத் தீர்ப்புப்படி நடப்பதா என்பதைத் தீர் மானிப்பது.*

கவர்னரின் இதர நிர்வாக அதிகாரங்கள்

---

* யுக்தானுசாரப்படி நடப்பதென்றால் அதில் மந்திரிகளுக்கு அதிகாரம் இல்லையென்பது கருத்து. மந்திரிகளுடைய யோசனை யைக் கேட்டாலுங் கேட்கலாம், மறுத்தாலும் மறுக்கலாம். சொந்தத் தீர்ப்புப்படி நடப்பதென்றால், மந்திரிகளுக்கு யோசனைகூறச் சட் டப்படி உரிமை யிருந்தாலும், கவர்னர் அதை ஏற்றுக்கொள்ளாம லிருக்கலாமென்பது கருத்து.

மாகாணத்தின் அட்வொகேட் ஜெனரலை கவர்னர் நியமனஞ் செய்வார். அவரை நியமித்தல், வேலையிலிருந்து நீக்குதல், அவர் சம்பளம் முதலியவைகளில் கவர்னர் தம் உசிதப்படி நடப்பார். பொலீஸ் படையின் அமைப்பு; பயிற்சி முதலியவைகளில் விதிகளோ, உத்தரவுகளோ இடுவதில் அவர் தம் சொந்தத் தீர்ப்புப்படி நடப்பார்.

கவர்னரின் சட்ட நிர்மாண அதிகாரங்கள்

சட்டசபை கூடாத காலங்களில், சபையின் சட்டத்தைப் போலவே செல்லுபடியாகும் உத்தரவுகளை கவர்னர் வெளியிடலாம். அத்தகைய அவசரச் சட்டங்கள் பின்பு சட்ட சபைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். சட்ட சபை கூடிய ஆறுமாதங்களுக்குப் பிறகு அவை செல்லுபடியாகா.

தம் யுக்தானுசார அதிகாரத்தையோ, அல்லது சொந்தத் தீர்ப்பு அதிகாரத்தையோ உபயோகிக்கவேண்டியிருக்கிற அவசர விஷயங்களில், அவசரச் சட்டங்களை ஏற்படுத்த கவர்னருக்கு அதிகாரமுண்டு. அவை கவர்னர் ஜெனரலின் அனுமதி பெறவேண்டும். ஆறுமாதங்களுக்கு மேல் அவை நடைபெறா.

சட்ட நிர்மாணம் அவசியமென்று தோன்றும் விஷயங்களில் கவர்னர் சட்டசபைக்குத் தகுந்த காரணங்களுடன் ஒரு செய்தி அனுப்பலாம். அதனோடு கூடவே மசோதாவின் நகல் ஒன்றையும் சேர்த்தனுப்பலாம்.

ஒரு மாதம் சென்ற பிறகு, அம்மசோதா விஷயமாகச் சபைகள் செய்த திருத்தங்களையும், தீர்மானங்களையும் பற்றி ஆலோசனை செய்து, அதைச் சட்டமாக இயற்றலாம்.

அச்சட்டம், சட்டசபைகளின் சட்டத்தைப் போலவே செல்லுபடியாகும். கவர்னர் ஜெனரல் சம்மதத்துடன் இந்தியா காரியதரிசி மூலமாக அது பார்லிமெண்டின் இருசபைகளின் முன்பும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அரசியற் சட்டம் உடைபட்டால் கவர்னர் ஜெனரலின் அனுமதியுடன் கவர்னர் ஒரு பிரகடனத்தின் மூலம் மாகாண அரசியல் திட்டத்தை விலக்கிவைக்கலாம். அவர் அதில் தம் உசிதப்படி செய்யப்போகிற வேலைகளைக் குறிப்பிடவேண்டும். ஒவ்வொரு பிரகடனமும் உடனே இந்தியா காரியதரிசிக்கு அனுப்பப்படவேண்டும். அவர் அதைப் பார்லிமெண்டின் இருசபைகளுக்கும் சமர்ப்பிப்பார். ஆறு மாதங்களுக்குத்தான் அது செல்லும். அந்தப் பிரகடனம் நீடிக்கலாம் என்று பார்லிமெண்டு அனுமதி கொடுத்தால், மற்றொரு பன்னிரண்டு மாதங்களுக்கு அது அமுலில் இருக்கும். எவ்விதத்திலும் அது மூன்று வருஷங்களுக்கு மேல் நடைபெற முடியாது. அந்தக் காலத்தில், கவர்னர் இயற்றும் சட்டங்களெல்லாம் பிரகடனம் காலாவதியானதிலிருந்து இரண்டு வருஷங்களுக்குச் செல்லுபடியாகும். சட்டசபை அதற்கு முன்னரேயே அதை விலக்கவோ, அல்லது மறுபடியும் நீடிக்குமாறு செய்யவோ கூடும். ஒரு பிரகடனத்தை கவர்னர் மற்றொரு பிரகடனத்தின்மூலம் மாற்றவும், விலக்கவுங் கூடும்.

பிரகடனங்கள் செய்யும் அதிகாரங்கள்

மாகாணச் சட்டசபைகள்

ஒவ்வொரு மாகாணத்திலும் கவர்னர் அடங்கிய சட்டசபை யுண்டு. சென்னை, பம்பாய், வங்காளம், ஐக்கிய மாகாணங்கள், பீகார், அஸ்ஸாம், இவைகளில் இரண்டு சபைகள்

உண்டு. மற்றவைகளில் ஒன்றுதான். இரண்டு சபைகளில் ஒன்றுக்குச் சட்ட நிரூபணக் கவுன்ஸில் என்றும், மற்றொன்றுக்குச் சட்ட நிரூபண அஸெம்பிளி யென்றும் பெயர். ஒரு சட்டசபை மட்டும் இருக்கிற மாகாணத்தில் அதற்குச் சட்ட நிரூபண அஸெம்பிளி யென்று பெயர்.

அமைப்பு

இவற்றின் அமைப்பு, ஒவ்வொரு மாகாணத்தின் ஜனத்தொகையையும், விசேஷத்தையும் பொறுத்துள்ளது. சென்னைக் கவுன்ஸிலின் மேலெல்லைத் தொகை 56. கவர்னர் பத்துப் பேர்கள் வரையில் நியமனஞ் செய்யலாம். பொதுத் தொகுதிகளைத் தவிர, முஸ்லீம்கள், ஐரோப்பியர், இந்திய கிறிஸ்துவர், இவர்களுக்குத் தனித்தொகுதிகள் இருக்கின்றன. வாக்காளர்களுக்குச் செல்வ யோக்கியதாம்சம் மிகவும் உயர்ந்ததா யிருப்பதால், வாக்காளர்களின் தொகை மிகக் குறைவு. வங்காளம், பீகார் மாகாணங்களில் அனேகத் தொகுதிகளில் தேர்தல் நேர்முகமாக இல்லை. சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணங்கள், அஸ்ஸாம், இவற்றில் தேர்தல் முறையைக் கையாளும் எல்லாத் தொகுதிகளிலும் தேர்தல் நேர்முகமாகவே நடைபெறுகிறது.

அஸெம்பிளிப் பிரதிநிதிகளின் தொகை ஒவ்வொரு மாகாணத்திலும் வித்தியாசப்படுகிறது. சென்னையில் 215 மெம்பர்கள் இருக்கிறார்கள். வடமேற்கு எல்லை மாகாணத்தில் 50 மெம்பர்கள் தான். செல்வம், வருமானம், எழுதப் படிக்கத் தெரிவது, இவற்றால் வாக்குரிமை தீர்மானிக்கப்படுகிறது. ஸ்திரீகளுக்கும் வாக்குரிமை யுண்டு. தொழில்கள், வர்த்தகம், தொழிலாளர், நிலச்சுவான்தார், இவற்றின் தொகுதிகளில் தவிர, மற்றவைகளில் நேர் முகமாகவே தேர்தல்கள் நடைபெறும். "ஷெடியூல்" செய்யப்பட்ட வகுப்பு

களுக்கும், ஸ்திரீகளுக்கும், தொகுதிகள் ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கின்றன. முஸ்லீம்கள், ஆங்கிலோ இந்தியர்கள், ஐரோப்பியர்கள், இந்திய கிறிஸ்துவர்கள், இவர்களுக்கு வகுப்புவாரித் தொகுதிகளும் இருக்கின்றன. கவுன்ஸில் அங்கத்தினர்க்கு 30 வயதாகியிருக்க வேண்டும். அஸெம்பிளி அங்கத்தினர்க்கு 25 வயதாகியிருக்க வேண்டும். அவர்களின் காலம் முறையே ஒன்பது வருஷங்களும், ஐந்து வருஷங்களுமாம்.

சட்டசபைக்குள் அபிப்பிராய பேதம்

நிதி மசோதாவைத் தவிர, வேறு எதையும், இவ்விரண்டு சபைகளில் எதிலேனுங் கொண்டுவரலாம். திருத்தங்களின்றியோ அல்லது இரு சபைகளும் சம்மதிக்கும் திருத்தங்களுடனேயோ, ஒரு மசோதா இரு சபைகளாலும் அங்கீகரிக்கப் பட்டு விட்டால், அது நிறைவேறியதாகக் கருதப்படும். அஸெம்பிளியில் நிறைவேறின ஒரு மசோதா, கவுன்ஸிலுக்குப் போய்ச்சேர்ந்த தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களுக்குள் கவர்னரின் சம்மதத்திற்கு அனுப்பப்படாவிட்டால், அவர் இரு சபைகளின் கலப்புக் கூட்டமொன்றைக் கூட்டலாம். ஆனால், மசோதாவின் விஷயம் நிதி சம்பந்தமாகவோ, அல்லது கவர்னரின் விசேஷப் பொறுப்புக்கள் சம்பந்தமாகவோ இருந்தால், பன்னிரண்டுமாத காலமாவதற்குள்ளேயே அக்கலப்புக் கூட்டம் கூட்டப்பெறலாம். இதில் கவர்னர் மந்திரிகளைக் கலக்கவும் வேண்டியதில்லை. கலப்புக் கூட்டத்தில் பெரும்பான்மையோர் ஓட்டுக்களால் மசோதா அங்கீகரிக்கப்பட்டால், அது இரு சபைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும். கவுன்ஸிலில் நிறைவேறி, அஸெம்பிளியில் நிராகரிக்கப் பட்ட மசோதா கலப்புக் கூட்டத்திற்கு அனுப்பப்பட மாட்டாது.

சட்டசபைகளில் நிறைவேறிய மசோதா கவர்னருக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும். அதற்கு அவர் தம் சம்மதத்தை

சட்ட சபை
நிறைவேற்றிய
மசோதாவுக்குச்
சம்மதம்

அளிக்கலாம், அல்லது அதைப் புனராலோசனைக்கு மறுபடியும் சட்ட சபைகளுக்குத் திருப்பிவிடலாம். கவர்னர் பிரேரிக்கும் திருத்தங்களைச் சட்ட சபைகள் கவனிக்க வேண்டும். ஒரு மசோதாவைக் கவர்னர் ஜெனரலின் யோசனைக்காவது, மன்னரின் அனுமதிக்காவது கவர்னர் ஒதுக்கிவைக்கலாம் கவர்னர் அல்லது கவர்னர் ஜெனரல் அனுமதித்த ஒரு மசோதாவை ஒரு வருஷத்திற்குள் மன்னர் நிராகரிக்கலாம்.

மாகாணத்தின் வருஷாந்தர வரவு செலவுக் கணக்குத் திட்டம் (பட்ஜெட்) சட்டசபையின் முன்பு சமர்ப்பிக்கப்பட

வரவு செலவு
மானியங்கள்

வேண்டும். மாகாண வருமானத்தின் மீது முதற் செலவாகச் சுமத்தப்பெற்ற இனங்களைப்பற்றிச் சட்டசபையில் விவாதிக்கலாம். ஆனால், ஓட்டளிக்க அதற்கு உரிமையில்லை. மற்றெல்லா விஷயங்களும் அஸெம்பிளியின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்படவேண்டும். மானியங்கள் விஷயத்தில் கவுன்ஸிலுக்கு யாதொரு சம்பந்தமு மில்லை. அஸெம்பிளி, மானியங்களை அனுமதிக்கலாம், நிராகரிக்கலாம், அல்லது குறைக்கலாம். ஏதாவதொரு அம்சத்திற்காக கவர்னர் கேட்கும் மானியத்தை அஸெம்பிளி நிராகரித்தாலோ அல்லது குறைத்தாலோ, அதனால் கவர்னர் தம் விசேஷப் பொறுப்புக்கள் பாதிக்கப்படுமென்று கருதினால், அச் செலவைத் தாமே அனுமதிக்கலாம். அதாவது சட்ட சபையின் ஓட்டை நிராகரிக்கலாம். ஒவ்வொரு மாகாணத்திலும் ஐரோப்பியர்கள், ஆங்கிலோ இந்தியர்கள் இவர்களின் கல்விக்காகப்

பணம் ஒதுக்கி வைக்கப்படும். இத்தொகையை அஸெம்பிளியின் முக்காற் பங்குள்ளப் பெரும்பான்மை ஓட்டுக்களால் தான் குறைக்க முடியும்.

மாகாணங்களின் நீதிஸ்தாபனம்

ஒவ்வொரு மாகாணத்திலும் ஹைகோர்ட்டு தான் தலைமை நீதிஸ்தலம் ஆகும். அதில் ஒரு பிரதம நீதிபதியும், சில வேறு நீதிபதிகளும் இருப்பார்கள். மன்னர் தாம் அவர்களை நியமனஞ்செய்வார். ஒவ்வொருவரும் அறுபது வயது வரையில் வேலை பார்க்கலாம். அதிருப்திகரமான நடத்தையின் காரணமாகவோ, உடல் வலிமை குன்றியதாலோ பிரிவி கவுன்ஸிலின் நீதிக்கமிட்டியின் அறிக்கையின் மீதோ, நீதிபதிகள் வேலையிலிருந்து நீக்கப்படலாமேயன்றி, வேறுவிதமாக நீக்கப்பட முடியாது. அவர்களுடைய சம்பளம் கவுன்ஸிலுடன் கூடிய மன்னரால் தீர்மானிக்கப்படும். ஒரு நீதிபதியின் உத்தியோக காலத்தில் அவருடைய சம்பளத்தைக் குறைக்கவோ, அதிகப்படுத்தவோ முடியாது. பிரதம நீதிபதிகளை கவர்னர் ஜெனரல் தற்காலிகமாக நியமிக்கலாம். இரண்டு வருஷங்களுக்கு மேற்படாத காலத்திற்கு உப நீதிபதிகளையும் கவர்னர் ஜெனரல் நியமிக்கலாம்.

ஒவ்வொரு ஹைகோர்ட்டுக்கும், இந்தியாவிலுள்ள எல்லாக் கோர்ட்டுக்கள் மீதும் கண்காணிப்பு உண்டு. அப்பீல்களை மட்டுமே அதனதன் அதிகார எல்லைக்குள் எடுத்துக் கொள்ளவேண்டும். கோர்ட்டுக்களின் வழக்கம், நடைமுறைகள் இவற்றைப்பற்றிய விதிகளை ஹைகோர்ட்டு இயற்றலாம்.

கீழ்க்கோர்ட்டில் நடக்கும் வழக்கு, சமஷ்டி அல்லது மாகாணச் சட்டத்தின் செல்லுபடி சம்பந்தமாக இருந்தால்,

ஹைகோர்ட்டு அவ்வழக்கைத் தன்னுடைய தீர்மானத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும். சமஷ்டி சம்பந்தமாக சமஷ்டி அட்வொகேட் ஜெனரலும், மாகாணச் சட்ட சம்பந்தமாகச் சமஷ்டி யல்லது மாகாண அட்வொகேட் ஜெனரலும் மனு செய்துகொள்ளவேண்டும்.

மாகாணங்களுக்குச் சுய ஆட்சி அளித்திருப்பதாக அரசியல் திட்டக் கர்த்தாக்கள் சொல்லுகின்றார்கள். பார்லிமெண்டரி அரசாங்க முறையின் சில அம்சங்கள் மாகாணங்களில் இருக்கின்றன என்பது உண்மையே. மந்திரிகள் சட்டசபை அங்கத்தினர்களிடையிலிருந்து நியமிக்கப்படுகிறார்கள். உத்தியோகஸ்தர்களுக்குச் சட்டசபையில் ஸ்தானமில்லை. அஸெம்பிளி முழுதும் ஜனப்பிரதிநிதிகளால் அமைந்தது. இரண்டாம் சபை ஒன்று இருந்தாலும் அது மிகச் சிறியது. அதன் அதிகாரமுங் குறைந்தது. சட்டப்படி மந்திரிகளைத் தவிர, கவர்னருக்கு யோசனை கூறுபவர் ஒருவரும் இல்லை.

மாகாணச் சுய ஆட்சியும் பொறுப்பாட்சியும்

ஆனால் கவர்னருக்குத் தடுக்கும் அதிகாரங்கள் பல இருக்கின்றன. விசேஷப் பொறுப்புக்கள், யுக்தானுசார அதிகாரங்கள், அவசரச் சட்டங்களையும் பிரகடனங்களையும் வெளியிடும் அதிகாரங்கள், இவையனைத்தும் கவர்னருக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. அவர் மாகாணத்தின் யதேச்சாதிகாரிபோல இருக்கிறாரே யன்றி, அதன் அரசியல் தலைவர் போலில்லை. மந்திரிகளின் அதிகாரங்களோ மிகக் கவனத்துடன் வரையறுக்கப் பட்டிருக்கின்றன. ஆதலின் இதைப் பொறுப்பாட்சியென்று சொல்வது சரியாகாது.

சட்டப்படி விசேஷ அதிகாரங்கள் கவர்னருக்கு அளிக்கப்பட்டிருப்பதால், அரசியல் திட்டத்தின் வெற்றி மாகா

ணக் கவர்னர்களின் நற்புத்தியையும், சாமர்த்தியத்தையும், அதிகாரத் தவிர்ப்பையும் பொறுத்ததாயிருக்கிறது. எந்தத் திட்டமும் வெற்றிபெறுவது அதன் வாசகத்தைப் பொறுத்ததன்று. அனுஷ்டானத்தையே பொறுத்ததென்பது உண்மை. ஆகையாற்றான் காங்கிரஸ் கட்சியார், முன்கூட்டியே கவர்னருடன் கலந்து பேசி அவர் விசேஷ அதிகாரங்களைப் பிரயோகிக்கும் விஷயத்தில் சில கட்டுப்பாடுகளுக்குச் சம்மதிக்கும்படி செய்து பிறகே நிர்வாகத்தை யேற்றுக்கொண்டது, தீவிர ஆலோசனையுள்ள ஒரு செயலாக முடிந்தது. இனிமேல் கவர்னர்கள் தம் விசேஷ அதிகாரங்களை உபயோகிப்பதில் மிகவும் ஜாக்கிரதையா யிருப்பார்கள். ஆகையால், இனி மாகாணங்களில் ஏற்படும் அரசியல் கட்டுப்பாடுகளின் மூலம், பொறுப்பாட்சி நிலை பெற்று ஓங்குமென்று நாம் எதிர்பார்க்கலாம்.

அத்தியாயம் 20

இந்தியா III : சமஷ்டி அரசாங்கம்

நிர்வாகம்

சமஷ்டியின் நிர்வாக அதிகாரம், மன்னரின் சார்பாக இந்தியாவின் கவர்னர் ஜெனரலால் நடத்தப்படுகின்றது.

கவர்னர் ஜெனரல்: நியமனமும் சம்பளமும்

அவர் மன்னரால் சாதாரணமாக ஐந்து வருஷ காலத்திற்கு நியமிக்கப்படுகிறார். அவருடைய வருஷச் சம்பளம் ரூ. 2,50,800 ஆக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அவர், தம் உத்தியோக பதவியை அந்தஸ்துடனும் கௌரவத்துடனும் வகிப்பதற்குத் தேவையான அலவன்ஸும் அளிக்கப்பட்டிருக்கிறது. அவர் மன்ன

ரின் பிரதிநிதியென்ற முறையில் சமஷ்டி நிர்வாகத்தின் தலைமையை வகிப்பதுடன் மன்னருக்குச் சுதேச சமஸ்தானங்களுடன் இருக்கும் சம்பந்தத்தை ஒட்டிய வேலைகளையும் செய்கிறார். அரசியற் சட்டத்திற்குட்பட்டு அவர் நிர்வாக அதிகாரத்தை வகித்து வருகிறார். சமஷ்டிச் சட்டசபை சட்டமியற்றும் அதிகாரங்கொண்ட எல்லா விஷயங்கள் மீதும், பிரிட்டிஷ் இந்தியாவின் போர்ப்படைகளை யேற்படுத்துவது, இந்தியாவில் வைக்கப்பட்டிருக்கும் பிரிட்டிஷ் சைன்யங்களின் பரிபாலனம், இவைபோன்றவைகளின்மீதும், கவர்னர் ஜெனரலின் நிர்வாக அதிகாரஞ் செலுத்தப்படுகின்றது. எல்லைப்புறத்தினர் போன்ற ஜாதியர்களின் பிரதேசங்களில் மன்னரின் அதிகாரம் முழுவதையும் அவரே செலுத்துகின்றார். சமஷ்டியிற் சேர்ந்த சுதேச மன்னரின் அதிகாரத்தை எங்கு ஒரு சமஷ்டிச் சட்டம் தெளிவாக விலக்கியிருக்கிறதோ, அதைத் தவிர மற்றச் சமஷ்டி விஷயங்களில் அம்மன்னரே அவர் சமஸ்தானத்தில் நிர்வாக அதிகாரத்தை வகிப்பார்.

மந்திரிச்சபை

கவர்னர் ஜெனரல் தம் வேலைகளைச் செய்வதற்காக அவருக்கு உதவியும், யோசனையும் அளிக்க ஒரு மந்திரிச்சபை உண்டு. அச்சபையின் தொகை பத்துக்கு மேற்படக் கூடாது. மந்திரிச்சபை அங்கத்தினர்கள் கவர்னர் ஜெனரலால் நியமனஞ் செய்யப் பெறுவார்கள். அவர்கள் விசுவாசப் பிரமாணஞ் செய்து கவர்னர் ஜெனரல் இஷ்டப்படும் வரையில் உத்தியோகம் வகிப்பார்கள். சேர்ந்தாற்போல ஆறு மாதங்களுக்கு மேல் சமஷ்டிச் சட்டசபையின் அங்கத்தினராக இல்லாதவர் மந்திரியாக இருக்கக்கூடாது. மந்திரிகளின் சம்பளங்களைச் சமஷ்டிச் சபை அப்போதைக் கப்போது சட்டமூலம் நிர்ண

யிக்கும். அப்படி அது செய்யாதவரையில் கவர்னர் ஜெனரல் நிர்ணயிப்பார். ஒரு மந்திரியின் சம்பளம் அவருடைய உத்தியோக காலத்திற்குள் மாற்றப்படக்கூடாது. கவர்னர் ஜெனரல் தம் யுக்தானுசார அதிகாரப்படி மந்திரிச்சபைக் கூட்டங்களில் தலைமை வகிக்கலாம்.

கவுன்ஸெலர்கள் நிதிநிபுணர் நியமனம்

பாதுகாப்பு, மத விஷயம், அன்னியநாட்டு விவகாரங்கள், காட்டுப்பிரதேச வாசிகள் சம்பந்தமான விஷயம், இவைகளில் கவர்னர் ஜெனரல் தம் யுக்தானுசார அதிகாரங்களைச் செலுத்துவர். இந்த வேலைகளில் தமக்கு உதவி புரிவதற்கு மூன்று பேர்களுக்கு மேற்படாத கவுன்ஸெலர்களை அவர் நியமித்துக்கொள்ளலாம். அவர்களுடைய சம்பளங்களையும், உத்தியோக நிபந்தனைகளையும் சபையுடன் கூடிய பிரிட்டிஷ் மன்னர் நிர்ணயிப்பர். நிதி விஷயத்தில் சமஷ்டி அரசாங்கத்தின் நிலையையும், நாணயத்தையுங் காப்பாற்ற வேண்டியதாகிய தமது விசேஷப்பொறுப்பில், தமக்கு யோசனை கூறி உதவி புரிய, ஒரு நிதி நிபுணரையும் நியமனஞ் செய்துகொள்ள அவருக்கு அதிகாரம் உண்டு. கவர்னர் ஜெனரல் இஷ்டப்படும் வரை, அவர் உத்தியோகம் வகிப்பார். நிதி நிபுணரின் சம்பளம், அலவன்ஸ், அவருக்குக்கீழ் உள்ள உத்தியோகஸ்தர்கள், அவர்களுடைய உத்தியோக நிபந்தனைகள், இவைகள் கவர்னர் ஜெனரலால் யுக்தானுசார அதிகாரத்தின்கீழ் நிர்ணயிக்கப்படும். நிதி நிபுணரை நியமனஞ் செய்யுமுன், அவர் யாரைத்தேர்ந்தெடுக்கலாமென்பதில் மந்திரிகளைக் கலக்கவேண்டும்.

சமஷ்டி நீதிஸ்தலத்தின் நீதிபதியாக இருக்கக் கூடிய யோக்கியதாம்சம் பொருந்தியவரை கவர்னர் ஜெனரல்

சமஷ்டி அட்வொகேட் ஜெனரலாக நியமிக்கலாம். கவர்னர் ஜெனரல் இஷ்டப்படுங் காலம் வரையில் அவர் உத்தியோகம் வகிப்பார்; அவர் நிர்ணயிக்குஞ் சம்பளத்தைப் பெறுவர். அட்வொகேட் ஜெனரலின் நியமனம், அவரை வேலையிலிருந்து நீக்குவது, அவருடைய சம்பளத்தை நிர்ணயஞ் செய்வது, இவ்விஷயங்களில் கவர்னர் ஜெனரல் தம் சொந்தத்தீர்ப்பு அதிகாரத்தைச் செலுத்துவார்.

சமஷ்டி அட்வொகேட் ஜெனரல்

பார்லிமெண்டின் இரு சபைகளின் அனுமதியின் மீது, கவர்னர் ஜெனரலுக்கு மன்னர் ஒரு 'ஆக்ஞா பத்திரம்' அளிப்பார். தம்முடைய யுக்தானுசார—சொந்தத் தீர்ப்பு அதிகாரங்களைச் செலுத்துவதில் கவர்னர் ஜெனரல் இந்தியா காரியதரிசியின் பொதுக்கண்காணிப்பின்கீழ் அவரது குறித்த உத்தரவுப்படி நடப்பார். தாம் செய்யும் உத்தரவு ஆக்ஞாபத்திரத்தின் ஷரத்துக்களுக்கு விரோதமாக இல்லாதபடி இந்தியா காரியதரிசி பார்த்துக் கொள்ளவேண்டும்.

இந்தியா காரியதரிசியின் கண்காணிப்பு

சமஷ்டிச் சர்க்காரின் காரியக் கிரமம் முழுதும் கவர்னர் ஜெனரலின் பேரால் தான் நடைபெறும். சமஷ்டிச் சர்க்காரின் வேலையைப் பற்றித் தமக்கு வேண்டிய எல்லாத் தகவல்களையும் கேட்டறிய கவர்னர் ஜெனரலுக்கு உரிமையுண்டு. அவர் தம் யுக்தானுசாரப்படி மந்திரிகளுக்குள் நிர்வாக இலாகாக்களைப் பிரித்துக் கொடுக்கலாம்.

சமஷ்டிக் காரியக் கிரமம்

கவர்னர் ஜெனரலின் விசேஷப் பொறுப்புக்கள் பின் வருவனவாம்:— இந்து தேச அமைதி நிலைமைக்கு ஏற்படக்

கூடிய ஆபத்தைத் தடுப்பது; சமஷ்டிச் சர்க்காரின் நிதி நிலையையும், நாணயத்தையும் பாதுகாப்பது; உத்தியோக வர்க்கத்தினருக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் சட்டப்படி ஏற்பட்ட உரிமைகளையும் நியாயமான க்ஷேமலாபங்களையும் பாதுகாப்பது; பிரிட்டிஷ் பிரஜைகளுக்கோ, பிரிட்டனில் அல்லது பர்மாவிற் சட்டப்படி அமைக்கப்பட்ட கம்பெனிகளுக்கோ பாதகமான சலுகைகள் ஏற்படாமற் பார்த்துக்கொள்வது; இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் ஆங்கில பர்மிய சாமான்களுக்கு அபராதவரி போடும்படியாக ஏற்படுஞ் சலுகைகளைத் தடுப்பது; கவர்னர் ஜெனரலின் யுக்தானுசார அதிகாரம், சொந்தத்தீர்ப்பு அதிகாரம், அல்லது ஒதுக்கப்பட்ட இலாகாக்கள், இவைகளைப் பாதிக்கும்படியுள்ள நிர்வாக நடவடிக்கைகளைத் தடுப்பது; சுதேச சமஸ்தானங்களின் உரிமைகளையும், மன்னர்களுடைய அந்தஸ்தையும் பாதுகாப்பது.

கவர்னர் ஜெனரலின் விசேஷப் பொறுப்புக்கள்

தம் விசேஷப் பொறுப்புக்களை கவர்னர் ஜெனரல் தம் சொந்தத்தீர்ப்பு அதிகாரத்தைக்கொண்டு செலுத்துவார். தம் யுக்தானுசார அதிகாரப்படித் தம் காரியக்கிரம ஸ்தாபனத்தை அமைத்துக்கொள்வார்.

கவர்னர் ஜெனரலின் சட்ட நிர்மாண அதிகாரங்கள்

சட்டசபை கூடாதபோது கவர்னர் ஜெனரல் அவசரச் சட்டங்களை இயற்றலாம். அவை சட்டசபைக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டும். அஸெம்பிளி கூடிய ஆறு மாதங்களுக்கு மேல் அவை செல்லா. அவற்றைக் கண்டித்து இரண்டு சபைகளிலும் தீர்மானம் நிறைவேறினால் ஆறு மாதங்களுக்கு முன்பேயே அவை செல்லாமற் போகும்.

தம் யுக்தானுசார—சொந்தத்தீர்ப்பு அதிகாரங்களை உபயோகிக்கவேண்டிய விஷயங்களில் சட்ட நிர்மாணஞ் செய்ய வேண்டிய அவசிய மேற்பட்டால், இரு சட்ட சபைகளுக்கும், அச்சட்டத்தின் அவசியத்தை விளக்கி கவர்னர் ஜெனரல் ஓர் அறிக்கை யனுப்புவார். அதனுடன் சட்டத்தின் ஒரு நகலையும் அனுப்பலாம்; அல்லது உடனேயே அவர் ஒரு சட்டத்தை யியற்றலாம். அதற்குக் 'கவர்னர் ஜெனரல் சட்டம்' என்று பெயர். அது பார்லிமெண்டிற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்காக உடனே இந்தியா காரியதரிசிக்கு அனுப்பப்படும்.

அவசரச் சட்டத்தையும், கவர்னர் ஜெனரல் சட்டத்தையும் மன்னர் நிராகரிக்கலாம். கவர்னர் ஜெனரலே எப்பொழுது வேண்டுமானாலும் அவற்றை மீட்டுக் கொள்ளலாம்.

தம் யுக்தானுசார—சொந்தத்தீர்ப்பு அதிகாரங்களை உபயோகிக்கவேண்டிய விஷயங்களில் அவர் அவசியமென நினைக்கும் பொழுது அவசரச் சட்டங்களை இயற்றலாம். ஆறுமாதங்கள் முடிந்ததும் அவை காலாவதியாகிவிடும். ஆனால், அவை மறுபடியும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்படலாம். அப்படியானால், பார்லிமெண்டின் முன்பு சமர்ப்பிக்கப்படுவதற்காக இந்தியா காரியதரிசிக்கு அவை அனுப்பப்பட வேண்டும்.

கீழ்க்கண்ட விஷயங்களில் கவர்னர் ஜெனரல் தம் யுக்தானுசாரப்படி நடப்பார்:— ரிசேர்வ் பாங்க் கவர்னர், உபகவர்னர் இவர்களை நியமித்தலும், நீக்குதலும்; அவர்களுடைய சம்பளத்திற்கு அனுமதி கொடுத்தல்; அவர்களின் உத்தியோக கால நிர்ணயம்; பாங்கின் மத்திய போர்டை

விலக்கி, மேல்நடவடிக்கை எடுப்பது; பாங்கின் கலைப்பு. ரிசெர்வ் பாங்க் டைரெக்டர்களை நியமனஞ் செய்வதிலும், ஏதாவதொரு டைரக்டரை வேலையிலிருந்து நீக்குவதிலும் கவர்னர் ஜெனரல் தம் சொந்தத்தீர்ப்பு அதிகாரத்தை உபயோகிப்பார்.

அரசியல் "உடைபடுதல்"

எப்பொழுதாவது சமஷ்டி அரசாங்கம் அரசியல் திட்டப்படி நடைபெற முடியாது என்று கவர்னர் ஜெனரலுக்குக் தோன்றினால், ஒரு பிரகடனத்தின் மூலம் (சமஷ்டிக் கோர்ட் சம்பந்தமானவை நீங்கலாக) அரசியல் சட்ட நிபந்தனைகளைத் தள்ளிவைத்து, தாமே சமஷ்டி அதிகாரத்தை ஏற்கலாம். அப்பிரகடனத்தைப் பின்பு ஒரு பிரகடனத்தால் மாற்றவோ, ரத்து செய்யவோ கூடும். அப்பிரகடனத்தை உடனே பார்லிமெண்டின்முன் சமர்ப்பிக்கப் படுவதற்கு அனுப்பவேண்டும். ஆறு மாதங்களுக்குமேல் அது செல்லாது. பார்லிமெண்டின் இரு சபைகளும் அனுமதித்தால் அது மற்றொரு ஆறு மாதங்கள் வரை நீடிக்கும். மூன்று வருஷகாலம் சமஷ்டி இப்பிரகடனத்தின்படி நடந்தால், பிரகடனம் செல்லுபடி யாகாமற் போகும். தேவையான திருத்தங்களைச் செய்து பார்லிமெண்டு மறுபடியும் அரசியல் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரலாம்.

ரெயில்வேக்களின் அமைப்பு, ஏற்பாடு, நிர்வாகம், இவைகளின் சம்பந்தமாகச் சமஷ்டிக்குள்ள நிர்வாக அதிகாரத்தைச் செலுத்த, சட்ட பூர்வகமான ஒரு தனி ஸ்தாபனம் ஏற்படுத்தி யிருப்பது தான் இந்த அரசியற் சட்டத்தின் ஒரு புதுவிஷயமாகும். அதற்குச் சமஷ்டி ரயில்வே

நிர்வாக ஸ்தாபனம் என்று பெயர். அதில் கவர்னர் ஜெனரலால் நியமிக்கப்பட்ட ஏழு அங்கத்தினர்கள் உண்டு. தலைவரும், குறைந்தது இரண்டு அங்கத்தினர்களும் அவருடைய யுக்தானுரச அதிகாரப்படி நியமனஞ் செய்யப்படுவார்கள். முதன் முதல் நியமிக்கப்படும் மூவர் 3 வருஷங்களும், பின்பு நியமிக்கப் படுபவர் 5 வருஷங்களும் உத்தியோகம் வகிப்பர். ஓர் அங்கத்தினர் மறுபடியும் ஐந்து வருஷங்களுக்கு நியமிக்கப்படலாம். தம் சொந்தத் தீர்ப்பின்படி, கவர்னர் ஜெனரல் அவர்களுடைய சம்பளம், அலவன்ஸுகள் முதலியவற்றை நிர்ணயிப்பார்.

சமஷ்டி ரெயில்வே நிர்வாக ஸ்தாபனம்

ஒரு ரெயில்வேக்கும், மற்றொரு ரெயில்வேக்கும் இடையே கிரமமற்ற சலுகைகளும் நஷ்ட மேற்படுத்தும் போட்டியும் இல்லாமற் பார்த்துக்கொள்ளவும், பரஸ்பர வசதிகளை யேற்படுத்தவும், நியாயமற்ற போட்டியைப்பற்றி விசாரணை செய்யவும், ரெயில்வே விசாரணைக் கோர்ட்டு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ரெயில்வே நிர்வாக ஸ்தாபனத்தின்மீது ஏற்படும் புகார்களையும் அது விசாரணை செய்யும். ஒரு ரெயில்வே போடுவதிலோ, பாதையின் அகலத்தை மாற்றுவதிலோ, கவர்னர் ஜெனரலுக்கும் சுதேச சமஸ்தானத்திற்கும் ரெயில்வே நிர்வாக ஸ்தாபனத்திற்கும் அபிப்பிராய பேத மேற்பட்டால், அதைப்பற்றித் தீர்ப்புக் கூறவும் இந்தக் கோர்ட்டுக்கு அதிகார முண்டு. இக்கோர்ட்டின் தீர்ப்புக்கு விரோதமாக வழக்கு நடக்கக் கூடாது.

ரெயில்வே விசாரணைக் கோர்ட்டு

இந்தியா காரியதரிசியும் இந்திய உத்தியோக வர்க்கமும்

இந்தியா காரியதரிசியின் பழைய கவுன்ஸில் கலைக்கப் படும். அதற்குப் பதிலாக அவர் மூன்று பேர்களுக்குக் குறையாமலும் ஆறு பேர்களுக்கு மேற்படாமலும் ஆலோசனையாளர்களை தம் இஷ்டப்படி நியமித்துக் கொள்வர். அவர்களில் பாதிப்பேர்கள், குறைந்தது பத்து வருஷங்களாவது இந்தியாவில் மன்னரின் கீழ் உத்தியோகம் வகித்தவர்களாக இருக்கவேண்டும். ஆலோசனை யாளர்களின் உத்தியோககாலம் ஐந்து வருஷங்கள் மாத்திரமே. இந்தியா காரியதரிசியுக்தானுசாரப்படி அவர்கள் எல்லோரையுமோ, தனித்தனியாகவோ கலந்து யோசனை கேட்கலாம். அவர் அவர்களுடைய யோசனையைக் கேட்காமலோ, அல்லது யோசனையை நிராகரித்து தம் இஷ்டப்படியோ நடக்கலாம். அரசியற் சட்டப்படி எந்த சமயங்களில் அவர் ஆலோசனை யாளர்களைக் கலந்தாக வேண்டுமோ, அப்பொழுது அவர்களுடைய கூட்டமொன்றைக் கூட்டி, அதிற் குறைந்தது பாதிப்பேர் எப்படி அபிப்பிராயப்படுகிறார்களோ அப்படியேதான் அவர் நடக்கவேண்டும். இந்தியா காரியதரிசியின் சம்பளத்தையும் அவருடைய இலாகாச் செலவுகளையும் பார்லிமெண்டு ஏற்றுக் கொள்ளும்.

1919-ம் வருஷ அரசியற் சட்டத்தின் கீழ், இந்தியா காரியதரிசிக்கு சர்வாதிகாரம் இருந்தது. இந்த அரசியற் சட்டத்தின் மூலம் பல அதிகாரங்கள் அவரிடமிருந்து எடுக்கப்பட்டு விட்டன. இதனால், அவரது நிர்வாக அதிகாரமுங் குறைந்துவிட்டதுபோல் வெளிப்படையில் தோன்றக்கூடும். உண்மையிலோ அப்படி அன்றென்பது அரசியற் சட்டத்தின் விதிகளைக் கவனமாகப் படித்தால் தெரியவரும்.

இந்தியா காரியதரிசியின் அதிகாரம் விரிவுடையது தான்

பொதுவாக இந்திய விஷயங்கள் அனைத்திலும் கண்காணிப்பு செய்து, கவர்னர் ஜெனரல் யுக்தானுசாரப்படியும் சொந்தத் தீர்ப்புப்படியும் நடக்கவேண்டிய விஷயங்களில் உத்தரவிட இந்தியா காரிய தரிசிக்கு அதிகார மிருக்கிறது. கவர்னர் ஜெனரலின் அதிகாரங்களைப் போலவே, இந்தியா காரியதரிசியின் அதிகாரங்களும் மிகவும் விரிவானவை. சமஸ்தானங்களி லிருந்த பழைய அதிகாரங்கள் யாவும் இப்பொழுதும் அவருக்கு உண்டு. மத விஷயம், அந்நியநாட்டு விஷயங்கள், பாதுகாப்பு, இவைகளை அவர்தான் நிர்வகிக்கிறார். இந்திய ஸிவில் ஸெர்விஸ், இந்திய வைத்திய ஸெர்விஸ், இந்திய பொலீஸ் ஸெர்விஸ், நீர்ப்பாசன இலாகா, இவைகளிற் செய்யப்படும் நியமனங்கள் யாவும் அவருடைய கண்காணிப்புக்கு உட்பட்டவைதாம். உயர்தர ஸெர்விஸ் உத்தியோக சம்பந்தமானவைகளில் அவர்தாம் அப்பீல் அதிகாரி.

பாதுகாப்பு கொண்ட உத்தியோக வர்க்கம்

தாம் தேர்ந்தெடுத்தவர்களுக்குக் கொடுக்கவேண்டிய ஸிவில் உத்தியோகங்களின் தன்மையையும், தொகையையும் தீர்மானிக்க இந்தியா காரியதரிசிக்கு அதிகாரம் இருக்கிறது. சம்பளம், ரஜா, உபகாரச் சம்பளம் இவற்றைப்பற்றிய விதிகளை அவர்தாம் இயற்றுவார். தம்மால் பொறுக்கப்பட்ட ஒவ்வொருவரும், நியாயமாகவும் தகுந்தவாறும் உத்தியோகம் பெறுகிறாரா என்று பார்த்துக்கொள்ளவும் அவருக்கு அதிகாரம் இருக்கிறது. மந்திரிச்சபையும், சட்டசபையும் தலையிட முடியாமல் உத்தியோக வர்க்கம் பாதுகாக்கப்படுமாறு அரசியற் சட்டத்

தின்கீழ் விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றால், வேறெந்த நாட்டிலும் இல்லாத ஸ்தானத்தையும் செல்வாக்கையும் இந்திய ஸிவில் ஸெர்விஸ் உத்தியோகவர்க்கம் அனுபவிக்க இடம் ஏற்பட்டிருக்கிறது.

சமஷ்டிச் சட்டசபைகள்

அமைப்பு

சமஷ்டிச் சட்ட ஸ்தாபனத்தில், மன்னரின் பிரதிநிதியான கவர்னர் ஜெனரலும், ராஜாங்க சபை அஸெம்பிளி என்னும் இரண்டு சபைகளும், அங்கங்களாம். ராஜாங்க சபையின் அங்கத்தினர்களுடைய மேல் எல்லைத்தொகை 260. அதில் 104 பேர் சமஸ்தானப் பிரதிநிதிகள். பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகள் 150. கவர்னர் ஜெனரலால் நியமனம் பெறுகிறவர்கள் அறுவர். 150 ஜனப்பிரதிநிதிகளில் ஏழு ஐரோப்பியர், இரண்டு இந்திய கிறிஸ்துவர்கள், ஒரு ஆங்கிலோ இந்தியர், ஆறு ஷெடியூல்டு வகுப்பினர், ஆறு ஸ்திரீகள், இவர்களெல்லோரும் ஜனங்களின் நேர்முகமில்லாத தேர்தல் பெற்றவர்கள். மற்றவர்கள் எல்லோரும் சாதாரணமாக நேர்முகமான தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள். வாக்குரிமை மிகவுங் குறுகியது. பிரிட்டிஷ் இந்தியா முழுவதுமே 150,000 ஓட்டர்களுக்குமேல் இருக்க மாட்டார்கள். ராஜாங்க சபை கலைக்கப்படாத ஒரு நிரந்தர சபை. மூன்று வருஷங்களுக் கொருமுறை மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர்கள் வெளியேறுவார்கள். அங்கத்தினரின் காலம் ஒன்பது வருஷங்கள்.

சமஷ்டி அஸெம்பிளியினுடைய அங்கத்தினர்களின் மேல் எல்லைத்தொகை 375. அதில் 250 பேர் பிரிட்டிஷ் இந்தியாவின் ஜனப் பிரதிநிதிகள். இந்தத் தொகையில் 108

பேர் வகுப்புவாரித் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படு பவர். பெரும்பான்மையும் அங்கத்தினரின் தேர்தல் நேர் முகமானது அன்று. அவர்கள் மாகாணச் சட்டசபை அங்கத் தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒன்பது ஸ்திரீகள் எல்லா மாகாண அஸெம்பிளிகளின் ஸ்திரீ அங்கத்தினர் களால் தேர்ந்தெடுக்கப்படுவர். இந்த ஒன்பது ஸ்தானங் களில், முஸ்லீம்களுக்கு இரண்டும் இந்திய கிறிஸ்துவர் களுக்கு ஒன்றும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. நிலச் சுவான் தார்கள், தொழிலாளர்கள், வர்த்தகர்கள் முதலிய விசேஷப் பகுதிகளிலிருந்து 28 பிரதிநிதிகள், ஏற்பட்ட விதிகளின் படித் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். குடகுக்கும், ஆஜ்மீருக் கும் இரண்டு பிரதிநிதிகள் ஒவ்வொன்றிலுமுள்ள ஒரு கலப் புத் தொகுதி வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பாக்கியுள்ள 125 அங்கத்தினர்களும் சமஷ்டி சமஸ்தானாதி பதிகளால் நியமனம் செய்யப்பெறுவர். அங்கத்தினர்களின் காலம் 5 வருஷங்கள்.

நிதி மசோதாவைத் தவிர மற்றெல்லா மசோதாக்களும் இரண்டு சபைகளிலும் பிரேரிக்கப்படலாம். இரண்டு சபைகளும் ஒப்புக்கொண்ட திருத்தங்களு
அதிகாரங்கள் டனோ, அல்லது திருத்தங்களின்றியோ இரண்டு சபைகளாலும் அங்கீகரிக்கப்பட்டு விட்டால் ஒரு மசோதா நிறைவேறி விட்டதாகக் கொள்ள வேண்டும்.

ஒரு மசோதா அல்லது திருத்தம் சம்பந்தமாக இரண்டு சபைகளுக்கும் அபிப்பிராயபேதம் ஏற்பட்டாலும், ஒரு சபை நிறைவேற்றிய ஆறு மாதங்களுக்குப் பிறகும் மற் றொரு சபை ஒரு மசோதாவைக் கவர்னர் ஜெனரலுக்கு

அனுப்பாமலிருந்தாலும், கவர்னர் ஜெனரல் இரு சபைகளின் கலப்புக் கூட்டமொன்றைக் கூட்டலாம். கவர்னர் ஜெனரல் அவ்விருப்பத்தை வெளியிட்ட ஆறு மாதங்களுக்குப் பிறகு அக்கூட்டங் கூடும்.

முட்டுக் கட்டைகள்

ஒரு சபையில் நிறைவேற்றப்பட்டு மற்றொரு சபைக்கு அனுப்பப்பட்ட மசோதா நிதி சம்பந்தப்பட்டதாகவோ, அல்லது கவர்னர் ஜெனரல் யுக்தானுசாரத் தீர்ப்புக் குட்பட்டதாகவோ இருந்தால், மசோதா தம் அனுமதிக்குக் காலதாமதமின்றி வராது என்று அவருக்குத் தோன்றினால் தம் யுக்தானுசாரப்படி எப்பொழுது வேண்டுமானாலும் இரண்டு சபைகளின் கலப்புக் கூட்டமொன்றை அவர் கூட்டலாம். அவ்விதவிருப்பத்தைத் தெரிவித்தபின் அக்கூட்டத்தை எந்தத் தேதியில் வேண்டுமானாலும் தம் யுக்தானுசாரப்படிக் கூடும்படிச்செய்யலாம். மசோதா அக்கலப்புக்கூட்டத்தில் அனுமதிக்கப்பட்ட திருத்தங்களுடன் அதில் பெரும்பான்மையோரின் ஓட்டுக்களால் நிறைவேறினால், அது இரு சபைகளாலும் நிறைவேற்றப் பட்டதாகக் கருதப் படும்.

ஒரு மசோதா இரு சபைகளிலும் நிறைவேறியதும், கவர்னர் ஜெனரலுக்குச் சமர்ப்பிக்கப்படும். அவர் அதற்குத் தம் யுக்தானுசாரப்படி மன்னரின் சார்பாகச் சம்மதம் கொடுக்கவோ அல்லது நிராகரிக்கவோ செய்யலாம்; மன்னரின் சம்மதத்திற்கு ஒதுக்கிவைத்துக்கொள்ளலாம்; அல்லது மசோதா முழுவதையுமோ, குறித்த பாகங்களை மட்டுமோ, அல்லது தாம் சிபார்சு செய்யும் திருத்தங்களையோ கவனிக்குமாறு, மறுபடியும் இரு சபைகளின் ஆலோசனைக்குத்

திருப்பி யனுப்பலாம். அதை இரு சபைகளும் புனராலோசனை செய்யவேண்டும். மன்னரின் அனுமதிக்காக ஒதுக்கி வைக்கப்பட்ட மசோதா, அச்சம்மதம் வெளியிடப்பட்ட பிறகுதான் சட்டமாகும். கவர்னர் ஜெனரல் சம்மதங் கொடுத்த மசோதா உடனே சட்டமாகிவிடும். ஆனால், அந்த அனுமதித் தேதியிலிருந்து ஒரு வருஷத்திற்குள் பிரிட்டிஷ் மன்னர் அதை விலக்கிவிடலாம். அச்சட்டம் அதனாற் செல்லாமற் போகும்.

ஏதாவதொரு மசோதாவைச் சட்டசபைகளில் வாதிப்பது, இந்தியாவின் அமைதி, சட்டம் நடைபெறுதல், இவைகளைப்பற்றிய தம் விசேஷப் பொறுப்பைப் பாதிக்குமென்று கவர்னர் ஜெனரல் தம் யுக்தானுசார அதிகாரப்படித் தீர்மானித்தால் அதை விவாதிக்கக் கூடாதென்று அவர் உத்தரவிடலாம்.

சமஷ்டி வருஷாந்தர நிதிக்கணக்கு சமஷ்டிச் சட்டசபைகளின் முன்பு சமர்ப்பிக்கப்படும். அது வரவு செலவுகளைப்பற்றிய திட்டங்கள் அடங்கியது.

பட்ஜெட் மானியங்கள்

சமஷ்டியின் வருமானத்தில் முதற் செலவாகக் குறிக்கப்பட்டிருக்கும் இனங்களின் செலவைத் தனியாகக் காட்டவேண்டும். கவர்னர் ஜெனரல் தம் விசேஷப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான சில தொகைகள் அதில் இருந்தால் அவற்றையும் தனியாகக் காட்டவேண்டும்.

சமஷ்டியின் வருமானத்திலிருந்து முதற் செலவினங்களாகக் கொள்ளவேண்டியவை பின் வருவனவாம்:—சமஷ்டியேற்றுக்கொண்ட கடன்கள்; மந்திரிகள், கவுன்ஸெலர்கள், நிதிநிபுணர், சீப் கமிஷனர்கள், நிதிநிபுணரின் உதவிகள்,

இவர்களுடைய சம்பளங்களும், அலவன்ஸுகளும்; சமஷ்டி நீதிஸ்தலம், ஹைகோர்ட்டுகள் இவைகளின் நீதிபதிகளுக்குச் சேரவேண்டிய சம்பளங்கள் அலவன்ஸுகள், உபகாரச் சம்பளங்கள்; பாதுகாப்பு, மதவிஷயம், அந்நியநாட்டு விவகாரங்கள் இவற்றின் செலவுகள்; சுதேச சமஸ்தானங்கள் சம்பந்தமாகப் பிரிட்டிஷ் மன்னரின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட செலவுகளை அரசியற் சட்டப்படி சமஷ்டி வருமானத்திலிருந்து பிரிட்டிஷ் மன்னருக்குச் செலுத்துவதில் ஏற்படும் செலவுகள்; தாத்காலிகமாக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் பிரதேசங்களை நிர்வாகஞ் செய்வதில் ஏற்படும் செலவுகளுக்கு வேண்டிய மானியங்கள்: ஏதாவதொரு கோர்ட்டின் தீர்ப்பு காரணமாகக் கட்டும்படி ஏற்படுந் தொகைகள்; அரசியல் திட்டத்திலாவது, சமஷ்டிச் சட்டசபைகளின் சட்டங்களிலாவது முதற் செலவினங்களாகச் விதிக்கப்பட்டவை. ஏதாவதொரு செலவினம் சமஷ்டியின் வருமானத்தின் முதற்செலவாகக் கருதப்படவேண்டுமா என்பதைக் கவர்னர் ஜெனரல் தம் யுக்தானுசார அதிகாரப்படித் தீர்மானிப்பார்.

மேற்கூறிய செலவு இனங்களில் முதல் ஆறு இனங்களைப்பற்றிச் சட்டசபையில் விவாதம் நடைபெறலாகாது. வருமானத்தில் முதற்செலவாகக் கருதப்படும் இனங்கள் விவாதிக்கப்படலாமே யொழிய ஓட்டுக்கு விடப்படமாட்டா. மற்ற எல்லா இனங்களையும் விவாதித்து திட்டத்திற் கண்ட மானியங்களை யளிக்கவோ, குறைக்கவோ இரு சபைகளுக்கும் அதிகாரம் உண்டு. ஒரு மானியம் அஸெம்பிளியால் நிராகரிக்கப்பட்ட பிறகு கவர்னர் ஜெனரலின் உத்தரவு ஏற்பட்டாலொழிய ராஜாங்க சபைக்கு ஸமர்ப்பிக்கப்படக் கூடாது.

ஒரு மானியத்தை அஸெம்பிளி குறைத்து விட்டால், அந்தக் குறைந்த தொகை தான் (கவர்னர் ஜெனரல் வேறு விதமாக உத்தரவிட்டாலொழிய) ராஜாங்கக் கவுன்ஸிலின் முன்பு சமர்ப்பிக்கப்படவேண்டும். எவ்விதமானாலும் அஸெம்பிளியின் முன்பு சமர்ப்பிக்கப்பட்ட மானியத்தில் கண்ட தொகையைக் காட்டிலும் அதிகமான தொகையைக் கவுன்ஸிலின் முன்பு சமர்ப்பிக்க முடியாது.

ஏதாவதொரு மானிய விஷயமாக இரு சபைகளுக்கும் அபிப்பிராயபேதம் ஏற்பட்டால், கவர்னர் ஜெனரல் இரு சபைகளின் கலப்புக் கூட்டமொன்றைக் கூட்டுவார். அதில் வந்திருந்து ஓட்டுச்செய்யும் பெரும்பான்மை அங்கத்தினரின் தீர்ப்பு இரு சபைகளின் தீர்ப்பாகவே கருதப்படும்.

தம் விசேஷப் பொறுப்புக்களைச் சட்டப்படி நிறைவேற்றுவதை இத்தகைய நிராகரிப்போ, "வெட்டோ" பாதிக்கும் என்று கவர்னர் ஜெனரலுக்குத் தோன்றினால், அச் செலவைச் செய்ய அவர் உத்தரவிடலாம்.

வருஷாந்தர வரவு செலவுத் திட்டத்தில் இல்லாத ஏதாவது அதிகப்படிச் செலவு ஏற்பட்டால், உபமானியம் அளிக்குமாறு கவர்னர் ஜெனரல் சட்ட சபைகளைக் கேட்கலாம். வருஷாந்தர வரவு செலவுத் திட்டத்திற்கு ஏற்பட்ட நடைமுறைதான் இதற்கும் உள்ளது.

ஏதாவதொரு புதுவரி போடவோ, அல்லது வரியை அதிகப்படுத்தவோ, கடன் வாங்கும் விஷயத்தில் நியதி ஏற்படுத்தவோ, முன்பின் பொக்கிஷப் பொறுப்புக்களைப்பற்றியோ, மசோதா கொண்டுவரப்பட்டால், அது கவர்னர் ஜெனரலின் சிபார்சின்றிச் சட்டசபைகளுக்குச் சமர்ப்பிக்

கப்படுதல் கூடாது. அத்தகைய மசோதாவைக் கீழ்ச்சபையிற்றான் பிரேரிக்கவேண்டும்.

கணக்குகளும் கணக்கு பரிசோதனைகளும்

சமஷ்டிக் கணக்குகளைப் பரிசோதிக்க ஓர் அகில இந்திய ஆடிட்டர் ஜெனரல் நியமனஞ் செய்யப்படுவர். மாகாணத்திலும் ஒரு ஆடிட்டர் ஜெனரல் நியமனமாகும்வரை மாகாணக் கணக்குகளையும் அவர் பரிசோதிப்பார். அவரைப் பிரிட்டிஷ் மன்னர் நியமனஞ் செய்வார். அவருடைய சம்பளம், உத்தியோக நிபந்தனைகள் முதலியன, சபையுடன் கூடிய மன்னரால் நிர்ணயிக்கப்படும். வேலையிலிருந்து நீங்கிய பிறகு அவருக்கு இந்தியச்சர்க்காரின்கீழ் வேறு ஒரு வேலையும் கொடுக்கப் படமாட்டாது. அவருடைய சம்பளம், அலவன்ஸுகள், உபகாரச் சம்பளம், அனைத்தும் சமஷ்டியின் வருமானத்தில் முதற் செலவாகக் கருதப்படும். கெட்ட நடத்தை, மூளை உடம்பு பலவீனம், முதலியவை காரணமாகப் பிரிவிக் கவுன்ஸிலின் நீதி விசாரணைக் கமிட்டியின் சிபார்சின்மீது மன்னர்தாம் இவரை வேலையிலிருந்து நீக்கலாம். சமஷ்டிக் கணக்குகளைப்பற்றி ஆடிட்டர் ஜெனரல் தயார் செய்யும் அறிக்கைகள் சமஷ்டிச் சட்டசபைகளுக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்காக கவர்னர் ஜெனரலுக்கு அனுப்பப்பட வேண்டும்.

பொதுவாக, அரசியற் சட்டப்படி நிர்வாக ஸ்தாபனம் சட்டசபைக்குப் பதிற்கூறவேண்டிய பொறுப்பில்லாததாக இருக்கிறது. கவர்னர் ஜெனரலின் சொந்தத் தீர்ப்பிற்கும், யுக்தானுசாரத்திற்கும் விடப்பட்டிருக்கிற விஷயங்கள் மிகவும் முக்கியமானவையாயும், அதிகமானவையாயும் இருக்

கின்றன. பாதுகாப்பு, மதவிஷயம், அந்நியநாட்டு விவகாரங்கள், இவையெல்லாம் அவருடைய கண்காணிப்புக் குட்பட்டன.

மத்திய சர்க்கார் சட்டசபைகளுக்குப் பதிற்சொல்ல வேண்டியதில்லை

சட்டமும் அமைதியும் நடைபெறுதல், தேசத்தின் நிதிநிலையும் நாணயமும், சிறு பான்மையோரின் க்ஷேம லாபங்கள் பாதுகாப்பு, சமஸ்தானங்களின் உரிமைகள் பாதுகாப்பு, இவைகள் அவருடைய விசேஷ பொறுப்புக்களைச் சேர்ந்தவை. இவ்விஷயங்களில் நிர்வாகம் நடத்துவதற்கு அவருக்கு உதவியாயிருக்கும் மூன்று கவுன்ஸலர்களும் சட்டசபைகளுக்குப் பதிலளிக்கும் பொறுப்புடையவர்களல்லர். நிதி நிபுணரோ கவர்னர் ஜெனரலால் நியமனஞ் செய்யப்படுபவர். ஆகையால், நிதி, அமைதி, சட்டம் நடைபெறுதல், பாதுகாப்பு, அந்நியநாட்டு விவகாரங்கள் முதலிய முக்கியமான விஷயங்களில் கவர்னர் ஜெனரலின் தீர்ப்புக்களில் மந்திரிகள் தலையிட முடியாது.

சமஷ்டிச் சட்டநிர்மாண ஸ்தாபனத்திற்கு உண்மையான அதிகாரமே கிடையாது. நிதி விஷயத்தில் அதற்குச்

உண்மையான அதிகாரம் சட்டசபைகளுக்கு இல்லை

சம்பந்தமே இல்லையென்னலாம். மத்திய சர்க்கார் செலவின் முக்காற்பங்கு ஜனப் பிரதிநிதிகள் ஓட்டு அளிக்கக்கூடாத இனங்களைச் சேர்ந்தது. ஓர் இனம் ஓட்டுக்கு விட வேண்டியதா இல்லையா என்பதைக் கவர்னர் ஜெனரல் தம் யுக்தானுசாரப்படித் தீர்மானித்து விடலாம். தம் விசேஷப் பொறுப்புக்கள் சம்பந்தமான மானியங்கள் சட்டசபைகளால் நிராகரிக்கப்பட்டாலுங்கூட கவர்னர் ஜெனரல் அவைகளைத் திருப்பியளிக்க அதிகாரமிருக்கிறது.

வரி விதித்தல், செலவு செய்தல், கடன் வாங்குதல், இவ்விஷயங்களில் சட்டசபைகள் ஏதாவதொரு பிரேரணை கொண்டுவர வேண்டுமானால் முன்கூட்டியே கவர்னர் ஜெனரலின் சிபார்சு பெறவேண்டும். அவசரச் சட்டங்களை இயற்றவும், பிரகடனத்தின்மூலம் அரசியல் திட்டத்தையே நிறுத்திவைக்கவும் அவருக்கு அதிகாரமுமிருக்கிறது. ரயில்வே நிர்வாகம் சட்டசபைகளிடமே இல்லை. இவையெல்லாம் சேர்ந்துதான் அரசியல் திட்டத்தின்மேல் இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் அதிருப்திக்குக் காரணமாயிருக்கின்றன. பொறுப்பாட்சி கொள்ளவேண்டுமென்ற ஜனங்களின் ஆசை பூர்த்தியாகாமற் போவதற்கே இவ்வரசியல் திட்டம் சாதுரியமாய் அமைக்கப்பட்டிருக்கிறதென்றும், நாட்டிற்குச் சுய ஆட்சி அளிக்கும் காலத்தை நிர்ணயமின்றித் தள்ளிப்போடுவதே பிரிட்டிஷாரின் நோக்கமென்றும் தோன்றுவதற்கு உண்மையான காரணங்கள் இருக்கின்றன. ஆகையால்தான் எல்லோரும் இச்சமஷ்டித் திட்டத்தை எதிர்க்கின்றனர்.

சமஷ்டி நீதிஸ்தாபனம்

சமஷ்டி நீதிஸ்தாபனம் தான், புதிய அரசியல் திட்டத்திலேயேமிகவும் திருப்தியளிக்கக்கூடிய அம்சம். சமஷ்டிச் சர்க்காருக்கும் சமஷ்டி அங்கங்களாகிய மாகாணங்களுக்கும் சமஸ்தானங்களுக்கும், அதிகார எல்லை விஷயமாக ஏற்படும் சச்சரவுகளைத் தீர்ப்பதற்கு ஒரு தனியான சுயேச்சை கொண்ட பக்ஷபாத மற்ற நீதி நிலயம் இருக்கவேண்டிய அவசியத்தைத் திட்டத்தின் கர்த்தாக்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். ஆகையால் சமஷ்டிக் கோர்ட்டை, சமஷ்டிச் சர்க்காரின் இலாகா யாதொன்றுக்கும் உட்படாததாக அமைத்திருக்கின்றனர். அதன் கௌரவமும் நேர்மையும்

பாதுகாக்கப்படுவதற் கேற்ற வசதிகளும் அளித்திருக்கின்றனர். அதன் அதிகார எல்லையைப் பார்லிமெண்டுகூடக் குறைக்க முடியாது. நெருக்கடிக் காலங்களிற் சமஷ்டித் திட்டத்தின் இதர அம்சங்களை நிறுத்தி வைக்கக்கூடிய அதிகாரங்கொண்ட கவர்னர் ஜெனரல் கூட இக்கோர்ட்டின் விஷயத்தில் தலையிடமுடியாது.

சமஷ்டிக் கோர்ட்டில் ஒரு பிரதம நீதிபதியும் அறுவருக்கு மேற்படாத இதர நீதிபதிகளும் இருப்பார்கள். சமஷ்டிச் சட்டசபைகள் கவர்னர் ஜெனரல் மூலம் மன்னருக்கு விண்ணப்பஞ் செய்துகொண்டால் அவர் இந்தத் தொகையை அதிகரிக்கலாம். சமஷ்டி நீதிபதிகளை மன்னர் தான் நியமனஞ் செய்வார். அவர்கள் 65 வயது வரையில் உத்தியோகம் வகிக்கலாம். கெட்ட நடத்தை காரணமாகவோ, புத்திக்கோ உடலுக்கோ பலக்குறைவு ஏற்பட்ட காரணங்களாலோ, பிரிவி கவுன்ஸிலின் நீதிபரிபாலனக் கமிட்டியின் சிபார்சின்மேல் மன்னர்தான் ஒரு சமஷ்டி நீதிபதியை வேலையிலிருந்து நீக்கலாம். தாத்காலிகமாக பிரதம நீதிபதிக்குப் பதிலாக வேலைசெய்ய ஏதாவதொரு சமஷ்டி நீதிபதியை கவர்னர் ஜெனரலே தம் யுக்தானுசார அதிகாரப்படி நியமிக்கலாம். அவர்களுடைய சம்பளங்கள், அலவன்ஸுகள், ரஜா, பென்ஷன்கள் எல்லாம் மன்னரால் நிர்ணயிக்கப்படும்.

சமஷ்டிக் கோர்ட்டு டில்லியிற் கூடும். அப்போதைக்கப் போது கவர்னர் ஜெனரலின் அனுமதியுடன் பிரதம நீதிபதி நிர்ணயிக்கும் இடங்களிலும் அது கூடலாம். சமஷ்டிச் சர்க்கார், மாகாணங்கள், சமஸ்தானங்கள், இவைகளுக்குள் ஏற்படும் சட்ட உரிமை சம்பந்தமான சச்சரவுகளில் சமஷ்டிக் கோர்ட்டுக்கு அசல் அதிகாரமிருக்கிறது. சமஸ்தானத்தி

லிருந்து எழும் அரசியல் திட்ட வியாக்கியானத்தைப் பற்றியோ, அதன் கீழ் ஏற்பட்ட கவுன்ஸில் உத்தரவைப் பற்றியோ, அல்லது ஒரு சமஸ்தானத்தின் பிரவேச சாசனப்படி அதிற் சமஷ்டிச் சர்க்கார் கொண்டிருக்கும் நிர்வாகச் சட்ட நிர்மாண அதிகார எல்லையைப் பற்றியோ இருந்தாலொழிய, மற்றவை சமஷ்டிக் கோர்ட்டின் அசல் கோர்ட்டு அதிகார எல்லைக்குள் வரா. சமஷ்டிச் சட்டத்தைச் சமஸ்தானத்தில் அமுல் நடத்துவதைப் பற்றிய ஒப்பந்தத்திலோ, அல்லது சமஷ்டிச் சட்டசபை சமஸ்தானத்திற்குச் சட்டமியற்றும் அதிகாரங்கொண்ட விஷயத்திலோ, சச்சரவு ஏற்பட்டால், அது சமஷ்டிக் கோர்ட்டின் அசல் அதிகாரத்தின் வரம்புக் குள்ளாகும்.

அசல் அதிகாரங்கள்

ஏதாவதொரு ஒப்பந்தத்தில் இந்த அதிகார எல்லைக்குள் ஒரு முரண்பாடு வராது என்று தெளிவாகக் கண்டிருந்தால் அதில் இவ்வதிகாரஞ் செல்லாது. இந்த அசல் அதிகாரத்துடன் காரியம் நடத்தும்பொழுது சமஷ்டிக்கோர்ட்டு 'டிக்லரேட்டரி' (பாத்தியத்தைக் கூறும்) தீர்ப்பைத்தான் செய்யும்.

பிரிட்டிஷ் இந்தியாவிலிருக்கும் எல்லா ஹைக்கோர்ட்டுக்களுக்குமேல் சமஷ்டிக் கோர்ட்டுக்கு அப்பீல் அதிகாரம் உண்டு. அவைகளிலிருந்து வரும் ஒவ்வொரு அப்பீல் வழக்கும் அரசியல் திட்ட வியாக்கியான விஷயத்தைப் பற்றியோ அதன் கீழ் ஏற்பட்ட கவுன்ஸில் உத்தரவைப் பற்றியோ இருக்கிறதென்று அது சம்பந்தப்பட்ட ஹைக்கோர்ட்டு உறுதி கூறவேண்டும். அத்தகைய வழக்குக்களில் பிரிட்டிஷ்

அப்பீல் அதிகார எல்லை

இந்திய ஹைக்கோர்ட்டுக்களிலிருந்து பிரிவி கவுன்ஸிலுக்கு நேரான அப்பீல் உரிமை கிடையாது.

சமஷ்டி சமஸ்தானத்தின் ஹைக்கோர்ட்டுத் தீர்ப்புக்கு மேல் சமஷ்டிக் கோர்ட்டுக்கு அப்பீல் உண்டு. அரசியல் திட்ட வியாக்கியான சம்பந்தமாகவோ, சமஷ்டிப் பிரவேச சாசனத்தின்படி அந்தச் சமஸ்தானத்தில் ஏற்பட்ட சமஷ்டி யின் சட்ட நிர்மாண நிர்வாக அதிகார எல்லை சம்பந்தமா கவோ, சமஷ்டிச் சட்டசபையின் சட்டங்களை அந்தச் சமஸ் தானத்தில் அனுஷ்டிப்பதைப் பற்றிய ஒப்பந்தம் சம்பந்த மாகவோ, ஏற்படும் முரண்பாடுகளின்மேல் தான் அந்த அப் பீல் செய்யப்படலாம். அவ்வித அப்பீலை யேற்றுக்கொண்டு, சமஷ்டிக் கோர்ட்டு தன்னுடைய தீர்ப்புடன் அவ்வழக்கை, அது எங்கிருந்து வந்ததோ, அந்தக் கோர்ட்டுக்குத் திருப்பி யனுப்பும். அந்தக் கோர்ட்டு சமஷ்டிக் கோர்ட்டுத் தீர்ப்பை அமுலுக்குக் கொண்டுவரும். சமஷ்டிக் கோர்ட்டில் அப்பீல் பதிவு செய்யப்பட்டிருக்கும் வழக்குக்களில் மேல் நட வடிக்கை நடக்காமல் தடை உத்தரவு போடச் சமஷ்டிக் கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு. சமஷ்டியிலிருக்கும் எல்லா ஸிவில் அதிகாரிகளும் நீதியிலாகா அதிகாரிகளும் சமஷ்டிக் கோர்ட்டுக்கு உதவி யளிக்கவேண்டும்.

அரசியல் திட்ட வியாக்கியானம், அதன் கீழ் ஏற்பட்ட கவுன்ஸில் உத்தரவின் வியாக்கியானம், சமஷ்டிப் பிரவேச சாசனப்படி ஒரு சமஸ்தானத்தில் சமஷ்டிக்கு இருக்கும் சட்ட நிர்மாண நிர்வாக அதிகார எல்லை, சமஸ்தானத்தில் சமஷ்டிச் சட்டம் நடைபெறுவதைப் பற்றிய ஒப்பந்தம், இவைவிஷயமாகச் சமஷ்டிக் கோர்ட்டின் தீர்ப்பின்மேல், 'கவுன்ஸிலுடன் கூடிய மன்னருக்கு, அப்பீல் செய்யக்

கட்சிக்காரர்களுக்கு உரிமையுண்டு. வேறு எந்த வழக்கிலும் சமஷ்டிக் கோர்ட்டின்மேல் அப்பீல் செய்ய வேண்டுமானால், சமஷ்டிக் கோர்ட்டின் அனுமதியோ, 'கவுன்ஸிலுடன் கூடிய மன்னரின்' அனுமதியோ பெறவேண்டும்.

அரசியற் சட்ட சம்பந்தமான விஷயத்தைப் பற்றிச் சமஷ்டிக் கோர்ட்டின் அபிப்பிராயத்தைப் பெறுவது அவசிய மென்று கவர்னர் ஜெனரலுக்குத் தோன்றினால், அவர் தம் யுக்தானுசார அதிகாரத்தின்படி அது விஷயமாய் அபிப்பிராயங் கூறும்படிச் சமஷ்டிக் கோர்ட்டைக் கேட்கலாம். தக்க விசாரணைக்குப் பிறகு, அந்தக் கோர்ட்டு அவருக்குத் தன் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்.

Printed at The Central Press Syndicate Ltd., Kumbakonam.